

# கலைஞரின் கவிதைகள்



# கலைஞரின்
# கவிதைகள்

டாக்டர்

கலைஞர் மு.கருணாநிதி

பேராசிரியர். தி.வ. மெய்க்கண்டார் அவர்களின்
அன்பளிப்பு

பாரதி பதிப்பகம்

106. உஸ்மான் சாலை, தியாகராய நகர்,
சென்னை - 600 017. த.பெ.எண். 4984
தொலைபேசி: 434 02 05

விலை ரூ.65-00

❐ KALAINGARIN KAVITHAIGAL ❐ BY KALAINGAR MU.KARUNANITHI ❐ COLLECTION OF POEMS ❐ FOURTH EDITION: MARCH, 1995 ❐ PRICE Rs.65.00 ❐ © TAMILKANI PATHIPPAGAM ❐ PUBLISHED BY: BHARATHI PATHIPPAGAM, MADRAS-17. PHONE: 4340205 ❐ LASER BY: SUMATHI LASERS, MADRAS-6. ❐ PRINTED AT LOTUS OFFSET PRESS, MADRAS-13. ❐

# என்னுரை

1945-ஆம் ஆண்டு முதல் நான் எழுதிய கவிதைகளையும், கவியரங்குகளுக்குத் தலைமை யேற்றுப் பாடிய கவிதைகளையும் தமிழ்க்கனி பதிப்பகத்தினர் அழகுறத் தொகுத்துப் படைத்துள்ளனர்.

''கவிதையல்ல'' என்ற தலைப்பிலேதான் தொடக்கத்தில் எழுதிக் கொண்டிருந்தேன். கவிதை இலக்கணத்திற்குள் என்னைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடியவில்லை. 1967-ஆம் ஆண்டு அமைச்சர் பொறுப்பேற்ற பிறகு அந்தப் பணியில் ஏற்பட்ட களைப்பினைப் போக்குவதற்குக் கவியரங்குகளே எனக்கு இளைப்பாறும் இன்நிழற் சோலைகளாயின.

ஆட்சிப் பொறுப்பில் இருந்ததால்தான் கவியரங்கத் தலைமைக்கு அழைப்பு வந்தன என்றில்லாமல், அந்தப் பொறுப்பில் இல்லாத நேரத்திலும் அந்த வாய்ப்புகள் கிட்டின! ஆட்சியில் இருந்தபோது நடந்த கவியரங்கிற்குப் பறந்தோடி வந்த கவிப்பறவைகளில் சில; அதன் பிறகு அற்ற குளத்து அறுநீர்ப் பறவைகளாகி விட்டபோதிலும் கொட்டியும் ஆம்பலுமாய்

ஒட்டியிருந்து தமிழ்க்குலப் பெருமை காத்தன சில கவிக் குயில்கள்! இரு சாரார்க்கும் நன்றி!

கற்பனைகள், உணர்ச்சி பெற்றுக் கவிதைச் சொற்களாகப் பாய்ந்திடும்போது இலக்கணக் கட்டுப்பாடு எனும் கடிவாளத்தை என்னால் பயன்படுத்த முடியவில்லை. அது என் பலவீனம்தான்!

எனினும், பலம் வாய்ந்த கவிதைக் குதிரைகளின் பாய்ச்சலுக்கு உங்கள் பாராட்டுக் கிடைக்குமென்று நம்புகின்றேன்.

மேலும் மேலும் புதுக்கவிதைகள் பலவற்றை இணைத்து இந்த நான்காம் பதிப்பைத் தருகின்ற தமிழ்க்கனிப் பதிப்பகத்தாருக்கும், வெளியிடுகின்ற பாரதி பதிப்பகத்தாருக்கும் நன்றி.

அனபுளள,

மு.கருணாநிதி

# அணிந்துரை

எழுத்துலகச் சிற்பி, எழுச்சிமிகு எண்ணங்களின் ஊற்று, கொள்கை உறுதி குன்றாத மறவன், தமிழ் இனக்காவலன், துறைதொறும் தலைமை ஏற்கும் தகுதியும் ஆற்றலும் வாய்ந்த கலைஞர் மு.கருணாநிதி அவர்கள், கவியரங்கில் ஏறும்போதும் தலைவராகவே அமர்ந்து, அரங்கிற்கு ஏற்றமும், கவிதைக்கு எழிலும், கொள்கைக்கு உரமும் சேர்த்திடும் பெருமைக்குரியவர்.

அரசியல்வாதியின் சிந்தனையில் பகுத்தறியும் திறனும், உரையினில் தெளிவும் திட்பமும் இடம் பெறுவதே இயல்பாகலின், கற்பனைக் கவின்கொண்டு கருத்தைக் கவரும் கவிதைச் செல்வி வடிவு பெறுவது கடினம், எனினும் கலைஞர், அன்றாடக் கடமைகள் பலவற்றினிடையேயும் அவருக்கே உரிய இலக்கிய வேட்கையால், கவிதை ஆர்வத்தால், கற்பனை ஊறும் உள்ளத்தால், சிந்தனையை அழகுபடத் தொடுக்கும் திறனால், பைந்தமிழ்ச் சொல்லினைப் பொருளுடன் ஆய்ந்திடும் மதியால், கவிதை அரங்கில் தமது தனி முத்திரையைப் பொறித்துள்ளார்.

உள்ளத்து உணர்வைத் தாமுணர்ந்தவாறு பிறரை உணரச் செய்யும் ஆற்றலே கவிதை ஆற்றல் எனின், அதில் கலைஞர் வெற்றி பெற்றுள்ளார்.

கவிதைக்குரிய நடையின் யாப்பு, அணி என்பன பலவகை. கவிஞர் பலரும் பலவாறு கைக்கொள்வார்.

பாட்டமைப்பு காலத்திற்கேற்ப மாறுவது; முற்காலத்தில் நிகழ்ந்த மாற்றத்தைக் கவிதை வளர்ச்சி என்று இக்காலத்தில் ஏற்போம். கருத்தினை வெளிப்படுத்தும் உள்ளத்தின் திறத்தால் எய்தும் அழகு வடிவே கவிதை என்பதால், அது காலத்திற்கேற்ப மாறுவதும் இயல்பே. காலத்தின் தேவையால் அழகுணர்ச்சியை வழங்கும் வடிவம் வேறாகலாம் அன்றோ?

மேலும் தொன்மை மிகுந்த தமிழ் மொழியின் இளமை எழில் குன்றாதிருக்கத் துணையாவது - அதன் புதுமை சேர்க்கும் திறனே எனலாம். அசை, சீர், தளை முதலான யாப்பு உறுப்புக்களும், பலவகை அணிகளும் இலக்கணம் வகுத்தவாறு பொருந்தி நிற்றல், கவிதையைக் கட்டுக்கோப்புடையதாக்கும் என்பதால் விரும்பத் தக்கனவே. ஆனால், அது கவிதையின் உடலும் உடையும் ஆவதன்றி உயிராவதில்லை - அவையே உயிரோட்டம் தருவதில்லை. அப்படிப்பட்ட கவிதைகள், முளைவிடாத விதை, மணக்காத மலர், ஒளி தராத நிறை விளக்கு ஒப்பவையே.

உணர்வுடன் விவரிக்கப்படும் கருத்து, கற்பனை எழில் கொண்டு, எதுகை, மோனை வளத்தால், ஓசை நலம் என்னும் ஆடை புனைந்து, அணி நலமாம் ஒப்பனையுடன் எண்ண வேகத்திற்கு ஏற்ப அடியிட்டு, அசைந்தாடியோ, ஆடிப்பாடியோ வேக நடமிடும் (துரித கதி) பாங்கிலோ, கவிதை அரங்கில் வெளிப்படுவது கவிதைக் காரிகையின் இயல்பும் சிறப்புமாகும். அப்படிப்பட்ட கவிதைக் காரிகை நடம்புரிவதால், கலைஞரின் கவிதைகளும் காலத்திற்கேற்ப கோலம் புனைந்தனவாய்ச் சிறப்பன.

உணர்ந்ததை உள்ளவாறு உரைக்கவல்லவன் கவிஞன்; உணர்ந்ததை உள்ளவாறு உரைக்க அதைப் பிறருக்கும் அதே வகையில் உணர்த்த வல்லவனே கவிஞன்; உணருகிற

சுவைஞர்களின் உணர்வுகளை வளர்க்க வல்லவன் கவிஞன். எனவே, அந்த வகையில் கலைஞர் அவர்கள் இந்த ஆற்றலை வளர்த்துக் கொண்டதனாலேயே தன்னை ஒரு கவிஞனாக ஆக்கிக் கொண்டார். கவிதைப்பணி கலைஞர் அவர்களுக்கு ஒரு ஓய்வு நேரப் பணியாகவும், அதே நேரத்தில் அவரது உள்ளத்தை வெளிப்படுத்துகின்ற வாய்ப்பான பணியாகவும் அமைந்திருக்கிறது.

தான் எண்ணுகிற முழு எண்ணத்தை - தன்னுடைய உள்ளுணர்வை - தன்னுடைய பேரார்வத்தை - வேட்கையை - குறிக்கோளை - கொள்கையை இவற்றையெல்லாம் வெளியிடுகின்ற ஒரு வாய்ப்பாக - தன்னுடைய ஆர்வத்தின் முழு வடிவத்தை - உலகத்துக்குக் காட்டுகின்ற ஒரு வாய்ப்பாக - கருதித்தான் கலைஞர் இந்தக் கவிதைகளை வடித்திருக்கிறார்.

சிலர் அருமையான கவிதை இயற்றுவார்கள். ஆனால், தலைமை வகிக்க முடியாதவர்களாக இருப்பார்கள். ஆனால், கலைஞர் அவர்களிடத்தில் இயல்பாகவே தலைமை வகிப்பதற்கான தகுதி இருக்கிறது. அந்தத் தகுதி கவிதை அரங்கிலே தலைமை வகிப்பதற்கான தகுதியையும் அவரிடத்திலே ஏற்படுத்தியிருக்கிறது.

கலைஞர் அவர்கள் தான் எழுதுகிற கட்டுரைகளிலே கூடச் சில நேரங்களில் அந்தக் கவிதை நடையைப் பயன்படுத்துவது உண்டு. ஆனால், முழுக் கவிதையாக அவர் வடித்துத் தந்த கவிதைகளிலே, கவிதையினுடைய உயிர்ப் பொருளாக அமைந்து உணர்வைத் தூண்டுகிற, எழுச்சியூட்டுகின்ற அந்த ஆற்றல் கலைஞருடைய கவிதைகளிலே நிரம்பக் காணப்படுகிறது.

15.9.75இல் ''அண்ணா வழியில்'' என்ற தலைப்பிலே கலைஞர் ஒரு கவிதை தீட்டியுள்ளார். அந்தக் கவிதையைப்

படித்தால் அதிலே கலைஞர் கருணாநிதியே நடைபோட்டு வருவதுபோல் தோன்றும். அவரது கவிதையில் வரும் இந்த வரிகளில்

தமிழே! தேனே! தங்கக்கனியே!
அமிழ்தே! அன்பே! அழகுக் கலையே!
எழிலே! அறிவே! எண்ணச் சுடரே!
பொழிலே! புகழே! பொன்னின் மணியே!
திருவே! உருவே! திங்கட் குளிரே!

இதில் மாணிக்கவாசகர் வருகிறார்; வடலூர் வள்ளலார் வருகிறார்; இன்னும் தமிழ்ப் பண்பாளர்கள் பாடிய அந்தச் சொற்களெல்லாம் இடம் பெறுகின்றன.

தருவே! நிழலே! நிழல்தரு சுகமே!
தாயே! உன்றன் தாளினைப் பற்றி.

இது கலைஞர் கருணாநிதி அவர்கள் தமிழ்த்தாயினை உள்ளத்திலே போற்றிக் கொண்டுதான் இந்தத் தொண்டெல்லாம் செய்கிறார் என்பதற்குச் சான்றாகும்.

கவிதைகள் நம்மைச் சில நேரத்திலே ஏமாற்றி இருக்கின்றன; சில கவிதைகள் நம்மைத் தாழ்த்தி இருக்கின்றன; சில கவிதைகள் நம்மைக் கைவிட்டிருக்கின்றன; அந்தக் கவிதைகளுடைய வரிசையிலே கலைஞருடைய கவிதை இடம்பெறவில்லை. காரணம், அவர் அறிஞர் அண்ணா மறைந்தபோதே கூட, சமுதாயத்திற்காக - நாட்டிற்காகத் தன்னை ஒப்படைத்துக் கொள்கிற உள்ளுணர்வு காரணமாக, அறிஞர் அண்ணா அவர்களுக்கு, இரங்கல் கவிதை இயற்றும் போதே அதிலேயும் ''அறிஞர் அண்ணா அவர்களே, உங்களுடைய இதயத்தை இரவலாக எனக்குத் தாருங்கள். நான் மறுபடியும் தங்களிடத்திலே வந்து சேருகிறபோது, அந்த இதயத்தைத் திரும்பச் சேர்த்திடுவேன்'' என்று கவிதையாகப்

பாடுவதன் மூலமாக அண்ணாவின் இதய உணர்வுகளையே தன் உள்ளுணர்வுகளாகப் பெற்றுக் கொண்டவர்.

கலைஞர் எந்த வகையிலே இப்படிப்பட்ட ஆற்றல் வாய்ந்தவராகத் தன்னை வளர்த்துக் கொண்டார் என்றால் அவர் படித்த அளவுக்குத் தொடர்ந்து இலக்கியங்களைப் படிக்கின்றவர்கள் பலபேர் இல்லை; சிலப்பதிகாரமோ - சீவகசிந்தாமணியோ - புறநானூறோ - திருக்குறளோ - அவற்றைத் தொடர்ந்து படித்து, எண்ணியெண்ணி - உணர்ந்து உணர்ந்து - போற்றிப் போற்றி தன்னுடைய உணர்வுகளுக்கு அவற்றை விருந்தாக்கி - அந்த உணர்வை வடித்துத் தந்து, அதன் மூலம் தன்னையே உருவாக்கிக் கொண்டவர் கலைஞர். அப்படி உருவாக்கிக் கொண்ட காரணத்தாலேதான் சிலப்பதிகாரத்தைப் பற்றி அவர் கவிதை இயற்றும்போது கருத்து வளத்துடன் ஓசைநயமும் அங்கே பிறந்திருக்கிறது.

கலைஞர் அவர்களுடைய கவிதைகளை எண்ணிப் பார்த்தால் - கலைஞர் இடத்திலே கருத்து உண்டு; அதை எடுத்துச் சொல்லும் ஆற்றல் உண்டு; அதற்கு அழகு வடிவு தருகிற கலைத்திறன் உண்டு; அதை உணர்வில் பதிக்கும் கவியின் சிறப்பு உண்டு; இவற்றை நாட்டுக்குப் பயன்படுத்துகிற உயர்ந்த குறிக்கோள் உண்டு என்று காணலாம்.

''பகைவர்க்குத் தாழாமல், படைகண்டு வீழாமல், பல்லூழ் வாழ்கின்ற தமிழ்'' என்றார் கலைஞர். ஆம்! அத்தமிழின் இயல்பைப் பெற்ற உள்ளம் கலைஞரின் உள்ளம் என்பதால், ''பகைவர்க்குத் தாழாமல், படைகண்டு வீழாமல் பல்லூழி வாழ்க கலைஞரின் தமிழ் உள்ளம்'' என்று வாழ்த்துவதே எனக்கு ஏற்புடைய கடமையாகும்.

சென்னை-7

15.5.82

க.அன்பழகன்

# புறஉரை

கலைஞரின் கவிதைகள் என்னும் இத் தொகையின் தகவு குறித்து ஆராய முற்படுவோர் முதற்கண், அது நான்காம் பதிப்பாக வெளிவர வேண்டிய இன்றியமையாமையைப் பெற்றிருப்பதைக் கருத்துட் கொண்டாலே போதும். கலைஞரின் பாக்களை நாம்

ஓய்வு பெற விழையும் போதும் படிக்கலாம்;
ஒழிவு கிட்டிய போதும் படிக்கலாம்;
கவலை வந்துற்ற போதும் படிக்கலாம்;
களிப்பு மிக்க காலத்திலும் படிக்கலாம்;
இன்பத்தை நாடியும் படிக்கலாம்;
துன்பத்தைத் துடைக்கவும் படிக்கலாம்;
எப் போதும் படிக்கலாம்;
எந் நிலையிலும் படிக்கலாம்;
எதை வேண்டியும் படிக்கலாம்;
எதை விரட்டவும் படிக்கலாம்;
வேண்டிய வேண்டியாங் கெய்தவும் படிக்கலாம்;
வேண்டாத வேண்டாவாய் விலகவும் படிக்கலாம்;

உள்ளத் துணையாய், உணர்வின் ஊன்று கோலாய் எப் போதும் கையிலும், வேலையுள்ள போது கைப் பையிலும் இருக்கத்தக்க ஓர் அரிய செல்வம் இது.

பாட்டுக்குப் பா என்று பெயர் வந்ததே பரந்துபட்டு வரும் ஓசையை அது பெற்றிருப்பதால்தான் என்பது தமிழறிந்தார் அனைவரும் அறிந்ததுதான். பண்டு, பாக்களை நான்கு வகைப்படுத்தி வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா என அவற்றுக்குப் பெயருஞ் சூட்டி அவற்றுக் குரிய ஓசைகளாக முறையே செப்பலோசை, அகவலோசை, துள்ளலோசை, தூங்கலோசை என்பனவற்றைக் குறித்துள்ளனர்.

வெண்பா முதலிய நான்கு பாக்களும் அவற்றின் இனங்களாகிய துறை, தாழிசை, விருத்தம் ஆகியனவும், பிற்காலத் தெழுந்த பிறவும் ஏறிய அரங்கிற்கும் கலைஞரின் கவிதைகள் ஏறும் அரங்கிற்கும் வேறுபாடுண்டு. முன்னது கற்றோர் மட்டுமே இருந்த அரங்கு; பின்னதோ மற்றோரும் குழுமிய அரங்கு. முன்னதில் அவையோர் கவியோர் பின் ஆர்வலராய்த் தொடர்வர். பின்னதில் கவியோர் அவையோரை ஆர்வமூட்டி ஈர்க்க வேண்டும். எனவே பண்டைப் பாக்களின் ஓசைகளினின்றும் கவியரங்கப் பாக்கள் வேறுபட்டதோர் ஓசையுடையனவாயிருக்கும். அதனால் இவற்றுக்கு ஓசையில்லை என்று கூறல் பொருந்தாது. ஏனெனில் ஓசையற்றது பாட்டே ஆகாதே.

கலைஞர்தம் பாக்களில் சில சொற்கள், உணர்வுகள் போன்றவை வெளிப்படையாகக் காணப்படமாட்டா. ஆயினும் அவை தோன்றா எழுவாய் போல் அவையோர்க்குத் தெற்றெனப் புலப்படத் தவறவும் மாட்டா. அத்தகு விழுமிய ஓசைச் சிறப்புடனேயே கலைஞரும் தம் படைப்புகளை அரங்கேற்றுவார். தெளிவான ஓர் ஓசை ததும்பவே அவர் அவற்றைப் படிப்பார். அதனால் கலைஞரின் கவியரங்கக் கவிதைகளில் அமைந்துள்ள ஓசை தெள்ளல் ஓசை எனத் தக்கது என்பது என் எண்ணம்.

தெள்ளல் அல்லது தெள்ளுதல் எனுஞ் சொல் தெளிவித்தல், ஆராய்தல், கொழித்தல் என்பன போன்ற பல பொருள்களையுடையது. இங்கு அது கொழித்தல் என்னும் பொருளில் அமைந்துள்ளதாக நான் கருதுகிறேன். தின்பதற்குத் தோதாக எள்ளைத் தெள்ளித் தருவது போல் அவையோர் உள்ளம் கொள்ளுவதற்குத் தோதாகக் கருத்துகளைக் கொழித்துத் தரும் பணியினைச் செய்ய உதவுதலின் அவ் வோசை தெள்ளல் எனப் படுவதாயிற்று. இந்த ஓசை, பொருளை மட்டுமே யன்றிச் சில அரிய உணர்வுகளையும் அவையோர்க்குத் தெள்ளித் தரலாலும் பெற்ற பெயரே அது. இப் பாக்களை இந் நூலின் வாயிலாகப் படிப்போரும் அவ் வோசை தோன்றப் படித்தால்தான் தாம் படிப்பதன் முழுப் பயனையும் பெற முடியும்.

கலைஞர்தம் பாடல்களில் அமைந்துள்ள ஓசையைச் சுவைக்க விரும்புவோர் இந் நூற் பக்கங்கள் 5, 22, 55 போன்றவற்றைக் காண்க; பொருண் மொழிகளைப் புலன் கொள்ளும் நாட்ட முடையோர் 11, 18, 19, 20, 21 22 - 27, 39, 46, 60, 61, 66, 74, 101, 131 போன்ற பக்கங்களை யணுகலாம்;

அணி நலம் காண விழைவோர் 19, 20, 23, 27, 31, 38, 48 போன்ற பக்கங்களைப் படிக்கலாம்;

சொல்லழகைச் சுவைக்க எண்ணுவோர் 80, 81, 88, 102, 127 போன்ற பக்கங்களைப் பார்க்கலாம்.

தமிழிலக்கியப் பிழிவை யருந்தும் நாட்ட முடையோர் 94 முதல் 97 வரையுள்ள பக்கங்கள் போன்றவற்றைப் படிக்கலாம். பல்வகை இலக்கியப் பான்மைகளையும் ஓரிடத்திலேயே பார்த்துப் பயன் பெற வேண்டுவோர் ''நீர்க் குடும்பம்'' என்னும் தலைப்பிலுள்ளவற்றைக் கண்டு கழி பேருவகை யெய்தலாம். திராவிடரின் வீழ்ச்சிக்குக் காரணம் யாது எனத் தெரிந்து விழிப்புற விழைவோர் தென்னவன் காதை, இந்திரஜித், இரணியன், வாளி மன்னன் ஆகியவற்றைக் கற்கலாம்.

இன்னும் பற்பல நலன்களும் அமைந்துள்ள பாங்குகளையும் அவற்றுக்குப் பதம் காண்டற்குரிய சில பக்கங்களையும் நான் பகுத்துத் தொகுத்து, வகுத்துத் தர முற்பட்டால் அது இத் தொகையின் புதுவகைப் பதிப்பொன்றுக்கு என்னை இட்டுச் சென்றுவிடும் என்று கருதுகிறேன். ஆகவே,

''தோன்றிற் புகழொடு தோன்றுக''

என்னும் வள்ளுவர் வாய்மொழிக் கெடுத்துக்காட்டாய்த் தாம் தோன்றிய துறைகளிலெல்லாம் புகழுடனேயே தோன்றும் தகுதியுடைய கலைஞர் இத் துறையிலும் அவ்வாறே புகழோடு தோன்றும் தோற்றப் பொலிவைக் கண்டு களித்து வாழ்த்தி நிறைகிறேன்.

சென்னை-18
1.2.95

மா.நன்னன்

# பதிப்புரை

கலைஞர் அவர்கள் எழுதிய கவிதைத் தொகுதியின் நான்காம் பதிப்பைச் சிறப்பாக அச்சிட்டு வெளியிடுவதில் நாங்கள் மிக மிகப் பெருமை அடைகிறோம்.

கலைஞரின் கவிதையில் கருத்து உண்டு; காலத்தை ஒட்டி ஒவ்வொரு கவிதையும் எழுதி இருக்கிறார்கள். வளரும் இளங் கவிஞர்கள் படித்துப் படித்துப் பயன்பெற வேண்டிய அறிவுப் பெட்டகமாக இந்தக் கவிதை நூல் இருக்கிறது என்று சொன்னால் மிகையாகாது.

இந்நூலை வெளியிட இசைவு தந்த 'தமிழ்க்கனி பதிப்பக'த்தாருக்கும், கலைஞர் அவர்கட்கும், சிறப்பாக அச்சிட்ட திரு.பாண்டியன் அவர்கட்கும் எங்கள் உளம் நிறைந்த நன்றி.

சென்னை-17
7.2.95

பதிப்பகத்தார்

# இதனுள்


பக்கம்

1. இதயத்தைத் தந்திடு அண்ணா! 3

2. இனமான ஏந்தல்கள்

தென்னவன் காதை 17
இந்திரஜித் 26
இரணியன் 38
வாளி மன்னன் 45

3. கவியரங்கக் கவிதைகள்

விடுதலை வீரர்கள் 55
ஐம்புலன் 63
பிலவங்க ஆண்டு 73
காதலா - வீரமா? 84
அருமறையில் அறுவர் 99
புதிய பாதை 111
உடைமைகள் பத்து 121
நீர்க் குடும்பம் 127
பாரதிதாசன் 138
பாரதியார் 153
பொங்கல் திருநாள் 158
வாழ்வெனும் பாதையில் 168
கணக்கு 180
நேரு கண்ட ஜனநாயகம் 188
நன்றி, நன்றி! 199
வெள்ளி விழா 201
அண்ணன் இருக்கின்றார் 210

அண்ணன் ஒரு கவியரங்கம் 213
தமிழ் வளர வழிநடைப் பயணம் 220
வையம் தழைக்க 228
தந்தை பெரியார் 237
அகத்துறைப் படைப்புகள் 244
பொங்கல் விழா 250
சிலப்பதிகார விருந்து 256
அண்ணா வழியில் 269
நடத்திடுவேன் நமது அய்யா, அண்ணா வழியில் 276
முப்பெரும் விழாக் கவியரங்கம் தலைமைக் கவிதை 280
மாறிவரும் ஊரினிலே 294
சமுதாயப் பார்வைகள்...! 301
கலைவாணர் அரங்கக் கவியரங்கம் 312
''சித்திரைத் திருநாள்'' தலைமைக் கவிதை 316
எழுத்துக்கள் - எண்ணங்கள் மும்மூன்று 329
''அறிஞர் அண்ணா வழியில்'' 345

4. கண்ணீர்த் துளிகள்

பன்னீர்ச் செல்வமே 357
கலைத்தாயின் தலைச்செல்வன் 359
உன் நிழலாக அசைகின்றோம் 362
வாழ்க ஜீவா! 365
மறைந்த மாவீரன் 367
என் இனிய நண்பா! ஏன் பிரிந்தாய்? 373

5. மலர்த் தோட்டம்

இன்றைக்கு உன்றன் பிறந்தநாள் 377
அவன் பிறந்தநாள் என ஒன்றில்லை! 379
அருமருந்தே! அன்பழக உடன் பிறப்பே! 381
பகுத்தறிவுப் பாண்டியனார் 383
நியாயத் தராசு 386
ஏற்பாரோ? 387

| | |
|---|---|
| புயல் என அறிக | 388 |
| கேட்டதுண்டோ? | 389 |
| வருணமா? மரணமா? | 390 |
| தோல்வி எப்பொழுது? | 391 |
| இன்னுமா கூச்சல்? | 392 |
| பச்சைக்கிளி | 393 |
| கற்பனை ஊற்று | 396 |
| வானமே பொழிக நீ! | 398 |
| கவிதையில் ஒரு மடல் | 400 |
| அவர் உணர்வாரோ! யார் அறிவார்? | 401 |
| போர் வாளாய்ச் சுழலட்டும்! | 403 |
| இன்னும் யார் - யார் பெயர்கள் வரவில்லை | 405 |
| ஒரு சொட்டுத் தேன் | 408 |
| விதையாய் முளைத்து விழுதுகள் விடட்டும் | 411 |
| சூரியனைப் பனிக்கட்டி என்கின்றார்! | 412 |
| நடையை நிறுத்தாதே! | 416 |
| பாமரர் நிறைந்த பட்டிக்காடு | 418 |
| கொள்ளை போகுதம்மா தமிழ்நாடு | 421 |
| என்ன தேசமடா இது? | 424 |
| முகமூடி கிழித்தெறிவோம் வாரீர்! | 426 |
| பதில் என்ன? பகிர்ந்திடுக! | 429 |
| கா, கா, கா! | 431 |
| பகலவனாய்க் கிழக்கில் உதித்திடுவோம் | 433 |
| திசைதிருப்பல் நியாயம்தானா? | 436 |
| நடந்து முடிந்ததம்மா; ஒரு நகைச்சுவை நாடகம்! | 438 |
| சில நாடுகள் இருக்கின்றன | 440 |
| உன் காலணியை வாழ்த்துகிறாய் | 444 |


☆

இதயத்தைத்
தந்திடு
அண்ணா

# Algorithm
# Design

# இதயத்தைத் தந்திடு

## அண்ணா

(9.2.69 அன்று சென்னை வானொலியில்
பேரறிஞர் அண்ணா அவர்களுக்குக்
கலைஞர் மு. கருணாநிதி அவர்கள்
அளித்த கண்ணீர்க் கவிதாஞ்சலி.)

பூவிதழின் மென்மையினும் மென்மையான
புனித உள்ளம்-அன்பு உள்ளம்-
அரவணைக்கும் அன்னை உள்ளம்! அவர்
மலர் இதழ்கள் தமிழ் பேசும்-
மா, பலா, வாழையெனும் முக்கனியும் தோற்றுவிடும்-
விழிமலர்கள் வேலாகும், வாளாகும்
தீங்கொன்று தமிழ்த்தாய்க்கு வருகுதென்றால்!

கால் மலர்கள் வாடிடினும் அவர் கடும் பயணம் நிற்காது;
கை மலர்கள் பிணைத்து நிற்கும், தம்பியரை, கழகத்தை!
அம்மலரே எதிரிகளை மன்னித்து
நெற்கதிர் போல் தலை நாணச் செய்துவிடும்!
மக்களாட்சி மலர் குலுங்க
சமதர்மப்பூ மணக்க
தாய்மொழி தமிழே வாழ்வுப் பொழிலாக
ஆடிவரும் தென்றல்,

நாடிவரும் பூமுடியே! புகழ் முடியே! உமைத்
தேடிவரும் வாழ்த்துக் குவியலிலே - தினம்
பாடிவரும் வண்டாக நான் பறப்பேன்
உனக்காக எனைத் துறப்பேன்; என-
ஒரு கோடித் தமிழ் இளைஞர்
பாடி நின்ற பாட்டுக்குப் பெருந்தலைவன்....

முருகிற் செறிந்த தமிழார்வம்
முதிரா இளைஞர் ஆருயிராய்ப்
பெருகச் செய்த செயல் மறவர்
சிறப்பைப் பாடக் கேண்மினோ!
தங்கு சனி வேல் செய்த புண்களை
அன்பெனும் வேது கொண்டொற்றியும்
செங்கண் வாய் மருந்தூட்டுவார்
சீர்மையைப் பாடக் கேண்மினோ!

பொருதடக்கை வாளெங்கே; மணி மார்பெங்கே?
போர் முகத்தில் எவர் வரினும் புறங்கொடாத
பருவயிரத் தோளெங்கே எங்கே யென்று
தம்பியரைக் கேட்டதனைக் கேண்மின்!
கேண்மின்!

காஞ்சியிருக்கக் கலிங்கம் குலைந்த
கலவி மடவீர் கழற் சென்னி
காஞ்சியிருக்கக் கலிங்கம் தொலைந்த
களப் போர் பாடத் திறமினோ என்று

மயல் கொண்ட மாதர்தமைத் துயில் எழுப்பச்
செயங் கொண்டார் பாடினார்,
களப்பரணி.... கலிங்கத்துப் பரணி
அளப்பரிய வீரத்தின் புகழ்ப்பரணி - யான்
கவிப்பரணியேறி, காஞ்சிபுரப் பரணி
பாடி நின்றேன் இன்று
அவலப் பரணி பாடுகின்றேன்...!

கவியினில் பொருளெனக் கரும்பினில் சுவையெனக்
கதிரினில் ஒளியெனக் காவினில் மலரென
நிலவினில் குளிரென நிலமிசை வளமெனக்
குலவிடும் அருவி குழறிடும் மொழியென
உலவிடும் காற்றில் ஏறிடும் இசையென
அலையெழுங் கடலில் ஆடிடும் நுரையெனக்
கலைமணங் கமழக் கூடிய கவிஞர்
தலைமகன் அண்ணா திருப்புகழ் பாடிட
நிலமகள் வடிக்கும் கண்ணீர் அந்தோ!
வெள்ளம்!
வெள்ளம்!
மாபெரும் வெள்ளம்!
ஆயிரத்துத் தொள்ளாயிரத்து முப்பத்து எட்டாம்
தாயகத்தில் மொழிப் புரட்சி தோன்றுதற்கு
வித்திட்டார் சிலபேர் என்றால்; ஈரோட்டு
நாயகத்தின் இணையில்லாத் தலைமை வீரர்
எங்களண்ணன் களம் புகுந்தார் காஞ்சி பூண்டு!

இரு மூன்று திங்கள் வரை சிறையில் வாடி,
தரும் ஊன்றுகோலாகத் தமிழைத் தந்து
அரு மூன்று எழுத்தாலே அண்ணாவானார்....
அன்றொரு நாள் ஐம்பத்திரண்டுதனில்
சென்னையிலே சொன்னேனே
நினைவுண்டா உங்களுக்கு?
மூன்றெழுத்திலே ஒரு சிறப்புண்டு
முத்தமிழ் மணமுண்டு....
மூவேந்தர் முக்கொடி முக்கனியென
மும்முரசார்த்தவர் தமிழர் - அவர் வாழ்ந்த
தமிழ் 'வாழ்வு'க்கு மூன்றெழுத்து - அந்த
வாழ்வுக்கு அடிப்படையாம் 'அன்பு'க்கு மூன்றெழுத்து...
அன்புக்குத் துணை நிற்கும் 'அறிவு'க்கு மூன்றெழுத்து

அறிவார்ந்தோர் இடையிலெழும், 'காதலு'க்கு மூன்றெழுத்து...
காதலர்கள் போற்றி நின்ற கடும் 'வீரமோ' மூன்றெழுத்து...
வீரம் விளைக்கின்ற 'களம்' மூன்றெழுத்து....
களம் சென்று காணுகின்ற 'வெற்றி' மூன்றெழுத்து
அந்த வெற்றிக்கு நமையெலாம் ஊக்குவிக்கும்
அமைதி மிகு அண்ணா மூன்றெழுத்து
அறிந்திடுவீர் எனச் சொன்னேன்!
திக்கெட்டும் தமிழ் முழக்கம்
திசையெங்கும் சொன்மாரி
வக்கற்றோர் வகையற்றோர்
வாழ்வதற்குத் திட்டம் கோரி
வண்டாகச் சுற்றுகின்றார் மேடையேறி!
எழுதுகின்றார் அண்ணா எனில்,
ஏடெல்லாம் வீடெல்லாம் தமிழ்
நாடெல்லாம்.... புதுமை மணக்குதங்கே....
"ஏடா தம்பி எடடா பேனா....!"
"கத்தியைத் தீட்டாதே புத்தியைத் தீட்டு"
கருத்துப்பேழை கற்பூரப் பெட்டகம்!
"மரக்கிளையிலே பிணம்;
வெந்த புண்ணிலே வேல்!"
மறந்திடப் போமோ; மனங்கவர் வாசகம்?
"சாலை யோரத்திலே வேலையற்றதுகள்-
வேலையற்றதுகளின் உள்ளத்தில் விபரீத எண்ணங்கள்-
வேந்தே! அதுதான் காலக்குறி!"
அண்ணனுக்கன்றி! யாருக்கு வரும் இந்த அழகு நடை?
அறிவு நடை!
"கோடு உயர்ந்தது குன்றம் தாழ்ந்தது"
தமிழகம் மறவாத் தலையங்கமன்றோ!
"இப்படை தோற்கின் எப்படை ஜெயிக்கும்?"
"தம்பியுடையான் படைக்கஞ்சான்!"

ஒப்பில்லா வரிகள் உரைத்திடும் பனுவல்
மனோன்மணீயம் எனினும் - நம்
மனத்தில் பதித்தவர் அண்ணாவன்றோ!
''மாற்றான் தோட்டத்து மல்லிகையும் மணக்கும்''
அரசியல் பண்பினைப் போதிக்கும் அழகே!
''மறப்போம் - மன்னிப்போம்''
மாற்றார் ஏசல் தாங்கிடும் மாண்பே!
எவர் கற்றுத் தந்தார் இதனை?
சுவர் வைத்துச் சித்திரம் எழுதுதல் போல்
நயமிகு பண்புடன் அரசியல் நடாத்தல்
நன்றென்றார் அண்ணா-
அதை மறுத்து
நாலைந்து பேர் குதித்திட்டார் என்றால்
அவர் கண்டு சிரித்திட்டார் அண்ணா!
அனைவரையும் ஓர் அன்னை பெற்றெடுக்க
வயிறு தாங்காக் காரணத்தால்
தனித்தனித் தாய் ஈன்றெடுத்த தம்பிகளே! என அழைத்துக்
கனிச் சுவையாய்க் கற்கண்டாய்த் தேன் பாகாய் அன்பு காட்டிப்
பனி மலர் வீழ் தும்பியதாய்த் தழுவிக் கொண்டார்.
சொலல் வல்லார் சேதுப் பிள்ளைதனைச்
சோமசுந்தர பாரதியைச் சொற் போரில்
சொக்க வைத்தார் - பாவம்; சிக்க வைத்தார்!
நீதிக் கட்சியென்று நெடியமதில் சுவருக்குள்ளே - பனைச்
சாதிக்குக் கட்சியாய் இருத்தலாகாதெனும்
கொள்கையாலே - அதனை
வீதிக்குக் கொண்டு வந்தார்!
வீசிடுக வெள்ளையர்கள் பட்டத்தையென்று
சேலத்து மாநாட்டில் தீர்மானம் போட்டுவிட்டார்
—அண்ணாவின் போர்க்
கோலத்தை எதிர்க்க மாட்டாமல்

கோலற்ற குருடர் போலக் கொள்கையற்றோர்
வீழ்ந்து போனார்!
தீரர் அண்ணா திராவிடர் கழகமெனும்
பெயர் மாற்றத் தீர்மானம்
வீரர் கூடிய மாநாட்டில் கொண்டு வந்தார்!

அண்ணல் காந்தியார் அறவழி கண்டு
ஆங்கில ஆட்சியை அகற்றியபோது
துன்ப நாளென்னும் பெரியார் அறிக்கையை மறுத்துத்
தொடங்கினார் போரை!

இன்ப நாளிது! இனிய நாளிது!
என்பு தோலாய் ஆன இந்தியர்
அன்புறு காந்தியின் அருளால் இன்று
எழுந்தனர் அடிமைத் தளையினை அறுத்து!
முழங்குவோம் விடுதலை முரசினை எடுத்து
என்றே அண்ணா, அன்றே சொன்னார்....

அன்று முதல் அண்ணன் - அய்யா - உறவினிலே
கீறல் விழ
அது நாற்பத்தொன்பதாம் ஆண்டினிலே பிரிவாய்மாறி
முகில் கிழித்து வெளிக் கிளம்பும் முழு மதியாய்
முன்னேற்றக் கழகத்தை முகிழ்க்கச் செய்தார்!

தலைவருடன் கூடி வாழ முடியாமல்
பெரும்பான்மைத் தோழருடன்
வெளியே வந்தவுடன்,
நிலைகுலையா நம் அண்ணன் அன்று சொன்னார்
அது.
நேற்றுச் சொன்னது போல் இருக்குதம்மா!
தலைவரில்லை முன்னேற்றக் கழகத்துக்கு-என்
தலைவர் இருந்த நாற்காலி, காலியாக இருக்கும்! அதில்

தலைவர் அவர் என்றேனும் வந்தமர்வார்....
அதுவரையில் காத்திருப்பேன் என்றார்.

பூத்திருக்கும் மலர்த் தோட்டம்
காலைப் பனிநீர் வடிப்பது போல்
காத்திருந்து கூட்டம் கேட்டோர்
கண்ணீர் வடித்தார்.
கண்ணீர்த் துளிகளே! நாட்டின் கண்மணிகளே! -என அழைத்துச்
செந்நீர் சிந்துதற்கு அணிவகுத்தார்!
யாரேனும் கேட்டதுண்டா?
பாரேனும் பகர்ந்ததுண்டா?
பதினெட்டு ஆண்டுக்குள் ஓர் இயக்கம்
பதுங்கிப் பாயும் வேங்கையெனப் - பாராள வந்த கதை?

ஈராண்டு முடியவில்லை என் அண்ணா ஆட்சியேற்று-
சீராய்ந்த செயல் பலவும் செய்கலுற்றார்!
ஏராய்ந்த உழவர்க்கெல்லாம் ஏற்றம் தந்து
எழில் வாழ்வு குவிப்பதற்கு எடுத்தார் முயற்சி.
உலகத் தமிழ் மாநாடு துவக்க வந்த
ஓங்கு புகழ்க் குடியரசுத் தலைவரவர்
இணையற்ற காட்சி கண்டேன் மாட்சி கண்டேன்
இதுபோல வாழ்வில் என்றும் கண்டதில்லை'யென
ஊர் மெச்சப் புகழ்ந்துரைத்தார் அண்ணன் கீர்த்தி!
ஆந்திரத்துப் பிரம்மானந்த ரெட்டிகாரும்
ஆகா-நீர் தானே அசல் காந்தீய வாதியென்று
ஆராதனை செய்திட்டார் - ஆண்டொன்று கழியவில்லை!

மதுவிலக்கைத் தீவிரமாய் ஆக்குகின்றீர் பல
மாநிலத்தில் கை கழுவிக் கலயம் கட்டிவிட்டார்
மரங்களிலே!
மகாத்மாவின் தோன்றல் நீர்தான் என்று
கிரியென்றால் மலையன்றோ - அந்த
மலைதழுவும் முகிலானார் நம் அண்ணா!

வி.வி. கிரி தந்த வாழ்த்துக்கு விளக்கமிது.

பன்னாட்டுப் பேரறிஞர் வாழ்த்தி நின்றார் - அன்று
தென்னாட்டுச் சிகரமாக இருந்திட்டோர்
அண்ணன் பற்றி
என்ன சொன்னார்-?
பழந்தமிழ் வித்தகர் பல்லாவரத்தார் - அண்ணா,
பழத்தமிழ்ப் பேச்சால் மயங்கி நின்றார். அந்த
மறைமலை தந்த புகழ்மொழி ஆயிரம்.
பசுமலை பாரதி - பாண்டியன் தோற்றம் - அவரை
நாவலர் என்று நாடே அழைக்கும் - அவர்
சழக்கரால் வீழ்ந்த தமிழ் நிலம் காக்க - மன
அழுக்கில்லாத் தலைவன் கிடைத்தான் என்றே
அண்ணன் பெருமை சொன்னார் அன்று!

ஈராயிரம் ஆண்டின் முன்னும் இன்றுபோல்
இளையவளாய் இருந்திட்ட தமிழாம் அன்னை
நூறாயிரம் கோடி என ஆண்டுபல வாழ்வதற்கு
நூலாயிரம் செய்திட்ட புலவர்களை ஈன்றாள் எனினும்;
கலைமகளாம் நம் அன்னை வள்ளுவனைத்
தலைமகனாய்ப் பெற்றெடுத்தாள்.

மலர் என்றால் தாமரைதான்
மன்னன் என்றால் கரிகாலன்
நூல் என்றால் திருக்குறளே
எனப்போற்றும் அறப்பனுவல்
அளித்திட்டான்; மாந்தரெல்லாம் களித்திட்டார்!
விண்முட்டும் மலையோரம் - நம்
கண்பட்டும் படாமலும் எழுகின்ற நச்சுமரம் போலப்
பண்பட்ட தமிழர் வாழ்வில் - முதுகில்
புண்பட்ட கொள்கையெல்லாம் மூண்டதந்தோ!

சாதிகளைக் காணாது குறள் ஒலித்த தமிழ் மண்ணில்
பாதியிலே வந்ததம்மா பலகோடி சாதிகளும்!
அறிவு மணங்கமழ்கின்ற ஆலயங்கள் அற்றுப்போய்
ஆயிரம் தெய்வங்கள் உறைகின்ற கோயில்கள் கண்டுவிட்டார்.
மொழியுணர்வே இல்லாத வாயுணர்வின் மாக்கள் - தமிழ்
அழியினும் வாழினும் என்னென்று இருந்திட்டார்
அறநெறியே குறிக்கோளாய்த் திகழ்ந்திட்ட பெருநிலத்தில்
பிறநெறிகள் பயிர் செய்தார்; பிழை குவித்தார்.
மழையற்றுப்போன வயல்போல மாறிற்றுத் தமிழர் மனம்
அழுக்காறு - அவா - வெகுளி - இன்னாச் சொல் நான்குமின்றி
நடக்காது வேலையென்று நடந்திட்டார் சில தமிழர்!
பொருளிலார்க்கு இவ்வுலகமில்லையென்று
பொருள் குவித்து வளம் செழித்த நாட்டில் - இன்று
இருள் கவிந்து வாட்டம் கொடி போட்டதங்கே.
வாடினாள் தமிழன்னை - சோகப் பாட்டுப்
பாடினாள் தமிழன்னை; சுடுநெருப்பில்
ஆடினாள் தமிழன்னை...
ஓடினாள்... ஓடினாள்... ஒரு வழியும் கிடைக்கவில்லை!
புவியூர் விட்டுப் புகழூரில் வாழுகின்றான்
கவியூரின் பெருவேந்தன் குறளாசான்!
ஆண்டு சென்று, 'அருமை மகனே!
வேண்டுகோள் ஒன்று விடுத்தேன்' என்றாள்.
'என்னம்மா?' என்றான் குறளோன்.
'தோண்டுகின்ற இடமெல்லாம் தங்கம் வரும் தமிழகத்தில்
மீண்டும் நீ பிறந்திட வேண்டு'மென்றாள்.
'தங்கம் எடுக்கவா?' என்றான்
'தமிழர் மனம் வாழ்வெல்லாம்
தங்கமாக ஆக்க' என்றாள்.
'இன்றென்ன ஆயிற்' றென்றான்.
குன்றனைய மொழிக்கு ஆபத்தென்றாள்;
சென்றமையக் குடில் இல்லை ஏழைக்கென்றான்;
கடிதோச்சி மெல்ல எறியத் தெரியாமல்

கொன்றெறியும் கோல் ஒங்கிற்றென்றாள்; அறிவில்
கன்றனையோர் வீணில் கதைக்கின்ற கதையும் சொன்னாள்


அழுத கண்ணைத் துடைத்தவாறு
அமுத மொழி வள்ளுவனும்
அம்மா நான் எங்கே பிறப்பதென்றான்;
தொழுத மகன் உச்சிமோந்து ஆல
விழுதனைய கைகளாலே... அணைத்துக் கொண்டு
உழுத வயல் நாற்றின்றிக் காயாது.
இனிமேலே என எண்ணி
மனமகிழும்
உழவன் போல் உள்ளமெல்லாம் பூரிப்புத் துள்ளி எழ
காய்ந்த வயிற்றுக்குக் கஞ்சி வார்த்திடவே
கற்கண்டே! தேன்பாகே! திருக்குறளே!
நீ காஞ்சியிலே பிறந்திடுக! என்றாள்.
பிறந்திட்டான் நம் அண்ணனாக;
அறிவு மன்னனாக.
பொதிகை மலைத் தென்றலாய்ப்
போதாகி மலர்கின்ற
தமிழ் உணர்வின் புதுமணமாய்ப்
பதிகத்துப் பொருளாய்ப்
பழந்தமிழர் புறப்பாட்டாய்
வந்துதித்தான் அண்ணன் - கீழ்
வானுதித்த கதிர்போல—
அவன் புகழைப் பாடுதற்கு
அவன் வளர்த்த தம்பி நானும்
அவன் தந்த தமிழ் எடுத்து
இவண் வந்தேன் இதுதான் உண்மை-
தலைவரென்பார், தத்துவமேதை என்பார்,
நடிகர் என்பார், நாடக வேந்தர் என்பார்
சொல்லாற்றல் சுவைமிக்க எழுத்தாற்றல் பெற்றார் என்பார்.

மனிதரென்பார், மாணிக்கமென்பார், மாநிலத்து
அமைச்சரென்பார்,
அன்னையென்பார், அருமொழிக் காவல் என்பார்,
அரசியல்வாதி என்பார் - அத்தனையும்
தனித்தனியே சொல்வதற்கு நேரமற்றோர் - நெஞ்சத்து
அன்பாலே
'அண்ணா' என்ற ஒரு சொல்லால்
அழைக்கட்டும் என்றே - அவர் அன்னை
பெயரும் தந்தார்
அந்த அன்னைக் குலம் போற்றுதற்கு
ஒளவைக்கோர் சிலை
அறம் வளர்த்த கண்ணகிக்கோர் சிலை
வளையாத நெஞ்சப் பாரதிக்கும்,
வணங்காமுடிப் பாரதிதாசருக்கும் சிலை
வீரமா முனிவருக்கும் சிலை
கால்டுவெல் போப்புக்கும் சிலை
கம்பர்க்கும் சிலை
தீரமாய்க் கப்பலோட்டிய தமிழர்க்கும் சிலை
திக்கெட்டும் குறள் பரப்பத் திருவள்ளுவர்க்கும் சிலை
பத்து சிலை வைத்ததனால் - அண்ணன் தமிழின் பால்
வைத்துள்ள
பற்றுதலை உலகறிய; அந்த
அண்ணனுக்கோர் சிலை
சென்னையிலே வைத்த போது....
ஆள்காட்டி விரல் மட்டும் காட்டி நின்றார்...
ஆணையிடுகின்றார் எம் அண்ணா என்றிருந்தோம்
அய்யகோ, இன்னும்
ஓராண்டே வாழப் போகிறேன் என்று அவர்
ஒரு விரல் காட்டியது இன்றன்றோ புரிகிறது!
எம் அண்ணா... இதயமன்னா....
படைக்கஞ்சாத் தம்பியுண்டென்று
பகர்ந்தாயே;

எமை விடுத்தும் பெரும்பயணம் ஏன் தொடர்ந்தாய்...?
உன் கண்ணொளியின் கதகதப்பில் வளர்ந்தோமே!
எம் கண்ணெல்லாம் குளமாக ஏன் மாற்றிவிட்டாய்?
நிழல் நீ தான் என்றிருந்தோம்; நீ கடல்
நிலத்துக்குள் நிழல் தேடப் போய்விட்டாய்; நியாயந்தானா?
கடலடியில் இருக்கின்ற முத்தெல்லாம் முத்தல்ல;
நான்தானடா நன்முத்து எனச் சொல்லிக்
கடற்கரையில் உறங்குதியோ?
நாத இசை கொட்டுகின்ற
நாவை ஏன் சுருட்டிக் கொண்டாய்?
விரல் அசைத்து எழுத்துலகில்
விந்தைகளைச் செய்தாயே; அந்த
விரலை ஏன் மடக்கிக் கொண்டாய்?
கண்மூடிக் கொண்டு நீ சிந்திக்கும்
பேரழகைப் பார்த்துள்ளேன்.... இன்று
மண் மூடிக் கொண்டுன்னைப் பார்க்காமல்
தடுப்பதென்ன கொடுமை!
கொடுமைக்கு முடிவு கண்டாய்; எமைக்
கொடுமைக்கு ஆளாக்கி ஏன் சென்றாய்?
எதையும் தாங்கும் இதயம் வேண்டுமென்றாய்;
இதையும் தாங்க ஏதண்ணா எமக்கிதயம்!
கடற்கரையில் காற்று
வாங்கியது போதுமண்ணா!
எழுந்து வா எம்மண்ணா!
வரமாட்டாய்; வரமாட்டாய்;
இயற்கையின் சதி எமக்குத் தெரியும் அண்ணா... நீ
இருக்குமிடந் தேடி யான் வரும் வரையில்
இரவலாக உன் இதயத்தை தந்திடண்ணா....
நான் வரும்போது கையோடு கொணர்ந்து அஃதை
உன் கால் மலரில் வைப்பேன் அண்ணா.....

.....

# இளமான ஏந்தல்கள்



# தென்னைவன் காதை

குறுந்தாடி; குள்ளத்தாடி; நெடுந்தாடி; வெள்ளைத் தாடி;
இப்படிப் பல தாடியுடனே....
புராண அங்காடி விரித்துப் புளிக்கும் பழங்காடி சுவைத்துப்
போதையேறிக் கூத்தாடும் பூசுரர்கள் கூட்டம்....
மாசு, மரு அற்றிருந்த மண்டிலத்தின் ஓரம்
மாடுகளை, ஆடுகளை, மனிதர்களை வெட்டிப் பிணை
மேடுகளை வேள்விக்கெனக் குவித்துவந்த வேளை!
ஆரியரின் படையெடுப்பால்... இல்லை...
இடைநெளிவால்... கடை விழியால்.. இருடிகளின்
இன்பரச பானத்தால் - இருண்டுவிட்ட தென்புலத்தில்-
ஏற்றிவிட்ட விளக்கு போல

எழுந்து நின்றான் இலங்கைவேந்தன்!
அவன் சரிதம் சொல்வதென்றால்... தசையெல்லாம்
ஆடுதய்யோ! திசையெட்டும் புகழ் சேர்த்த
தென்னிலங்கைக் கோமான், திராவிடரின் மூதாதை!
பழத்தமிழின் பால் பற்றுதலை வைத்த நம் பாட்டன்.
கண்ணுக்குள் பாவைபோல் இலங்கைத் தீவு.
கருவிழிதான் ஆழ் கடல்கள்! தமிழ்
மண்ணுக்குப் புகழ் தந்த பெருவீரன்.
உருவில் சிங்கம், உள்ளம் தங்கம்! யாழ்ப்
பண்ணுக்கு யாரும் நிகரில்லையென வாழ்ந்த
யாழ்ப்பாணத் திருநாட்டான் - மலைத் தமிழன்!

அவன் துணைவி, வண்டமரும் பூங்குழலாள்
மண்டோதரி - மாதர் குல மாணிக்கம் - எதிர் வீணை மீட்டும்
பேச்சுக்காரி!.... இராவணனின் யாழோசை
தோற்ப தெல்லாம்.... பத்தினியின் பள்ளியறைக்
கனி மொழியின் முன்னேதான்!
இமைக் கதவு உண்டே எழில் விழியைக் காப்பதற்கு;
அப்படித்தான் - இலங்கைக்கு இராவணன்!
அவனுக்கு அவள்!
காடுகளில் நமதெல்லைக் கோடுகளில் ஆரியர்கள்,
கடவுளுக்குப் பலிதேடும் வேலை, ஆகாது!
கொடுமையென உருவினான் உடைவாளை!
பார்ணசாலை அழைப்புக்கள் முத்தமிட்டன அவன்தாளை, அந்தப்
பருவ மங்கையரின் சிரிப்போ விளைந்த பாளை!
அட; தொடுவேனோ ஆரியத் தேளை என
எதிர்ப்புக் குரல் கொடுத்தான் அந்தக் காளை!.....
நரிகள் உள்ள காடெல்லாம், நயவஞ்சகர் உலவும்
நாடெல்லாம் காவல்! காவல்! அந்தப் படைகளுக்கு
இராவணன், காலம் காட்டும் சேவல்! சேவல்!
தமிழரசி முத்து நகை இராவணனின் தங்கை,
தண்டகாரண்யத் தவசிகளை எதிர்த்து ஊதிவிட்டாள் சங்கை!
வேங்கையெனத் கிளம்பிவிட்டாள் வீரர்குல மங்கை,
வேதமோதிகளின் விழிகளிலே வழிந்திடுதே கங்கை!
துரோகத்தால் சூழ்ச்சியினால் தமிழர்களைத்
தோற்கடிக்கத் தோள் வலியால்
ஆகாதெனக் கண்டு விட்டதாலே
சின்னவனாம் இலக்குவனும் சீதையெனும் மனையாளும்
பின் தொடரப் புறப்பட்டான் இராமனெனும் மன்னன்,
தம்பிக்குக் கேடிழைத்து முடிசூட முனைந்து
நம்பிக்கைத் துரோகியென நாடெல்லாம் இகழக்
காட்டாகி விட்டவன் அந்த ராமன் எனும் மனிதன்!

அவன் ஒரு நாள்,
காட்டோரம் திரியும் போது, கரும்பனைய முத்துநகை
களைப்பினால் தூங்குகின்றாள் கனிமரச் சோலையோரம்,
காமத்தால் கருத்திழந்த கசடனவன்,
கமலமலர்க் கண்மூடித் தூங்குகின்ற தூயவளைத்
துன்மார்க்கத்தால் கெடுத்திடவே - தம்பி
துணையோடு அருகே போனான்.
காவலுக்குக் கைகாரி சீதாதேவி!
காவலின்றித் தூங்கிவிட்ட முத்துநகை,
கற்புக்கனல் காக்கக் கொதித்தெழுந்தாள்...
கனிமரம் போல் தனியொருத்தி - இருமந்தி!
என் செய்வாள்?
கற்புக்கு விலையாகக் கரமிழந்தாள்! மூக்கிழந்தாள்!
முத்துநகை கொட்டுகின்ற பல்லிழந்தாள்! அம்மவோ
முலையிழந்தாள் - ஆயினும் கற்பு
நிலையிழந்தாள் இல்லை!
தலையிழந்து போயினும் மானங்காக்கும் தமிழச்சி,
இராவணனின் தங்கச்சி!
சூதறியாச் சோதரியைச் சூர்ப்பநகை ஆக்கிவிட்ட
காதெரியும் செய்தி கேட்டான்-
கண்ணிலே புண் பெற்றதுபோல் காட்சி தந்தான்.
கடலாளும் புவி வேந்தன், முத்துநகை
அண்ணனன்றோ?
படர் உறவு இல்லாவிடில்தான் என்ன?
இலங்கைக்கு அவளோர் பிரஜையன்றோ?
எழுந்து விட்டான் பழிவாங்க - காலை
இளம்பரிதிபோல் கண்களிலே சிவப்பு தேக்கி...!
வேந்தன் வரும் செய்தி கேட்டு விழியழகி சீதாதேவி,
பாந்தமுள்ள மானொன்று வேண்டுமென்று
பர்த்தாவை விரட்டிவிட்டாள்!

''அண்ணனில்லா நேரத்தில் அண்ணிக்கு வலைவீசும்
நினைப்போ தம்பி?

முன்னவன் பின் ஓடு நீயும்'' - எனத் துரத்தித்
தென்னவன் வருகைக்குக் காத்திருந்தாள்.
தீ பறக்கும் கண்ணுடனே தேர்போல வரும் வீரன்
தேன்மொழி கொட்டிச் சீதை தெருவாசல் வருதல் கண்டான்.
''மூத்தவனும் இளையவனும் ஓடிவிட்டார் - எனக்கு
ஏற்றவன் நீ வந்து விட்டாய் - என்னை உனக்குத்
தந்துவிட்டேன்'' எனத் தழுவினாள்.
இராவணனின் தடந் தோளில்,
படர் முல்லை போலப் பைந்தொடி சீதாதேவி!

என்னுயிர்த் தங்கைக்கு இடையூறு விளைவித்தவனின்
மனைவி நீ!
உன்னுடலைக் காக்கைக்கும், கழுகிற்கும்,
காமங்கொள் கரடிக்கும் அளிப்பதல்லால்-
கரம் படவும் விடமாட்டேன், கப்பலிலே ஏறென்றான்.
மானத்தைக் கப்பலிலே ஏற்றிவிட்ட
மரபினிலே வந்தவனின் துணைவி, என் உடல்,
தானத்தை ஏற்றிடுக என உரைத்தபடி-
உரம்பெற்ற அவன் மார்பில் சாய்ந்திடவே - எப்படியும்
வரம் பெறுவேன் என நினைத்துக்
கலம் ஏறி நின்றாள், பீடுநடைச் சிங்கம்போன்,
ஒரு பெண் நரி போல்!
''சிறையெடுத்துப் போன சீதாதேவிதனைச்-
சிங்காதனத்திலேற்றிப் பட்டத்து ராணியாக்கிடுவான்,
சீதைக்கோர் செல்வனுதித்தால்
இலங்கைச் செங்கோலில் அவனுக்கும் பங்கு.
பன நுங்கு போல ஆரியர்க்கோர் தேசம்-
பாடுபடாமல் வருவதென்றால்-

பதினாயிரம் சீதை போனால்தானென்ன மோசம்!''
இப்படி ஆரியர்கள் நினைத்தபடி நடக்காமல்,
செப்படி வித்தைக்காரி சீதைக்குச் சிறைச்சாலை
ஏற்பாடு செய்துவிட்டான் இலங்கைக் கோமான்!
வேதமென்றும், வேள்வியென்றும்,
விளம்புகின்ற கூட்டந் தன்னை...
விறகொடித்து வருதல் போல்
விலா எலும்பொடித்து வருக என்றான்!
வெற்றி வேந்தனுக்கோர் தம்பி வீடணன்....
வேங்கை மரத்துப் புல்லுருவி,
அண்ணனைச் சாய்த்துவிட்டு அரசாளக் காத்திருப்போன்.
அனுமன் எனும் ஐந்தாம்படை யொன்றின் கையினிலே
அக்கினிக்கோல் எடுத்துத் தந்து,
அழித்திடுக இலங்கைமா நகரையென்றான்...
தென்னிலங்கைச் சீமையெங்கும் தீக்காடு பிணக்காடு!
குணக்கேடன் வீடணனின் ஒத்துழைப்பால் -
குலம் வளர வழி கண்டார், குள்ளநரி ஆரியர்கள்!



தமையனாம் வாலியெனும் தமிழ் வீரன் தன்னைத்
தர்ப்பைகளின் சூழ்ச்சியினால் கொன்றுவிட்ட கொடியன்
சுயமரியாதையை விலைகேட்கும் சுக்ரீவன் என்போன்-
கண் சுழற்றும் ஆரியரின் காலடியில் வீழ்ந்தான்.
தம்பியிடம் நம்பிக்கை வைத்திருந்த தங்கம்,
தரணியெலாம் நடுநடுங்க ஆண்டுவந்த சிங்கம்,
கடல் அலைமேல் எதிரிகளின் படைகள் வரக்கண்டு,
உடன்பிறப்பே, விபீஷணா! உடன் கிளம்பு! என்றான்.
படமெடுக்கும் பாம்போடு விளையாட்டு வேண்டாம்-
கடன் பட்டார் நெஞ்சம்போல் கலங்கிடுவாய்: அண்ணா
உடன் சென்று சரணடைவோம் வந்திடுக! என்றே, மதுக்
குடங்காட்டும் ஆரியர்க்குப் புகழ்பாடி நின்றான் - தம்பி
குரங்காட்டம் கண்டுவிட்ட தென்னவனும் - கண்கள்
குளங்காட்ட ''குலங்கெடுக்க வந்தவனே!
கோடரியின் பிடியே! கொடிய உன் நாக்கை
அறுத்தெறியாமல் இருந்ததற்கு நன்றி சொல்லி
நடந்திடுக'' என நடந்தான் களம்நோக்கி....!
ஒரு கருவில் உறிவிட்ட உத்தமனாம் - சிந்தனை
உறக்கத்தில் வல்லவனாம், எழில் -
கும்பகர்ணனெனும் தம்பி, அண்ணன்
இடையினிலே இருக்கின்ற உடைவாளைப் போலப்
படைமோதும் இடம் நோக்கிப் பின் தொடர்ந்தான் பாய்ந்து!
கடைக் குட்டித் தம்பியவன் எதிர்வந்து நின்றான்,
ஜடை கட்டி வாழுகின்ற ஆரியரை ஜெயிக்கப்
படை திரட்டிப் பயனில்லை - பாழாகும் என்றான்! துரோகக்
கடை கட்டி வாழுகின்ற தம்பியல்ல நான்! நாசத்தின் பிறப்பிடமே!
நடைகட்டு என்றே
மடையுடைத்த வெள்ளம்போல் சீறிவிட்டுச் சென்றான்!
''என்னருமை வீரர்களே! ஏற்றங்கொள் தோழர்களே!
இன்றிந்தத் தென்னிலங்கை ஆண்டிருக்கும் இராவணன் நான்-
இழிதொழிலோர் - பண்பிழந்தோர் - எத்திப் பிழைப்போர்-
அவரை நத்திக் கிடப்போர்

அனைவரையும் அரை நொடியில் அழித்துவிடப்
போர்க்கோலம் பூண்டு விட்டேன்!
புலிநிகர் நண்பர்களே!
பொல்லாத புரோகிதர்கள், படை
இல்லாதவர் என்றிருந்தேன்!
பாவையரைப் பாசறையாய் ஆக்கிக் கொண்டு
தேவையுள்ள படைகளெல்லாம் குவித்து விட்டார்,
கோவை இதழ், கொய்யாக் கன்னம்,
போர்வை உடல் கொண்டுவிட்ட இளங் குமரிகளால்,
இனத்திலுள்ள மன்னரெல்லாம் இருடிகள்பால் சாய்ந்து விட்டார்!
முழு நிலவு முகங்காட்டி, முனிவர்களின் பெண்டாட்டி
முடி மன்னர்களை வாட்டி விட்டார் - தமிழ்க்
கொடி பறந்த கோட்டை யெல்லாம்
மடியேந்தும் ஆரியர்க்கு மடங்களாய்ப் போனதய்யோ!
அருமைத் தம்பிக்குத் தீமை சூழ்ந்து ஆரண்யம் ஓடி வந்த
இராமன்,

எருமைக்குமில்லாத தடித்த தோலன்,
இழி சுக்ரீவன் இவனுக்குத் தோழன்,
அண்ணனுக்கு மரணம் தந்தோன்!
இன்னொருவன், அனுமன் எனும் துரோகியுடன்
இலங்கைக்குத் தீ வைத்த என்றன் தம்பி!
இவர்கள் எல்லாம் எதிர்க்கின்றார் என்னை யென்றால்,
இதிலேதோ மர்மம் இருக்கத்தான் வேண்டுமன்றோ?
நான்,
சீதைக்கோர் மகன் தந்து, இலங்கைச் செங்கோலும்
அந்த மகனுக்கே தந்துவிட வேண்டுமென்று,
தீப்பந்தனைய நிபந்தனைகள் போடுகின்றார்,
தீய இராமனது கூட்டத்தார்!
பூப்பந்தனைய பொன் மகளாம் - என் துணைவி
பாப்புனையும் புலவர்க்கும் கிட்டாத பைந்தமிழாம்-

கோப்பெருந் தேவியவள், குளிர் நிலா! வைரக் கட்டி! இந்த
யாழ் மீட்டும் பாணனுக்கு, சீதையெனும்
பாழ்பட்ட வீணை ஏன்? சிறிது
நாள்பட்டேனும் நம் நாடும் ஆரியரின்
தாள் தொட்டு வணங்குதற்கு வழி திறவேன்!
விழி மூலம் வீரத்தைக் காட்டுகின்ற வீரர்காள்!
மொழி மீது ஆணை தந்து புறப்படுவீர் - முள்ளம் பன்றிகளைப்
பழி தீர்த்துத் திரும்பிடுவோம்!''
என முரசறைந்தான், முதுகுன்றத் தோளுடையோன்!
அது கேட்டு அனைவருமே ஆர்ப்பரித்தார்!....
கொலை மணக்கும் போர்க்களத்தில்
இரு தரப்புப் படைகளுமே ரத்தங் கொட்டும்!
தலை நொறுங்கிச் செத்தவரும், குடல் கிழிந்து போனவரும்
தமிழினத்தார் - ஒரு குலத்தார்!
மலையோரம், மரத்தோரம் மறைந்திருந்து
எலிபோலப் போரிட்டான் எதிரி இராமன்!
அம்புவியில் கண்டதில்லை இந்த முறை-
அம்பு வில்லை எடடா என்று
கும்பகர்ணன் கொதித்தெழுந்தான்! அது கண்டு
குதித்தோடும் இராமன் தன்னைக் கோழையே திரும்பு என்றான்!
கரும்போ உயிரென்று களிறு போல் முழங்கி நின்றான்!
முடிக்கவில்லை அவன் பேச்சை... முதுகுப் புறத்தினிலே,
சரமாரி பொழிந்து விட்டான் சண்டாள இலக்குவனும்!
ஆனையெனச் சாய்ந்துவிட்ட அன்புத் தம்பிதனைச்
சேனைதனை நடத்தி வந்த செந்தமிழன் கண்டுவிட்டான்!
சிந்தையெலாம் அணுவெல்லாம் தழல் பறக்கப்
பூனைகளே!... நில்லுங்கள் எனச் சொல்லிப்
பூட்டி விட்டான்... போர்க் கணையை!
குளிர் மேகம் கொட்டுகின்ற மழைதானோ?
கோடையிலே அதிர்கின்ற இடிதானோ? எனப்
புயல்வேகம் - புதுவேகம் கொண்டு விட்டான்!

வேல்பட்ட புலி போல - விடுபட்ட கணைபோல-
அணை விட்ட வெள்ளம் போல - ஆயிரம்
வாள்பட்ட மார்புடையான், போரிட்டான்!....
கால்பட்ட பிடரியுடன் கயவர்களும் மறைந்து போனார்!
ஒழிந்ததடா பகையென்று, நகை முழக்கம்
செய்து விட்டுத் திரும்புகின்ற வழிதனிலே
ஒளிந்திருந்து ஆரியர்கள் ஓரம்பு வீசி விட்டார்.
மார்பினிலே பட்ட கணை வெட்டித் தள்ளி,
யாரடா கோழையென்று வாள் ஓங்கித் திரும்பிவிட்டான்!
ஓடுதற்கு வழியின்றிச் சிக்கிவிட்ட இராமன் கூட்டம்
தேடுதற்கும் தசையின்றிப் பஞ்சாய்ப் போகும்!....
கன்னலடா என்றன் நாடு, அதை
இன்னலிலே மாட்டிவிட்ட உங்களுக்கு-இந்த வாள்வீச்சு
மின்னலடா எனக்கூறிச் சுழற்றி விட்டான்.
சூறாவளிதனையும் சூழ்ந்தெதிர்க்கும் கீர்த்தி பெற்றோன்!
இனி நிலைமை மோசமென்று, ஆரியக்
கனி சுவைக்கும் வீடணன் கண்டு விட்டான்!
ஈட்டியொன்று அவன் கையில்!...
எறிந்து விட்டான் அண்ணனது முதுகின் பக்கம்!
மறைந்திருந்து பறந்து வந்த அந்த ஈட்டி - அவன்
மலைப்பாறை முதுகினிலே ஊடுருவி, மார்பகத்தில்
தலைநீட்டிக் - கண்ணீர் கொட்டும்!
இமயமலை சாய்வது போல், இராவணனும் வீழ்ந்து விட்டான்!
''எனைக் கொன்றவன் என் தம்பி,
பனைமரத் தோளுடையான் - கையிலே
பார்ப்பனத் தாளுடையான்-
உயிர் பிழைக்க மருந்துண்டு! - ஆனால் என்றன்
உடன் பிறப்பு ஒளிந்திருந்து
போரிட்டான் எனக் கேட்டுச் சாகின்றேன்''
இது கேட்டுச் செத்தது போல் ஆகிவிட்டார்
இலங்கை மாந்தர்!

# இந்திரஜித்

மண்ணெலாம் வீரம் துள்ளும் - மாதர்
கண்ணெலாம் கற்பு சொல்லும்;
விண்ணிலே ஏறுகின்ற
கொடி நிழல் பகையை வெல்லும்; நாட்டுப்
பண்ணெலாம் மானம் காட்டும்
எண்ணிலாத் திறம் முகிழ்க்கும் மறவர் கோட்டம்-
வெண்முகில் குடைபிடிக்கும்
பொன் சுவர்க் கோட்டை மீது
தண்ணென முத்தமிட்டுத் தடங்கடல் தவமிருக்கும்
இன்னுயிர் பெரிதேயல்ல இங்கு வாழ் மக்களுக்கு!
மன்னுயிர் காட்பதுவே மாத்தமிழர் இலக்கணமாம் எனக்கூறும்
தென்னிலங்கைப் பெருங்குடியின் வழிகாட்டி;
தன்மானச் சுடர்விளக்கு - தமிழர் தலைவன்;
எந்நாளும் புகழேட்டில் வாழுகின்ற இராவணன் காண்!
மின்னலிடைப் பெருந்தேவி மண்டோதரி அவன் மனைவி-
இருவரும்
கன்னல்மொழி கேட்பதற்கு மகவொன்று வேண்டுமென்று
கடுந்தவங்கள் இயற்றாமல், கங்கையிலே ஆடாமல்,
கனியொன்றைப் படைத்திட்டார் கட்டிலறைக் கவிபாடி!
காதல் அருவியிலே கண்டெடுத்த புதுமலரை - ஆணழகைக்-
களிப்புக் கடலாழ்ந்து பெற்றெடுத்த நித்திலத்தைக்

கண்ணொற்றி மகிழ்ந்திருந்தார்;
கவலைகளை மறந்திருந்தார்.
மாணிக்கமிழைத்த தொட்டில்
மகவின் கால்பட்டு நொறுங்கிப் போகும்;
மறுநாளே திருநாள் உண்டு - மகன்காட்டும் வீரம் கண்டு!
உமிழ்கின்றான் வாய்நீர் என்றால் - அதனை
அமிழ்தென உண்ணுகின்றார் அன்னை தந்தை!
தவழ்கின்றான் கூடத்தில் - பின்னே தமிழ்பாடித்
தொடர்கின்றான் பெருவீரன்;
''அகழ்கின்ற நிலந்தனிலே ஆணிப்பொன் மணிக்குலத்தை-
எடுக்கின்றார்;
புகழ்கின்ற குறளைப்போல் ஓர் குழவிக் கீடாமோ
அவையெல்லாம்?
இகழ்கின்றார் இல்லறத்தை இளித்தவாயர்! என் சொல்வேன்
அவர் அறிவை!
மகிழம்பூப் பிள்ளை தரும் பேரின்பம் மறுக்கின்ற
காவியமும் இலக்கியமும் கள்ளி என்பேன்!
கவைக்குவதவாக் காட்டுச் சுள்ளியென்பேன்!
முக்கனியின் கூட்டன்றோ குழந்தை முத்தம்-
முத்தமிழின் சுவையன்றோ அதன் முறுவல்!''
எனக்கொஞ்சி, வஞ்சிதனை அணைத்துக் கொள்வான்.
''பார்க்கின்றான் குழந்தை'' யெனப் பாவையும் விலகிக்
கொள்வாள்.
''கோக்கின்றான் முத்தெடுத்துச் சிரிப்பாலே!'' எனச்
சொல்லி, ''உன்
வாக்குண்டாம், நல்ல மனமுண்டாம், வாடா என் கண்ணே!''
என்று கனைகளால்
தாக்குண்ட தழும்பு மார்பில் தங்கத்தைத் தழுவிக்கொள்வான்.
நுரைகடலில் பருவநாளில் உயர்கின்ற அலையைப் போலே
தரைமீது காலூன்றித் தாவிப் பாய்ந்தான்.
தளிர்மகன், மலை முகில் பிடிக்க என்று

குளிர்மொழி சிந்தி நின்றாள் - கோப்பெருந்தேவியவள்!
''வேகங்கொள் வீரனுக்குப் பிறந்த செல்வம்
காகம் போல் கோழிபோல் வாழ்ந்திடுமோ?-
'மோகங்கொள் உயிர் மீது' எனச் சொன்னால் கேட்டிடுமோ?
சாகவே அஞ்சாது பாய்ந்திட்டான் வெண்முகிலின் மேலே!
ஆகவே அவன் பேரை மேகநாதன் என்பேன் இனிமேலே!''
இலங்கைத் திருநகரின் இளவலுக்குப் பேர் சூட்டும் திருநாள்-
சதங்கை ஒலிக்கின்ற மயிலினங்கள் ஆட்டமுடன் நடைபெற்ற
பெருநாள்!

அந்நாளில் எழில்மகனை அணைத்துக் கொண்டு
இந்நாடு ஆளவந்த குலவிளக்கே வாழ்கவென்று
வடித்து நின்றான் இன்பக்கண்ணீர் - பாளை தெறித்ததுபோல்
சிரித்து நின்றார் மாதரெல்லாம்;
படித்து நின்றார் இளவலின் முகத்தினிலே வீரத்தை -
மறவ ரெல்லாம்!

மணவீட்டில், 'பாலி'யிலே வளர்கின்ற தானியம்போல்
மளமளென வளர்ந்திட்டான் மேகநாதன் மண்மீதொரு
மலைபோல!

இரட்டிப்பாய் எட்டாண்டு முடிவதற்குள் அடவி சென்று
இருசிங்கம் பிடித்து வந்து மாளிகையில் நாய்போலக்
காவல் வைத்தான்!

இருபதாம் ஆண்டினிலே இரும்புத்தூண் ஒன்றை ஒரே கையால்
உடைத்துப் போட்டான்!

இலங்கையிலே பகைநுழையா அரண் அமைத்தான்.
இலக்கியத் தமிழுக்கு எழிலான மன்றம் கண்டான்.


அப்போது,

இந்திரனாம் தேவமன்னன் இவனோடு போரிட்டுத் தோற்றதாலே
இந்திரஜித்தனெனும் பெயருக்குத் தகுதியானான்.
''இனியவளே! என்னமுதே! நம்மகனின் பெருமைகளால்
இதயத்தில் புது எழுச்சி! புது உணர்ச்சி! புது இளமை
திரும்புதடி -

கனிமொழியே! அதன் நினைவாய்ப் பழமுத்தம் தந்திடடி!-
தனி நின்றால் தாங்கவில்லை காதல் தொல்லை!'' எனச்
சொல்லிக்
கண்டுவிட்டான் முல்லையல்லை! தமிழ்க்கொல்லைக்
காவலனாம் இராவணனைத் தழுவி நின்று;
''என்னுயிரே! அத்தானே! ஒன்று சொல்வேன்;
வண்ணமலர் முதிர்ந்தபின்பு பழமேயாகும்-
அந்நிலையை நோக்கித்தான் நடக்கின்றோம் நாமிருவர்
உண்மையன்றோ?
வெண்ணிலவுக் காலந்தன்னில் நாம்பட்ட பாடுகளை
எண்ணிக் கொண்டு
தண்ணமுதாம் மகனுக்குக் காதல் துணையொன்றைக்
காலத்தில் நாடுதலே நலமாகும்'' எனச் சொன்னாள் -
வண்டமரும் பூங்குழலாள் மண்டோதரி! அதுகேட்டு இராவணன்
''ஆம்'' என்று தலையசைத்தான் - ஆனாலும் விடவில்லை-
அன்றிரவை இருவருமே வென்றிருந்தார்;
உதயத்தின் ஒளிபட்டு எழுந்திருந்தார் - அந்தச்
சமயத்தில் ஓர் தோழி ஓடிவந்தாள்;
மாம்பழப் பெண்ணொருத்தி மேகநாதன் மாளிகையில்
ஆம்பற்கொடி போல நாணமுடன் நிற்கின்ற சேதிகேட்டார்!
அதிசயத்தால் திகைத்துப்போனார் பெற்றோர்கள் - ஆனாலும்
அதிரசத்தைச் சுவைப்பதுபோல் மன்னன் மகிழ்ந்து,
''ஆருயிரே! நீ போய்ப் பார்த்துவா உன் மருமகளை! அவள்
தார்வேந்தன் மகளோ? - தளிர்க் கொடியோ?
கார்குழலானோ? - நம் கண்மணிக்கு ஏற்றவளோ?
என்பதெல்லாம் அறிந்துவா ஓர் நொடியில்'' என்றான்.
அவள் சென்றாள் - பின்வந்தாள்!
''என்னடி கண்ணாட்டி! பொன்னடி பூமியில் படாமல்
பறக்கின்றாய்?
சொல்லடி சுவைத்தமிழே!'' எனச் செவிநீட்டித் துடித்திடும்
ஆளனிடம்

உள்ளது உள்ளபடி உரைப்பதற்கு முன்வந்தாள் இலங்கைராணி,
''சந்தன மரங்கடைந்து சிலைசெய்து,
வெந்தழல் நிறமெடுத்து இதழ்பொருத்தி,
இந்திர வில்லனைய புருவத்தின் கீழ்
எழில்நீல மணியிரண்டை இமைக்குள் பதித்துச்,
செந்தமிழ் மணக்கின்ற திருவாயை அசையச் செய்து,
சந்ததம் புகழ்பாடும் பான்மையிலே உயிரூட்டிக் கொண்டுவந்த
அற்புதமாம்!

அழகரசி! அமுதமொழி! அன்புமொழி!
பழகுதமிழ்ச் சுவடியிலே வார்த்தையில்லை உவமை காட்ட!
ஒன்று சொல்வேன்.



பதறாதீர் அதனைக் கேட்டுப் - பகைவனின் புதல்வி அன்னாள்!
சிதறாமல் சிந்தாமல் நம்செல்வன் எடுத்துவந்த செந்நெற்கதிர்!
நம்மைப்
படைகொண்டு எதிர்த்துப்பார்த்து உயிர்தப்பி ஓடிவிட்ட
நாகன் மகள்!
அவள் பெயர் சுலோச்சனையாம் - சுவைநிறைந்த
பலாச்சுளையாம்! ஓர்நாள்

மணிமாடச் சோலையோரம் மங்கைநல்லாள் உலவுங்காலை
பணியாரம் பார்த்துவிட்ட பூனைபோல் மேகநாதன் அங்கு
சென்றான்!
தணியாத காதலாலே தவிக்கின்றேன் அன்பேயென்று, யார்க்கும்
பணியாத தலைதாழ்த்திக் காதற்பிச்சை கேட்டு நின்றான்!
''துணியாத காரணத்தால் முதலில் நான் துவங்கவில்லை-
தூயவரே, உமது பேர் கேட்டுப் பலநாள் நான் தூங்கவில்லை,
புலி நகம்
அணியாத என் கழுத்தைப் பாரும் - உடன் அதைக் கொண்டு
வாரும்!
இனி யாரும் எனக்கு வேண்டாம் இந்த அன்பிருந்தால் போதும்''
என்றாள்!

''உங்கள் மகன் சிங்கமன்றோ!
பொங்கும் வேங்கைக்குப் பூனையா பிறந்துவிடும்?
தங்கம் பெயர்த்தெடுத்துத் தோள்மீது தூக்கிக் கொண்டான்-
அங்கமெலாம் குளிரேற அவளுமே தொத்திக் கொண்டாள்;
மங்கையுடல் தந்திட்ட புதுப்பலத்தால் நாகநாட்டு
மதிற்சுவரைத் தாண்டி விட்டான்!
நங்கை அவள் சொன்ன கதை இதுதான் மன்னா, அறிக''
என்றாள்; அகமகிழ்ந்தாள்!
கொடுங்கைத்தேர் பவனி வரும் வீதிகளில் விழாவெடுத்து
இலங்கைத் தீவின் மருமகளாய்ச் சுலோச்சனையை
ஆக்குவதே நலமென்றான் இராவணனும்;
அவளும் நன்றென்றாள்!
''திருப்பித்தா என்மகளை!'' எனக்கேட்டு நாக நாட்டான்
கிறுக்கிவிட்ட ஓலைதனைக் கிழித்துப் போட்டான் மேகநாதன்
''அறுக்கின்றேன் அவன் தலையை'' என சொல்லிப்
பழியேற்றுக் காத்திருந்தான் நாகமாமன்!
இந்நிலையில் இராவணனை
அழிப்பதற்கு இழி சூழ்ச்சி மேற்கொண்டார் வடவாரியர்கள்-
திராவிடனைத் தீர்த்துவிடத் திரைமறைவில் சதிக்கூத்து!



புறாவினம் போலிருந்து பொல்லாத கழுகாக மாறிவிட்டான் ஓர்
தம்பி-
அனுமன் எனும் ஐந்தாம்படையொன்றை அனுப்பிவைத்த
இராமனுக்கு
அறிவு புகட்டுகின்ற வழி கண்டான் மேகநாதன்!
தீயிட்டு நகர் அழிக்க முயன்றவனின் வால் நறுக்கித் தோலைப்
பதம்பார்த்து ஓட்டிவிட்டான்!
தாவிற்றுத் துரோக வெள்ளம் இலங்கை மீது!....
''காவிற்கு அழகில்லை பூவின்றி!
பாவிற்கு அழகில்லை பொருளின்றி!

நாவிற்கு அழகில்லை நயமின்றி!
அதனாலே இராமனிடம் இறங்கிப் பேசல் நலம்'' என்றான்,
குகனோடு ''எழுவரான'' கொடிய வீடணன்! அது கேட்டு
''நாகாக்கும் இலக்கணத்தை நன்றுரைத்தீர் சிற்றப்பா!
நாடு காக்கும் போர் மூண்ட பின்னர்
நம் தலைகாக்க மண்டியிடல் மரபல்ல - மானச் செயலல்ல
நடப்பீர்'' என்றான்

நடுக்கமிலா உளங்கொண்ட மேகநாதன்.
துடுக்குமிகு வடநாட்டார் துவங்கி விட்டார் போராட்டம்!
இடுக்கண் வருகின்ற நேரமெல்லாம் நகுகின்ற
இந்நாட்டுப் பெருமக்கள் குதித்து விட்டார் சமர்க்களத்தில்;
உடன்பிறந்தே கொல்லுகின்ற பிணியாக வந்திட்ட தம்பிசெயல்
திடங்கொண்ட இராவணனின் சிந்தையெலாம் கலக்கிற்று;
''புடம்போட்ட பொன்னே! நான் பெற்றெடுத்த கண்ணே!
போருக்கு அனுப்புகின்றேன் உன்னை! போய்வா மகனே''
என்றான்.

''தினவெடுத்த தோளுக்குக் கிடைத்தது தீனி!
தீயவர்க்குக் கட்டுவோம் சாவூர் ஏணி!''
எனமுழக்கி எழுந்து விட்டான் காளை-
''தாய்நாடு காப்பதற்குத் தலைதருவேன் - பகைநாட்டு
நாய்நுழைய வழிதிறக்கும் பாவிகட்குப் பாடம் சொல்வேன்!
வருகின்றேன் என்றன் தாயே! வழியனுப்பி வையம்மா!
தருகின்றேன் வெற்றிச் சேதி'' - எனக்கூறிப் பறந்து போனான்.
எதிர்ப்பட்டாள் அவன் துணைவி;
புறப்பட்டேன் போருக்கென்றான்!
''அரையாண்டும் முடியவில்லை மணவிழா நடந்து-
தரையாண்டும் போதாமல் கடலாண்டு வருகின்ற மன்னர்
மகனே! காதல்
கரை தாண்டும் வழியின்றித் தவிக்கின்ற பேதையிடம் - போர்ப்
பறை யாண்டு முழங்கிற் றென்று
பயணம் கூறல் நியாயமோ? சொல்க!'' என்றாள்.

"விழுதுபோல் கண்ணீரைச் சிந்துவது அழகல்ல! வில்லால்
உழுது வீரம் விளைக்கின்ற பரம்பரையில் பிறந்து விட்டோம்:
தொழுது வாழ்வது அறிஞரையன்றிப் பகைவரையல்ல! -
பெண்கள்
அழுது தடுப்பது ஆண்களின் கள்ளத்தையன்றிக் களம்புகு
நிகழ்ச்சியையல்ல!
பழுது வருவது உடல் பொருள் ஆவிக்கேயன்றிப் பழந்தமிழ்ப்
பண்புக்கல்ல!
பொழுது விடிந்ததும் புறப்பட விடை கொடுத்திடு" என்றான்,
போர் முகங் காணத் துடித்திட்ட வேங்கை!
"கொடிபோல எனை வளைத்துத் தோளில் போட்டு
நெடியமதில் தாண்டும் போதும் அஞ்சவில்லை - நாளை
விடிவதை நினைத்தால் ஏனோ குலுங்குகின்றதத்தான்
உள்ளம்?"

அவள் அழுதாள்! அவன் சொன்னான்:

"இடியோசை கேட்கும் மழலை, கைகொட்டிச் சிரிக்கும் நாடு!
'முடியாமை' என்ற சொல்லை அறியாத தமிழர் நாடு - இதைப்
படியாமல் பேசலாமோ, பைங்கிளியே! என்னை உன்றன்
மடியில் போடு!"

ஆறுதலாய் அஞ்சா நெஞ்சன் உதிர்க்கின்ற வார்த்தைகளால்,
தேறுதல் அடைதற்கு வழியின்றித் தவித்த பெண்ணாள்
ஏறு தழுவும் அவன் மார்பில் எழில் மலராய் ஒட்டிக் கொண்டாள்
-"ரத்தச்
சேறு படிகின்ற தின்மார்பில் முத்தமிடு" எனக் கேட்டான்;
ஒன்றிரண்டு நூறாகப் பொழிந்து விட்டாள் முத்தமாரி-
ஒளிந்திருந்த சந்திரனும் எட்டிப் பார்த்தான்-
வெட்கிப்போனான்!

இணையில்லா வீரன் இந்திரஜித்தன்
போருக்கு வருகின்றான் எனக் கேட்டார்,
"அணையில்லா நதி போல வருவானே" என்றார். "அவன்
தேருக்குச் சாரதி நம் ஆள்தான்!

வீணுக்குப் பயம் வேண்டாம் விட்டொழிக!
ஊருக்குள் போய் வருவேன் ஒற்றனாக!'' எனக்கூறி
ஒளிந்து சென்றான் வீடணனும்!
''நெற்றி சுருங்காமல் நீல விழி கலங்காமல் நெடும்பகையை
வெற்றி கொள்வீர் அத்தான்!
பெற்றி நிறை தாயகத்தின் பெரும் நிதியே!
கற்றறியா மூடர்கள் கைவரிசை காட்டுதற்குப்
புற்றீசல் போல் புறப்பட்டு வருகின்றார் - என்
கொற்றவனே! குலப்பெருமை காத்திடுவீர்!'' - எனப்
போர்க்கோலம் பூண்டுவிட்ட வீரனுக்குத்
தார் சூட்டித் திலகமிட்டாள்! வாழ்த்தி நின்றாள் வடிவழகி
சுலோச்சனா தேவி!!

''இத்தரை மீதினில் எத்தரைப் புகவிடேன் - என்
பத்தரை மாற்றே! முத்திரை ஒன்''றெனப் பெற்றுச் சென்றான்!
''நிகும்பலை என்னுமிடம் நெடியதோர் பாசறை - அங்கு நம்
கும்பலை அழித்திடும் கருவிகள் உண்டு!
இந்திரஜித்தனின் பெரும்படை அதுதான்;
தந்திரமாய் அதைத் தகர்த்திட வேண்டும்'' இதை
வீடணன் சொன்னான் வீணர்கள் முகாமில்!
ஆடினார் அனைவரும் ஆனந்த மிகுதியில்!
போர்ப்படையுடனே புலிநிகர் தமிழன்
புகுந்தான் நிகும்பலைப் பாசறை தன்னில்!
யார்க்கும் தெரியாக் கருவிகள் எல்லாம்
எடுத்தான் - கொடுத்தான் வீரர்கள் கையில்!
ஆர்த்தது முரசம் பாசறை வெளியே!
அதிர்ந்தது பாசறை எதிரிகள் வரவால்!
குகைக்குள் திடுமெனச் சிக்கிய வீரன் - எரிமலைப்
புகையைக் கக்கினான் சினந்தே!
எங்கணும் எதிரிகள் சூழ்ந்தனர் அங்கே -
''சங்கையிலா என் சிற்றப்பன் செய்திட்ட வேலை இது! துரோகப்
பங்கை முடித்திட்டான் - துணிக்கின்றேன் அவன் தலையை!''

சுழலும் வாளாய்ச் சுற்றினான் தேரில்!
அழல் டோல் கண்கள் தோற்றமளித்திட
ஆயிரம் ஆனை பலமுடன் எதிர்த்தான்
கோபுரம் ஒன்று நடப்பது போலக்
குன்றம் ஒன்று அசைவது போலப்
புயலெனச் சீறிப் பொங்கு கடலாய் வந்தான்-
கயல் விழி மாதிடம் கனிவு பேசிடும் கண்களோ அவைகள்?
அயலவர் மரபை அறவே அழித்திடும் அனற்பொறி அவைகள்!
தங்கச் சிலையைத் தழுவிடும் கரமோ?
தருக்கர் தலையைக் கொய்திடும் கரமாம்!
எங்கும் அவனே; எதிலும் அவனே!
கங்குல் கிழிக்கும் கதிரும் அவனே!
போர் முடித்து இராமனின் தலையறுக்கும் நேரம்
தேர்ப்பாகன் சதியும் தொடங்கியது உடனே!
சக்கரங்கள் அச்சாணி காணவில்லை-
அக்கணமே தேர்த்தட்டு சாய்ந்து வீழப்
பதறிப் பாய்ந்தன குதிரைகள் நான்கும்!
சிதறித் தெறித்தன கடைக்கால் முழுதும்!
வஞ்சகத்தில் வீழ்ந்து விட்டான் மேகநாதன்-
நஞ்சுமன வீடணனும் அவன் கை நறுக்கி விட்டான்.
சிற்றப்பன் செய்திட்ட துரோகத்தை
எண்ணிடவும் நேரமில்லை... இருகரமும்
ரத்தப் பிரவாகமுடன் யுத்தம் செய்தான்!
ஈட்டிதனை வாயில் கௌவி எதிரிகளை வாட்டுகின்றான்
கூட்டமாகப் பகைவரெல்லாம் குழுமி விட்டார் - குமரன்
முன்னே!

இருகரமும் இழந்த நிலையில்
பரபரவெனப் போராடும் ஆற்றல் தனைப்
பகைவரும் போற்றுகின்றார்-
பாவி வீடணன் ஒருவன் தவிர!

வேலாலே கணையாலே பகைவீழ்த்த முடியாமல்
காலாலே தலையாலே பலர் உயிரை மொண்டு விட்டான்!

போர்க்களத்தில் அத்தானின் கை அறுந்ததெனப்
பூங்கொடியாள் சுலோச்சனையும் தெரிந்து கொண்டாள்-
''தாவி அணைக்கின்ற கரமெங்கே?
பாவிநான் எப்படித்தான் காண்பேனோ அத்தானை!''
எனப் புலம்பி ஓடி வந்தாள்;
தனியொருவன் ஆயிரம்பேர் நடு நின்று
தமிழ்வீரம் காட்டுகின்ற காட்சி கண்டாள்:
'அத்தான்!' என்றாள் - 'அன்பே' என்றான் - சற்று அயர்ந்தான்!
அப்போது இலக்குவனாம் பெருங்கோழை
தப்பாது கணையொன்றைத் தொடுத்து விட்டான்-
''தாய்நாடு வாழ்க!'' எனும் ஒலியோடு
பாயில்லாக் கலம்போலப் போர்க்களத்தில் அசைந்தான்
எப்போதோ பழிநினைத்த இழிகுணத்தான் நாகநாட்டான்
இப்போது தீர்த்துக் கொண்டான் தலையறுத்துப் பழைய வஞ்சம்!
''பைந்தமிழர் பொன்னேட்டில் இடம் பெற்றேன்;
பைங்கிளியே வருகின்றேன்!'' எனக் கூறித்
தலைமட்டும் அவள் கையில் விழுந்துவிட...
விலைமதியா இரத்தினமாம் சுலோச்சனையும் செத்து விட்டாள்!
''எனக்கு
வேறு உயிரில்லை போரில் இழப்பதற்கு'' - எனக்
கூறிச் சாய்ந்து விட்டான் இலங்கை வேந்தன்-
ஆனால் இறந்த பின்னர் இறப்பதற்கு மட்டுந்தான்
நீள் இமையைத் திறந்திட்டாள் மண்டோதரி!

# இரணியன்

புவிப் பெண்ணாள் கழுத்தினிலே,
புரளுகின்ற முத்துவடம் தென்னாடு;
எடுத்து மீட்டுகின்ற எழில் வீணை!
கவிக்கூட்டம் பாமாலை கட்டுகின்ற கலைச்சோலை
காசினியோர் காணிக்கைக் கப்பங் கட்டிக்
குவிக்கின்ற கரம்போல இலங்கைத் தீவு!
செவிக்கினிய தேமதுரத் தமிழோசை
செகமெங்கும் தமிழ் வீரம் பரப்புகின்ற பழைய நாளில்....
இருமலையைத் தோளாகப் பெற்ற வீரன்
திருமலியும் தேகங்கொண்டோன்
திராவிடர்க்குத் தேனாய் - நிலவாய்த்-
தீந்தமிழ்க்கோர் படைக்கலனாய்த் திகழ்ந்த பெரியோன்!
போர் வாட்கள் உறங்குகின்ற உறைபோல மீசையுண்டு!
புவிமெச்ச வாழவேண்டும் தமிழ் நிலம் என்பதிலும் தணியாத
ஆசை உண்டு
புல்லேந்திப் படையெடுத்த ஆரியரைக் கண்டு விட்டால்
குரலில் சிங்கத்தின் ஓசை உண்டு!
இந்தத் தரங்குன்றாத் தமிழனுக்குப்
பெற்றோர்கள் இட்ட பெயர் பெருந்தகை வேந்து!
இழிகுணத்தார் ஆரியர்கள் இட்ட பெயர் இரணியனாம்!
திருக்குறளின் முப்பாலும் உணர்ந்த வேந்தன்;

பொருட்பாலும் அறத்துப்பாலும் ஆட்சிக்கப்பால்
விலகாவண்ணம் காத்து வந்தான்!
இறுதிப்பால் இன்பப்பாலை இனியவளாம்
அரசியின்பால் கண்டு வந்தான்!
அதன் விளைவாய்க்...
குழல்மிஞ்சி, யாழ்மீறி, மழலைச் சொல் அவிழ்ப்பதற்கு
மாதரசின் வயிற்றினிலே மாணிக்கப் பேழை தோன்ற-
மகிழ்ச்சியினால் ஆர்ப்பரித்தார் நாட்டு மக்கள்!
கண்ணழகும் கவிதை சொல்லும் முகத்தழகும் கொண்ட காளை
பெண்ணழகை மிஞ்சுகின்ற பிறை நெற்றி கொண்டதாலே
பிறைநுதலான் எனச் சொல்லி அழைத்தார் பெற்றோர்;
பிற்போக்கு ஆரியரோ, பிரகலாதன் என்றார்!
மன்னவனை அழிப்பதற்கு மார்க்கமில்லா இச்சமயம்
மறவேந்தன் பரம்பரையில் குலக்கொடியும் முளைத்துவிட்டால்
மறையோதும் குலத்துக்கே நாசந்தான் எனச் சொல்லிக்
கொழுந்துவிடும் ஓமகுண்டத் தீ போலக்
கொதித்தெழுந்தார் சதி வகுக்க ஆரியர்கள்!
நரித்திட்டம் வகுத்துப் பின் கலைந்து சென்றார்
நாட்டைக் காடாக்க வந்த புல்லோர்!

நாளொரு மேனிப் பொழுதொரு வண்ணம்
வளர்கின்ற மன்னவனின் செல்வனுக்கு...
வாள்வித்தை, வில் வித்தை, கலைஞானம் கற்பிக்க
நானொருவன் திறனுடையேன் எனச் சொல்லி
நரியொன்று குறுக்கிடவே...
வெகுண்ட வேந்தன்,
''தாழை மடலை எதிர்ப் புறமாய்த் தடவுதற்கும் அஞ்சுகின்ற
கோழை நீ....
வாழைமரம் வெட்டுதற்கும் வாள்பிடிக்கத் தெரியா
மோழை! வந்தவழி போ'' என்றான்...
''நொந்தமனங் கொண்டு அவன் போவது நன்றல்ல;

கல்வி கற்பிக்கக் குலவேற்றுமை காட்டாதீர் மன்னா!''
என ஊடி நின்றாள்; கொற்றவனின் 'குறுநோக்' கைக் குறைகூறி
பரந்த மனப்பான்மைக்குத் தவறான இலக்கணத்தைப்
படித்துவிட்ட பட்டத்தரசி அவள்..
பாம்புக்குப் பால், முட்டை படைக்கச் சொன்னாள்!
குறுகிய நோக்கிற்கோர் அடையாளம் பூணூல் - மார்பில்!
குள்ளநரிச் செயல் உதிக்கும் கூனல் உள்ளம்-
ஆரியக் கொள்கை கூறும் சுவடி கையில்!
ஆனாலும் பெரு நோக்கால் ஏற்கச் சொன்னாள்
அடுத்துக் கெடுக்கவந்த ஆரியத்தின் தூதுவனை!
வட்டமுகப் பெருந்தேவி வார்த்தைக்குப் பதில் வார்த்தை
வழக்கத்தில் இல்லாத காரணத்தால்
பொட்டென்று சம்மதித்துப் போய்விட்டான்,
போர்முகத்தில் புலிவேகம் புயல்வேகம் காட்டுகின்ற பெருவீரன்!

'வாள்' என்றால் வானரத்தின் வால் என்றும்,
'வேல்' எனிலோ கருவேல மரமென்றும்,
'களம்' என்றால் நெல் குவிக்கும் இடமென்றும்
கருதி வாழும் உறுதியற்ற கூட்டத்தின்
உறுதுணைவன்-ஒதியமிலார்-ஓணான் குஞ்சு-
ஒப்பற்ற ஆசான்போல் உட்கார்ந்து பாடஞ்சொல்ல,
ஒடுக்கமுடன் எதிர் அமர்ந்து இளவரசு கல்வி கற்றான்.
ஆசானின் மூத்த மகள் ஆஷாதேவி
அருகிருந்து அவனோடு நட்புக் கொண்டாள்!
ஆரியத்தின் கருவுக்கும் சூழ்ச்சியுண்டு - அதன்
சுழற்சியிலே சிக்காதார் அவனியிலே யார்தான் உண்டு?
அரி நமோத்து சிந்தமென ஆரம்பித்தான்!
நரிபரியான கதை நயமாய்ச் சொன்னான்!
நங்கையும் பழமானாள்; இளவரசு கிளியானான்!
திங்களணி செஞ்சடையான், திருத்தொண்டர்
மனைவிதனைத் திருவிளையாடல் புரிந்த காதை....

திருலோகம் படைக்கின்ற பிரம்மதேவன் - மகள்
திலோத்தமையைப் புணர்ந்த காதை....
கடலோரம் நதியோரம் காட்டோரம் வீட்டோரம்....
ஆயக் கன்னியரின் குடம் கவிழ்த்த கண்ணன் காதை....
தாபமிகும் காமக் கதையெல்லாம் கற்பித்தான்!
தந்தை ஆடுகின்ற சூதுக்குக் காயானாள் தத்தை!
தளராது கற்பித்தாள் இளவலுக்கு இன்ப வித்தை!
விவேகபுரி வீரனாக வந்திருப்பான் செல்வன் என்று
''வில்வித்தை, ஆனையேற்றம் முடிந்ததா?'' எனக் கேட்ட
இரணியனை

இடித்துரைத்து மைந்தன் சொல்வான்
''ஏனப்பா அந்த இழிவெல்லாம்?
எழிலெல்லாம் கூட்டியுள்ள இன்பவல்லி தந்த
சுகம் கண்டேன்.... இறைவனது
பாதாரவிந்தம் காண வழி கண்டேன்!''
என உரைத்த மகன் மீது சீறிப் பாய்ந்தான்,
''தினவெடுத்த தோளாலே திசையை உலுக்கும்
பனைமரத்து வைரம்போல் உறுதி கொண்டேன்!
இயற்கையை வழிபடுகின்ற இனத்தின் மீது
இறைவனென்ற பெயராலே சிலையை நுழைக்கும்
இழிகுணத்தார் வாய்கிழிக்க வாள்பிடித்தேன்!
காட்டடா யாரென்று உந்தன் தெய்வம்... இல்லையேல்
காட்டாற்றில்.... நடுக் கடலில்.... எரி தழலில்...
போட்டமுக்கிப் பொடி செய்து மண்ணில் இறைப்பேன்...''
வேட்டு முழக்கம்போல் வெட்டொன்று துண்டிரண்டாய்
வீசிய வார்த்தைகளால்
ஆட்டுமூளை பெற்றுவந்த அரச மைந்தன் அஞ்சி நின்றான்!
அரசி அங்கு குறுக்கிடாதிருந்திருந்தால்.....
தமிழரின் மானம் தங்கும்; இரணியனின்
மகன்தான் சாவான்...

''நாளை இரவுக்குள் கடவுளை நீ காட்டாவிட்டால்
பாரமாய் உன்னைச் சுமந்து பெற்ற தாயாரும்...
பாஷாணமாய் வாய்த்துவிட்ட காதலியும்...
பதறி அழப் பாடையிலே ஏறிடுவாய்!
மகனில்லை-மறவனில்லை-என் மரபுக்கு
இனிப் புகழ்ச்சியில்லை - போ போ மறைந்து விடு!''
.... எனப் புலம்பி நின்றான்...
மலைமோதும் விதம் போலப் படைமோதும் போதும்
மாற்றார்கள் வெட்டுக்கிளி போலச் சூழ்ந்து வந்தபோதும்...
மனங்குலையா மாவீரன்;
மறத் தமிழர் சரித்திரத்தின் பொன்னேடு:
மகன் ஆரியர்க்குத் துணைபோனான் எனக் கேட்டு
ஓடிந்துபோனான்!
ஒளிந்து சென்று இளவரசன்
ஓமகுண்டத்தின் பால் அமர்ந்திருந்த வேதியன்முன்,
''உயிர் போகும் நிலை பெற்றேன்.... உமது
கடவுள்களை வரச்சொல்லும்!'' என உரைத்தான் நடந்தவற்றை!
''பயம் வேண்டாம் வா!'' என்று
பைங்கிளியாம் ஆஷாதேவி
மடிதனிலே போட்டுக் கொண்டு
மாறி மாறி முத்தம் தந்தாள்!.... அவன்
மனம் மாற்றிப் போடுதற்குத்
தனம் போர்த்தி அணைத்து நின்றாள்!
விதவிதமாய்க் காம இன்பம் - கற்றபாடமெல்லாம்
முடித்துவிட்டுப் புதிதாகக் கை வரிசை ஆரம்பித்தாள்;
கலவி இன்பப் புதிய அகராதி யாத்தாள்!
குலவி மகிழ்ந்தாள்.. புழுவைப் புலன் மாற்றும் குளவியானாள்!
கொட்டினாள்.... கொவ்வை இதழால்!
அவ்வைத் தமிழ் பாடும் பெரும் நாட்டை
ஆளவந்த இளவரசன் அடங்கினான் அவள் பிடியில்!

அதுதான் சமயமென அரியதோர் சதித்திட்டம்....
ஆரியம் நிலைக்கும் திட்டம்...
ஓமகுண்டத் திருச்சபையில் உடனடி நிறைவேற்றம்!
அதை அறியாப் பிரகலாதன், அப்பாவின் முன் சென்று
''ஆண்டவனைக் காட்டுகின்றேன்!'' எனச் சொன்னான்!
''எங்கே?'' என உறுமிற்று இரண்ய சிங்கம்!
''இந்தத் தூணிலே!'' எனச் சொன்னான்;
அது, ஆஷாவின் தூண்டுதலால் சொன்ன சொல்லாம்;
''தூணிலோ இருக்கின்றான்: தூ, தூ! மிக வெட்கம்!
தூயவரின் மனத்திலே இருக்கின்றான் எனச்
சொன்னால் அறிவுலகம் மறுக்காது!
அறிவற்றோய் இந்தத் தூணிலா? தூணிலா....?''
எனக்கேட்டு இடி முழக்கம் செய்தவாறு
இரும்புக் காலணியால் தூணைத் தூளாக்க ஓங்கிவிட்டான்!
துரோகிகள் ஏற்பாட்டால் தூண் முழுதும் காந்தம்
பரவியிருக்கின்ற சேதி பாதுகாப்பாளரும் அறியார்!
பகுத்தறிவை இழந்துவிட்ட மகனுந்தான் நின்றான்;
பாதகரின் ஏற்பாடு - பாவை தந்த சுகத்தாலே மறந்தான்!
ஓங்கிய இரும்புக் காலணி ஒட்டியது காந்தத் தூணோடு!
வீங்கிய புயத்தோன் வியப்பினில் ஆழ்ந்தான்!
ஆங்கு மறைந்த சூதனொருவன்
அரிமாக் கோலம் பூண்ட படியால்
ஆரியன் என்று யார்க்கும் தெரியாமல் - தெற்குச்
சூரியன் மார்பில் ஈட்டி நுழைத்தான்!
குபு குபுவெனப் பெருகிற்று உதிரம்!
குடலை அறுத்தனர்; நாவை அறுத்தனர்;
உடலை வெட்டினர், உருவை அழித்தனர்...
நமதாண்டவன் நரசிங்க வடிவில் வந்தான் என
நம்புதற்குக் கதையும் விற்றனர்
மூடிற்று மூடுபனி ஆரியத்தை எதிர்ப்பதற்கு
முழக்கமிட்ட வாயென்று;

ஆடிற்று ஆரியம் திருக்கூத்து!-
தெய்வந்தான் தந்தை உயிர் கொண்டதெனத்
தெளிவற்ற மைந்தனுமே பறையடித்தான்!
அவனறியான் ஆரியத்தின் முழு உருவை-
ஆளுதற்கு ஆஷாவுடன் ஏறிவிட்டான் அரியணையில்!
அந்த துரோக மகன் இன்றில்லை;
ஆயின் என்ன? அவன் வடிவில்
ஆரியத்தின் கால்பிடிக்கும் எண்ணற்ற
பிரகலாதர் இருக்கின்றாரே; இந்த நாட்டில்!

# வாளி மன்னன்

நற்சிந்தைப் பொற்குன்று கிட்கிந்தை நல்லோன்;
மற்போரில் வாட்போரில் நிகரில்லா வல்லோன்!
தற்கொண்டான் தனைப் பேணும் தமிழணங்கு தாரை;
கற்கண்டு மொழியாலே களிப்பூட்டும் பாவை!
பற்கொண்டாள் முத்தெடுத்து!
விற்கொண்டாள் புருவத்தில்! சந்திரனும்
கற்கின்றான் அவளிடத்தில் ஒளிகாட்டும் புதிய வித்தை!
தோள் வலியால் வாள் வலியால் தொகை தொகையாய்ச்
சூழ்கின்ற பகைமை எல்லாம்
தூள் தூளாய்ப் போய் ஒடுங்கும் - தொல்லை நீங்கும்!
வேள் பாரி, வழங்குவதில்! தமிழின்
தாள் வீழ்ந்து வணங்குவதில் வள்ளுவனே! அந்த
வல்லவனின் ஆட்சியிலே வறுமையில்லை! அதனாலே
வாட்டமில்லை;
நல்லவர்க்கும் களங்கமொன்று இருப்பதுவே இயற்கையன்றோ?
கொல்ல வரும் மலைப்பாம்பு: கொடும் விலங்கு; கொள்கையிலா
முழுமூடம்;
எல்லையில்லாச் சுயநலத்தின் மொத்த உரு;
இழிபெயரோன் சுக்ரீவன் - இளையோனாய்ப் பிறந்து விட்டான்!
அனுமன் எனும் ஓரமைச்சன் அவனுக்குப் பெருந்தோழன்;
மனுவின் முறை வேண்டுமெனப் போராடும் மதக் குரங்கு!

கணுவிலெல்லாம் சுவைக்கின்ற கரும்பினிலே
அணு அணுவாய் வேப்பெண்ணெய் கலப்பதற்குத் திட்டம்
யாத்தான்;
தினை மாவாம் தென்தமிழை அழிப்பதற்குத் திசைகெட்ட
ஆரியத்தின் துணைநின்ற துரோகி அவன்
''அண்ணனையே சாய்த்துவிட்டால் அரியணை உன் காலடியில்
அறிவாய் நீ சுக்ரீவா!'' என மொழிந்து முட்டாளை முடுக்கி
விட்டான்.

தருணமது பார்த்திருந்த இருவருமே கூடிப்பேசி
அவுணன் எனும் முரடன்தன்னை அண்ணன்பால் ஏவிவிட்டார்;
மற்போரில் எனைவெல்வார் யாருமில்லை;
மறுப்போர்கள் போட்டியிட வரலாமென்று
மார்தட்டி எதிர்நின்ற அவுணன் தன்னைப்
புன்னகையால் வரவேற்றுப் போர்முரசு கொட்டிவிட்டான்:
மண்ணாளும் மாமன்னன், மறத்தமிழர் குலவிளக்கு!
எத்தனை நாள் நடக்குமிந்த மற்போர்?
இருவருமே பெருவீரர்; எனப்பேசும் ஒரு கூட்டம்!
மன்னனினும் வல்லவனாய்த் தோன்றுகிறான்;
இன்னலேதும் வந்திடுமோ வேந்தனுக்கு? என ஏங்கும் ஒரு
கூட்டம்!
தோற்றத்தால் மலை போன்றான்; தோளிரண்டும் உரல்
போன்றான்.
தோற்றுத்தான் போவார் மன்னர்; எனத்துவளும் ஒரு கூட்டம்!
அனைவருமே எதிர்பார்த்த அதிர்ச்சி ஏதும் நிகழாவண்ணம்
அவுணனாம் பெருவீரன் ஓர் அடியில் மயங்கி வீழ்ந்தான்!
அடுத்த அடி.... ''அம்மாடி'' .....''அப்பாடி''...!
பின் அவனைப் பிடிப்பதற்கு ஆளில்லை....
மலைக்குகையில் ஒளிந்து விட்டான்!
சூழ்ச்சிதனை முடிக்காத சுக்ரீவன் அண்ணனிடம்
''அவுணனைப் பிடித்து வந்து நாட்டுக்கு வேடிக்கை காட்டல்
நன்று!

அண்ணாவே தொடர்வீர்'' என்று குகைதன்னைக் காட்டினான்
நின்று!
தம்பியின் உள்ளமெலாம் தணல்மலை என்று சொன்னால்
நம்பிட மறுக்கும் அண்ணன், நடந்திட்டான் குகையை நோக்கி!
குகைக்குள்ளே போன சிங்கம் திரும்பாமல் சாவதற்குப்
பகைக்குணத்தார் திட்டமிட்டார் - செய்துவிட்டார்!
ஆனைகளைக் கொண்டு வந்து பாறைகளை உருட்டி வைத்து
அடைத்துவிட்டார் குகை வாயில்!
அழித்துவிட்டோம் அரிமாவை என நினைப்பும்,
அடைந்துவிட்டோம் அரியணையை என நகைப்பும்
கொண்டவராய்க் கொலுவீற்றுக் கூறலானார்....
''கிட்கிந்தைப் பெருமக்காள்! உம் தந்தை, என் அண்ணன்
இறந்த சேதி பெருவிந்தை!
எண்ணவே நோகுதெங்கள் சிந்தை!
தந்திரமாய்ப் போராடி ஓட்டம் காட்டி ஒப்பற்ற வீரன் தன்னை
அந்தரத்திற்கனுப்பிவிட்டான் அவுணவீரன் - அய்யகோ!
அவலம்! அவலம்!
அழுவதால் பயனுமில்லை! ஆற்றுவார் யாருமில்லை!
ஆண்டவனைத்
தொழுவதே வேலையென்று ஆகிறேன் துறவியாக''
எனச்சொல்லிப் பொய்க் கண்ணீர் பொல பொலவென
உதிர்த்துவிட்டான்!
''போகாதீர் இளையவரே! போகாதீர்!
புவியாளும் உரிமைதனை நீர்பெற்று எமைக்காக்கும்
பொறுப்பேற்பீர்!'' எனப்
புலம்பி வழி மறித்தார் - புரியாதோர் புவி மக்கள்!
''மறுப்பதற்கு இயலவில்லை மந்திரியே! மாருதியே!
மணிமகுடம் எடுத்துவாரும் - தலையில் மாட்டும்!
பொறுப்பெதற்கு எனப்பார்த்தேன்! பொதுமக்கள்
விட்டால்தானே?
வெறுப்பதற்கு முடியவில்லை அண்ணன் நாட்டை!''

சூழ்ச்சியிலே திறன்மிக்க சுக்ரீவன் - மொழிகேட்டுச்
சுற்றிநின்ற மாந்தரெல்லாம் மகிழுகின்றார்.
சுறுசுறுப்பாய் முடிசூட்டும் காரியத்தில்
சுழற்காற்றாய்ப் பறக்கின்றான் ஆஞ்சநேயன்-
அவ்வமயம் புயற்காற்றாய்ப் பெரு நெருப்பாய்ப் புகுந்திட்டாள்-
தாராதேவி!

''முயற்கொம்பே முடியுனக்கு, சுக்ரீவா! தெரிந்து கொள்க!
அயற் கொள்கை தமிழ்நாட்டில் பரவுதற்கு
அனுமனுடன் கூடிக்கொண்டு அண்ணனையும் சாய்த்து
விட்டாய்!

தம்பியெனும் இலக்கணத்தின் விதிவிலக்கே!
நம்பிக்கைத் துரோகி! உந்தன் ரத்தத்தில் உணர்வு இல்லை!
தும்பிக்கு மலரிடத்தில் இருக்கின்ற பற்றுகூடத்
தூய தமிழ்நாட்டின் மீதுனக்கு இல்லையென்பேன்.
நாடாள வேட்கையென்று அண்ணனிடம் கேட்டிருந்தால்
தாராளமாய்த் தந்துவிடும் தங்கமன்றோ என் கணவர்!
போராடிப் பெறுவதற்கும் திறனில்லாக் களக்கோழை!
தேர் போன்ற பேரரசின் சாரதியாய் அமர்ந்து விட்டாய்-
தூ தூ! வெட்கம் - வெட்கம்!
துணிவிருந்தால் தூக்கு வாளை!
தோகையெந்தன் எதிர்ப்புக்குப் பதில் சொல்லி நாட்டை ஆளு!
அந்தத்

தொடை நடுங்கி அனுமன் எங்கே?''
எனக் குமுறும் தாரையிடம், இழிகுணத்தான் சுக்ரீவன்
''படைநடுங்கப் போர் புரியும் மாவீரன் மனைவியெனினும்
இடைகுலுங்க நடை காட்டும் பெண்தானே நீ! அறையில்
''அடைகாக்கும் பெட்டைக்கு அம்பலத்தில் வேலையில்லை-
போ போ!'' என்றான்.
ஆரையடா சொன்னாய் அது?'' எனக் கிளம்பித் தாரை,
'அனற்பிழம்பாய் வார்த்தைகளைக் கொட்டலானாள்;
''அடைகாக்கும் பெட்டையின் முட்டைக்குள்ளிருந்து வந்த

சேவற்குஞ்சே! செயலற்ற ஆண்மகனே!
சிறு நரியே! சிற்றெறும்பே!
தாய்க்குலத்தை இகழ்வதற்குத் தடித்த நா படைத்தவனே!
நாய்க் குலத்தின்பால் நன்றிக்குப் பொருள் கேட்டுத் தெரிந்து
கொள்வாய்!

நடைகட்டு இப்போது இதைவிட்டு எனப் பாய்ந்தாள்!
''உன் கொட்டத்தை அடக்குதற்கு ஆளில்லை எனத் துணிந்தாய்!
பட்டத்து ராணியென மரியாதை பார்த்தால் அதைப் பயமென
நினைத்தாய்!

சட்டத்தின் துணை கொள்ளச் சந்தர்ப்பம் அளித்தாய்-
துட்டப் பெண் உன்னைச் சிறையினிலே போட வேண்டும்-
உடன் ஆகட்டும் காவலரே வேலை!'' என்று
உற்கை விழியிரண்டாலே உத்தரவு தந்திட்டான்.
''நிறுத்தடா தம்பி! நிலமாளப் புதிதாக வந்தவனே!
உலுத்தையென என்னிவிட்டாய் பெண்ணை-
சிறுத்தையெனப் பாய்ந்திடுவாள் அறிவாய்!
கருத்தமலைக் குகையினிலே என்னைப் பாறைக்
கதவாலே மூடிவிட்டோம் என்று
களிப்பாலே துள்ளுகின்றாய், நன்று!
கனவல்ல தம்பி இது; நான்தான் உன் அண்ணன்-
காலஞ்செல்லாத கிட்கிந்தை மன்னன்
ஆனையும் அனுமனும் அன்புள்ள தம்பியும்
அடைத்திருந்த பாறைதனை
உதைத்தெறிந்த விதந்தன்னைக் காட்டுகின்றேன் பாரீர்!'' என்று
கர்ச்சித்து உள் நுழைந்தான் வாளி மன்னன்.
அண்ணனைக் கண்ட தம்பி, அனுமனுடன் மறைந்தோடி
ஆவி பிழைத்தோமென்று அடவியிலே திரியலானான்.
அங்கொருநாள்.
மனைவிதனைப் பறிகொடுத்த இராமன் எனும் ''மாவீரன்''
இலக்குமணத் தம்பியுடன் இளைப்பாற வந்தபோது
இளநீர்கள் பரிமாறி உபசரித்தான் சுக்ரீவன்

''இருடிகளின் மனையென்றால் இனிய பானம் கிடைத்திருக்கும்.
இருக்கட்டும் பரவாயில்லை'' யென அருந்தினான் இராமபிரான்.
பின்னர்,
''இளங்கொங்கைத் துடியிடையாள் என்மனைவி - காமக்
களம் புகுந்து வெற்றி காணும் கட்டழகி! சோம
போதையிலே காணுகின்ற சுகமனைத்தும், அவள்
பார்வையிலே காண்பதற்கு இயலுமென்பேன்!
சீதையெனும் பேருடையாள்! செந்தாமரை மொட்டு தனம்!
அவளில்லை இப்போது என்னிடத்தில்
இருக்குமிடந்தேடி என்பசிக்கு அவளை இட்டுவரத்
துணைவேண்டும்'' எனக் கேட்டான்.
''துணை தருவோம் - படைதருவோம் - ஆயின் ஒன்று!
இணையில்லாப் போர்வீரன் என் அண்ணன்-
வாட்போரில் மற்போரில் ஈடில்லை அவனுக்கு!
வாளி எய்வதிலும் ஆளில்லை அவனை வெல்ல! அதனாலே
வாளி யென்னும் சிறப்புப் பெயர் பெற்றோன்!
வஞ்சகமாய் அவன் உயிரைப் போக்குதற்கு மார்க்கம்
சொன்னால்

வந்துவிடும் அவன் நாடு என் வசமாய்-
அதன் பின்னர் உதவுகின்றேன்'' எனச் சொன்னான் சுக்ரீவன்.
திருநாட்டைப் பறிப்பதற்கு வகுத்தார்கள் சூழ்ச்சித் திட்டம்;
இருள் மனத்தான் சுக்ரீவன் எழுந்து விட்டான் கிட்கிந்தைக்கே!
அருள் முகத்தான் வாளிமன்னன் அமளிதன்னில் ஆருயிரின்
சுருள் கூந்தல் வருடிக் கொண்டு சுகங் கண்டான்.

வெளியே,
பொருள் புரியா ஒரு கூச்சல்:
''பொருதற்கு வருகின்றாயா?''
என ஒலிகேட்டுப் படுக்கை விட்டு எழுந்த புலி,
எதிர்நின்ற தம்பி கண்டு வியப்படைந்தான்!
அண்ணனின் பலமனைத்தும் அறிந்த தம்பி
அச்சமின்றித் தோள் தட்டி வருதல் கண்டு,

ஐயத்தால் அரசி நைந்தாள்... ஆயின் என்?
வீரனைத் தடுப்பதோ? விடைகொடுத்து அனுப்பி வைத்தாள்.
விழியெல்லாம் நீர் பெருக வீழ்ந்து விட்டாள் பஞ்சணையில்!
''மற்போரோ, விற்போரோ, வாட்போரோ?'' எனக்கேட்ட
மன்னனிடம்

''மற்போரே வேண்டு'' மென்றான் சுக்ரீவன்;
இருமலைகள் மோதுதல்போல் மோதிக் கொண்டார்-
இடியெனவே இருவருமே முழங்கலானார்!
நொடிப்பொழுதில் போர் முடியும் எனக் கணக்குப்
போட்டு விட்டான் வாலி மன்னன்!
கையினிலே தம்பிதனைத் தூக்கி வைத்துக் கரகரவெனச்
சுழற்றி விட்டான்

கைப்பந்தானான் வாலிக்குச் சுக்ரீவன்!
கணப்பொழுதில் உயிர்போகும் - வெற்றி, வாலிக்கே
என்ற நிலை.
மரப்புதரில் ஒளிந்திருந்த மாவீரன் ராமன்.
வாலி மார்பகத்தில் குறி பார்த்து ஓரம்பு வீச
அணையுடைத்து எழுநீத்தம் போல
அணி மார்பில் ரத்த வெள்ளம் பாய-
நிலம் வெடித்துக் கிளம்புகின்ற நீரூற்றுப் போல
நெஞ்சில் எழுகின்ற குருதியூற்று மேகத்தில்மோத;
''ஆரடா மறைந்திருத்து தாக்கிய வீரன்?
ஆகாகா ராமனோ? தர்மத்தின் தூதனோ?
பாரடா தமிழ்ரத்தம் பாய்வதை மண்ணில்!
ஏனடா திரிகின்றாய் வீரனாய் வீணில்?
விழுப்புண் படுதலே வீரம் - அந்தச்
செழிப்பில் உயர்வதே மானம்-
மானம் பெரிதென்பவன் தமிழன் - அதை
மறுப்பவனெல்லாம் பகைவன்!
பகைவனுடன் உறவாடும் தம்பி - அவனைப்
பகுத்தறிவு உலகம் பாராது திரும்பி!....

உளுத்த வில்லை முறித்ததனால் புகழ் பெற்ற வீரன்!
உத்தமியை மீட்பதற்குத் துணை தேடும் தீரன்!
வெளுத்ததெல்லாம் பாலெனவே நம்புகின்ற தமிழர் - சிலர்
இருத்தலினால் நடமாடும் சூரன்!
எதிர் நின்று போர் புரியும் ஆற்றலில்லாக் கோழை
பதர் நின்று நெல் அழிந்தால் பயன்தருமோ வாழ?
நான் மாண்டு நீயிருந்தால் பரவிடுமோ வீரம்?''
எனக் கேட்டான் வாளி மன்னன்-
மூரசறைந்தான் கேள்வியாலே!
முடிப்பதற்குள் வீழ்ந்து விட்டான் பிணமாக!

செய்தி பரவியது - செந்தீ பற்றியது -
செந்தாமரையாள் தாராதேவி வீழ்ந்தாள் வந்து!
''மன்னவரே! தழுவுதற்கு நானிருக்க
மண்மாதைத் தழுவினீரோ?'' என அழுதாள்; ஓலமிட்டாள்;
ஓடுகின்ற குருதி ஆற்றைக் கண்ணீரால் வென்றாள்-
கணவனுடன் சென்றாள்!
தமிழ்நாட்டுப் பண்பு கண்டான்-
தலைகுனிந்தான் ராமன்!

# கவியரங்கக்

# கவிதைகள்

# ഉപന്യാസം

## രണ്ടാം ഭാഷ മലയാളം

# விடுதலை வீரர்கள்

15.8.67 அன்று திருச்சி வானொலியில்
''விடுதலை வீரர்கள்''
என்ற தலைப்பில் நடைபெற்ற கவியரங்கத்தில்
கலைஞர் மு.கருணாநிதி அவர்களின்
தலைமைக் கவிதை முன்னுரை.

★

இமிழ்கடல் வேலித் தமிழகம் ஈன்ற
என்னுயிர் அண்ணன் அன்னையர் தந்தையர்
பொன்னொளிச் சோதரர் புகழ்மிகு பாவலர்
கண்மணித் தமிழின் காவலர் யாவரும்
இற்றைத் திருநாள் ஏற்பீர் வணக்கம்.

ஆகா...
சேரர் வாழ்ந்த சிறப்பிடம் எங்கே?
வீரர் பாண்டியர் அரசேன் கவிழ்ந்தது?
சோழர் உலவிய சோர்விலா நாட்டில்
கோழைக் கொள்கை குவிந்த தெவ்விதம்?
வெடித்தன வினாக்கள் வெதும்பிய மனத்தில்.
குடித்திடுவோம் உயிர் கொடுத்திடுக நாட்டை!

விடுதலை வேண்டாம் எனும் வெறும் உபதேசம்
நரிகளின் ஊளை.
நாட்டு வெறிபிடித்த காளைகளே
கிலிபிடித்த மனிதர்களைக் கீறி எறியுங்கள்
புலிவாழ்வின் உச்சியிலே புதுமைதனைப் பொறித்திடுவோம்
என்று சிலிர்த்துப் பொங்கி எழுந்த
தமிழகம் தந்த விடுதலை மறவர்
கமழ் மணப் பாவில் மீண்டும் பிறந்திட
வானொலி நிலையம் வழங்கிய அழைப்பால்
வந்துளர் தாய்கள்; தலைவன் நானாம்!

விழிகளில் வீரம் சிரித்திடும் தமிழர்
விடுதலை கீதம் பாடிய கதையைக்
கவிகளின் மொழியில் கேட்டிட எழுவோம்
கண்களில் ஒத்திக் கால்மலர் தொழுவோம்.
முதலில்....
முடக்கடா விடுதலை ஆர்வம் என்றார்
அடக்கடா சுதந்திர அனலை என்றார்
அவரை எதிர்த்து,
முழக்கடா முரசமென்று அதிர்ந்திட்ட சிங்க ஏறு
சழக்கரால் சாவில் வீழ்ந்த சரித்திரம் கேட்டிடுவோம்;
வானம் பொழியுது பூமி விளையுது
மன்னவன் காணிக்கை ஏதுக்கடா?
ஆண்ட இனத்தால் மீண்டும் முற்றுகை
மாண்டிடும் புழுவே மகுடம் கழற்று!
இப்படிக்
கனல் கொட்டும் பெருமூச்சு
கட்டபொம்மன் உயிர்மூச்சு - முழக்
கயிற்றினிலே ஆறியுதால்

கயத்தாறுத் தலம் என்போம்.
அத்தலத்து வரலாற்றைத் தருகின்றார்
அள்ளி உண்போம்.

(திருச்சிற்றம்பலக் கவிராயர் கட்டபொம்மன்)
வரலாற்றுக் கவிதை பாடி முடிக்கிறார்.)

**தலைவர் கலைஞர்:**

செத்துவிட்டான் கட்டபொம்மன் என்றிருந்தோம்; மீண்டும்
பெற்றுவிட்டார் இந்தச் சிற்றம்பலம்; வாழ்க நன்று.
அவ்வழியில்
அடுத்தடுத்துப் பிள்ளைகளைப் பெறுவதற்கு அன்னையர்கள்
இருக்கின்றார்
எடுத்தணைத்து மகிழ்ந்திடவே ஆவலுடன் நிற்கின்றோம்.
கெடுதலையைத் தருகின்ற அடிமை நீங்கி
விடுதலையைப் பெறுவதற்கு, என்மகனே
கொடு தலையை எனச்சொன்னாள் அன்னையென்று
கொடுத்து விட்ட புலிமக்கள் மருதிருவர்
தொடுத்துவிட்ட சுதந்திரப் பூமாலையிலே மணமானார்;
விடுத்துவிட்ட அம்புபோல் வேகம் காட்டித்
தணலில்
பழுத்துவிட்ட சொல் எடுத்துப் பாப்புனைந்து
நடமாட விடுகின்றார் மருதிரு சோதரரை
நடராசக் கவிராயர் மிக நன்றாய்:

(கவிஞர் தி.கு.நடராசன் மருதுபாண்டியர்
வரலாற்றுக் கவிதை பாடி முடிக்கிறார்).

**தலைவர் கலைஞர்:**

இருமருதை இங்கழைத்து வீரத்
திருமலியும் வரலாற்றைத் தந்திட்டார் நம் நண்பர்

இருமருதும் ஒரு மருதாய்ப் பிறந்திட்ட
பெரும்புலவன் பாரதியைக் காட்டுதற்குத் திரு
முருகுசுந்தரக் கவிவாணர் முனைகின்றார் கேட்போம்.

"பழைய நடை, பழங்கவிதை, பழந்தமிழ் நூல்
பார்த்தெழுதிப் பாரதியார் உயர்ந்தாரில்லை.
அழகொளிசேர் பாரதியார் கவிதை தன்னை
அறிந்திலதே புவியென்றால் புவிமேற் குற்றம்
களைத்தவர்க்கும் கல்லாத தமிழர்க்கும்
கனிந்தபடித் தோலுரித்துச்
சுளைத் தமிழால் கவியளித்த சுப்ரமண்ய பாரதியார்-
நீடு துயில் நீக்கப் பாடிவந்த நிலா
காடு மணக்க வந்த கற்பூரச் சொற்கோ"



என்றெல்லாம்
ஆடும் மயில் தமிழ் என்முன் என
ஆடவைத்த பாரதிதாசன் பாடுகின்றார்;
இவரென்ன பாடுகின்றார், பார்ப்போம்:

(கவிஞர் முருகுசுந்தரம் பாரதி பற்றிப்
பாடி முடிக்கிறார்)

**தலைவர் கலைஞர்:**

நீர் வீழ்ச்சி போலன்றோ நிமிர்ந்த கவி பாரதிக்குப்
பாவோச்சிப் பொழிந்துவிட்டார்- நன்று நன்று.
**ஒரு/**
நீர்விழ்ச்சி சேட்டையினால்
பேரதிர்ச்சிப் பெரும்புயலைத் தமிழ்நாடு தாங்கிற்றந்தோ!
வ.வே.சு. அய்யரெனும் வாய்மைகொள் செயல்மறவர்
ஆவேச நீர்வீழ்ச்சிச் சுழலில் சிக்கி
அன்றொரு நாள் மாய்ந்துவிட்டார்
இன்றொரு கவிஞர்
அவர் எழுப்ப வந்துவிட்டார்.
சுவர் எழுப்பிச் சுதந்திரத்தை அடைத்துப் போட்டுச்
சுற்றி நின்று பாதுகாத்த அன்னியரின் படைகெடுக்க
இவர் எழுந்தார், இடையில் மறைந்தார்
இதோ மீண்டும் வருகின்றார்
அழகொழுகும் அப்துர் ரகுமானின்
அருமை மிகு செந்தமிழால் உயிர்பெற்று:

(கவிஞர் அப்துர் ரகுமான் வ.வே.சு. அய்யர்
பற்றிப் பாடி முடிக்கிறார்)

**தலைவர் கலைஞர்:**

மூத்த குடிப்பிறந்த மூதறிஞர் வாழுகின்ற தமிழகத்தில் புகழ்
யாத்த குடிப்பிறந்த வ.வே.சு. அய்யர் கண்டோம்
விடுதலை உறுதி

ஏற்ற குடித்தோன்றல் - எழில்
தூத்துக்குடிக் கடல் மீது கப்பல்விட்ட ஏந்தல்
''திருவும் புகழும் சிறந்தன பிறவும்
மருவற நிற்கும் என் மாசிலா மனைவியே!
என்னரும் உயிரினும் என்னுயிர் உளத்தினும்
மன்னுறப் பாதியை மகிழ்ந்துனக் களித்தேன்
பின்னுறப் பாதியை பெரிய நம் தேயத்தின்
தன்னடிக் களித்தேன் சத்தியம் இஃதே!''
இந்த
அகவற் பாவால் அகத்தினைத் திறந்த
தகவுடை மேலோன் தமிழர் தலைவன்
வளஞ்செறியும் வ.உ.சி. பற்றிப் பாட
இளஞ்செழியக் கவி நண்பர்
இனிய தமிழ்ச் சொல்லால்
இங்கு வருகின்றார்; இதயம் உறை நல்லார்:

(கவிஞர் இளஞ்செழியன் வ.உ.சி. பற்றிப்
பாடி முடிக்கிறார்)

**தலைவர் கலைஞரின் முடிவுரைக் கவிதை:**

சிறை வாழ்ந்தார் செக்கிழுத்தார் - இந்தத்
தரையாண்ட வெள்ளையரை விரட்டுதற்குக்
குறை ஆயுள் பெற்று பலர் கொலையும் உண்டார்.
உறை மீறி வெளிவந்த கத்தி போல
உயிர்மீது ஆசையின்றிப் போர் புரிந்தார்;
அவர் பெருமை கூறுதற்கு
அணிவகுத்த இந்த நாளில்
விடுதலைக்கு உயிரீந்த
எவர் பெருமை கூறுதற்கும்
இவர் போலக்
கவி வளத்தைப் பெற்றேனில்லை;
கவிதை பாடக் கற்றேனில்லை

தளையறுத்த வீரர் கதை பாடுவதால்
தளையகற்றிப் பாடுகின்றேன் நானும் - அவர்
தொடை தட்டித் துரோகிகளை வீழ்த்தியதால்
தொடை தட்டும் என் பாட்டும்!

என் கவிதை,

யாப்பின்றிப் போனாலும் போகட்டும் - நம்நாடு, மொழி,
மானம், உணர்வெல்லாம்.

காப்பின்றிப் போதல் கூடாதெனும் கொள்கை யொன்றால்
வாய்ப்பின்றிப் போனாலும் செய்யுள் கற்கக்
காய்ப்பின்றி நிற்கின்ற மரமாக ஆகாமல் நெஞ்சில்
ஊறுகின்ற உணர்ச்சிகளை வரிகளாக்கிக் கொள்கை
மாறுகின்ற கோடரிகள் உணர்வதற்கு ஒன்று சொல்வேன்:
எத்தனை உயிர்கள் எத்தனை ரத்தம்
நித்தமும் தந்து பெற்றது விடுதலை!
இத்தனை குடைந்து மெத்தவும் உழன்று
பத்தனை மாற்றைப் பெற்றபின் அதனைக்
கைத்திறம் காட்டி அணிநகை பூட்டிச்
சித்திரப் பெண்டிர்க் களித்திடலன்றிக்
குப்பைக் குழியில் போடுதல் நன்றோ?
புட்கள் கூவிடும் சோலையின் நடுவே
முட்கள் கீறிடப் பறித்த நல் ரோஜா
கட்கம் ஏந்திய வீரர் முடியில்
வெட்கம் ஏந்திய மாதர் குழலில்
இருந்திடல் மனமா? அதனைத்
துட்டக் குரங்கின் குறுகிய கையில்
கொடுத்திடல் நலமா?

பெற்ற சுதந்திரம் பேணிக் காப்போம்;
பெற்ற மறவர்க்குப் பெருமைகள் சேர்ப்போம்.
உற்றார் சுற்றம் ஒருவர் இருவர்
உயர்வுடன் வாழ்தல் சுதந்திரம் ஆமோ?


கற்றார் கல்லார் கழனியில் உழல்வோர்
சிற்றாள் கொல்லர் சிறுதொழில் செய்வோர்
மாதர் நல்லார் மாணவ மணிகள்
தீதறு வாழ்வில் திளைத்தலே சுதந்திரம்.
இந்தக் கொள்கை இனிது விளங்க
மந்தக் கொள்கை மாய்ந்து விலக
சந்தத் தமிழில் ஒலிப்போம் இன்று.
தங்கக்குன்றே தமிழே தாயே; உன்
சிங்கப் புதல்வரின் சிறப்பினைச் சொன்னோம்
எங்கும் தமிழகம் வெற்றி விளைத்திட
இங்கு நீ எமக்கே அருள்வாய் அம்மா!

வணக்கம்!

வாழ்க!

# ஐம்புலன்

24.3.68 அன்று
வாணியம்பாடி இசுலாமியா கல்லூரியில் ''ஐம்புலன்''
என்ற தலைப்பில் நடைபெற்ற கவியரங்கத்தில்
**கலைஞர் மு. கருணாநிதி** அவர்களின்
தலைமைக் கவிதை முன்னுரை



பகைவர்க்குத் தாழாமல் படைகண்டு வீழாமல்
பல்லூழி வாழ்கின்ற தமிழ் எடுத்துப் பாடவந்த
கல்லூரிப் பெருமன்றில் இருக்கின்ற பெரியோரே
பேரன்பு கொண்டோரே நல்லிளஞ் சிங்கங்காள்
தாயன்பு தழைக்கின்ற நெஞ்சோடு ஏற்றிடுவீர் என் வணக்கம்!

மெய் வாய் கண் மூக்குச் செவியென்று
ஐம்புலன் பற்றிக் கவியரங் கொன்று
அமைக்கின்றோம் ஐய நீ வருக என்று
அன்பர் ரகுமான் அழைத்திட்டார்....
வாயால் சொன்னார் கவியரங் கென்று
எனைக் கவியெனக் கொண்டாரே யென்று
மெய்யெலாம் சிலிர்க்க, மெய்யா என்றேன்.
கண்சிமிட்டி ஆமென்றார். கேலியோ என்னவோ?
பின்னர் அவர் போட்ட கடிதமொன்று
பிடித்துப் பார்த்தேன், கண்ணால்தான்!
பாடுதற்கு வா என்றே மீண்டும் அழைப்பு

காள் விபத்தில் அடிபட்ட மூக்கினிலே சிறுசிகிச்சை;
போவதற்கு ஆமோ என்று பேசாதிருந்தேன்....
விடவில்லை என் தோழர்.
விடுவிடெனத் தொலைபேசி மணி அடிக்கச்
செவியினிலே ரகுமானின் குரல் கேட்டேன்.
வாயால் அழைத்து மெய்சிலிர்க்க வைத்துக்
கண் பார்க்கக் கடிதம் அனுப்பி
மூக்கினிலே நோய் எனினும் முக்காலும் விடமாட்டேன்
எனச்செலவு
நோக்காமல் செவிகுளிரத் தொலைபேசிக் கூப்பாடு
போட்ட பின்னர் நான் வராவிட்டால்
தாக்காமல் இருப்பீரோ நீவிர் எனப்பயந்து
பூக்காமல் இருக்கின்ற கவியரும்பு கட்டிக்கொண்டு
ஓடிவந்தேன்

காலை யரும்பு என் கவியரும்பு
மாலைவந்தால் மலருமென்றே நம்பி வந்தேன் மாலையிலே!
அழகுநிலா ஒன்றிருந்தால் அல்லிமொட்டு மலருமன்பர்; இங்கு
ஐந்தாறு நிலா அழகுக் கவிகள் நிலா இருபபதாலே
நான் அள்ளிவந்த அரும்புகூட மலருமன்றோ?
மலராவிட்டால் நிலவின் குற்றம்
எனைக் கவியென்று நினைத்தோர் குற்றம்
வண்ணமிகு குன்றங்கள் இருக்கின்ற வடார்க்காட்டிலு - என்
எண்ணமெலாம் இனிக்கின்ற நட்புக்காட்டும் முல்லைக்
கொம்மை
இன்னலொன்று எனக்கென்றால் துடித்திடட தோழருண்டு:
அந்தக்
கன்னல்நிகர் 'முல்லை'க்கு! வருவதென்றால் அடங்காத
ஆவலுண்டு...

அதனாலே அருகில் வந்தேன்.
ஆடி அடங்கிடும் மெய்யென்பார்
பாடி அடங்கிடும் வாய் என்பார்

தேடி அடங்கிடும் கண் என்பார்
வாடி அடங்கிடும் மூக்கென்பார்
நாடி அடங்கிடும் செவியென்பார்
இந்த ஐம்புலன் அடக்குதல் நன்றென்பார்!
அஃதெங்ஙனம் முடியும்?
பைம்புள் பாட்டை மறுக்குமோ செவியும்?
பைங்கிளித் தழுவலை மறுக்குமோ மெய்யும்?
பழந்தமிழ் பேச மறுக்குமோ வாயும்?
பலாச்சுளை நிலவை மறுக்குமோ கண்ணும்?
பனிமலர் நறுமணம் மறுக்குமோ மூக்கும்?
ஐம்புலனை அடக்குதற்குத் தவம் புரிந்த
அண்டமா முனிவரெல்லாம் அப்பாடா; எப்பாடு பட்டு
விட்டார்...
அரசுகட்டில், மணிமகுடம் அனைத்தும் துறந்து
அடவியிலே துறவியாக இருந்திட்டார், விசுவாமித்திரர்;
அவர் மேனகையின் விசுவாச மித்திரராய் ஆனகதை
அறியீரோ? அதுபோலக்
கண், செவி, மூக்கு, வாய், மெய் புலன் ஐந்தும்
கடிவாளமில்லாத குதிரைகளாய்க்
காட்டாற்று வெள்ளமாய்ப் பெருகியோடக்
கண்ணிருந்தும் குருடாய்க் - காதிருந்தும் செவிடாய்ப்-
புண்பெற்ற மெய் - புலம்புகின்ற வாயோடு
போக்கற்று நின்றிருந்த அருணகிரி வரலாறும் அறிந்திடுவீர்.
எதுவும் ஒரு அளவாக இருத்தல் வேண்டும்
அதுவும் மிக நிலையாக இருக்க வேண்டும்.
என்பதற்கு இரண்டு கதை சொன்னேன்.
கத்தியுளது கரத்தில் என்று; குத்திடவும் செய்யாதே
புத்தியுடன் அதனாலே பழமறுத்துத் தின்றிடவும் தயங்காதே
முத்தியடைவேன் என்று
ஐம்புலனை இயக்காமல் இருப்பதுபோல் நடிப்பதும் சூது

ஐம்புலனை அவிழ்த்துவிட்டுக் கோயில்மாடாய்த் திரிவதுவும்
தீது! அது கிடக்க
ஐம்புலனில் ஆளுக் கொரு 'புலன்' எடுத்து
அரங்கேற வந்தவரே ஒரு வார்த்தை!
இந்தக் கல்லூரி அரங்கினில் கவியை ஏறவிடுவோர்
அவர்தம் பொருளே பெரிதென்பீர்; கவிஞர்களே! நீங்கள்
எடுத்த பொருளே பெரிதென்று வாதிடும்போது
ஓர் எச்சரிக்கை!

மெய் பெரிதானால் ஊரார் யானை என்பர்
கண் பெரிதானால் கோட்டான் என்பர்
மூக்கு பெரிதானால் குடமிளகாய் அன்றோ
வாய் பெரிதானால் வாயாடிப் பட்டமுண்டு
செவி பெரிதானால் முறம் என முனகிடுவர்

அதனாலே
அளவறிந்து அவரவர் பொருளைப் பேசிடுவீர்
வம்பென்றால் விலக்கிடுவேன் - கவிஞரிடை
வம்பென்றால் களித்திருப்பேன் - தமிழ்க்
கம்பெடுத்துச் சொற்சிலம்பம் ஆடிடுவீர்; கவி
அம்பெடுத்துத் தாக்கிக் கொள்வீர்: அதே நேரம் கனிந்த
அன்பெடுத்துத் தாங்கிக் கொள்வீர்!
சுவை ஒளி ஊறு ஓசை நாற்றமென்று ஐந்தின்
வகை தெரிய விரித்துரைப்பீர்.
பகை பழி வெற்றி வீம்பு பாட்டினிலே வைத்து
நகை நட்பு நாம் என்ற உணர்வு நெஞ்ச ஏட்டினிலே வைத்து
எழுந்திடுவீர் போருக்கு!
சின்னச்சேவல் சண்டை: காசுக்கு
மன்னர் போடும் சண்டை; நாட்டுக்கு
நீங்கள் போடும் சண்டை; பாட்டுக்கு
நாங்கள் காணும் சண்டை: தமிழுக்கு

முதலில்
மெய் எனும் பொருள் பற்றி

நெய்யொழுகும் கவியொன்று
பெய்திடுவார் சாகுல் அமீது
அவர் என்ன சொல்வார்?
மெய்யின்றிக் கண்ணில்லை மூக்கில்லை
வாயில்லை செவியில்லை....
மெய்தானே அனைத்துக்கும் ஆதாரமென்பர்.
அது மெய்தானே?
அதாவது அவர் அப்படிச் சொல்லப்போவது மெய்தானே?
அவர்க்குத் துணையாக வள்ளுவரும்
''மக்கள் மெய்தீண்டல் உடற்கின்பம்'' என்றார்.
மெய்யா பொய்யா எனும் வாதத்திடையே
கொய்யாக் கனி சுவைப்போம்.
சற்றுக் காத்திருப்போம்.
சாகுல் அமீதின் தமிழ் கேட்போம்:

(கவிஞர் சாகுல் அமீது 'மெய்' பற்றிப்
பாடி முடிக்கிறார்)

தலைவர் கலைஞர்:

அடுத்து;
முருகுசுந்தரம் சேலத்துக்காரர்-
உருகாதோ அங்கிருக்கும் இரும்பென்று
ஒருமாதம் இருமாதம் ஓராண்டு பத்தாண்டல்ல-
கருவாகிக் காங்கிரசார் ஆட்சிசெய வந்தநாள் தொட்டு
உருகுகின்றோம் நாமெல்லாம்; அவர் மனமோ
உருகவில்லை! தேனிரும்பு;
உருகாவிடினும் தான்கற்ற தேன் தமிழால் நமதுள்ளம்
உருகும் வண்ணம் பாடுதற்கு
முருகுசுந்தரம் வருகின்றார்....
வாயின்றிப் பாடுதல் முடியாதென்று வழக்குரைப்பார்-
முடியுமா என்று என்னைத் தீர்ப்புக் கேட்பார்....
நான் திகைப்பேன்;

தீர்ப்பையும் வாயால்தானே சொல்லவேண்டும் என்பார்!
ஏன்; தீர்ப்பைக் கையாலும் எழுதிக் காட்டலாம் என்பேன்.
நிரந்தினிது சொல்லுதல் வல்லார்ப் பெறின்
விரைந்து தொழில் கேட்கும் ஞாலம்
எனும் வள்ளுவர் கருத்தை நண்பரின்
வாய்க்கு அவலாய்த் தருவேன்.
அவர் வாய் பற்றிப் பாடிடுவார்; நாம்
வாய் பொத்திக் கேட்டிடுவோம்
வாய்தானே உணவருந்தும் வாசல் என்று:

(கவிஞர் முருகுசுந்தரம் 'வாய்' பற்றிப்
பாடி முடிக்கிறார்.)

**தலைவர் கலைஞர்:**

அடுத்து;
கண்பற்றிப் பாட அரங்கின் கண்
வருகின்றார் ராசேந்திரன்-
என்கண் இவர் கவிதை கண்டதுண்டு
அவை, தேன் சீனி கற்கண்டு
வாய்ச் சொற்கள் என்ன பயனுமில
கண்ணோடு கண்ணினை நோக்கொக்கின்
என வாதாடப் போகின்றார்...
வள்ளுவரும் அவர் குறளில் 'கண்' என்ற சொல்லுக்கே
மிகுந்த இடம் தந்துள்ளார்;
கூற்றமோ? கண்ணோ? ஒரு குறளில்-
கொடும்புருவம் எனத் தொடங்கி
இவள்கண் எனமுடியும் ஒரு குறள்-
இருநோக்கு இவளுண்கண் உள்ளது
எனப் பறைசாற்றும் பிறிதோர் குறள்-
மலரன்ன கண்ணாள் மற்றோர் குறள்-
கண்ணோட்டம் என்னும் கழிபெருங் காரிகை
உண்மையான் உண்டிவ் வுலகு

இப்படிப் பல்வேறு குறட்பாக்கள் இவர்பக்கம் இருப்பதால்
எப்படித் தீர்ப்பு நான் கூறுவேன் என்று நினைக்காதீர்!
இந்த ஐம்புலனிலும் சிக்காத மூளையாலே
சிந்தித்துக் கண்திறந்து தீர்ப்பளிப்போம்
அதுவரையில் கண்மூடி இவர் கவிதை
இன்பத்தில் மயங்கி நிற்போம்.

(கவிஞர் ராசேந்திரன் 'கண்' பற்றிப் பாடி முடிக்கிறார்)

**தலைவர் கலைஞர்:**

அடுத்து:

தமிழன்பன் மூக்குடைக்கப் போகின்றார்
இரு கண்ணுக்குத் தேவையுள்ள கண்ணாடியை
இடையிலுள்ள மூக்குதான் சுமந்தபோதும்
மூக்காடி என்று பெயர் வேண்டாம்.
கண்ணாடி என்றே இருக்கட்டும் என்று விட்டுத்தந்த
பரந்த உள்ளம்
ஆத்தாடி எப்படித்தான் வந்ததுவோ மூக்கிற்கென்று
முரசறைவார் போருக்கு!
மோப்பத்தால் அனிச்சமலர் குழைய வைக்கும்
மூக்கென்றார் வள்ளுவரும்
மூக்கின்றி மூச்சில்லை; அதனாலே தன்பக்கம்
தீர்ப்பளிக்க வேண்டுமென்று நண்பர் கேட்டால்
நான் வாயாலே மூச்சுவிட்டுக் காட்டிடுவேன்...
மூக்கு பற்றிப் பாடுகின்ற தோழருக்கு முன்னாலே நிற்காமல்
அவர் கவிதைப்
போக்குபற்றி எண்ணிடுவோம்-
பாக்கு வைத்துத் திருமண அழைப்புத்தான் தந்திடுவர்; இங்குப்
பாக்கு வைத்துத் தமிழ்மணம் பருகவன்றோ அழைத்துள்ளார்-
பருகிடுவோம்:

(கவிஞர் ஈரோடு தமிழன்பன் 'மூக்கு' பற்றிப் பாடி முடிக்கிறார்)

**தலைவர் கலைஞர்:**

அடுத்து;

அலைபாடுங் கடல் போலக்
கலைபாடும் மாமல்லபுரம் போலக்
கவிபாடும் பொன்னிவளவன் இருக்கின்றார்....
காவிரியின் வளவன் கரிகால் வளவன்
கரிமேனி வளவன் இவர்; ஆனால்
கம்பீரத் திருமேனி வளவன்.....
'செவி' பற்றிச் செப்பிடவே வருகின்றார்.
செல்வத்துட் செல்வம் செவிச் செல்வம் அச்செல்வம்
செல்வத்து ளெல்லாம் தலை
என்ற குறள் காட்டி வெற்றிப் பரிசு கேட்டிடுவார்
உண்மையது; வாதத்துக்காக! ஆனால்....
கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய்க் கேளாரும் வேட்ப, வாய்
மொழிந்தால்தானே செவியேறி அது செல்வமாகும்
என

நான் கூறிப் பிழைத்துக் கொள்வேன்
நடக்கட்டும் அவர் வாதம்
நம் செவியேறி இனிக்கட்டும் செந்தமிழ் கீதம்!
செவிமடுப்போம் உம் கவிதை
வருவீர் ஐயா! வந்துவிட்டார் வளவன்
நான் சொன்ன நிறம் காண்பீர்
கவித்திறம் காண்பீர்
எம் இருவரையும் இணைத்துப் பார்ப்பின்
இருவண்ணக் கொடி காண்பீர்...

(கவிஞர் பொன்னிவளவன் 'செவி' பற்றிப் பாடி முடிக்கிறார்)

**தலைவர் கலைஞர் முடிவுரைக் கவிதை:**

பாவலர்க்குப் பட்டாடை போர்த்தும் நாட்டில்
மெய் வாய் கண் மூக்குச் செவியென்று - தமிழ்

நெய்து நமக்கெல்லாம் பட்டாடை போர்த்திவிட்டார்
ஒன்றையொன்று தாக்கி உறுமுகின்ற பாட்டெல்லாம்
கேட்டிருந்தோம்;
கொன்றையணி செஞ்சடையில் சந்திரனும் கங்கையுமே
சண்டையிட்டால்
சிவனார்க்குத் தலைவலிதான்
ஆனால் என் தலை(மை)யில்
கவிச்சண்டை களச்சண்டை: தமிழ்க்
கற்கண்டை இணைத்த சண்டை!
மெய் பெரிது என்றவரோ
வாயின்றி வாழ எண்ணார்
வாய் பெரிது என்றவரோ
செவிடாக இருக்க ஒண்ணார்
கண்ணழகு என்றவரோ
மூக்கழகு குறைக்கத் துணியார்
மூக்கழகு என்றவரும்
கண்ணின்றி முட்டிக்கொள்வேன் என்பாரா?
இவை அத்தனையும் அமைந்தவரே
அவையேறிப் பாடி நின்றார்
ஆகையினால் இது வீண்வம்பா என்றால். இல்லை
வீணைத் தமிழ் வம்பு; அறிவைச்
சாணை பிடிக்கின்ற வம்பு
இந்த வம்பு நாடெங்கும் நடைபெற்றால்
புலமை மிகும்; புதுமை தோன்றும்;
தமிழுக்குப் புதிய வாழ்வு வரும்;
தொடர்ந்து செய்வீர் இந்தத் தூய பணி!
மூக்கினிலே மூச்சு போகும் வரையினிலே
முத்தமிழ்க்குத் தொண்டு செய்வீர்!
போனபின்னும் புகழாலே தமிழ் காப்பீர்
கண்கொண்டு காண்பதனைத்தும் கவிதையாக்குவீர்
எழுச்சிக் கவிதையாக்குவீர் அதனைச் செயல்படக்

கடமை தொடக்குவீர் கடமை தொடக்குவீர்!
செவியில் நல்லது கேட்டு. அல்லது விடுத்துச்
செந்தமிழர் நலம் பாட வாய் திறப்பீர்!
ஒன்று சொல்வீராயினும் நன்று சொல்வீர்! நான்
உரைத்திட்ட இவையின்றி இருப்பதற்கே
உடல் என்றால் அது மெய்யல்ல பொய்யே ஆகும்.

வணக்கம்.

# பிலவங்க ஆண்டு

13.4.68 அன்று சென்னை வானொலியில்
நடைபெற்ற கவியரங்கில்
**கலைஞர் மு.கருணாநிதி அவர்களின்**
தலைமைக் கவிதையுரை

★

வணக்கம்.
'பிலவங்க' ஆண்டைப் பின்னுக்குத் தள்ளி
இலவங்காய் போல் வெடித்தது 'கீலக'
கலகங்கள் இன்றிக் காழ்ப்புகள் இன்றி
உலகெங்குமுள்ளோர் வாழ்க என்று வாழ்த்துவம் நன்று.
வருடப் பிறப்பென்றால் 'தை' என்றாலும்; இது
வழக்கத்தில் வந்ததனால் வாழ்த்திடுவோம்.
வருடத்தில் ஒருநாள்தான் வாழ்த்துகின்ற
சிக்கனப் பண்பெதற்கு?
வாயார மனமாரப் பல நாளும் வாழ்த்துச் சொல்வேன்
வானொலியில் கவி பாட வந்திருக்கும் கவிஞர்க்கு
வணக்கம் சொல்வேன்.
நித்திரை கலைந்தது நீள் விழி திறந்தாள்
சித்திரைப் பெண்ணாம் முத்திரைப் பொன்னாள்
பத்தரை மாற்றுப் பாட்டுப் புலவர்கள்
இத்தரை போற்றும் கற்றறி வள்ளுவர்
இயற்றிய குறளில் இனிதே நுழைந்து

ஈந்திடும் கருத்தை இங்கே சுவைப்போம்.
பிறப்பாலே புகழ் இல்லை: பெற்ற
சிறப்பாலே புகழ் என்று
அறப்பாலைப் பாடி வைத்தான். அதனைத்
திறப்பாடல் புனையும் நல்லோர் - நாம்
மறக்காமல் இருப்பதற்கு வழங்க வந்தார்.
பறக்காமல் இருக்கின்ற பறவை நான்
இலக்கணச் சிறகு
முளைக்காமல் தவிக்கின்ற கவிக்குஞ்சு நான்
பறக்காமல் இருக்கின்ற பறவை நான்
கூடு விட்டுக் கூடு பறக்காமல் இருக்கின்ற பறவை நான்
சிறகு முளைக்காமல் இருக்கின்ற கவிதைக் குஞ்சு நான்
சிலரைப் போல் வால் மட்டும் முளைக்காமல் இருக்கட்டும்
என் கவிக்கென்னும் சிறு கவிஞன் நான்
அடக்கத்தால் சொல்லுவதாய் எண்ணாதீர்
தளை சீர் தொடை அணி யாப்பெல்லாம்
தடுக்கத்தான் செய்யுமய்யா என் பாட்டில்!
அதற்கு விதி விலக்கு
கொடுக்கத்தான் வேண்டும் நீங்கள் இல்லையானால்
உமை விடுத்து
நடக்கத்தான் வேண்டுமென்று எழுந்திடுவேன்.
உறங்கும்போது ஒரு நாள் கனவொன்று கண்டேன்.
பிறகென்ன
விழித்திருக்கும் போதா கனவு வரும் எனக் கேளாதீர்
விழித்திருந்து கனவு கண்டே விடுதலை பெற்றார் காந்தி
பழித்திருந்த பலபேரைப் புன்சிரிப்பால்
**வெற்றி கண்டு அறிஞர் அண்ணா**
**விழித்திருந்தே நல்லாட்சிக் கனவு கண்டார்**
விரைவில் பெற்றார்.

அது நிற்க
அடியேன் கண்ட தூக்கக் கனா வென்ன?

அறிந்திடவே துடிக்கின்றீர்!
ஆணிப்பொன் மேனி அழகு மயிலனையார்
ஆறுபோர் ஆரணங்கு. அல்லிப்பூ மென்மேனி
அள்ளிப் பருகிடத்தான் யாருமே துடிக்கின்ற,
தேன் பொய்கை
ஊருக்குத் தெற்கே ஊருணியின் நிழலோரம்
காருக்குள் அமர்ந்து கண்மூடித் தூங்குகின்றேன்
''வேருக்குள் தாங்கும் பலாக்கனி நாங்களய்யா
பாருக்குள் எம்போல் பாவையுண்டா?'' என்றார்
''கோரிக்கை யாது கூறுவீர்?'' என்று நானும்
கோவை இதழ்க்காரிகளைக் கேட்கு முன்னம்
''அறுவரில் ஓரழகி தேர்ந்தெடுப்பீர்
அவளுடன் வாழ்வெலாம் களித்திருப்பீர்
அட்டியின்றி இப்போதே சொல்லிடுவீர் - நேரம்
வட்டியின்றிக் கழியு'' தென்றார்!
''செட்டிமார் வீட்டுப் பெண்ணோ?'' கேட்டுவிட்டேன்!
''முட்டி மோதும் சாதியில்லை மதமில்லை - யாம்
மனித குலம்: அவ்வளவே!'' என்று சொன்னார்.
ஆசைதான் எனக்கும் கூட - ஆனால்
தேர்வில்தான் திகைத்துப் போனேன்
அறுவரும் ஒரு நிறம் ஒரு குணம்
பருவமும் வேறிலை பனிமலர் இரு கனி மரம்
இடையிலோ எழில் நடையிலோ விழியாம் வேற்
படையிலோ இதழ்க் கடையிலோ
முரணிலை முறுவலும் ஒரு நிலை.
பட்டென்றால் ஒருத்தி மேனி
பட்டேதான் அறுவர் மேனி....
பளிங்கென்றால் ஒருத்தி மேனி
பளிங்கேதான் அறுவர் மேனி...
கிளிமொழி ஒருத்தி பேச்சு
கிளியேதான் ஆறு பேரும்...

அருள் நெறி ஒருத்தி வார்த்தை
அங்ஙனமே ஆறு பேரும்
குறள் மொழி பேசுகின்றாள் ஒருத்தி என்றால் நான்
கூறுகின்ற ஆறு பெண்ணும் அதனைத்தான் பேசுகின்றார்.
என் செய்வேன் எப்படித்தான் தேர்ந்தெடுப்பேன்
புண் செய்தார் விழிவேலால் இதயத்தில்
பண் செய்தார் நெஞ்சத்தில் காதலுக்கே
மண் செய்த விந்தையாலே
மங்கையர்கள் அறுவர் ஒன்றாய் - என்
கண் கொய்து திகைப்பாலே தவிக்க வைத்தார். சரி;
பேர் கேட்டுத் தெரிந்து கொண்டு அதில்
யார்வேண்டும் நமக்கென்று தேர்வதற்கு முன்வந்தேன்:
ஆளுக்கொரு பேர் சொன்னார்:
''அருளுடைமை'' ஒருத்தியின் பேர்,
'அடக்கம்' என்பவள் இன்னொருத்தி,
'இனியவை கூறல்' பிறிதொருத்தி,
'பொறை' யென்றாளொரு பூங்கோதை,
'வெகுளாமை' எனச் சிரித்தாள் வெறொருத்தி.
'இன்னா செய்யாமை' என் பேர் என்று
முன்னால் வந்து நின்றாள் ஆறாமவள்.
அடக்கமிருப்பின் அருளுடைமை ஆடிவரும்
இனியவை கூறுமிடம் பொறையிருந் தரசாளும்
வெகுளாமை கொண்ட மனம், இன்னா செய்யாமை
பூக்கின்ற தும்பை வனம்.
இதில் பேர்தானே மாற்றம்;
வேறென்ன மாற்றம்?
''ஒத்தவயது ஒத்த குணம் ஒத்த முகம்
உள்ள நல்லீர் - உமைப்
பெற்றெடுத்த தாய் யார்?'' என்றேன்;
''தமிழ்'' என்றார்.
தந்தையோ வள்ளுவராம்!

''அண்ணா'' எனத் தழுவிக் கொண்டார்.
''அன்புச் சோதரிகாள் உமது கரம் பிடிக்க
ஆறு கவி கொண்டிங்கு வருகின்றேன்
அவர்கள்
கூறு கவி கேட்ட பின்னர் மாலை சூடி
மகிழ்ந்திருப்பீர்'' என்று சொன்னேன்.
சரியென்றார்; வந்து விட்டார் கவிஞர்களும்!
அம்மவோ அதிலோர் கவி பெண் கவி!
''ஆறாவது பெண்ணுக்கு ஆண் கவி எங்கே?'' என்றார்.
திடுக்கிட்டேன் விழித்திட்டேன்
கலைந்திட்ட கனவோடு கவியரங்கு வந்திட்டேன்
கனவு கலைத்த கவி கைலாசக் கவி
சௌந்தரா கைலாசக் கவி
அவை நடுவே வந்துள்ளார்
அவர்
இனி-அவை கூறல் நன்றெனவே - அவர்
''இனியவை கூறல்'' நன்றெனவே - இனி
அவை கூறாது ஒதுங்குகின்றேன்.
இனியவை கூறல் எனுந் தலைப்பில்
அம்மை முழங்கிடுவார்:

(திருமதி சௌந்தரா கைலாசம் ''இனியவை கூறல்''
பற்றிப் பாடி முடிக்கிறார்)

**தலைவர் கலைஞர்:**

அடுத்து அடக்கம்;
அடக்கத்தின் விளைநிலமாய் அறிவே நிற்கும் அது
முடக்கத்தான் துவையலைப் போல் நோயும் தீர்க்கும்
ஆணவ நோயும் தீர்க்கும்

நடக்கத்தான் கால் என்போம்; உதைக்க அல்ல!
மடக்கத்தான் கத்தி என்றால் தேவையில்லை-பழம்
அறுக்கத்தான் கத்தி வேண்டும், உயிர் பறிக்க அல்ல.
அடக்கத்தில் எழும் வீரம் உண்மை வீரம்
வழக்கத்து வாய்வீரம் போலி வீரம்
ஆமைபோல் ஐம்பொறியும் அடக்க வேண்டும்
அதற்காக
ஊமைபோல் குருடு போல் செவிடுபோல்
ஊர் நடுவே திரிதல் நன்றோ?
கண் அடக்கம் இமைக் கதவில்
நா அடக்கம் வாய்ச் சிறையில்
மூச்சு அடக்கம் காற்றினிலே
மெய் அடக்கம் கல்லறையில் நல்ல
மன அடக்கம் அறிவொளியில்
எனைத் தலைமை தாங்க ஆணையிட்ட
அவையோர்க்கு நன்றியெனல் அவையடக்கம்;
எனைத் தலைமை தாங்க மன்றாடிக் கேட்டுக் கொண்ட
மன்றத்தார்க்கு ஆசியெனல் மண்டை வீக்கம்.
யாகாவாராயினும்
நாகாத்தல் அடக்கத்தின் முதற்படியாம்; வாய்க்குள் ஒரு ''வெறி நாய்'' காத்தல் ஆணவத்தின் மேற்படியாம்! அங்கிருந்து
உருண்டு விட்டால் உருவின்றிச்
சுருண்டு போகும் நெஞ்சழுத்தம்
இதையெல்லாம் அவை நடுவே
காணிக்கை ஆக்குதற்கு
மாணிக்க வாசகர் வருகின்றார்
பெற்றுக் கொள்வோம்.

(கவிஞர் மாணிக்கவாசகம் ''அடக்கம்'' பற்றிப்
பாடி முடிக்கிறார்)

தலைவர் கலைஞர்:

அடுத்து பொறை;
பிறையொன்று பொறுத்திருந்து நிலவாகும்
பொறை கொண்டார் பொறுத்திருந்து நிலமாள்வார்
இரையொன்று வருமட்டும் காத்திருக்கும் கொக்கு; அதனைப்
பொறை யென்று சொல்லாதீர்
தரைமீது அப்பறவை கற்ற சூழ்ச்சி
இகழ்வார்ப் பொறுத்தல் தலையாய்க் கொண்டோன்
அகழ்வார் தாங்கும் நிலமென நவின்றார்
இகழ்வார்க்கிருப்பது தலையும் அல்ல
ஏசிக் கிறுக்குதல் கலையும் அல்ல
புகழ்வார் பின்னே போதலும் தீது
இகழ்வார் எதிர்த்தல் அதனிலும் தீது
பொறையுடை மேலோன்
திரை கடல் இதயம்
கறை படு விதமாய்த் தாக்கி மகிழ்வோர்
தரை படு மீனாய்த் தவிப்பது உண்மை.
குறை படு சொல்லால் குத்துதல் எளிது; அதை
நிறை படு மனத்தால் தாங்குதல் அரிது; இதனைப்
பொறை யெனுந் தலைப்பில் பொழிந்திட வந்தார்
ஆற்றல் அரசெனும்
ஆர்வக் கவிஞர்:

(கவிஞர் ஆற்றலரசு 'பொறை'' பற்றிப் பாடி முடிக்கிறார்)

தலைவர் கலைஞர்:

அடுத்து வெகுளாமை;
தன்னையே கொல்லும் சினம் என்று
தமிழ் மேதை வள்ளுவரும் குறள் தந்தார்
சினந்தவர்கள் ஆர்த்தெழுந்து, கண்
சிவந்தவராய் ஆடுவதும், குடியில்

மிதந்தவர்கள் தடுமாறிக், கண்
சிவந்து தள்ளாடுவதும் ஒன்றேயாம்
ஆமையிலே பொறாமை நல்லதல்ல
இயலாமை ஏற்றதல்ல
அறியாமை நாடழிக்கும்
கொல்லாமை போல நல்லாமை
வெகுளாமை-
வேறாமை புகுந்துவிட்டால் வீடு நாசம்; நாடு நாசம்;
வெகுளலுக்கு முகம் நூறு
பல் நெறித்தல்
உதடழுத்தல்
கண் பிதுக்கல்
இப்படி நூறு விதம்
வெகுளலுக்கு முகம் நூறு
நூறு முகம் மதுவெறி போல் மாறிவிடும்
நூரு முகம்மது ஒளிப்பாட்டு அதனை ஆறவிடும்:

(கவிஞர் நூர் முகம்மது ''வெகுளாமை'' பற்றிப்
பாடி முடிக்கிறார்)

**தலைவர் கலைஞர்:**

அடுத்து இன்னா செய்யாமை;
இ்ந்துமோர் ஆமை ஆனால் நல்லாமை: இதனைக்
கல்லாமை; பெரிய தீமை!
கன்னமொன்றில் அடித்திட்டால்
இன்னுமொன்றைக் காட்டென்றார் ஏசு
இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண
நன்னயம் செய்துவிடல் நலமென்றார் குறளார்
இந்நா, சொல்வதெலாம் இன்னா....
என் நா அவ்வாறே பழகிற்றென்று
கன்னா பின்னா சொல் இறைப்போர் அறிவு அணியில்

முன்னா? பின்னா? எதிலும் இருக்க மாட்டார்-
முலையில்தான் கிடப்பார்.

இதனையெல்லாம்
சுரதாவாம் சுவைக் கவிஞர்
சொல்லடுக்கி விளக்கிடுவார்:

(கவிஞர் சுரதா ''இன்னா செய்யாமை'' பற்றிப் பாடி முடிக்கிறார்)

**தலைவர் கலைஞர்:**

அடுத்து அருளுடைமை;
பொருளுடையார்க் கிவ்வுலகம்
அருளுடையார்க் கவ்வுலகமென்று
இருளுடையார் நெஞ்சத்தில் விளக்கேற்றி வைத்தார்
அவ்வுலகம் எவ்வுலகம் என்பதிலே ஆராய்ச்சி பல உண்டு
பல் உயிரில் சில உயிர்கள் போகின்ற
நல் உலகம் அவ்வுலகம் என மொழிவாரை நாமறிவோம்.
கல் உரித்த நாரென்றால் நம்புவதா?
சொல் உரித்தார் சொர்க்கமென்று நரகமென்று
எள் உதிர்த்து ஏகலாம் அங்கே என்றார்
முள் உதித்த ரோஜா போல் முழு உண்மை மலரட்டும்.
அறிவெங்கே? விளைவெங்கே? அனைத்தும் பாழாம்!
ஏட்டில் எழுத்தில் இருக்கும் சொர்க்கம்
ஏழைக்குதவுதல் இங்கே சொர்க்கம்
எளிமை பழகுதல் இனிய சொர்க்கம்
இனியவை கூறல் இங்கே சொர்க்கம்
இறந்தும் வாழ்தல் இறவா சொர்க்கம்
இவ்வுலகம் அடைவதற்கே அருளுடைமை வேண்டுமென்றார்
இனிய கவி தூரனாரும் இதை விளக்க வந்துவிட்டார்:

(கவிஞர் தூரன் ''அருளுடைமை'' பற்றிப் பாடி முடிக்கிறார்)

தலைவர் கலைஞர்:

மலர் குவிப்பார் - கவி
மலர் குவிப்பார் என்றிருந்தேன் ஏமாந்தேன்; இவர்
மலர் குவித்தால் மாலையாகத் தொடுத்திடத்தான்
காத்திருந்தேன்!
இவரோ
ஆளுக்கொரு மாலை அழகாகக் கட்டிவிட்டார். தமிழ்த்தாயின்
தாளுக்கொரு மாலை: வள்ளுவரின்
தோளுக்கொரு மாலை:
அறம் பொருள் இன்பமெனும் ஒவ்வொரு
பாலுக்கும் ஒரு மாலை; மிச்சம்
ஒரு மாலை இருப்பதாலே அதனைப் போட எந்தப்
பெரும் ஆளைத் தேடுவது! ஆண்டுத்
திருநாளில் அனைவருமே அணிந்து கொள்வோம்
ஒரு நாளில் உலகத்தைத் திருத்துவது இயலாது
பல நாளும் முயன்றிடுவோம் - முதலில்
நாம் திருந்தி நாடு திருத்த முனைந்திடுவோம்
காட்சிக்கெளியன் கடுஞ்சொல்லன் அல்லன் எனில்
ஆட்சிக்கிவன்தான் சரியோ என்று
சாட்சிக் கூண்டு ஏறவும் தயங்கார்
காட்சிக் கெளியன் காந்தியின் சீடன்
கடுஞ்சொல் கூறான் புத்தரின் தொண்டன்
ஆட்சிக்கிவனே அமைதலும் நன்று; குறள்
மாட்சிக் கிவனே தகுந்த சான்று.
இனியவை கூறுவான்
இன்னா செய்யான்
அடக்கம் காப்பான்
அருளை வணங்குவான்.
பொறையில் குறியான் சினம்
பொங்கி அறியான். இந்த

அன்பு நெறியினில் அமைதி நிலவிடும்
ஆகா நெறியினில் அமளி பிறந்திடும்
கத்தி தூக்கல் கலகம் விளைத்தல்
கடுகைப் போய் மலையாக்கல்; அன்புக்
கடல் அமைதி கெடுக்கின்ற புயற் காற்று; அதைத்
தென்றலாய் மாற்றுதற்குத் தெளிவு வேண்டும்; மிகுந்த
அறிவு வேண்டும்; அதனைத் தான்
குறள் மூலம் பரப்புகின்றோம்
நம் கொள்கையிலே வெற்றி காண்போம்.

வணக்கம்.

# காதலா - வீரமா?

4-8-68 அன்று சேலத்தில் 'தமிழர் வாழ்வில் சிறந்தது காதலா வீரமா?' என்ற தலைப்பில் நடைபெற்ற கவிதைப் பட்டிமன்றம். கலைஞர் மு.கருணாநிதி அவர்களின் தலைமைக் கவிதை முன்னுரை

★

ஏர் வரா வயல் தனிலே எது வரும்?
புல் பூண்டு வரும்.
ஏர் வரின் நெல் வளம் வரும்
வானில்
கார் வரா காலத்தில் எது வரும்?
கடும் பஞ்சம் வரும்
கார் வரின் இன்பக் கனி வரும்
சேர்வரா 'அயன்' மலையில் எது வரும்?
சேர்வராயன் மலையில் எது வரும்? இரும்பு வரும்.
அனைவரும் சேர்வரின் நிலை வரும்
அனைவரும் சேர்வர் இன்நிலை வரும்
நிலை வரும்
தேர் வரும் பலர் இழுத்தால்: அதுபோலத்
தேன் இரும்பு வரும் சேலத்தில். இந்த

ஊர் வரும்போதெல்லாம் எண்ணுகின்றேன்
உருகாதோ இங்கிருக்கும் இரும்பென்று!
கோரிக்கை
சருகுநிலை அடைவதற்குள் நிறைவேற்றச் சொல்லிப்
பெருகிவரும் ஆதரவைக் காட்டிடுவோம் பேராசின்பால்!
நாட்டு வளம் நகர்வளம் நல்ல
காட்டுவளம் கனிவளம் சொல்ல வந்தேன்
திரும்பிவிட்டேன் தேனிரும்பின் பக்கம்.
தெரியாமல் போகவில்லை!
தேன் என்றால் காதல்
இரும்பென்றால் வீரம்
ஏன் என்று புரிகிறதா என் போக்கு இப்போது?
நெய்தல் தொழில் புரிவோர் நிறைந்திருக்கும் சேலத்தில்
நெய்தல் குறிஞ்சி முல்லை மருதம் பாலை யென்று
நிலம் வகுத்து வாழ்ந்திருந்த தமிழர்நிலை பாடிடவே
கவிதை
நெய்தல் தொழிலாய்க் கொண்டோர் வந்துள்ளார்.
பெய்தல் எப்போது மர்க்காராவில் மழை என்றும்-
பாசனம்-
செய்தல் தப்பாது நடத்தல் வேண்டுமென்றும்-
மேட்டூர் நிறைவு
எய்தல் ஒன்றே குறியாய்க்கொண்டு திரியும் என்னைக் - கவி
கொய்தல் வேண்டுமெனக் கூறிவிட்டார்.
காலத்தைக் கருத்தாலே வெல்லுகின்ற
கவிஞர்களைக் கூட்டி வைத்துக் - கவிதைக்
கோலத்தை வரைந்து காட்டக் கணபதியாம்
சேலத்துத் தமிழ்மன்றத் தலைவரவர் - கை
வேலொத்திப் போர்புரியும் வீரம் மேலா? விழி
வேலொத்திப் போர்புரியும் காதல் மேலா? எனும் வம்பை
ஆரத்தி எடுத்து வரவேற்கின்றார்
ஏலத்தின் மணம் வீசும் தமிழ்ச் சொல்லால்!

சேலொத்த பெண்ணாள் தரும்காதல் பெரிதென்பார்
ஒரு பிரிவார்
ஞாலத்துப் புகழ்மகுடம் வீரமென முழக்கிடுவார் மறுபிரிவார்
இதற்கு நான் தலைவன் - இருவரிடை
பாலத்தைப் போடுவதா, பகைத்தீயை மூட்டுவதா?
பாலத்தைப் போடென்பீர் - பாதைகளைத் தா என்பீர்.
நான்; நெடுஞ்
சாலைக்கும் மந்திரியாய் ஆனதனால்
இங்கு
நான் சொல்லும் பாலம் - தமிழ்த்
தேன் சிந்தும் கவிஞரிடைத்
தொடக்கத்தில் போட்டுவிட்டால் - கருத்து
மான் துள்ள வழியில்லை; இந்த
ஊன் தூங்கும்போதும்
பேன் தூங்கா நம் தலையில்
உள்ளிருக்கும் உறுப்புக்கு மூளையென்று போர்!
இல்லாதார் பலருண்டு - அவர்கள்
இல்லாதார் உலகில்!
இருந்தும் இல்லாதார் சிலருக்கு
எள்ளிருக்கும் அளவுக்கு அஃதிருக்கும்; அதிலும் நிறையக்
கள்ளிருக்கும்; அதனாலே கண்டபடி கிறுக்கும்.
இவரோ
தலை நிறைய மூளை பெற்று
நிலை குலையாத் தன்மையுடன்
அவை நடுவே வந்துள்ளார்.
அவரிடையே பாலம் கட்டித் தமிழ்ச்
சமரினையே தடுக்க மாட்டேன்!
புலவரிடை பகைமூண்டால் புதுமையுண்டு தமிழுக்கு; அதனால்
கலக விதை விதைக்கின்றேன் கவிஞரிடை!
பொறுத்திருப்போம் யார் வெல்வார் எனப் பார்ப்போம்.
''மல்லிகையே வெண்சங்காய் வண்டுதை'' எனப் பாட;

''அல்ல அல்ல புகழேந்தி!'' என எழுந்து ஒட்டக்கூத்தர்
துள்ளி வந்து கேட்டாராம்:-
''கிள்ளிய பின்னன்றோ மலர்க்காம்பில் சங்கூத இயலுமய்யா!
வெள்ளிய இதழ் மீது வண்டூதல் விந்தையன்றோ?''
இது கேட்டுப் புகழேந்தி உடன் மறுத்துக்
''கூத்தரே! என் பதில் கேளுமய்யா! மது
குடித்த மயக்கத்தில் முன் பின் தெரியாமல்
வண்டு ஊதிற்று!'' என்றாராம்.
அந்தப் பெரும்புலவர் சண்டையினால்
மேலும் இருபாட்டுத் தமிழுக்குக் கிடைத்ததன்றோ?
அதனாலே
பாவலர்காள், பகைவளர்ப்பேன் உங்களிடை பாடுங்கள்
நன்றாக
பந்தயத்துக் குதிரைகளை முடுக்குதல் போல்
பந்தலிலே இருப்போரே முழக்கிடுங்கள்.
வெந்தயத்தைச் சுவைத்ததுபோல் இருக்கும் சில பாட்டு
இவர் பாட்டில்

செந்தழலைக் கக்குகின்ற வீரம் காண்போம்
செந்தமிழில் காதல் சொல்லும் பாங்கு காண்போம்.
ஒரு கூறாய் உறவாடும் உயிரனையார்
இரு கூறாய்ப் பிரிந்திங்கே மோதுகின்றார்
பின்னர்.

ஒட்டுமா பழம் உறவு? எனக் கேட்பீர்
ஒட்டுமாம் பழ உறவு!
ஒட்டு மாம்பழ உறவு சேலத்தில் இயற்கை. அதனாலே, பின்
ஒட்டும் உறவுடையார் - இவண்
வெட்டும் குத்தும் நடத்திடுவார்
வெட்டு குத்து என்றதும்; ஆகா, தலைவரே
வீரம் பற்றிப் புகழந்து விட்டார் என வீரத்தால் துள்ளாதீர்!
கண்வெட்டு காதலிலும் உண்டு - நெஞ்சில்
குத்துகின்ற உடற்கட்டே காதலுக்குத் தைப்பொங்கல்

அந்தக் காதல் எனும் தலைப்பினிலே போராட
அன்பன் வருகின்றார்! தலைமையன்பன் தமிழன்பன்;
என்பு தோல் போர்த்த உடம்புக்கு அன்பன்றோ உண்மை
உயிர்?

பண்பு சால் நமது நண்பர் நம் பழைய ஊர்க்காரர்;
ஈரோடு! காவிரியில்
நீராடும் பெண் மீது காதல் கொண்டு அலைகள்
போராடும் ஒன்றுக்கொன்று - அந்த
ஈரோடு தமிழன்பன்
சீரோடு காதல் சொல்லி
வேரோடு பலாக் கனிகள்
தார் போடாச் செவ்வாழைப் பூக்கள்
மார்போடு அணைத்துமகிழ் மயிற்பேடு - காளை
தந்த வரிசையெலாம் பெற்றுத் தன்
தந்த வரிசை காட்டுகின்ற பெண்ணல்ல.
இரு வரிசை ஏற்று
இருவர் இசைவேற்றுத் தம்
இரு வரிசை விட்டு
ஒரு வரிசை யாவதற்கு ஒருப்பட்ட ஒளித்தங்கம்
தரு வரிசை தருகின்ற தோட்டத்தில் - அவர்
முறுவலிசை, முழங்குகின்ற காதல் இசை. அந்தப்
பருவ இசை இல்லாமல் - வீரத்தின்
கருவ இசை மேவுமோ? என்று
புருவ மிசை உயர்த்திக் கேட்பார் - தமிழன்பன்
துருவ மிசை நிற்கின்றார் ஈரணியாய்!

ஈரணியாய் நிற்கின்ற கவிஞரிடைச்
சீரணிகள் தெரியாத நான் தலைவன்!
ஜீரணியார் என் கருத்தை எனினும் சொல்லி வைத்தேன்.
இருவர் அணி லாவணியா! இல்லை இல்லை
ஒன்று காதல் தாவணியாம் பிறிதொன்று வீரப் பேரணியாம்

- நான்

இடையில் ஏன் நிற்க வேண்டும்?
இடையென்ன நிற்பதற்கு உரலா? என்பீர்
உடுக்கென்பேன்; அந்த
உடுக்கடித்து ஆவேசத் தமிழ்மாரி வரவழைக்கும்
துடுக்கான பூசாரி நான் இன்று!
எடுத்திடுவீர் கவிதைக் கணை
தொடுத்திடுவீர் கண்ணமுடன்
வாரும் நண்ப; தமிழ் அன்ப; இந்தப்
போரும் நன்கு தொடங்கிடுக!

(கவிஞர் ஈரோடு தமிழன்பன் 'காதல்' பற்றிப் பாடி முடிக்கிறார்)

**தலைவர் கலைஞர்:**

காலை அரும்பிப் பகலெல்லாம் போதாகி
மாலை மலரும் நோய் பற்றிச்
சோலைப் பூப்பறித்துச் சுவை மகரந்தப் பொடி சேர்த்துச்
சேலைத் தலைப்பாலே மாதர் முகமூடும் அளவுக்குச்
சிரிப்போடும் துடிப்போடும் காதல்
குறிப்பேடு தயாரித்தார் தமிழன்பன் - மிகப்
பொறுப்போடு வாலிபர்கள் கேட்டிருந்தார் - சுறு
சுறுப்போடு மாணவர்கள் சுவைத்திருந்தார் - கொஞ்சம்
வெறுப்போடு முதியவர்கள் தம்வயதை நொந்து கொண்டார்.
இதற்கும்.
மறுப்பேடு கொண்டிங்கே வருகின்றார் ஒருவர்;
''காதலென்ன கத்தரிக்காய்?
வீரம் தான் மிளகாய்!'' என்று
மோதிடவே மத்தகத்தை ஆட்டுகின்றார்
வாதிடவே வீர வழி காட்டுகின்றார்.
''எங்குற்றான் உன்றன் மகன்?'' எனக்கேட்ட வீரனிடம்
பொங்குற்ற மகிழ்வோடு தாய்க் கிழவி

''புலி போன இடம் நானறியேன் போர்க்களம்தான்
போயிருக்கும் - அப்
புலி வாழ்ந்த குகையிதுதான்''
எனத் தன் வயிற்றைக் காட்டி நின்றாள்!
அந்தப் புறப்பாட்டு - புகழ்ப்பாட்டு-
அருந்தமிழர் போற்றுகின்ற வீரப்பாட்டு - போர்க்களத்தில்
வேலெறிந்து ஆனையினைக் கொன்றவீரன்; பகை எதிர்க்க
வேறொரு வேல்தேடி அலுத்த பின்னர் - தன்
மார்பினிலே தைத்திருக்கும் வேல் கண்டு
மகிழ்ந்தானென்று கூறுகின்ற குறளே வீரம்! இவ்வாறெலாம்:
ஆணிப்பொன் தமிழ் கொண்டு வாணியம்பாடியார் வாதிடுவார்.
ஊர்சொன்னால் பேர் சொல்ல வேண்டாமோ?
ஓங்குபுகழ் அப்துர் ரகுமான் என்பார்
வீங்கு திரைக்கடல் போன்ற சொல் வளத்தார்
தீங்குதரும் எச்செயலும் - நாட்டில்
மூங்கில் இலைப் பனிநீர் போல்
தூங்கவிடாத் தூய்மையாளர்
நீங்கவில்லை அவர் பாட்டு என்மனத்தில்; அவருக்குத்
தாங்கவில்லை 'காதல்தான் பெரிது' என்ற வாதம், அதற்காக
ஏங்கவில்லை எழுந்துவிட்டார் சிங்கம்-
விடமாட்டார் காதலை அவர்; அது வெற்றியடைய
விடமாட்டார்!
வீரப் போர் புரிந்திடவே வருகின்றார்.
வாள் எடுப்பார் என அஞ்சாதீர்!
தாள் எடுப்பார் - தான் கவி எழுதிய
தாள் எடுப்பார்
தகத்தகாய மின்வெட்டால் காதலுக்குப்
பலத்த காயம் செய்திடுவார்.
காதலிக்க நேரமில்லை என்பார்: இல்லை இல்லை!
காதலிக்க வீரமில்லை என்பார் - அந்தக்
காதல் படும் பாட்டைக் காண்பதற்குக்

கண்ணல்ல; காது வேண்டும்.
இந்தக்
களப்போரில் காதற் சாவா?
வீரச் சாவா?
அதை
நடிப்போரின் ஆற்றலிலே கண்டிடுவோம்!

(கவிஞர் அப்துர் ரகுமான் 'வீரம்' பற்றிப் பாடி முடிக்கிறார்)

**தலைவர் கலைஞர்:**

அடுத்து;
திக்திக்கும் காதலென்று செப்பிடவே
தி.கு.நடராசன் வருகின்றார்.
தலையில் கங்கையுடன் நடமாடும், காதல்
கலையின் தெய்வமன்றோ நடராசர்?
இதைச் சொன்னால் இந்த நடராசன்
பார்த்தாயா, பரமசிவன் தலையிலே காதல் வைத்துப்
பாதத்தில் வீரம் வைத்தார் என; அவர்
காலடியில் கிடக்கின்ற மனிதனையே சாட்சியாக்கிக்
கண்ணடிப்பார் - காதலிலே வென்று விட்டேன் என்று!
ஆளிருப்பார் - வீரமாக; ஆனால் காதல் பேச்சு! முகத் திரண்டு
தேள் இருக்கும்; மீசை அதன் பேராம் - குறிக்
கோள் வேறிருக்கும்; என்றாலும் இங்கு
கூத்துக்குப் பாத்திரமாய் வந்துள்ளார்
வாத்துக்கு அன்னமெனப் பேர்வைத்து
வனப்புமிகும் பெண்களது நடையழகை உவமை சொல்லி
'இனிப்பு மிகும் காதலிலே' எனச் சொல்வார்; இல்லறப்
புளிப்புக்கு வழியில்லாப் பருவம், அவர்
தவிப்புக்கு வழிவிடுவோம். வருக தம்பி!

(கவிஞர் தி.கு.நடராசன் 'காதல்' பற்றிப் பாடி முடிக்கிறார்)

**தலைவர் கலைஞர்:**

அடுத்து;
காதற் சேவல் தந்த அடியை
வீரச் சேவல் திருப்பிக் கொடுக்கக்
கடுகி வருகுது முருகுசுந்தர உருவில் கிளம்பி
முருகெனிலோ அழகு; சுந்தரமும் அஃதே!
இந்த அழகழகு:
காதல் பற்றிப் பாடாமல்
வீரம் பற்றிப் பாடுவது என்ன விந்தை?
கத்திச் சுடர்
சுற்றிச் சுழல்
வெற்றிப் பகை
வெற்றித்திரு
பற்றிக் கவி
கற்றுக் கொள
முத்துத் தமிழ்
முருகுத் தமிழ் கேட்டிடுவோம்!

(கவிஞர் முருகுசுந்தரம் 'வீரம்' பற்றிப் பாடி முடிக்கிறார்)

**தலைவர் கலைஞர்:**

அடுத்து;
பொன்னி வளவன்.
காதலுக்கும் இவருக்கும் என்ன சம்பந்தம்?
நிறைய சம்பந்தம்;
ஏனெனில் இதுவரையில்
எங்கும் சம்பந்தம் போடவில்லை;
அதனாலே இருக்கிறது சம்பந்தம், இவர் தமிழ்ப்
பூவாரம் தொடுப்பதிலே
தேவாரச் சம்பந்தர்.
சர்க்கரைப் பேச்சாளர்! சதியாக அணுகிவிடில்

நக்கீரக் கொள்கையாளர் அவர் நாக்கை அறுப்பதிலே!
காதல் பற்றிச் சொன்னாலும் கடுமையாகச் சொல்லிடுவார்.
விரகதாப வேதனையை வீரமாக முரசறைவார்
காதலரே வந்திடுக
கவிதை வரி தந்திடுக!

(கவிஞர் பொன்னிவளவன் 'காதல்' பற்றிப் பாடி முடிக்கிறார்)

**தலைவர் கலைஞர்:**

அடுத்து;
ராஜேந்திரன்,
பெயரிலே வீரமுண்டு; சரிதப்
பெருமையும் என்றுமுண்டு
கங்கை கொண்ட ராஜேந்திரன் சிவ
கங்கை கண்ட ராஜேந்திரன். நம்
சிந்தையிலே நிற்பவராம் நெஞ்சில்
சிலையாக இருப்பவராம். இந்த
நண்பர் வீரம் பற்றிப் பாடிடுவார்.
என்பு தெரிகின்ற உடல் எனினும்
எஃகுடையார் உள்ளத்தில்!
அன்பு தவழ்கின்ற அருந் தோழர்
முன்பு சொன்னதற்குப் பதில் சொல்லி ஒலித்திடுவார்
தமிழ்வீரம்!

(கவிஞர் ராசேந்திரன் 'வீரம்' பற்றிப் பாடி முடிக்கிறார்)

**தலைவர் கலைஞர்:**

அடுத்து;
வீர வழக்கறிஞர் அப்துல் ரகுமானும்
சாரமுள்ள வாதம் இரண்டொன்றைக் கூறிடுவார்;
தீர்ப்பளிப்பேன் பின்னாலே!

(கவிஞர் அப்துல் ரகுமான் முடிவுரை பாடுகிறார்)

**தலைவர் கலைஞர்:**

அடுத்து:

காதல் வழக்கறிஞர் ஈரோடு தமிழன்பன்
வாதம் செய்திடுவார்:
என் தீர்ப்பு அதன் பின்னே!

(கவிஞர் தமிழன்பன் முடிவுரை பாடுகிறார்)

**தலைவர் கலைஞரின் தீர்ப்புக் கவிதை:**

பேரன்பு கொண்டோரே! பெரியோரே! இது வரையில்
வெறும் வம்பு நடந்ததாய்க் கருதாதீர்: இது
விறுவிறுப்பாய் நடந்த வம்பு
இந்த வம்பு நாடெங்கும் நடைபெறவே
நான் வாழ்த்தி மகிழ்கின்றேன்.
வீரந்தான் பெரிதென்று வாதமிட்ட நண்பருக்கு
காதல் என்றால் கசக்கும் பொருளல்ல.
காதல்தான் பெரிதென்று வழக்காடும் நண்பர்கள்
கோழையாய் இருந்திடலாம் குறையில்லை அதில் ஒன்றும்!
ஆனால்
கோழைகளைக் கோழைகள்தான் காதலிப்பர்
''கொல்லேற்றுக் கோடஞ்சுவானை மறுமையும்
புல்லாளே ஆய மகள்'' என
முல்லைக்கலி முழக்குவதை மறந்திடவோ?
பாய்ந்து வரும் காளையினை அடக்குவதில் - தான்
மாய்ந்து போக நேரிடினும் அஞ்சாத
மறவனையே மாலையிட்டாள் தமிழச்சி
பெண்ணை அணைத்து மார்பகத்தில் முகம்
வைப்பது போல்-
காளைக் கொம்பிடையே தலை வைப்பீர் விழுப்

புண்ணைப் பெறுவதற்கு
எனச் சொல்லி அது நடந்த பின்னால்
மனம் ஒப்பி மணந்து கொண்டாள் தமிழ்ப் பெண்ணாள்.
அதற்காகக்
காதல் காவியத்தில் வீரமன்றோ முதற்படியாய் இருந்த
தென்று
வாதமிடல் சரியல்ல!
காதல் அடைவதற்கே
சாதலுக்கும் அஞ்சாத வீரம் கொண்டார்!
இதை நினைத்தால்
காதல் பெரிதென்றே தோன்றுமன்றோ!
''பொருதடக்கைவாளெங்கே
மணிமார்பெங்கே
போர் முகத்தில் எவர் வரினும்
புறங் கொடாத
பருவயிரத் தோளெங்கே, எங்கே?'' என்று
கலிங்கப் பரணி கர்ச்சிக்கும்.
''கலவிக் களியின் மயக்கத்தால்
கலைபோ யகலக் கலைமதியின்
நிலவைத் துகில் என்றெடுத்துடுப்பர்....''
இந்தக் காதல் பாடலும் கலிங்கப் பரணிதான்-
படைமுகம் நோக்கிப் புறப்பட்ட வீரன்
பாவைத் துயர் கேட்டுருகித் திரும்பிய சேதியைப்
பாலைக் கலி பகரும்
''கைவேல் களிற்றொடு போக்கி வருபவனை''க்
காட்டுகின்ற குறள்தான்
கண்ணொடு கண்ணினை நோக்கொக்கின்'' என்று
காதல் தேன் பொழியும்.
''இன் நிழல் இன்மையான் வருந்திய
மடப்பிணைக்குத்

தன் நிழலைக் கொடுத்தளிக்கும் கலை'' யென்று
மானிடையே ஊறுகின்ற காதல்தனைத்
தேனிடையே பழச்சுளை போல் தருகின்ற கலித்தொகைதான்
வேங்கையுடன் பொருதுகின்ற வேழத்தின் வீரச் செயல் காட்டிக்
குறிஞ்சிக்குச் சிறப்புக் கூறும்!

புராணமாம் ராமாயணக் காதையிலே
இராவணனின் அருஞ்செல்வன் இந்திரஜித்தன்
சுவைமிகு காதலாலே சுலோச்சனை கணவனானான்.
பகைப்படை மிகுந்தபோது தலையிழந்து வீரனானான்.
தலையிழந்து போகுமுன்னே நிலை
குலையச் செய்திட்டான் எதிரிகளை!
நிகும்பலை கண்ட வீரன் பகைவரிடைப் பெருங்
கும்பலை அழித்தபின்னர் மடியலானான் மறவனானான்
மணிமகுட ராவணனின் மைந்தனானான்....
பாரதத்தில் வத்சலையின்
அத்தானாம் அபிமன்யு
சத்தான முத்தங்கள் ஒன்று பத்து நூறாக
முத்தான வாயிதழில் வழங்கிடுவான்!
கொத்தாகக் காதல் கனி பெற்றுக் கொள்வான் - அந்த
முற்றாத இளம்பிஞ்சுபோர் முனையில்
பற்றாத உயிரே இல்லை - பின்னர்
வற்றாத புகழோடு மாண்டு விட்டான்.
குற்றால அருவி நிகர் குழல் கொண்ட
பொற்றாமரையின்பால் காதல்! அதற்காக
விற்றானோ வீரம்; களத்தில்? இல்லையில்லை - சிந்துபாடும்
சிற்றாறாய் இருக்கின்றான் இதிகாசத்தில்.

புவிமன்னன் பெற்ற பெண்ணை
கவிமன்னன் பிள்ளை, ஆண்டான்!
கவிமன்னன் பிள்ளையாண்டான் -

''அம்பிகாபதி - அமராவதி காதல்''
அன்றென்ன ஆயிற்று? வீர மரணம்தான்!
அக்காலக் கதை எதற்கு-
இக்கால எடுத்துக்காட்டு என்ன என்பீர்?
எத்தனையோ உண்டதற்கு இயம்புகின்றேன்.
எட்டாவது எட்வர்டு காதலுக்கு முடிதுறந்தான் - அதனாலே
எட்டும் பெருமையெலாம் காதலுக்குக் கிட்டிடுமோ?
மங்கை யவள்
மடிவேண்டும் எனச் சொல்லக் காதல் போதும்
முடிவேண்டாம் எனச் சொல்ல
தீரம் வேண்டும்; தியாக உள்ளம் வேண்டும்;
அவ்வளவேன்
அப்பாவி ''சீனி'' யென்பான் அடுத்த வீட்டுச்
''சோனி' மீது காதல் கொண்டு
அவசரமாய் வேலி தாண்டிக் குதிக்கின்றானே;
அதுவுமொரு வீரமன்றோ?
காதலுக்காக வீரம் - வீரரிடை காதல் - இரண்டையும்
வெண்ணெய் மோர் போலப் பிரித்திட
எண்ணுவது பொருந்தாது.
காதலிலே தோல்வியுற்றோர்
கழுத்தினிலே சுருக்கிட்டுத் தொங்குகின்றார்.
காதலுக்கு மறுப்பிருந்தால்
சாதலொன்றே வழியென்று
ஆறுகுளம் தேடுகின்றார்.
ஆவி தனைப் போக்கிக் கொள்ள!
காதல் மட்டும் மேவுவதால் இச்செய்கை புரிகின்றார்
காவலுக்கு வீரத்தை இணைத்துக் கொண்டால் அது
கடவுளெனக் காப்பாற்றும் காதலரை!
''நாடகத்தில் காவியத்தில் காதலென்றால்
நாட்டினர்தாம் வியந்து நன்றாம் என்பார்
வீடகத்தே, கிணற்றோரத்தே, ஊரினிலே காதல் என்றால்

உறுமுகின்றார்-
பாடைகட்டி அதைக் கொல்ல வழிசெய்கின்றார்'' - எனப்
பாரதியார் குற்றம் சாட்டியதும்
''காதல் நெருப்பால் கடல் உன்பால் தாவிடுவேன்
சாதி என்னும் சங்கிலி என்
தாளைப் பிணைத்ததடி''
என்று
பாரதிதாசனார் பாடியதும்
காதலில் வீரம் கலக்காத மனிதர்க் கன்றோ?
ஆதலினால்
மானிடரே காதல் செய்வீர்;
வீரம் கலந்து காதல் செய்வீர்.
வீரமில்லாக் காதலினால் விரக்தியுண்டு
வாழ்வில் துணிவே இல்லை...
காதலில்லா வீரத்தில் கடுமையுண்டு
வாழ்வில் கனிவே இல்லை...
அவையோர்க்கு என் தீர்ப்பை அறிவிக்கின்றேன்:-
காதலும் வீரமும் கட்டிப் பிறந்த
இரட்டைக் குழந்தை-
இதற்குக் குடும்பக்
கட்டுப்பாடில்லை; பெற்றிடுவீர் தாராளமாக!

வணக்கம்.

# அருமறையில் அறுவர்

10.8.68 அன்று தமிழ் வட்டத்தின் சார்பில்
சென்னையில் ''அருமறையில் அறுவர்''
எனுந் தலைப்பில் நடைபெற்ற கவியரங்கில்
**கலைஞர் மு. கருணாநிதி**
அவர்களின் தலைமைக் கவிதையுரை

★

அவை நடுவினிலே வீற்றிருக்கும் ஆன்றோரே,
அறிவுசால் பெரியோரே
அன்புத் தாய்மாரே,
அருமறையாம் திருக்குறளில் அறுவர் காட்ட - தமிழ்த்
திருமலியும் கவிதையுடன் வந்திருக்கும்
பெருமைமிகு புலவர்களே! வணங்குகின்றேன்!
ஆறிரண்டு திங்கள் அதற்கு மேல் நாலு திங்கள்
ஆயிற்றுப் பதினாறு திங்கள் - நான்
அமைச்சனாய்ப் பதவியேற்று
இதற்கிடையே
ஐந்தாறு கவியரங்கில் அவைத் தலைமை ஏற்கச் சொல்லிப்
பைந்தமிழை மறவாமல் பதவியில் இருக்கச் செய்தார்!
பாட்டெழுதும் புலவன் என்று பரிந்து அழைக்கவில்லை
நாள்தோறும்
சீட்டெழுதி வருகின்றார் கணக்கற்றோர் மனுக்களுடன்

உழல்கின்றேன் அவரிடையே - ஓய்வே இல்லை
சுழல்கின்ற பம்பரமும் சுற்றிப்பின் படுத்துக் கொள்ளும்
உருள்கின்றேன் ஊரூராய் உதைபட்ட பந்தைப்போல்!
உடல் இளைத்துப் போனாலும் உயிர்மட்டும் இளைக்கவில்லை
நெஞ்சில்



சுடர்வழங்கத் தமிழிருக்கச் சோர்வுதான் மேவிடுமோ?
அடலேறு மொழித் தமிழே - இன்பக்
கடலேறு மலைத் தமிழே - சோலை
மடலேறு சுவைத் தமிழே - நீ என்
உடலேறி உயிரேறி வாழ்விக்கின்றாய்; வணங்குகின்றேன்.
இலக்கணத்தை எதிர்க்கும் எண்ணம் என்பால் இல்லை
இலக்கணம் தான் ஊடல் செய்யும் அன்புக் கிள்ளை
ஒருபாட்டும் இலக்கணமுடன் ஒருப்பட்டு வராவிடினும் நான்
தரும்பாட்டு தமிழ் உணர்வைக் கொல்லாதெனும் துணிவுடனே
கரும்பாட்டும் ஆலையிலே வேம்பொன்று புகுந்தது போல
இக்
கவிக் கூட்ட மேடையிலே வீரமாய்ப்புகுந்து விட்டேன், தென்றல்.
அரும்பாட்டும் பூங்காவில் உங்கள்
அரும் பாட்டு, தமிழ் மாலையிலே பூவாம்
அந்தப் பூவாடும்
சுரும்பாட்டம் இருக்கின்றீர் நீங்கள்; நானோ
துரும்பாட்டம் இருக்கின்றேன் உம்மிடையே!
எறும்பாட்டும் இரும்புத் தூண் என்றால்;
எறும்பு ஆட்டும் இரும்புத் தூண் என்றால்; என்
வெறும் பாட்டும் வென்று விடும் நும்மை!

தமிழ் வட்டம் அமைத்திங்கே
தமிழ் விழா நடத்துகின்ற
தகைசால் வி.கே.சி. நடராசன்
தந்திடுக வருகை என்றார்

இட்டமுடன் அழைத்ததனால் அவர் என்னை
வட்டமிடல் ஆகாதென்று
வருகின்றேன் எனச் சொன்னேன்
வந்து விட்டேன் தலைமை தாங்க

வட்டமெனில் வகைப்படுத்தும் பேராம் - ஒரு
திட்டமுடன் செயலாற்றும் கூறாம்.
பொட்டிடும் பாவைக்கு நெற்றியிலே வட்டம்
கொட்டிடும் ஒளிமழை நிலவுமோர் வட்டம்
மட்டில்லாத் தொலைவுகொள் கதிருமொரு வட்டம்; சில
மாணவர்கள் வாங்குகின்ற எண்களோ முழுவட்டம்!
காதல் செயலுக்குக் கட்டிலொரு வட்டம்
கனிமொழிப் பிள்ளைக்குத் தொட்டிலொரு வட்டம்
மாதர் வாழ்வுக்குக் கற்புநெறி வட்டம்
மறவர் பெருமைக்குப் போர்க்களமே வட்டம்
உழவர் ஏருக்கு விளைநிலமே வட்டம்
நண்பர் உறவுக்கு அன்பகமே வட்டம்
துறவோர் தூய்மைக்கு மனக்கூண்டே வட்டம்
கயவர் வாழ்வுக்குத் தெரியாது வட்டம்
கண்டபின்னர் அமைவதுதான் 'கயவர்' எனும் பட்டம்

முதலில் 'வீரன்' எனும் தலைப்பினிலே
முரசறைவார் கணேச நல்லார்!
இறந்திடுவேன் எதிர்ப்பினிலே
என் தலைவன் இருவிழியும் நீர் பொழிய! அச்சாவை
இரந்திடுவேன்....
மறந்திடுமோ திருக்குறளும்? மறக்கவில்லை!
மானினத்தார் வீரங்காட்டி
ஆண் இனத்தைப் புறங்காணும் புறப்பாடல்
பழைய திறப்பாடல்!
விழுப்புண் படாத நாள் எல்லாம் - வீரன்
வீணான நாள் என்பான் என்ற குறட்பாடல்
துள்ளிவருகுது வேல் எனறு
துடித்து நின்றது இமையென்றால்
எள்ளி நகைப்பான் வள்ளுவனும்

ஏறு தழுவுதல் வீரர்க்கழகு - அவர்வாயில் வெற்றிலைச்
சேறு தடவுதல் மகளிர்க்கழகு
சாக அஞ்சார் களம் செல்வார்
சா.க. அஞ்சார் கவி சொல்வார்
'வீரன்' கவி சொல்வார்:

(கவிஞர் கம்பன் அடிப்பொடி சா.கணேசன் எம்.எல்.சி.
'வீரன்' பற்றிப் பாடி முடிக்கிறார்)

தலைவர் கலைஞர்:

படுத்திருக்கும் எழுத்தெல்லாம் பாய்ந்து துள்ள - கணேசர்
கொடுத்திருக்கும் புதுவேகம் என்ன சொல்ல?
''மயிர் நீப்பின் வாழாக் கவரிமா அன்னார்
உயிர்நீப்பர் மானம் வரின்'' என்றே
மறவர்க்கிலக்கணம் வரைந்தது குறளும்!
அதை
மறந்தவர் சிலரோ வரியை மாற்றி
''உயிர் நீப்பின் வாழாக் கவரிமா அன்னார்
மயிர் நீப்பர் மானம் வரின்' என்று
மொட்டையடிக்கின்றார் தேர்தல் பந்தயத்தில்!
''யானையினைக் குறிபார்த்துத் தவறும் வேல்
கானமுயல் கொன்றெறியும் அம்பின் மேல்'' இந்த
மானமொழி வழங்குகின்றான் ''குறள் வீரன்''
இன்று;
பூனை குறுக்கானால் போச்சுதடா உயிர் என்று
ஞான மொழி பேசுகின்றான் தமிழ் வீரன்!
களம் காண்பான் வீரன் என்றால் நெற்
களம் காண்பான் உழுவர் மகன்!
போர் மீது செல்லுதலே வீரன் வேலை - வைக்கோற்
போர் மீது உறங்குதலே உழுவன் வேலை. பகைவர்

முடி பறித்தல் வீரன் நோக்கம் - நாற்று
முடி பறித்தல் நடவின் நோக்கம்
உழவனுக்கும் வீரனுக்கும் ஒற்றுமைகள் பல உண்டு
வேற்றுமையோ ஒன்றே ஒன்று
உழவன் வாழ வைப்பான்
வீரன் சாக வைப்பான்!
உழவனது பெருமையெலாம் உரைப்பதற்கு
உழுவலன்பர் சாரதியும் வருகின்றார்
பார்த்தசாரதி
பாட்டுச் சாரதியாய் மாறிப் பைந்தமிழ்த் தேர் ஓட்டிடுவார்
இல்லை.... இல்லை... ஏர் ஓட்டிடுவார்
உழவன் பற்றிப் பாடுகின்றார்; அதனாலே:

(கவிஞர் நா.பார்த்தசாரதி 'உழவன்' பற்றிப் பாடி முடிக்கிறார்)

தலைவர் கலைஞர்:

உழவே தலை என்றுரைத்ததனால்
உழவனுக்குத் தலைவனில்லை
உழவன் பற்றி பாடுவோர்க்கும் தலைவனில்லை அறிந்திடுக!
''இலமென்று அசைஇ இருப்பாரைக் காணின்
நிலமென்னும் நல்லாள் நகும்''
எதுவுமில்லையென ஏங்கியிருப்பாரைக் கண்டு
''எது இல்லை என் மகனே?
வெடித்திருக்கும் என் வயிற்றில் மண்வளம் பார்
வெட்டியெடுத்தாலோ நீர்வளம் மிகுந்துவிடும்
வெகுதூரம் அகழ்ந்திட்டால் வைரமணி வழங்கிடுவேன்
வெகுளியாய் வாழாமல் வேளாண்குடி பெருக்கிடுக!''
எனச் சிரித்து நிலமடந்தை நிற்கின்றாள்
உழவர் திருமகனே உணர்ந்திடுக புவிச் சிரிப்பு
உழைத்துப் பெற்றிடுக உடனடியாய்ப் புதுச் செழிப்பு;

அடுத்து;
நண்பர் வருகின்றார்
அடுத்து வரும் நண்பர்களை ஆதரித்து அன்புகொண்டு
படுத்துறங்கும் வேளையிலும் அவர் நினைவாய் நானிருந்து
எனைக்
கெடுத்திடவே துணிந்தபோதும் நட்புடனே அணுகி நைந்து
இனித்
தடுத்திடவே முடியாது அவர் வீழ்ச்சி என்பதாலே
முடித்துவிட்ட கேண்மையெலாம் பெரிய கதை.
எதில் முதல்வனாய் இருக்க வேண்டும் நண்பன்;
இன்ப விளையாட்டிலா?
இடித்துரைக்கும் பண்பாட்டிலா? இதில்
எதில் முதல்வனாய் இருக்கவேண்டும் நண்பன் என்று
எழில் முதல்வன் எழுத்தாரம் சூட்டுகின்றார்
தொழில் பேராசிரியர்; கவிப்
பொழில் தமிழ்க்
குயில்
கூவிடுக நன்று
கூறிடுக நண்பர்:

(பேராசிரியர் எழில் முதல்வன் 'நண்பன்' பற்றிப் பாடி முடிக்கிறார்)

தலைவா கலைஞர்:

நட்புக்கோர் அதிகாரம்
நட்பாராயப் பிறிதோர் அதிகாரம்
பழகுதலுக்கோர் அதிகாரம்
பாங்குடனே ''தீ நட்பு'' ''கூடா நட்பு'' எனப்
பகுத்து ஒவ்வொன்றுக்குமோர் அதிகாரம்
வகுத்தளித்த வள்ளுவனும்

நண்பர்களால் மெத்தப் பாடுபட்டானோ நம்மைப்போல!
நண்பர் எனில் நமது எழில் முதல்வன் சொன்னதுபோல்
நட்புக்கோர் அடையாளம்
பிசிராந்தை-கோப்பெருஞ்சோழனன்றோ!
திருமணத்தில் போர் ஓலை வந்தவுடன்
தேனமுதைப் புறம் விடுத்துத்
தேசிங்குப்படை சேர்ந்த மகமத்கான்
சரித்திரத்துப் புத்தகத்தில் சரியாத ஏடானான்.
ஆண்களிடை அதிக நேரம் நின்றுவிட்டோம்
வீரன் என்றும் உழவன் என்றும், நட்பு
விதைக்கின்ற தோழன் என்றும்
வெகு நேரம் ஆனதனால்
களைப்பாறப் பெண் வேண்டும்
பெற்றுக் கொடுக்கவொரு புலவர் வருகின்றார்!
பெறுவதெப்போது? வளர்வதெப்போது? நம்
போரனுக்குத் திருமணமா? எனக் கேட்பீர்
சந்தக்கவிமணியாம் தமிழழகன்
தந்தப் பெண்மணியைத் தருகின்றார்
கண்டிடுவீர்
சந்தக் கவி
தந்தச் சிமிழ்
சிந்துத் தமிழ்
செவி மடுப்பீர்.

(சந்தக்கவிமணி தமிழழகன் 'பெண்' பற்றிப் பாடி முடிக்கிறார்)

**தலைவர் கலைஞர்:**

பெண்கள்
பெய் என்றால் பெய்து விடும் மழை என்றார் கவிஞர்
கற்புநிறை பெண்ணை அந்தக் கடுஞ்சோதனைக்கு ஆளாக்கி

மழை பெய்யா விட்டாலோ மாசு தூவிடல் முறையன்று
பெய்யெனப் பெய்யும் மழை என்று பெண்ணைப்
பெருமையாய்ச் சொன்ன குறள் - நல்ல
பெண்ணொருத்தி பெய்யெனப் பெய்கின்ற மழை போன்றாள்
எனும் கருத்தை நிலை நாட்டும்.
பழங்கருத்து தலை காட்டும்; துரத்த வேண்டும்,
அடுத்து;
பெண்ணைத் தொடர்ந்து துறவு வருவானேன்? நம்
கண்ணையெலாம் 'காவி' மறைப்பானேன்?
பெண்வந்தால் துறவு வரும் சில துறவிக்குத் துறவுக்குத் துறவு
வரும்.
இரு துறவு ஏற்றவர்கள் இந்தத் தமிழகத்தில் பலருண்டு
இனியதாம் இல்லறத்தை முதலில் துறந்து
கனிரசம், பால், தயிர், கமண்டலம் என்றிருந்து
கன உடல் கொழுத்தவுடன்
துறவறத்தைத் துறக்கின்றார் வெளிப்படையாய்!
இலைமறை காயாக இருக்கின்றார் கெட்டிக்காரர் இந்தத்
தலைமறைவு வேலையெல்லாம் தகுமா என்று
கலைமிகு பாவாணர் தூரனாரும்
நெருங்கி வந்து நெஞ்சம் திறக்கின்றார்!
துறக்கின்றார் என எண்ணாதீர்
திறக்கின்றார் கவிதை நெஞ்சம்!

(கவிஞர் பெரியசாமித்தூரன் 'துறவு' பற்றிப் பாடி முடிக்கிறார்)

**தலைவர் கலைஞர்:**

துறவு நன்றெனினும்
தூய்மையாய் இருத்தல் வேண்டும்
வேடமாய்த் தொடர்தல் தீது; தீயிற்
சூடமாய்ப் பற்றிக் கொள்ளும் நெஞ்சுக்குத்

துறவுநிலை ஆடிக்காற்றுப் பஞ்சாம்
நஞ்சாம் வாழ்க்கை என்பார் பகலில்
பஞ்சாமிர்தம் தேவையென்பார் இரவில் அதனை
அஞ்சாமல் கண்டிக்கும் உரம் வேண்டும் மனதுக்கு
அரசு கட்டில் மணிமகுடம் அணிமணிகள் துறந்துவிட்டு
ஆரண்யம் சென்ற முனி விசுவாமித்திரரும்
மேனகையின் விசுவாசமித்திரராய் ஆனகதை அறியீரோ?
''மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம்
பழித்தது ஒழித்துவிடின்''
இதை மறுப்பார் கயவரிலே ஒருவகையாம்; அதில்
பலவகையும் பாடுதற்குத்
திருச்சிற்றம்பலம் வருகின்றார்
தித்திக்கும் தமிழ் தருகின்றார்:

(கவிஞர் திருச்சிற்றம்பலம் 'கயவர்' பற்றிப் பாடி முடிக்கிறார்)

**தலைவர் கலைஞர்:**

மொழிந்தகவி அத்தனையும் முகமலர்ந்து கேட்டிருந்த நல்லோரே
முழுநிலாப் போல் அமர்ந்திருக்கும் எனதருமை நாவலரே!
முடிவுரையை நிகழ்த்துகின்றேன் முடிந்த பின்னர் சென்றிடுவீர்
ஆண்மை கொள் வீரனையும்
அன்பு சால் பெண்ணினையும்
கேண்மை மிகு நண்பனையும்
கேடு சூழ் கயவனையும்
பழகு தவத் துறவினையையும்
உழவு செய் மனிதனையும்
அறுமறையில் அறுவராய்த் தேர்ந்தெடுத்து
அளித்திடுக விளக்கமென்றார்
அமைச்சனைத்தான் விட்டுவிட்டார்.
அருகில் வைத்துக் குறை கூறக் கூடாதென்ற எண்ணம் போலும்!


''கருவியும் காலமும் செய்கையும் செய்யும்
அருவினையும் மாண்டது அமைச்சு''
''தெரிதலும் தேர்ந்து செயலும் ஒருதலையாச்
சொல்லலும் வல்லது அமைச்சு''
''பழுதெண்ணும் மந்திரியின் பக்கத்துட் தெவ்வோர்
எழுபதுகோடி உறும்''
இழிவினைத் தேடும் அமைச்சனை விடவே
எழுபது கோடிப் பகைவர்கள் மேலாம்
இவ்வாறு அமைச்சு பற்றிச்
செவ்வாழைக் குறள் கருத்தில்
ஒவ்வாமல் போனவர்கள்
எவ்வாறு சிறப்புறுவர்?
மங்காத ஒளி விடுத்து மண்டபத்து இருட்டுக்குள்
வெளவாலைப் போன்றவர்தான் தொங்கிடுவர்
நிலமாளும் எங்களுக்குத்
தூங்காமை கல்வி துணிவுடைமை
நீங்காம்ல் இருக்க வேண்டுமென்றார்; நான்
கற்றது சிறிதெனினும் கவியெழுத இரவெல்லாம்
தூங்கவில்லை வேறு ஓய்வுமில்லை
துணிவுடைமை இருப்பதாலே
அணி சீர் தளை தொடை எதுவுமின்றிக் கவி
அரங்கேற வந்து விட்டேன்
புவியாளப் புகன்ற குறள் என்
கவியாளத் திருத்திக் கொண்டேன்.
அதற்காகக் கவியரங்கீர்
கடி தோச்சி மெல்ல எறிக எனக் கேட்டுக் கொள்வேன்.

அமைச்சனுக்குத் தனியாக விளக்கம் ஏன்? பகை
அஞ்சாமை கொண்டிருந்தால் வீரனாவான் பழி
அஞ்சாமை கொண்டிருந்தால் கயவனாவான்
அன்புடைமை காட்டுவதில் பெண்ணாவான்

நல்லோர் உழுவதிலும் சிறப்பாகச
சொல்லோர் உழுவதிலும் செம்மை சால் உழவனாவான்
வாய்ப்பதிகம் எனினும் வருகின்ற
வசதிகளை இழப்பதிலே துறவியாவான்
நகுதற் பொருட்டன்று நட்டல்
மேற் சென்றிடித்தல் பொருட்டெனும்
குறள் உணர்ந்த தன்மையினால்
திறன் வாய்ந்த நண்பனாவான்
பெண்ணுக்குப் பெருமை தற்காத்தல்;
வீரனுக்கு விழுப்புண்ணில்;
நண்பனுக்கு நன்றியிலே;
துறவிக்குக் கல்லறையில்;
கயவனுக்குக் காணும் பெருமையெல்லாம்;
குயவனது மண்பாண்டம்!
என்பெருமை உம்மிடையே இருப்பதுதான்!
இப்பெருமை நிலைத்தாலே போதுமென்பேன்.

வணக்கம்

வாழ்க



# புதிய பாதை

(13.8.1968 அன்று கும்பகோணம் மூர்த்தி கலை அரங்கில்
''புதிய பாதை''
என்ற தலைப்பில் நடைபெற்ற
வேளாண்மைக் கவியரங்கில்
**கலைஞர் மு.கருணாநிதி** அவர்களின்
தலைமைக் கவிதையுரை)



தாளாண்மை கொண்டிங்கு தமிழரசைச் சிறப்பாக்கும்
வேளாண்மைத் துறையமைச்ச! கவிதை
வாளாண்மை கொண்டிங்கு உழவுப்
பேராண்மை காட்ட வந்த புலவர்களே!
தன்சேய் விளைக்கின்ற மரகத மணிகள் கண்டு இது
நன்சேய் என மகிழ்கின்றாள் நிலமடந்தை.
தஞ்சை விளைக்கின்ற மரகத நெல்மணிகள் கண்டு இது
நஞ்சை என மகிழ்கின்றாள் நிலமடந்தை.
புகார் இருக்கும் தஞ்சைக் கடைமடையில் பூம்
புகார் இருக்கும் தஞ்சைக் கடலோரம்
மிகார் என் சொல்லை இங்குளார் அதனால்
புகார் தீய நினைவுடனே முன்
புகார்த் திகைத் திருநாள்
முன்பு
கார்த்திகைத் திரு நாள்

முன்பு-கார்-திகைத்து
இருநாள் ஒருநாள் அல்ல பல நாள்
பருவ மழையின்றிப் போனாலும்
துருவ மீன் போல ஒளி காட்டித் தஞ்சையின் வெற்றிப்
புருவம் தூக்கி நின்றீர் வாழ்க நன்று!
வானின்று உலகம் வழங்கி வருதலால்
தானமிழ்தம் மழையன்றோ?
துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்
துப்பாய தூஉம் மழையன்றோ?
கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய் மற்றங்கே
எடுப்பதூஉம் எல்லாம் மழையன்றோ?
நீர் இன்றி அமையாது உலகெனினும் அதனை வகைப்படுத்த
ஆறின்றி இயலாது என உணர்ந்தார்
ஆறு கண்டார் அதனாலே சோறு கண்டார்
எத்தனை ஆறு
இத்தரை மீது
சித்திர நெல்லைச்
சிரிக்கச் செய்தது; பச்சைப்பட்டு
விரிக்கச் செய்தது; வறுமைப் பேயை
எரிக்கச் செய்தது

வீட்டோரம் காட்டோரம் தோர்தல்
ஓட்டோரம் இருக்கும் நல்லீர் - சிறிது
ஆற்றோரம் வாரீர்! இன்று என்
பாட்டோரம் வாரீர்! நன்று!

குடமுருட்டிக் காவிரிப் பெண் ஆடுகின்ற காட்சி கண்டு காதல்
கொள் இடம் இதுதான் என்று; காதல்
கொள்ளிடம் இதுதான் என்று
வீர சோழன் வருகின்றான் ஓடம் போக்கி - என்மேல்,

வை கை என்று வளைக்கின்றான்
வைகை என்று வளைக்கின்றான் உன் பல்
மணிமுத்தா என நெளிகின்றான்.
காவிரியோ கண் சிமிட்டி, என்
மன்னியார் வருகின்றாள்:
மறைந்திடுக அத்தான் என்கின்றாள்; அவனோ
வரட்டுமே மன்னியார், நம்
காதலுக்கு அவளென்ன கல்லணையா?
காமினி பாமினி நாமினி காதலர்கள்
ஆம் இனி திருமணமென்று பிறருக்குச் சொல்லிவிடு.
காதல் அக்கினியாறுமோ கண்ணே அருகில் வந்துவிடு
காதல் அக்கினி ஆறுமோ கண்ணே? அருகில் வந்துவிடு!
அவளோ
யாரும் நம்மீது தப் பெண்ணார் நம்
காதல் பிரிக்க வெண்ணார் பிறர்
வெட்டார் நம் உறவெனினும் அத்தான்
வெட்கம் என்னைத் தடுக்குதென்றாள்
வீரசோழன் விரைந்தணைத்துக் கொண்டவாறு
பாலாறு முன்னே பருகிடுவோம் வா என்றான்.
மஞ்சளார் முகவதியும் அவன் மடிமீது சாய்ந்தபடி
மணமெப்போது அத்தான் என்றாள்
பெரியாறு தலைமையிலே பெரிதாக நடக்குமென்றான்.

ஆறுகளை ஒன்றாக இணைத்துக் காதல் கதை
பின்னியதாய்க் கருதாதீர்! ஆங்காங்கு வாய்ப்புக்
கூறுகளைச் சீராக்கி வளம்பெருக்கும் நதிகளுக்கு
நன்றிசொல்வோம்

உழுவார் உலகத்தார்க்கு ஆணி
உழன்றும் உழவேதலை என
எழுவார் வள்ளுவரும் வாழ்த்துரைக்க!

சேற்றில் மலரும் அவன் வாழ்வு!
உழுவனோர் மன்னன்
நாற்று முடியிருக்கும் அவன் தலையில்
உழுவனோர் வீரன்; என்றும்
போர் இருக்கும் அவன் களத்தில் (வைக்கோற்போர்)
உழுவனோர் ஓவியன்
வயல்கள் அனைத்தும் அவன் வரைந்த சித்திரம்!
உழுவனோர் தெய்வம்
உயிர்களைக் காப்பதால்!
குருவை முன் வைத்துத் தாளடியில் உழைக்கின்ற
திருவைப் போற்றிடுவோம்.
நிலம் பிறந்த நாளாகப் பாடுபட்டு வருகின்றீர்
நலம் சிறக்க நாட்டுக்கு இன்னுயினரைக் கொடுக்கின்றீர் உடலில்
பலம் இருக்கும் வரையினிலே வயல் வெளியில் கிடக்கின்றீர்
கலம், மரக்கால், படியென்று பழங்கணக்கெழுதிப் பார்க்கின்றீர்
உழுதவன் கணக்குப் பார்த்தால் உழக்கெதுவும் மிஞ்சாதென்று
உதட்டையே பிதுக்குகின்றீர்
ஏனிந்த நிலையென்று யோசித்ததாலே
ஏற்றமிகு முன்னேற்றப் பாதைக்கு வழி கண்டோம்.
கண்ட வழி;
ஏட்டோடு இருப்பது அழகுமல்ல; கவியரங்கப்
பாட்டோடு முடிவதும் நல்லதல்ல.
வீட்டோடு கிடப்பவர்கள் விழித்தெழுக தமிழ்
நாட்டோரே விடுதலை நாளின்று துடித்தெழுக
காட்டோடு கழனியோடு உழல்கின்றீர்
ஆட்டோடு மாட்டோடு சுழல்கின்றீர்
பழைய முறை மாற்றிப் பயிர் செய்தால்
நிறையப் பலன் கிடைக்க வழியுண்டு
உழக்குதான் மிச்சமென்ற இருட்டுநிலை
கிழக்கு வெளுத்ததுபோல் மறைந்துவிடும்;

நந்தன் போல் ஓர் இரவில் பயிர் செய்ய
நான் உம்மை அழைக்கவில்லை.
கந்தா கடம்பா கருப்பா முனியா என்று
கருவேல மரத்தடியில் ''மிராசுதார்'' போடும் கூச்சல்;
கால் நடையைக் கட்டிப்போட்டு
அவை கருணையுடன் தந்த உரம்;
சால் கொண்டு மனித முதுகொடிய
இறைத்த தண்ணீர் - தார்க்
கோல் கொண்டு குத்துவதால் சுற்றும் எருது
இப்படிப் பரம்பரையாய் நடக்கின்ற உழவுத் தொழிலில்
பம்பரத்தின் வேகந்தான் வேண்டுமென்று இணைக்கின்றோம்
விஞ்ஞானத்தை!
படித்தவர்கள் மேல்நாட்டில் விதைக்கின்றார் விளைக்கின்றார்
விஞ்ஞானக் கருவியினால் உழுகின்றார்; இங்கோ படித்தவர்கள்
அழுகின்றார் பயிர் விளைக்க!
விழுகின்றார் வரிசையாக வேலைதேடி!
உணவளிக்கும் வேலையிலும்
உயர்ந்ததோ வேறோர் வேலை?
ஒதுவார் எல்லாம் உழுவார் தலைக்கடையில் என்றால்
பழைய பொருள்
படித்தவர் தொழுதிடுவார் ஏர் பிடித்தவரை என்பதுதான்!
அதுமாற்றி நாம் அமைக்க வேண்டுமன்றோ?
''ஒதுவார் எல்லாம் உழுவார் தலைக்கடையில்''
படித்தவர் எல்லாம் உழுவார் தலைக்கடையில்! - அதாவது
தலைமடையில், கடைமடையில் உழுவார்!
பின்னிலையில் இருந்திட்டோம் பலநாளாய் உணவில்
தன்னிறைவு காண்பதற்கு ஊக்கம் கொள்வோம்
அந்நிலை எய்திட
முன்னிலை நிற்பது நம் அரசு
நாட்டிலே உற்பத்தி பெருக்கென்றால் அதை விடுத்து
வீட்டிலே உற்பத்தி பெருக்குகின்றார்

முத்தென்றும்
மணியென்றும்
சிட்டென்றும்
சிமிழென்றும்
கண்ணென்றும்
மூக்கென்றும்
கணக்கின்றிப் பெறுதல் விட்டு
நெல் என்றும்,
வரகென்றும்
கம்பென்றும்
கரும்பென்றும்
உழுந்தென்றும்
பருப்பென்றும்
எள் என்றும்
கொள் என்றும்
உணவு பெருக்கிடுவீர்; உற்பத்தி செய்திடுவீர்!
அதை உணர்த்த உருவான கவியரங்கில்
உழவர்களாம் நண்பர் சிலர் கவியோர் உழுதுகாட்ட வந்துள்ளார்
வரவேற்கின்றேன்.
கரும்பாயிரம் என்றொருவர்
கரும்பு பற்றிப் பாடுவார் என எண்ணாதீர்
கரும்பாகப் பாடுவார் நாம்
எறும்பாகச் சுவைத்திடலாம்
துரைத்தனம்தான் நடந்தது முன்னால்
நாற்பத்தேழாம் ஆண்டுக்கு முன்னால்....
வெள்ளைத் துரைத்தனம்தான் நடந்தது முன்னால்
விடுதலைக்குப் பின் இருபதாண்டில் அண்ணா
துரைத் தனம்தான் நடக்கிறது இந்நாள்; ஆடு
துரைத்தனம் அந்நாள்... (1947-க்கு முன்)
ஆடுதுறைத்தன ரகம் இந்நாள்
பாடுகின்றார் அது பற்றி இக்கவிஞர்!

காடு கமழ்
நீடு புகழ்
பீடு மிக
நாடு நிதம்
பாடு பட
வீடு நினை
ஆடுதுறை இருபத்தேழு:

(கவிஞர் கரும்பாயிரம் ''ஆடுதுறை 27 நெல்'' பற்றிப் பாடி முடிக்கிறார்)

**தலைவர் கலைஞர்:**

ஆடுதுறையில் பிறந்தும் இந்த இருபத்தேழு
ஆங்கில மோகங்கொண்டே எ.டி.ற்றி-27- ஆயிற்றய்யா?
அதுபோல
அய்.ஆர்.எட்டென்று ஒரு நெல்லும்
அமோக விளைச்சலிலே பிறிதொன்றை வெல்லும்
மூச்சுவிடு முன்னே முன்னூறும் நானூறும்
கவியெழுதும் புலவர் பற்றிக் கேள்வியுண்டு; இதோ
கண்ணிமைக்கும் நேரத்தில் கவி கூற ஒருவருண்டு
கண்ணிமைதான் அவர் பேராம்
என் எட்டாம் அய்.ஆர்.எனும் நெல் பற்றிப்
பண் கொட்டி முழக்கிடுவார்:

(கவிஞர் கண்ணிமை 'அய்.ஆர். 8 நெல்'' பற்றிப் பாடி முடிக்கிறார்)

**தலைவர் கலைஞர்:**

அடுத்து:

மக்காச் சோளம் பற்றி
மற்றொரு கவிஞர் பாடுகிறார்... பெயர்
நஞ்சப்பா!

கொஞ்சப்பா தமிழினிலே எனக் கூறிப்
பஞ்சப்பா போக்குதற்கு
நஞ்சப்பா பாட்டு கேட்போம்!

(கவிஞர் நஞ்சப்பா 'மக்காச் சோளம்'' பற்றிப் பாடி முடிக்கிறார்)

**தலைவர் கலைஞர்:**

அடுத்து;

கம்பெடுத்து வருகின்றார் ஒரு கவிஞர்
வம்படுத்து வருமென்று அஞ்சாதீர்
கம்பு செய்முறை பற்றிக்
கவியொன்று பொழிகின்றார்...
இவர் பெயர் இராதாகிருட்டிணன்:

(கவிஞர் இராதாகிருட்டிணன் ''கம்பு பயிரிடல்''
பற்றிப் பாடி முடிக்கிறார்)

**தலைவர் கலைஞர்:**

அடுத்து;

தாமரைக் குளத்தினிலே ராகி விளைக்கின்ற விந்தை
கண்டீரோ!
தாமரைக் குளம் சேர்ந்தார் செல்லபாண்டியன் எனும்
கவிஞர்
ராகி விளைப்பதற்குச் செயல் முறைகள் தருகின்றார்
செவிமடுத்தின்புறவீர் செயல்படுவீர்:

(கவிஞர் செல்லபாண்டியன் ''ராகி'' பற்றிப் பாடி முடிக்கிறார்)

**தலைவர் கலைஞர்:**

அடுத்து;

மூவேந்தர் எனும் பெயரில்
பாவேந்தர் பரம்பரையில்

பாடுகின்றார் தமிழரசு
ஒட்டுச்சோளம் பற்றிப்
பட்டுக்கவியொன்று நெய்கின்றார்:

**தலைவர் கலைஞரின் முடிவுரை:**

வேளாண்மைத் துறை அமைச்ச! நல்
விவசாயப் பெருமக்காள்!
அன்பு நிறை தமிழகத்து
அருமை மிகு உழவர்களே!
அமோக விளைச்சல் பற்றி
ஆறுபேர் சொல்லக் கேட்டீர்
அரசின் சார்பிலே அடியேனும் பாடக்கேட்டீர்
ஆகஸ்டு 15-ல் அத்தனையும் கேட்டுவிட்டு
ஆகட்டும் பார்ப்போம் என அலட்சியமாய் இருந்திடாதீர்
அமைந்திருக்கும் தமிழரசு வேளாண்மைத் துறையரசு
வேகமாய்ப் பணியாற்றி விளைவினைப் பெருக்கிடவே
விரைந்திடும் புத்தரசு
கடன் வழங்கல் கடிதாக நிறைவேறும்
உரம் வழங்கல் ஒரு கணமும் நிற்காது
பயிர் அழிக்கும் பூச்சிகளின்
உயிர் அழிக்க கடன் மருந்து. இந்தப்
பாட்டுறவு மட்டுமல்ல
கூட்டுறவின் துணையுமுண்டு இருபோக
நஞ்சைக்குத் தஞ்சையிலே நீர்த் தீர்வைச் சலுகை தந்து-
புஞ்சைக்கு வரிவிலக்கி உழுவர் புன்னகைக்கு மருந்தானோம்-
இன்னும்

எத்தனையோ செய்ய எண்ணம் - உங்கள்
முத்தனையை ஒத்துழைப்பு இருந்தால் போதும்...

நிலமுடையார் நெஞ்சத்தில் உழைப்போர்க்கு உதவுகின்ற
வளம் நிறைய இருத்தல் வேண்டும்

உழைப்போடும் ஒன்றுபட்டு உணவு நிலை
தழைப்பதற்குத் துணைபுரிதல் மிகவும் வேண்டும்.
கண்ணியனாம் காந்தியார் தலைமையிலே
அந்நியனை விரட்டிவிட்டோம்!
நமக்குள்ளே அந்நியர்கள் இன்றில்லை;
நம்மவரே அந்நியராய்த் திரிதல் தீது!
பதுக்கலிலே கெட்டிக்காரன்
பல உயிரைக் கொல்லுகின்றான்
கடத்தலிலே கைகாரன்
காலனையும் மிஞ்சுகின்றான்
கொடுக்காதே நெல் என்பான்
கொடியதோர் விலங்காவான்
இன்று இவரிடத்தில் 'விடுதலை'யை
விவசாய மக்கள் பெற்றிடுவோம்
இதற்கெனவே கண்டிடுவோம் புதிய பாதை...
ஆகஸ்டு 15-ல் அறிவிப்போம் குளுரையை!
அமோக விளைச்சல் அண்ணா அரசின் இலட்சியமாம்-
அதற்கென உறுதி அளிப்போம் நிச்சயமாய்!

வணக்கம்
வாழ்க



# உடைமைகள் பத்து

16.9.68 அன்று சென்னை சிறுவர் அரங்கில்
(கலைவாணர் அரங்கம்)
திருவள்ளுவர் திருநாளை ஒட்டி 'உடைமைகள் பத்து'
என்ற தலைப்பில் நடைபெற்ற கவியரங்கில்
**கலைஞர் மு.கருணாநிதி** அவர்களின்
தலைமைக் கவிதையுரை

★

வணக்கம்

வள்ளுவர்க்கு விழா எடுக்கும் வாகான திருநாளில்
வந்திருக்கும் அனைவர்க்கும் வணக்கம்
வரவேற்புக் குழுவுக்கும் வணக்கம்
கொத்தான மீசை
முத்தான பேச்சு
சத்தான கருத்து எழுச்சிக்கு
வித்தான தமிழர்
வண்டாடும் சோலை
கண்டாடும் மயில் போலத் தமிழ்
உண்டாடும் செல்வர்க்கு வணக்கம்; சிலம்புச்
செல்வர்க்கு வணக்கம்;

உடைமைகள் பத்தென்று உரைத்திட்ட வள்ளுவனை
உரித்த சுளைத் தமிழால் நான் காட்ட வேண்டுமென்று
பலமுறையும் தலை சொறிந்தேன் கற்பனையே வரவில்லை
கலங்கிவிட்டேன்
ஏடெடுத்தேன் எழுதிமுடித்தேன் என்றே என் வழக்கம்
இதுவரையில்; ஆனால் திரு
ஓடெடுத்த பரதேசி பல
வீடடுத்தும் பயனின்றி நிற்பது போல் நிற்கின்றேன்
கவி வராக் காரணந்தான் கேட்கின்றீர் என்சொல்வேன்
கண்ணீர் முந்தும் சொல்வதற்குள், ஆனாலும் சொல்கின்றேன்
தன்வினை தன்னைச் சுடும்
ஓட்டப்பம் வீட்டைச் சுடும் என்று
முன்னொரு நாள் பட்டினத்தார்
ஒரு வீடு கொளுத்தியதாய்க் கதையுண்டு இன்றோ சில
பட்டினத்தார் - சென்னைப்
பட்டினத்தார் பல வீடு கொளுத்துகின்றார்
எரிவதெல்லாம் வீடென்றா கருதுகின்றீர்?
ஏழைகளின் வயிறன்றோ? எங்கள்
மஞ்சமும் மாளிகையும் இந்த மண் வீடு தானென்று
பிஞ்சுகளாம் பிள்ளை குட்டியுடன் வாழ்கின்றார்....
கொஞ்சமும் இரக்கமிலாக் கொடியவர்கள்
நஞ்சு நிறை பாம்பனையோர் வெறிகொண்ட
பேயனையோர் நமனும்
அஞ்சுகின்ற காரியத்தைச் செய்கின்றார் அவரெல்லாம்
பஞ்சு பஞ்சாய்ப் போவதற்குச் சாபமிடு
சாபமிடு அவர்க்குத்
தூபமிடும் துரோகிகளும் தூள் தூளாய்ச் சிதறிடவே
சாபமிடு தமிழ் நாடே! நீ சாபமிடு!
இப்படி எண்ணித் துடிக்கின்ற போது

எப்படி வரும் கவிதைக்குத் தூது?
அடங்காச் சினத்தாலே
அடபாவி அழிந்திடுக என்கின்றேன்
''அறிவறிந்து ஆற்றின் அடங்கப்பெறின்
செறிவறிந்து சீர்மை பயக்கும்'' என்று
அன்புருவாய் வள்ளுவரும் அடக்குகின்றார்
அடக்கமுடைமை அது; என் செய்வேன்?
மாடிழந்து கன்றிழந்து ஓண்டும்
வீடிழந்து உழல்கின்றார் நடுத்தெருவில்
இந்நிலைக்கு வித்திட்ட இழிதகையோர் வீழ்க என்று
இருதயத்தை அமுக்கிக் கொண்டு கத்துகின்றேன்
'இருள் சேர்ந்த நெஞ்சினார்க்கில்லை' என்று
அருளுடைமை அருள்கின்றார் குறள் அறிஞர் - மற்றும்;
அன்புடைமை
அறிவுடைமை
ஆள்வினையுடைமை
பண்புடைமை
நாணுடைமை
பொறையுடைமை
ஒழுக்கமுடைமை
ஊக்கமுடைமை
இப்படிப் பத்துடைமை இயற்றிக் காட்டி
எனைத் தேற்ற முயல்கின்றார் வள்ளுவரும்! ஆனால்
சொத்துடைமை இல்லாத மக்கள்
சொறி நாய் போல் எரிநெருப்பின்
பெருநாக்கில் சிக்கி விட்ட சீரழிவை
ஒரு நாக்கில் சொல்வதற்கோ முடியுமய்யா?
கருநாக்கு படைத்தவரே.....
சபித்திடுவீர் கயவர்களை எனச் சொன்னால்
வள்ளுவரின் திருவாக்கும் உடன் சேரும் -அவ்வாக்கு

'என்பிலதனை வெயில் போலக் காயுமே
அன்பிலதனை அறம்!''

அந்த
அறம்பாடி அநியாய மனிதர்களை அழித்திடுவோம்
புறம்பாடி வாழ்ந்திருந்த தமிழகத்தில்
பொல்லாங்கை ஒழித்திட்டோம் என்று புதிய
திறம்பாடி மகிழ்ந்திருப்போம் - தீமைகளைச் சாய்த்திடுவோம்
தீ வைக்கும் பிராணிகளை மாய்த்திடுவோம்
இங்கு
நாலாறு கவிகள் வந்து
பாலாறு தென்பெண்ணை காவிரிபோல் பாட்டாறு
பெருக்கெடுக்கச் செய்யும்போது சென்னைக்
கோளாறு பற்றி நான் கூறியதைப் பொறுத்தருள்வீர்....
பொறுக்கவில்லை என் நெஞ்சம்!
அதனாலே புலம்பி விட்டேன்!
வள்ளுவர்க்குச் சிலை வைத்துச் சிறப்புச் செய்யும் தமிழ்நாடு
அதை எதிர்த்துத்
துள்ளுவார்க்கு மூக்கணாங்கயிறு மாட்டும் மறவர் வீடு
ஐந்தெழுத்தில் வள்ளுவர் அறிக என்போம்! அறியாதார்
இரண்டெழுத்தில்... 'வள்' என்று குரைப்பார்....
மூன்றெழுத்தைக் குறைப்பார்.
'வள்'ளுக்கு இடையே கால்போட்டு
வாள் எடுப்போம் வஞ்சகத்தைப் பொடியாக்க!
நாம் ஒரு வாள் எடுத்தால் - அவர் இரு
வாள் எடுத்து 'வாள்-வாள்' என்பார்!
வள்ளுவரைப் பேருந்தில் இலவசமாய் நான்
பயணம் செய்ய வைத்தேன் என்பார் இங்கிருக்கும் ம.பொ.சி.
இல்லை இல்லை வள்ளுவர் படம் மாட்டியதால் விபத்துக்கள்
மலிவாகப் போனதென்பார் சில நண்பர்!

சிந்தை அணு ஒவ்வொன்றும் உணர்வேற்றும்
வள்ளுவரை இகழ்வதற்கும்
விந்தை மனிதர் இருக்கின்றார்; நல்லவேளை
வீழ்ந்து விட்டார் அறுபத்தேழில்!
ஆட்சிமொழி தமிழென்றால் ஆகாதெனில்
என்ன அறிவுடைமை?
ஆதிக்கம் பிறமொழிக்கா எனக்கேட்டால்
ஆம் எனல் என்ன தமிழ் அன்புடைமை?
இவரெல்லாம் இருப்பதை நினைத்து விட்டால்
சுவரில்லாச் சித்திரம்போல் தமிழ்நாடு
இருபதாண்டு இருந்ததென்ன விந்தையென்று
எண்ணத் தோன்றும்
இவர்க்கிடையே வள்ளுவனும் தப்பிப் பிழைத்த
கதை வியப்பைத் தூண்டும்
வாழ்ந்து கெட்ட நாட்டுக்கு மட்டுமா விடுதலை
வீழ்ந்து விட்ட தமிழர்க்கு ஒளியளிக்க
வள்ளுவப் பெரியார்க்கும் விடுதலை...
வளமலியும் தமிழுக்கும் விடுதலை...
விடுதலையின் வெளிச்சமெனும் சவுக்கடியால்
கெடுதலையின் இருட்கூட்டம் விரட்டிடுவோம்
கொடு ''தலையை''! எனச் சொன்னாள் அன்னையென்று
கொடுத்திட்டார் தீக்குளித்துத் தமிழர் பல்லோர்
சுடப்பட்டார் சுடலைசென்றார் அவர் மனைவி
விடப்பட்டார் விதவையாக
சிறைப்பட்டார் செக்கிழுத்தார்
தரைப்பட்ட மீன்போலத் தமிழ் காக்கத் துடித்துச் செத்தார்
அவரெல்லாம் கார்த்த கட்சி
அடக்குமுறை ஏற்ற கட்சி நேற்று
ஆங்கில ஏடொன்று ''போதாது தியாக'' மென்று
அரைகுறை எழுத்தொன்றை எரிச்சலால் கிறுக்கக் கண்டேன்

எங்கய்யா இந்தியாவில்எட்டுப்பேர் தீக்குளித்தார்?
இங்குதான் தமிழகத்தில் மொழிக்காகத் தணல்வாய் வீழ்ந்தார்!
பொங்குது எங்கள் உள்ளம் அந்த ஏட்டின்
புலம்பல் கண்டு - இனித்
தொங்கிடும் கடையில் ஏடு வாங்கிட ஆளே இன்றி!
தமிழ்வாழத் தலைகொடுத்த தமிழர்களைத்
தரக்குறைவாய் எழுதியதால் - இன்றைய
தலைப்பான வள்ளுவனை விட்டுவிட்டுத்
தலைபோன மனிதர் பக்கம் சென்று வந்தேன்
மன்னிப்பீர் என்னை!
எதுகை மோனை இப்போது பத்துமாதம்
இன்னும் பிறக்கவில்லை.
சீர் தளைக்கு சீமந்தம் ஆகவில்லை
வேர் தழைத்த பலாக்கனி போல் கவி வழங்கப்
பேர் பொறித்த பாவாணர் இருக்கின்றார்
மாலையிலே
பூ மாலையிலே நார் போல நானிருந்து
மணம் பெறுவேன் தமிழ்த் தார்வேந்தர் இன்றிருந்தால்
இவர்க்கும்
பார் புகழும் பரிசளிப்பார் - என் பரிசோ இவரை
ஊர் அறிய மெச்சுவதேயாகும்.

வணக்கம்

வாழ்க

(இந்தக் கவியரங்கில் கவிஞர்கள் ஆத்மநாதன், பொன்னிவளவன், குடியரசு, முருகுசுந்தரம், அப்துர் ரகுமான், பூங்குன்றன், தமிழப்பித்தன், ஆனந்தன், முத்துலிங்கம், புலமைப்பித்தன் ஆகியோர் முறையே அருளுடைமை, அடக்கமுடைமை, அறிவுடைமை, அன்புடைமை, ஆள்வினையுடைமை, ஊக்கமுடைமை, ஒழுக்கமுடைமை, பண்புடைமை, நாணுடைமை, பொறையுடைமை என்ற பத்துத் தலைப்புகளில் பாடினர்.)

# தீர்க் குடும்பம்

28.9.68 அன்று பரமத்தி வேலூர், கண்டர்
கல்லூரிக் கவியரங்கில் கலைஞர் மு.கருணாநிதி
அவர்களின் தலைமைக் கவிதையுரை

★

அவையோர்க்கு வணக்கம். கவி
அரங்கேற வந்தவர்க்கும்,
கண்டர் கல்லூரி கண்டவர்க்கும் வணக்கம்.
ஆசிரியப் பெரியோர்க்கும்
அன்பு மாணவர்க்கும் வணக்கம்.
தொண்டர், பிள்ளைக்கறி யளித்தார் சிறுத்-
தொண்டர் பிள்ளைக் கறியளித்தார்; இன்று
கண்டர், பிள்ளைக் கறிவளித்தார்.
பிள்ளைக்கு அறிவளித்தார்.
புறந்தூய்மை நீரான் அமைவதற்குக் காவிரியும்
அகந்தூய்மை வாய்மையாற் காணப்படக் கல்லூரியும்
பொருத்தமாய்க் கொண்டவரைக் கொடை
பொழிலெனக் கூறிடுவோம், என்றுமே
கொண்டாடி மகிழ்ந்திடுவோம்.
ஈரமுள்ள இடத்தில்தான் ஈகையுண்டாம் - காவிரி
தீரமுள்ள இவ்விடத்தில் ஈரமுண்டு

ஈதலுண்டு
இசைபட வாழ்தலுண்டாம்
நீர்க் குடும்பம் எனும் தலைப்பில்
நெடிய புகழ்க் கவிமக்கள் பாடுகின்றார்;
நீர், குடும்பத்தின் உறவன்றோ எனச் சொல்லி
நீர் எழுத்துக் கவியெழுதும் எனைப்பிடித்து - அணி
சீர் எழுத்துப் புலவரிடை நிறுத்தி விட்டார்.
கார் எழுத்து மழையாகும்; மழையின்
பார் எழுத்து ஆறாகும்; ஆற்றின்
நேர் எழுத்தே குளமென்போம்; கிணறென்போம்!
இதற்கெல்லாம்
வேர் எழுத்துக் கடலென்பார் தலையில்
யார் எழுத்து என நைவார், விடுவார் கண்ணீர்
பார்; எழுத்தை மாற்றுகின்றேன்
எனச் சொல்வார்;
வியர்வைப்
போர் எழுத்தால் விதியை வெல்வார்
வானக் கிழவன் இருமுதலே இடியென்றும்
வாடிப் பிதுங்கும் அவன்
கண்ணொளியே மின்னலென்றும்
அவன்
வடிக்கின்ற கோழை எச்சில்தான்
மழையே என்றும்
வர்ணித்தால் நோய் மழையை வரவேற்க ஒப்போம்
வாலிபர்க்குப் பிடித்தமான உவமை சொல்வேன்
வானத்து மீன் பெண்கள்; கூட்டுப் பேச்சே இடிக்குமுறல்; அவர்
வாளொத்த கண்வீச்சே மின்னல் கீற்று;
வட்டமதிக் காதலன்மேல் தெளிக்கின்ற
பன்னீரே மழைத் துளியாம்
வீரர்க்குப் பொருத்தமான உவமை யெனில்
இருவீரர் நெஞ்சங்கள் மோதுவதே இடிமுழக்கம்

பெருவீரர் வேல் உராய்தல் விண்ணின் மின்னல்
பலவீரர் பொழியும் செந்நீர் மழையே யாகும்.
பொதுவில் வானகமே போர்க் களமாம்
போர்க்களமெனினும், போகக்களமெனினும்
பொல்லா நோய்க்களமெனினும் - உழவின்
நல்லார் மழை தரும் வானத்தை
'மானம்' என்றார் கொச்சையாக! பொருத்தம்தானே?
மழையில் நாம் நனைந்தது போதும்
கடலருகே வந்திடுவோம்.

கடலென்றால் வைணவர்க்குத் திருமால்
பள்ளி கொண்ட நினைவே தோன்றும்.
உடலெங்கும் நீறுபூசும் சைவர்க்குச்
சிவன் நஞ்சுண்ட கதைதான் தோன்றும்
படை கொண்டு அழிக்கவொண்ணாப் பூம்புகாரை கடல்
தடையின்றி அழித்துவிட்ட வரலாறே நமக்குத் தோன்றும்.

இத்தனையும் கூட்டிக் கழித்தால் இன்னும்
எத்தனையோ நன்மைகளும் கடலால் உண்டாம்.
முத்தனைய பற்கள் என்று - கரும்புச்
சத்தனைய பெண் பேச்சுப் பேசுதற்கு
முத்தினையே தந்ததுவும் கடலே அன்றோ!
நிலமடந்தை உடுத்துகின்ற நீலப் பட்டாடை - பருவ
நிலாப் பெண்ணைத் தழுவுதற்கு அலைக்கரந் தூக்கும்,
நெடுந்தோளன், நீலவண்ண ஆணழகன்.
குலவுகின்ற காதலர்க்குக் கடலோரம் மணல்மெத்தை
உலவுகின்ற கவிஞர்க்குக் கற்பனைப் பரிசுக் கத்தை.
கும்மிருட்டு மதியோர்க்குக் கரையோரம்
தெரிவதெல்லாம் நண்டு நத்தை; கொட்டில்
தும்பிட்ட மாடுகள்போல் நாவாய்கள் நிற்கும் துறைமுகத்தைக்
காண்பதுவும் களிப்பதுவும் கடலால் அன்றோ!

கான்யூட் மன்னனது கர்வமடக்கியதால் பெருமையுற்று,
காந்தி மகான் உப்புக் காய்ச்சியதால் அருமைபெற்று வாஸ்கோட
காமாவின் கலங்களுக்கு வழியும் விட்டு, வாணிபத்தில்
கடல் கடந்த தமிழருக்கு முதல் வரலாறீந்து,
பரந்த மனம் என்பதற்கு உவமையாகி,
பலகாலம் அசைந்தாடும் ஊமையாகி,
சிலகாலம் ஊழியாகி, உலகிற்குத் தீமையாகிப் பின்
சினம் அடக்கும் துறவிபோல ஆமையாகிச்
சீறும் அலை சுருக்கிக் கொள்வாய்; கடலே நின்
சீரெல்லாம் சிறப்பெல்லாம் சொல்லப் போமோ? அதனாலே
கடல் கடந்து ஆறடைவோம் வந்திடுவீர்.
மழையிடை வந்து மலையிடை தழுவி
இழை இடை வந்த பொன்துகில் போலத் தாழந்
தழையிடை வந்து தலையினை நீட்டும் மடலதுபோல மாதர்
குழலிடை வந்து கோலம் காட்டும் வகிடது போலக்
களிநடை பூண்டு காவினில் சென்று காவிரி யானாய்
அணிமணி பூண்ட பெண்ணே யானாய்
பெண்ணே என்றார்
பெண்ணை என்றார்; நீ
கைவைத்த இடமெல்லாம் களி நடமாடுவதால்
வைகை என்றார்
வளங் கொழிக்கச் சிந்து பாடுகின்றார்.
கோதாவரியில்லை தமிழ்நாட்டில்
கோதாய் வரியில்லை தமிழ்நாட்டில்! புன்னைக்குக்
கோதாவரியில்லை தமிழ்நாட்டில்
வெளிநாட்டுத் தமிழர்க்கு; வாழ்வு
கொள் இடமுண்டு: வரையறுத்துச் செய்கின்றோம்...
வணங்குகின்றோம் - ஆறே நீ வாழ்க நன்று
ஆறு தலைப்பென்றே எனையழைத்தார் இங்கு
ஏழு தலைப்பெழுதிப் பாடச் சொன்னார்; பாடுகின்றேன்.
அடுத்து கினற்றுக்குச் சென்றிடுவோம்;

நான் கவியூரின் கிணற்றுத் தவளை - ஆனாலும்
நாட்டு வளப்பமறிவேன் - நும்போல்
பாட்டு வளப்பமறியேன் அய்யா!
நெடுவானம் மழைதர மறுத்துவிட்டால்
நீளாறு, குளம், குட்டை, வறண்டுபோய் வாடிவிட்டால்
தாகம் போக்க
ஒரு குவளை தண்ணீரும் இல்லாமற் போய்விட்டால்
உமிழ் நீரை உள்ளுருக்குள் விழுங்குதல் போல்
உரக்கேணி ஊற்றுக்கேணி
ஆழக்கேணி ஆற்றுக்கேணி
உடனடியாய்த் தோண்டுகின்றோம்
கிணறு வெட்டப் பூதம் புறப்பட்டது என்பாரே
அதன் பொருள் என்ன; புரிகிறதா?
கிணறு வெட்ட 'மண்' குவியும் - ஒரு பூதம்
பூமிக்குள் அடைந்திருந்த 'காற்று'
வெளிக் கிளம்பும் - மறுபூதம்
பொங்கிவரும் புது 'நீர்' - அடுத்தபூதம்
பொலிவுமிகு 'வான்' தெரியும் நீர் மீது - நாலாம் பூதம்
புவியாளும் ஆதவனின் 'தீ'க்கதிரால் அந்நீரும் தூய்மையாகும்
-ஐந்தாம் பூதம்
இந்தப்
பஞ்சபூதம் வருவதைத்தான் பழையவர்கள் அழகாய்ச்
சொன்னார்;
அறிவுப் பஞ்சைகளோ அலறுகின்றார் பூதமென்று!
குளம் உண்டு ஊருக்கு அழகாக
எனக்குளம் உண்டு கவிபாடுவதில்; பொதுப்பணியாற்றுவதில்
எனக்கு உளம் உண்டு.
மரைக்குளம் பேர் எழிலே - தா
மரைக்குளம் பேர் எழிலே
மறைக்குளம் திருக்குறளே!
மறைக்கு உளம் திருக்குறளே!

தீர்த்தக்குளம் - பாவம்
தீர்த்தகுளம் பல உண்டு; அதிற் சில உயிர்
தீர்த்த குளம் உண்டு.
நீச்சற்குளம் நகர்ப்புறத்தில் - இன்னும்
நீசர்குளம் சிற்றூரில் இருக்கலாமா?
கொள்மடையும் வடிமடையும்
குளத்திற்குத் தேவை - அறிவு
கொள்மடையும் அன்பு வடிமடையும் உளத்திற்குத் தேவை.
எக்குளத்திற்கும் படித்துறைக் கல் வேண்டும்!
எஃகு உளத்திற்கும் படித்திட உரைகல் வேண்டும்.

''அற்ற குளத்தில் அறுநீர்ப் பறவைபோல்
உற்றுழித் தீர்வார் உறவல்லர் - அக்குளத்தில்
கொட்டியும் ஆம்பலும் நெய்தலும் போலவே
ஒட்டி யுறுவார் உறவு''

என்று பாடிக் குளம் விட்டுக் கரையேறுகின்றேன்.
கடல் பெரிது காசினியில்
மழை இனிது மன்பதைக்கே
ஆற்றின் புகழ் மிகவாகும் அவனியிலே
கிணற்றுக்கும் கீர்த்தி பல உண்டென்போமே
குளமெல்லாம் குவலயத்தின் அமுதவாய்கள்; எல்லாம் சரி!
இத்தனைக்கும் முகில் கூட்டம் கண்ணீர் வடித்தால் அன்றோ
மழையாகிக் கடல் பொங்கும்.
ஆறு ஓடும் கேணி ஊறும் குளம் நிரம்பும்!
காரிருள் ஏன் தொலைந்தது
கனவின்பம் ஏன் கலைந்த தென்று
காலைமலர் வடிக்கும் கண்ணீர் பனித்துளியாம்; தென்னம்
பாளை வடிக்கும் கண்ணீர்தான் மதுச் சாறு.
வாழை வடிக்கும் கண்ணீரே பால் ஆகும்
ஏழை வடிக்கும் கண்ணீரோ வேல் ஆகும் வாள் ஆகும்.

''அல்லற்பட்டு ஆற்றாது அழுத கண்ணீரன்றே
செல்வத்தைத் தேய்க்கும் படை'

எனக் கூறி; வியர்வைக்கு விரைந்திடுவோம்.
சிப்பியின் வியர்வையிலே முத்து பிறக்கும் - ஒரு
சிற்பியின் வியர்வையிலே சிலை பிறக்கும்.
உழவனின் வியர்வையிலே பசி பறக்கும் - ஒரு
மழவனின் வியர்வையிலே பகைபறக்கும்.
வலியோர்கள் வியர்வையெல்லாம் பன்னீராம் - மி
எளியோர்கள் வியர்வையெல்லாம் செந்நீராம்.
உலைக்களத்தில் கொட்டுகின்ற வியர்வைதனைத்
தழல் உறிஞ்சும் - காதற்
கலைக்களத்தில் கொட்டுகின்ற
வியர்வையெலாம் சந்தனமாம் சவ்வாதாம்
அதனை வியர்வை யென்றால் இலக்கியங்கள் ஒவ்வாதாம்
அதனால் அது சவ்வாதாம்; இப்படி
விரிந்த கடல் முதலாய் வியர்வைக் குளம் வரையில்
செறிந்திடும் வர்ணனை செய்திடக் கவிஞர்
சிறப்புடன் இங்கே இருந்திடும் போது
நானே அதிகம் பாடுதல் நன்றோ?
தேனே கனியே தினையே அமுதே
ஊனே உயிரே தமிழே தாயே
வணக்கம் சொன்னேன் வாழ்க நன்று!

முதலில்

முனைகின்றார் கடல் தாண்ட முருகுசுந்தரனார்
பனைவெல்லம் போல் இனிக்கும் பாதருவார்
கடற பா தருவார்:

(கவிஞர் முருகுசுந்தரம் 'கடல்' பற்றிப் பாடி முடிக்கிறார்)

**தலைவர் கலைஞர்:**

அடுத்து மழை;
நாவற்பழமென நல்லகவி உதிர்க்கின்ற

நடராசப் புலமை நம்பி, கவி
மழை பொழிய வருகின்றார்;
குடையிருந்தால் பிடித்துக் கொள்வீர்;

(கவிஞர் தி.கு. நடராசன் 'மழை' பற்றிப் பாடி முடிக்கிறார்)

**தலைவர் கலைஞர்:**

அடுத்து ஆறு;

நமதன்பர் தமிழன்பன்
நாவினிக்கும் சொல் அன்பர் சொல்லம்பர்
ஆறுதலைப்பூ அவருக்கு!
ஆறு தலைப்பு அவருக்கு
தடையின்றி ஓடலாம் தமிழாறு
ஒலிபெருக்கித் தடையின்றி
ஓடலாம் தமிழாறு:

(கவிஞர் ஈரோடு தமிழன்பன் 'ஆறு' பற்றிப் பாடி முடிக்கிறார்)

**தலைவர் கலைஞர்:**

அடுத்து கிணறு;

வெட்டுகின்றார் ராமராசன் கிணறொன்று
கட்டுகின்றார் கயிறொன்றில் தமிழ்க் குடத்தை;
எடுத்துக்
கொட்டுகின்றார் புது வெள்ளம்
குடித்து மகிழ்வீர், நீர்
குடித்து மகிழ்வீர், கிணற்று நீர்
குடித்து மகிழ்வீர்:

(கவிஞர் ராமராசன் 'கிணறு' பற்றிப் பாடி முடிக்கிறார்)

**தலைவர் கலைஞர்:**

சம்சாரம் இல்லாமல் வாழ்ந்தாலும் வாழலாம்
மின்சாரம் இல்லாமல் வாழ முடியுமா என்றார்
நண்பர்
சம்சாரம் புகவில்லை இன்றுவரை
அதற்காக
மின்சாரம் தொட வேண்டாம்!
என் தோழர் என்பதாலே
எச்சரிக்கை செய்கின்றேன்...

அடுத்து குளம்;
அக்பர் என்றும் அவுரங்கசீப் என்றும்
அந்த நாளில் களம் கண்டார் - அவர் வழியில்
அப்துர் ரகுமான் குளம் கண்டார் - அதனைச் சொல்ல
அவரும் களம் கண்டார் - கவிக் களம் கண்டார்
குளம் கண்டால் விடுவோமோ? கரையோரம்
குந்திக் களைப்பாறிடுவோம்:

(கவிஞர் அப்துர் ரகுமான் 'குளம்' பற்றிப் பாடி முடிக்கிறார்)

**தலைவர் கலைஞர்:**

அடுத்து கண்ணீர்;
கந்தசாமி யெனும் தமிழ்க் கவியேறு
நொந்த மனங்கொண்டு கண்ணீர்விட
இந்த அவைதனிலே வருகின்றார்;
கவலையென்ன கேட்டிடுவோம்... முடிந்தால்
குறை தீர்த்திடுவோம்:

(கவிஞர் கந்தசாமி 'கண்ணீர்' பற்றிப் பாடி முடிக்கிறார்)

**தலைவர் கலைஞர்:**

அடுத்து வியர்வை;
வெண் முத்து வியர்வைதனை எடுத்துக்காட்ட
நடுக்
கண்ணொத்த கறுப்பு நிறம் தேவைதானே?
பண்ணொத்துப் பாடுதற்கு வருகின்றார்
பொன்னொத்த பாவளவன்
பொன்னி வளவன்
வியர்வை சொட்டப் பாடி - நம்
அயர்வையெல்லாம் விரட்டப் போகின்றார்:

(கவிஞர் பொன்னிவளவன் 'வியர்வை' பற்றிப்
பாடி முடிக்கிறார்)

**தலைவர் கலைஞரின் முடிவுரை:**

''பாசனத்து மந்திரி என்றதனால்
பயனுண்டு நீர்க் குடும்பத் தலைப்பால்; எனவே
பறந்து வந்தேன் பரமத்தி வேலூர் நோக்கி
பல தலைப்பில் பாவலர்கள் பாடிவிட்டார்
ஒரு தலைப்பை ஒரு தலைப்பார் வம்புக்கிழுத்து
நம் தலைப்பை நிறைவு செய்தார். நம்
தலைப்-பை-நிறைவு செய்தார்.
ஒரு தலைப்பட்சமாய் நானும் தீர்ப்பொன்றும் வழங்க மாட்டேன்
ஆனாலும் ஒன்றே ஒன்று;
கடல் இருந்து
மழை பெருகி
ஆறு ஓடி
கிணறு குளம் நீர் நிறைய வேண்டும்.
நீர்க் குடும்பத்தில் ஒன்று குறைய வேண்டும்;
மற்றொன்று மறைய வேண்டும்.

வியர்வை குறைய வேண்டும் - வேலை செய்வோர்க்கு
வசதி பெருகுவதால் வியர்வை குறைய வேண்டும்.
கண்ணீர் மறைய வேண்டும்.
எல்லார்க்கும் இன்பம்
என்றும் வேண்டுவதால் கண்ணீர் மறைய
வேண்டும்!

வணக்கம்.

வாழ்க!



# பாரதிதாசன்

8.12.68 அன்று பம்பாய் பாரதி கலை மன்றத்தில்
''பாரதிதாசன்'' என்ற தலைப்பில் நடைபெற்ற
கவியரங்கில் கலைஞர் மு.கருணாநிதி அவர்களின்
தலைமையுரை

★

கண்ணை இமை காப்பது போல்
என்னை என்றும் காப்பதற்குப் பம்பாயில்
இருக்கின்ற தோழர்களே
என்னெனையென இரத்தத்தைப் பெய்து தந்து
தண்ணிலவாம் தமிழன்னை காக்கின்ற தீரர்களே
வெட்டி வா என்றுரைத்தால்
கட்டி வரும் வீரர்களே
பெட்டிக்குள் இருக்கின்ற பணத்தை
ஏழை எடுத்தெடுத்துப் பார்த்து மகிழ்வதுபோல்
எனை அழைத்தழைத்து மகிழ்கின்ற நண்பர்களே
மலைஎலியாம் மாவீரன் சிவாஜி கண்ட
மராட்டியத்து மண் மீது
நிலைகுலையா நேர்மையுடன் நேசமதை வைத்தவரே!
அலைபாடுங் கடல் மல்லை அங்குண்டு தமிழ்நாட்டில்
கலைபாடுங் காவியங்கள் கவின்பாடும் சிற்பங்கள்
நஞ்சையுண்டு தஞ்சையிலே; அங்கு

நஞ்சையுண்ட சிவனார்க்குக் கோயில் உண்டு
மாடு கட்டிப் போரடித்தால் மாளாது செந்நெல் என்று
யானை கட்டிப் போரடித்த மதுரையுண்டு
அங்கு
மீன் ஆட்சி நடத்தியதால் மீன்பொறித்த கொடியுண்டு
மீனாட்சி அம்மைக்கும் வான்முட்டும் கோயிலுண்டு
நெல்லையுண்டு சேலம் உண்டு
குற்றாலம் கோவையுண்டு வாழ்வில்
தொல்லை கண்ட காரணத்தால்
தாராவிதனில் வந்து
பேராவி போக்குகின்றீர் நீர்
மாதுங்கா வாழ்ந்தாலும் - மனமெல்லாம் அங்கேதான்; இதைக்
காதுங்காதும் வைத்தாற்போல் சொல்லுகிறேன்
ஒருமைப்பாடு காண இந்தியாவும் நம்
உரிமைப்பாடு காணத் தமிழகமும்
உயர்தனிக் கொள்கையெனக் கொண்டுவிட்டோம்
பயன்பல பெருக்குதற்குத் தொண்டு செய்வோம்
இந்த
முன்னுரையுடனே
என்னுரை தொடங்குவேன்
வந்திடுக பம்பாய்க்கென்று
வருந்திமிக அழைத்ததாக
நேற்று ரங்கா சொன்னார்
வருந்தியபின் அழைத்தாரோ!
அழைத்த பின்னர் வருந்தினாரோ? அறியோம் யாம்
ஆனாலும் எடுத்தபணி முடிப்பதற்கு ஏறிவிட்டோம்
கவியரங்கு

பைந்தமிழால் சுவை கூட்டும்
பம்பாய் வாழ் பெரியோரே
சிங்கக் கவிஞன் பாரதி போரால்

தங்கத் தமிழ் மன்றம் கண்டவரே
மன்றேறி மணிக்கவிதை முழக்கவந்த கவிஞர்களே
குன்றேறி நீர் நிற்க முடியாது!
முடியுமா?
குன்று ஏறி நீர் நிற்க முடியுமா? புகழ்க்
குன்றேறி நீர் நிற்க முடியாதென்று
என்றேனும் சொன்னேனா? இல்லை
இன்றேனும் சொன்னேனா?
மாக்கவியென்று பாரதியைப் போற்றுகின்றார்
நான் ஒப்பவில்லை. அரைத்த
மாக்கவியா பாரதியார்? இல்லை; இல்லையா (ப்)
பணியாரக் கவியா?
யாப்பு அணி ஆரக் கவியா?
மாக்கவிதான்... அரி
மாக்கவி
தலைக்கவியவர்-புதுமைக்குத்
தலைக்கவியவர் - நாட்டு விடு
தலைக்கவியவர்
தலைப்பாகை
முறுக்கிவிட்ட குத்து மீசை
நடுநடுங்கி எதிரிகளை
ஓடவைக்கும் பார்வைப் பகலவனாம் பாரதியார்!
தலை
பா
கை
முறுக்கிவிட்ட குத்துமீசை
கைமுறுக்கி; விட்ட குத்து-
மீசை நடுநடுங்க எதிரிகளை ஓட வைக்கும்
பார்வைப் பகலவனாம் பாரதியார்!
''ஆயிரம் தெய்வங்கள் உண்டென்று தேடி

அலையும் அறிவிலிகாள்'' எனப்பாடும்
அவன் சீற்றம் கண்டீரோ!
ஆடுவோமே பள்ளுப்பாடுவோமே
ஆனந்த சுதந்திரம் அடைந்துவிட்டோமென்று ஆடுவோமே!''
அடைவதற்குள் அறுதியிட்டுச் சொன்னவனாம்
அடலேறு, மொழி பகரும் மன்னவனாம்
அவனுக்குச் சின்னவனாம்
இளம்மருது போன்றவனாம்
எடுத்தவுடன்
''எங்கெங்கு காணினும் சக்தியடா தம்பி
ஏழுகடல் அவள் வண்ணமடா'' என்று
பாரதி பாடென்று சொன்னவுடன் பாடிய மறவன்
பார் அதி தீரனென்று பாரதி புகழ்ந்த புலவன்
கனக சுப்பு ரத்தினம் என்று காதலூரம் இருந்த பெயரைக்
கவி பாரதிக்குத்தாசனென்று கச்சிதமாய்ச் சூட்டிக் கொண்டான்
களம்சென்று தமிழ்காக்கக் கச்சு திதமாய்க் கட்டிக்கொண்டான்
நிமிர்ந்த நோக்கு
நெரித்த புருவம்
நீள்வீழ்ச்சி ஓசை-நெற்
கதிர்க்கட்டு மீசை
பாட்டெழுதும் வித்தையிலே
பாரதி ரசவாதம் கற்றவனாம் - இவனைப் பார்
அதிரசவாதம் கற்றவனாம்
அதிரசவாதம் கற்றவனாம்
அத்துணை இனிப்பு இவன் பாட்டில்!
சஞ்சீவிபர்வதத்தின் சாரலுக்கு நமை இட்டுச் சென்று
சங்கீதப் பேச்சொன்றைக் கேட்கச் சொல்வான்.
காதலி ''நோகாமல் முத்தங்கள் நூறு கொடுப்பேன்'' என்றாள்
காதலன் ''ஆகையால் ஓர் முத்தம் அச்சாரம் போடு'' என்றான்!
அதிரச வாதமன்றோ - அ·தது அவனுக்கே பழக்கமன்றோ!

''சிற்றூரும் வரப்பெடுத்த வயலும் ஆறு
தேக்கியநல் வாய்க்காலும் வகைப்படுத்தி
நெற்சேர உழுதுழுது பயன் விளைக்கும்
நிறையுழைப்புத் தோள்களெலாம் எவரின் தோள்கள்?''
வினாக்குறியா? வெடிக்கும் எரிமலையா?
புரட்சிக்கவிஞனெனப் புவியொப்பி மாலைபோடப்
போதாதோ இவ்வரிகள்?
''ஒரு மனிதன் தேவைக்கே இந்தத்தேசம் உண்டென்றால்
அத்தேசம் ஒழிதல் நன்றாம்''
முழுமனிதன் பாட்டன்றோ இப்பாட்டு; இதுகேட்டு
அழும் மனிதன் அரைமனிதன் குறை மனிதன்
அரைகுறை மனிதன்
''இருட்டறையில் உள்ளதடா உலகம்; சாதி
இருக்கின்ற தென்பானும் இருக்கின்றானே!''
எனத் தொடங்கி;
''சுருட்டுகின்றார் (சில பேர்கள்) தம் கையில்
கிடைத்தவற்றை'' என முடிக்கும்

இவனோர்
சுருட்டுக்கவிஞன் - புகைச்
சுருட்டுக்கவிஞன் - இவன்
புரட்டுக்கவிஞனாவான்;
மூடப்பழக்கமெலாம் தலைகீழ்ப்
புரட்டும் கவிஞனாவான்.
அமளி துமளி ஆர்ப்பாட்டம் அணிவகுப்பு!
அமைதியிலே உலகுவாழப் புதுவைக்குயில் கூவாதோ?

''புதியதோர் உலகம் செய்வோம் - கெட்ட
போரிடும் உலகத்தை வேரோடு சாய்ப்போம்''
அமைதிக் கவிஞனாக அழைக்கின்றான் உலகத்தை
''சாந்தியால் உலகம் தழைப்பது நன்றா?

சமய பேதம் வளர்த்தே தளர்வது நன்றா?''
காந்தியார் கதறிய கருத்தினைக் கவிஞன்
கனலிடை மெழுகென உருகியே கேட்பான்.

''பொய்யுரைப்போன் பயங்காளி - பிறர்
பூமி சுரண்டிடுவோன் - பெருச்சாளி
வையக மக்கள் எல்லோரும் - நலம்
வாய்ந்திட எண்ணிடுவோன் அறிவாளி''

கருத்துக்கவிஞன்; சற்றுக் கருத்த கவிஞன்
காலக்கவிஞன்; முக்காலக் கவிஞன்
அவன்
சுவையாய்த் தமிழுக்கு அருவியின் பாடல்
அமைவாய்க் கண்ட அற்புதம் என்னே!

''விருந்து வரக்கண்ட மெல்லி முகம்போல் முல்லை
அரும்பு மலர்ந்ததென்ன வேடிக்கை
தெரிந்தவரைக் கண்டாலும் தெரியாதாரைக் கண்டாலும்
சிரிப்பதுதான் இதன் வாடிக்கை''

இன்னொன்று கேளீர்:
விழிக்கு இனியவள் ஒருத்தி ஆடுகின்றாள்
மொழிக்குச் சுவையேற்றித் தாசன் பாடுகின்றார்:-

''சதங்கை கொஞ்சும் பாதம் சதிமிதிக்கும் வானில்
மிதக்கும் அவள் தாமரைக்கை! மேலும் வதங்கலிலாச்
சண்பகத்து நல்லரும்பு; சாடை புரிகின்ற விரல்.
கண்கவரும் செம்பவளக்காம்பு''

மற்றொன்று;

''தொண்டையிலே ஒன்றுமே அடைக்க வில்லை
துணைவனவன் சிறுகனைப்புக் கனைக்கலுற்றான்
அண்டையிலே மங்கைபோய் 'அத்தான்' என்றாள்
அத்தானா தூங்கிடுவான்?
(அருகில்) உட்கார்! என்றான்''

அவருக்கே உரிய கேலி!
அவர் கவிதைக்கே உரிய சுவை!

உவமைக்கோர் கவிஞன் என்று

உரைக்கின்றார் பெருங்கவிஞர்
ஒன்றிரண்டா எடுத்துச் சொல்ல?
''தொட்டி நீலத்தில் சுண்ணாம்பு கலந்த கலபபன்ன
இருள் தன் கட்டுக் குலைந்தது''
''சோற்றை அள்ளுங்கால் துவள் வாழைத் தண்டில் உறும்
சாற்றைப் போலே வடியத்தக்க வண்ணம்
ஊற்று நெய்யை''
புரட்சியா? அமைதியா? பொங்கும் உவமையா?
கருத்தா? தமிழ்ப் போதை தரும் சுவைத்தேனா?
எதனை எது மிஞ்சுமென்று எவர் கூறி வாதிட்டாலும்
ஒப்பமாட்டேன்; ஒன்றையொன்று மிஞ்சுமென்பேன்!
ஏடெத்தனை அவர் தந்தார்!
இருண்ட வீட்டில்
குடும்ப விளக்கேற்றி வைத்தார்
இசையமுது பொழிந்து, அதற்குப்
பாண்டியன் பரிசு பெற்றார் நமக்குக்
குறிஞ்சித்திட்டுமுண்டு குயில் இதழ் நடத்தும்போது
அழகின் சிரிப்பாலே தமிழியக்கம் கவர்ந்துவிட்டார்.
அமைதிக்கு நல்ல தீர்ப்பளித்தார் அவர்
காதல் நினைவாலே கவிப்பெண்ணை வாடவிட்டுச் சாவின்
எதிர்பாராமுத்தத்தால் பிரிந்துவிட்டார்...
என் ஆசான் பாரதியைப் பார்ப்பேன் எனப் பறந்துவிட்டார்...
இரு கவியும் இறப்புலகின் சந்தித்து என்ன பேசியிருப்பாரென
எண்ணுகின்றீர்?

''நாம் தமிழ் நாட்டில் இன்றைக்கு இல்லையென்று
நம் மக்கள் பேசுகின்றார் - நம்புவதோ இதனை நாமும்?
'செந்தமிழ் நாடெனும் போதினிலே - இன்பத்
தேன்வந்து பாயுது காதினிலே'
சிந்தைகவர் இந்தப் பாட்டினையே செயல்படுத்த மிக்கமனம்
நொந்துதான் காத்திருந்தேன்; இன்று

விந்தை கண்டனையோ தம்பீ - நம்
தந்தையர் நாட்டுக்குத் தமிழ்நாடெனப் பெயர்
தந்தவர் அண்ணா! நாம் வாழ்கின்றோம் அங்கு!
மெய்யலவோ?'' என்று
பரவசத்தால் நடமாடும் பாரதிக்கு வணக்கம் சொல்லிப்
பாவேந்தன் பகர்வான்

''கனியிடை ஏறிய சுளையும் - முற்றல்
கழையிடை ஏறிய சாறும்,
பனிமலர் ஏறிய தேனும் காய்ச்சுப்
பாகிடை ஏறிய சுவையும்
நனிபசு பொழியும் பாலும் - தென்னை
நல்கிய குளிரிள நீரும்
இனியன என்பேன் எனினும் - தமிழை
என்னுயிர் என்பேன் கண்டீர்!'
என்றெழுதி வந்தேன்....
இன்றெல்லாத் தமிழர்களும் தமிழைத்தம் இன்னுயிராய்க்
கொண்டு

சென்றங்கு எட்டுத்திசை பரப்புதற்கு முனைந்தார்
அய்ய! நாம் சாகவில்லை வாழ்கின்றோம் தாயகத்தில்!
உண்மைதான் நீர் உரைத்த'' தென்றான்.
பாரதியும் தன் தாசனையே தழுவிக்கொண்டு
பாரதிரச் சிரிக்கின்றான்
இருவருமே பாடுகின்றார்

''எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்
மங்காத தமிழென்று சங்கே முழங்கு!''

இணைந்து நாமும் பாடிடுவோம்
ஏற்றமிகு தமிழகத்தைக் கண்டிடுவோம்
நாற்றமிகு சாதிப்பூசல் களைந்திடுவோம்
ஆற்றல்மிகு பாரதிக்கும் அவர் தாசர்க்கும் விழா எடுப்போம்
விழா எடுக்கும் வேளையிலே அவர்தம்

விழாக்கருத்தைச் செவிமடுப்போம்.
முதலில்
உவமை யெனுந் தலைப்பினிலே
ஒருவர் பாட வருகின்றார்
என் நண்பர் தனி அன்பர்
பொன் பூவும் மணமுடைத்து
என்பாராம் தன் கவியால்
பொருநை நதிப் பெருக்கனைய தமிழ் காட்டும்
கருணை ஆனந்தக் கவிஞர் - என்
கேலிக்கு நற் கருவி
வேலிக்கு ஓணான் போலச் சாட்சி சொல்வார் எனக்காக
கூலிக்கு மாரடிக்கும் கொள்கையில்லாக் குணக்குன்று
முதன் முதலாய் பம்பாய்க்கு வந்துள்ளார்; நேற்றுத்தான்
முதன் முதலாய் விமானமும் ஏறியுள்ளார்!
சீராக அவர் ஏறியதும் 'சீட்பெல்ட்' டைத்தான் போடுமென்றேன்.
நேராக எனைப்பார்த்துத் தன் இடுப்பு 'பெல்ட்'தனை
இறுக்கிக் கொண்டார்!
விமானப் பெண்ணாளும் விலாநோகச் சிரித்துவிட்டு
விடுவிடென மாட்டிவிட்டாள் விமானப் 'பெல்ட்டு'தனை
'பட்டிக்காட்டான் யானை பார்த்தது போல' என்பதுதானே
பழமொழி!
அதனை மாற்றிக் கொள்வீர் இவரைப் பார்த்து!
பட்டிக்காட்டான் பம்பாய் பார்த்ததுபோல்;
வந்திறங்கியவுடன் வாய்பிளந்து
வானளாவிய மாடம் பார்த்தார்
விமானக் கூடம் பார்த்தார்
அதனாலே
கையில் வைத்திருந்த விலை உயர் பொருள் ஒன்றைக்
காணாமற் போக்கி விட்டார்!
இவர்தான் அக் கவிஞர்

உள்ளங்கவர் பாவேந்தின் உவமை அழகெல்லாம்
கள்ளங் கபடமிலா என் நண்பர் பாடிடுவார்
பள்ளம் போய் வீழ்கின்ற பாய்ச்சல் நீரதுபோல்
வெள்ளம் காண்போம் தமிழ் நடையில்:

(கவிஞர் ஆனந்தம் 'உவமை' பற்றிப் பாடி முடிக்கிறார்)

தலைவர் கலைஞர்:

அடுத்து;
இன்பம் எனும் எழில் தலைப்பில்
அன்பர் திரு. சுந்தரனார் பாடுகின்றார்
புவியில் இன்பம் பொலிக என்றே
கவியின் கனவால் சொன்ன கவிஞர்
அரசியலில்
எதிர் வரிசைதான் அவர் வரிசை என்றாலும் சிலர்போல அவர்
எதிர்வரி 'சைத்தான்' இல்லை!
புது வரிசை தமிழ்த் தாய்க்குப் படைத்திடுவார்
மதுவரிசையில்லாமல் கவியெழுதும் மாண்புடையார்
எளிய உடை எளிய நடை; பழங் கருத்து
நெளிய விடாப் புதுமை நெஞ்சம்;
புனிய மிலார் அடிபோலப் பாட்டடியால் என்றும்
குளியலிலா அழுக்குமனம் திருத்திடுவார்.
அவர் பாட்டு புறப்பாட்டு
ஆனால் இன்றோ அகப்பாட்டு பாடுதற்கு
அகப்பட்டுக் கொண்டார் இங்கே!
இன்பமெனும் தலைப்பினிலே
எழுத்தாரம் வழங்கிடவே என் நண்ப வந்திடுக:

(கவிஞர் எஸ்.டி.சுந்தரம் 'இன்பம்' பற்றிப் பாடி முடிக்கிறார்)

**தலைவர் கலைஞர்:**

அடுத்து;
பெண்மை எனும் தலைப்பினிலே
பெருமை மிகு கவி பாட
உண்மை மிகு உயர் தமிழர்
வெண்மையுள்ளக் கணேசனார் வருகின்றார்
வட்டி யின்றிக் கடன் வழங்காச்
செட்டி நாட்டுச் செம்மல் இவர்
சட்டை யில்லாத் திருஉருவம் - எதிர்ப்பைச்
சட்டை செய்யாப் புகழ் உருவம்!
கதர் அணியார் - கதர் அணியார்ந்த கட்டுடல் -
கதர் அணியார் மல்லுக்கு நிற்பார்-
தமிழ் பழித்த எதிரியுடன்
மல்லுக்கு நிற்பார் - விடுதலை
நெல்லுக்கு வியர்வை பாய்ச்சி இன்று
சொல்லுக்குச் சுவையேற்ற வந்துள்ளார்
கல்லுக்கும் உயிர் கொடுக்கும் கவித் தமிழால்
கனிப்பாட்டு தந்திடுவார் இப்போது வந்திடுவார்:

(கவிஞர் சா.கணேசன் 'பெண்மை' பற்றிப் பாடி முடிக்கிறார்)

**தலைவர் கலைஞர்:**

அடுத்து;
அவை கூட்டி அமர்ந்ததற்குச்
சுவை கூட்டல் வேண்டாமோ
அதற்காக வருகின்றார் அப்துர் ரகுமான்
ரவை போட்ட துப்பாக்கி வெடிப்பதுபோல்
சொல் வெடிக்கும் - சுவை வடிக்கும்
இவர் ஒரு வானம்பாடி
இருக்குமிடம் வாணியம்பாடி

பாரதிக்குத் தாசன் பாரதிதாசன் எனில்
அந்தத் தாசர்க்குத் தாசர் இவர் தமிழ்க் கவிதை தீட்டுவதில்!
குடமிட்ட தீபம் இவர் இனிமேல் குன்றிலிட்ட தீபந்தான்
புடமிட்ட தங்கம் இவர் இனிமேல் புகழ்மீட்டு வீணையிவர்
சுவைப்பாட்டு தந்திடுவார்
சுவைத்திருப்பீர்; நான் குறுக்கேயில்லை:

(கவிஞர் அப்துர் ரகுமான் 'சுவை' பற்றிப் பாடி முடிக்கிறார்)

**தலைவர் கலைஞர்:**

நேற்றிரவு பம்பாய் நகர் விடுதி யொன்றில்
போர்த்தியவாறு நான் தூங்குகின்றேன்
''காத்திருந்தேன் கண்ணாளா வந்தாயோ'' எனச் சொல்லிக்
கரம்பிடித்தாள் கனவுலக மங்கை நல்லாள் -
''காரிகையுன் பேரென்ன?'' எனக் கேட்கக்
களிப்புடனே ''முத்தம்மா'' எனச் சொன்னாள்
''சொப்பனத்துச் சுந்தரியே சொல்லிடுக ஒரு விளக்கம்
தப்பிதமாய் எண்ணாதே - உன்
முகம் பார்த்தால் முத்துச்சாமி போல் இருக்குதம்மா!
அகம் மட்டும் ஆண்மை மாறிப் பெண்மையாகப்
போனதுவோ!'' எனக் கேட்டேன்;

அவளும்...
கலகலவெனச் சிரித்துவிட்டுக்
கையால் மறைத்திருந்த மீசைதனைக் காட்டிவிட்டாள்!
கண்டுகொண்டேன் கைகாரி அவள்தானென்று
தப்பிக்க வழியில்லாத் தையலவள் ''அத்தானே
ஒப்பிக்க இருக்கின்றேன் எனதுள்ளம் உம்மிடமே; ஆனால்
மீசை வந்து ஆசைதனைக் கெடுக்கு'' தென்றாள்
''பூசை வைத்துப் போ என்றால் போமோ மீசை?
பூவையே நீ புனர்ஜென்மம் எடுத்துப் புதுப்பெண்ணாக வா''
என்றேன்.

போய்விட்டாள் விழித்துக் கொண்டேன்
வேடிக்கைக் கனவு நேற்று விளைந்த விதம் நீர் அறிவீர் தமிழ்
வேட்கை மிகு முத்துச்சாமி
விரைவினிலே பெண்ணாக மாறி, எனை மணக்க
வேண்டுமென்று
விரும்புவதாய் இம்மன்றில் தெரிவித்தார்
மறு ஜென்ம வாழ்விருந்தால் எனை
மணப்பதுறுதி யென்றார் அறிவீர் அன்றோ!
அதை நினைத்துத் தூங்கி விட்டேன்
அதனாலே கன்வு கண்டேன்
மாரியப்பன் மாரியம்மாள் ஆகின்ற புரட்சியெல்லாம்
நடக்கும்போது
முத்துச்சாமி முத்தம்மாளாகிவிட்டால் எங்கள்
அமைச்சரவையில் ஆரணங்கு இருவராவார்!
அது நிற்க;

பாவேந்தர் பாட்டாலே செய்த புரட்சி
பாடிக்காட்ட என் தோழர் முத்து தனை அழைக்கின்றேன்
நேற்று நினைவோடு நாணிக் கோணி வாராமல்
நம்மிடையே வந்திடுவார் நற்றமிழைத் தந்திடுவார்;

(அமைச்சர் மா. முத்துச்சாமி 'புரட்சி' பற்றிப் பாடி முடிக்கிறார்)

**தலைவர் கலைஞரின் முடிவுரை:-**

''கண்கள் விற்றுச் சித்திரம் வாங்குவதோ?''
எனக்கேட்ட பாரதிக்குத் தாசன்
''பெண்கள் கொய்யாப்பழக் கூட்ட'' மென்றுரைத்தான்.
''தனித்துக் கிடந்திடும் லாயம் - அதில்
தள்ளி யடைக்கப்படும் குதிரைக்கும்
கனைத்திட உத்திரவுண்டு - வீட்டில்
கார்னிகை நாணவும் அஞ்சவும் வேண்டுமோ?
எனக் கேட்டான்

''காதல் அடைதல் உயிர் இயற்கை - அது
கட்டில் அகப்படும் தன்மையதோ? அடி
கோதை தொடங்கடி! என்று சொன்னான் இன்பம்
கொள்ளை! கொள்ளை! கொள்ளை! மாந்தோப்பில்!''
என்று மகிழ்ந்தவன்;
''காதலுக்கு வழி வைத்துக் கருப்பாதை சாத்தக்
கதவொன்று கண்டறிவோம் இதிலென்ன குற்றம்?''
எனக் கேட்டான்

எப்போது தெரியுமா?
இப்போது தானே நாம்
குடும்பக் கட்டுப்பாடென்று கூறி
குசேலரைப் போல ஆகாதீர் எனப்
பிரச்சாரம் புரிகின்றோம் பேரரசின் சார்பில்!
பெருங்கவிஞன் பிள்ளைக் கட்டுப்பாடு தேவையென
முப்பதாண்டுக் காலத்திற்கு முன்பாக முன்னேற்றக்
கருத்துரைத்தான்.
நாலைந்து பிள்ளைக்குத் தந்தையான ஒருவன்
நடுநடுங்கித் திண்ணையிலே படுத்துக் கொண்டான்
நங்கையவள் அவன் மனைவி வருகின்றாள்; இங்கு
கங்கையைப் போல் பிரவாகம் காட்டுகின்ற
கவிஞன் நடை கேளுங்கள்:-

''அருமனைவி என்னிடத்தில் மெதுவாக வந்தாள்;
''அயர்ந்தீரோ?'' என்றுரைத்தாள்; மலர்க் கரத்தால் தொட்டாள்!
''தெருவினிலே பனி'' என்றாள்; ஆமென்று சொன்னேன்!
தெரிந்து கொண்டேன் அவள் உள்ளம், வார்த்தையென்ன
தேவை?

பத்துமாதம் செல்லப் பகற்போதில் ஓர் நாள்
பட்ட கடன்காரர் வந்து படுத்துகின்ற நேரம்
சித்தமெலாம் மூத்த பெண் சுரநோயை எண்ணித்

திடுக்கிடுங்கால் ஒரு கிழவி என்னிடத்தில் வந்து,
முத்தாலம்மை வைத்த கிருபையினால் நல்ல
முகூர்த்தத்தில் உன் மனைவி பிள்ளை பெற்றாள் என்றாள்;
தொத்துநோய் ஏழ்மை, கடன்காரர் தொல்லை,
தொடர்ந்தடிக்கும் சூறையிலே பிள்ளையோ பிள்ளை!''
அந்தப் பாரதிதாசன்
பெண்ணைப் பெருமை செய்தான்-
மண்ணைப் போல மிதிபடும் மானிடத்தைப் பார்த்து;
''உன்னை விற்காதே!'' என்றான்
''எதிரிகள் கோடி இட்டழைத்தாலும் தொடேன்'' என
எக்காளக் குரல் கொடுத்தான்.
''காரிருள் அகத்தில் நல்ல கதிரொளி''யாய் நின்றான்
''தொண்டு செய்து கிடப்பவன் ஆமை'' என்றான்.
தொகை தொகையாய்க் கவிச்சர விளக்கு ஏற்றி வைத்தான்
பாரதிக்கு வாரிசாய்ப் பாரதிதாசனானான்
தலைவர்க்கும் - கவிஞர்க்கும் பிற
தகைமை சால் மேதைக்கும் - தமக்குப்பின்
இருக்கின்ற பரம்பரையே தகுதியாகும். இன்று
பார்க்கின்ற இடமெல்லாம் பாரதி பரம்பரையைப்
பாரதிதாசன் வழித் தோன்றல்களைப் பார்க்கின்றோம்!
கோகின்றார் சொல் முத்து... பல் கவிஞர்! (பல கவிஞர்)
பல் இல்லாக் கவிஞர்களும்! (தேர்தல்)
வாக்கென்றால் பாரதிக்கும் பாரதிதாசர்க்கும் வேறு
நோக்கின்றி வழங்கிடுவார்.... இரு கவியும்
வருவரோ ஆள்வதற்கு நம் கவியரசை!
இனியுமேன் வரவேண்டும் ஆள்வதற்கு?
இப்போதே ஆள்கின்றார் நமதுள்ளம்!

அவர் வாழ்க!
அவர் புகழ் வாழ்க!

வணக்கம்!

# பாரதியார்

12.9.69 அன்று சென்னை வாணி மகாலில்
நடைபெற்ற பாரதி விழாக் கவியரங்கில்
கலைஞர் மு.கருணாநிதி அவர்களின்
தலைமைக் கவிதை உரை

★

வணக்கம்.

வரவேற்புக் கவிதை தந்த நாரண துரைக்கண்ணன்
நல்லதோர் எழுத்துச் சிற்பி.
கடுஞ்சொல்லைக் குறைத்துக்கொண்ட கருணாநிதி என்று
கவின் தமிழால் இங்கு சொன்னார்; அல்ல அல்ல-
கடிதோச்சி மெல்ல எறியக் கற்றுக்கொண்டேன்; அவ்வளவே!
அலைநடுவே வீற்றிருக்கும் ஆன்றோரே!
அறிவுசால் பெரியோரே! அன்புத் தாய்மாரே!
அருங்கவியாம் பாரதியின் உருவங்காட்டத் தமிழ்த்
திருமலியும் கவிதையுடன் வந்திருக்கும்
பெருமைமிகு புலவர்களே! வணங்குகின்றேன்
ஆறிரண்டு திங்கள் அதற்குமேல் பதினெட்டுத் திங்கள்
ஆயிற்று முப்பதாம் திங்கள் - நான் அமைச்சனாகப் பதவிஏற்று!
சினக்கேள்வி எழுப்புகின்ற சிங்கம் இங்கில்லை எனினும்
சிலையுருவாய்க் கடற்கரையில் நிற்கின்றார்.
அவர் புகழைப் பாடுதற்கு ஓளவை என்னை அழைத்திட்டாள்.

ஆகாகா! பதினெட்டு ஒளவை உண்டே
அதில் எந்த ஒளவை? என்பீர்; அறிந்திடுவீர்!
முத்தமிழ்க் கலா வித்துவ ரத்தினமாம்
பத்தொன்பதாம் ஒளவைதான் எனை அழைத்தாள்!
(அடுத்து கவியரங்கத் தலைவரான கலைஞர்
அவர்கள் பாரதியார் சிறப்பு பற்றிப் பாடித் தம்
முன்னுரையை முடித்து, கவியரங்கில் பாட
வந்திருக்கும் கவிஞர்களை முறைப்படி அழைத்து
அவையோருக்கு அறிமுகப்படுத்துகிறார்.)

முதலில் பாரதி கண்ட தமிழுணர்வைப்
பாட்டாலே விளக்குகின்றார் வா.மு.சேதுராமன்.
வா.மு.சேதுராமன் வந்திடுக! தமிழ் தந்திடுக:

(கவிஞர் வா.மு.சேதுராமன் 'பாரதி கண்ட தமிழுணர்வு' பற்றிப்
பாடி முடிக்கிறார்.)

தலைவர் கலைஞர்:

சோலைக் குயில் காதல் சொன்ன கதை அத்தனையும்
மாலை அழகின் மயக்கத்தால் உள்ளத்தே
தோன்றியதோர் கற்பனையின் சூழ்ச்சியென்றே
கண்டுகொண்டார் பாரதியார்; 'கற்பனையே ஆனாலும்
வேதாந்தமாக விரித்துப் பொருளுரைக்க
யாதானும் சற்றே இடமிருந்தால் கூறீரோ?'
என அழைத்தார் பாரதியார்.
அவர் அழைப்பை ஏற்று அன்பர் தூரனும் வந்துவிட்டார்.
ஆசைக்குயில் அருகே தூரனை நாம் விடுத்துச்
சற்றுத் தூரமாய் நின்றிடுவோம்;
தமிழ் ஒலிக்கும்போது மட்டும் நெருங்கிடுவோம்.

(கவிஞர் பெரியசாமித் தூரன் 'பாரதி கண்ட குயில்' பற்றிப்
பாடி முடிக்கிறார்)

தலைவர் கலைஞர்:

நான் கண்ட பராசக்தி நீர் கண்டீர்!
ஏன் கண்டோம் எனக்கேட்டுப் பழமை வாதி
தான்கண்ட சேதிமட்டும் மறைத்து விட்டார்
தேன்கொண்ட தமிழெடுத்துப் பக்தி
மான்கண்ட பராசக்தி பெயராலே
வான்கொண்ட மட்டும் வீரம் வழங்குகின்றார் பாரதியார்
- அதனை
விசுவபாரதியும் விளக்குகின்றார்:
(கவிஞர் விசுவபாரதி 'பாரதி கண்ட பராசக்தி'
பற்றிப் பாடி முடிக்கிறார்)

தலைவர் கலைஞர்:

தாயாகத் - தமிழாகத் - தாயகத்தில் மூத்த
சேயாகத் - தடைபடா அன்புருவாக அண்ணன் கண்டவன் நான்.
கண்ணன் கண்டவன் பாரதி!
கிருட்டிணனும் கண்ணனும் ஒன்றென்பார் சிலர்
இல்லையென்பார் சிலர்-
இருட்டினிலே ஆராய்ச்சி விளக்கேற்றிக்
குழம்பாமல் உரைத்திடுவார் கு.சா.கி.

(கவிஞர் கு.சா.கிருஷ்ணமூர்த்தி 'பாரதி கண்ட
கண்ணன்' பற்றிப் பாடி முடிக்கிறார்)

தலைவர் கலைஞர்:

பார்த்தன் மனைவி பாஞ்சை பிணை நேரில்
பார்த்ததில்லை பாரதியும்
பார்த்தவர் ஒருவர் உண்டிங்கே;
பார்ப்பீர் அவர்தான் பீஷ்மராம்!

கணைமழை தன்னில் படுத்தவரே
கவிமழை பொழிய வந்திடுவீர்!

(கவிஞர் பீஷ்மர் 'பாரதி கண்ட பாஞ்சாலி'
பற்றிப் பாடி முடிக்கிறார்)

**தலைவர் கலைஞர்:**

சேலாடும் விழிகள் மேற் செயற்கைப் புருவம்
சிவப்பாக இதழ்களிலே வண்ணப்பூச்சு
காலாடை அரையாடை அணிவதிலே கடும்போட்டி
கல்ரதங்கள் அஜந்தாக்கள் அத்தனையும் தலையில் ஏற்றிக்
கண்காட்சிப் பொருளாக நடக்கின்றாளே,

அவளல்ல புதுமைப் பெண்!
பின் யார் என்று கேட்கின்றீரோ?
அறிவிக்க அம்மையார் இருக்கின்றார்கள்!
புதுமைப் பெண் பார்க்க இடம்மாறி உட்காராமல்
இருந்த இடத்தில் இருந்திடுவீர்:

(கவிஞர் இரா இராசலக்குமி 'பாரதி கண்ட
புதுமைப் பெண்' பற்றிப் பாடி முடிக்கிறார்)

**தலைவர் கலைஞரின் முடிவுரை:**

புதுவை சுப்ரமணிய பாரதிக்கு
விழா எடுக்கும் வேளையிலே
போட்டியாக வருதல் கூடாதெனப்
புத்தனேரி சுப்ரமணியக் கவிராயர் வரவில்லை
அதனாலே முடிவுரைக்குப் போகின்றேன் பொறுத்தருள்க!
பெண்ணைப் பெருமை செய்தான்
மண்ணைப் போல் மிதிபடும் மானிடரைப் பார்த்து
உன்னை விற்காதே என்றான்,

விரோதிகள் கோடியிட்டு அழைத்தாலும் தொடேனென
விடுதலைக் குரல் கொடுத்தான்.
காரிருள் அடிமை நீக்க நல்ல கதிரொளியாய் நின்றான்.
தொண்டு செய்யாது கிடப்பவன் 'ஆமை' யென்றான்:
தொகை தொகையாய்க் கவிக்கு விளக்கு ஏற்றி வைத்தான்
அந்தப் பாரதிக்கு வாரிசாய்ப் பாரதிதாசன் வந்தான்.
தலைவர்க்கும், கவிஞர்க்கும், பிற தகைமைசால்
மேதைக்கும்.
தமக்குப் பின் இருக்கின்ற பரம்பரையே தகுதியாகும்
பார்க்கின்ற இடமெல்லாம்
பாரதி பரம்பரையைப்
பாரதிதாசன் வழித்தோன்றல்களைப் பார்க்கின்றோம்
பாரதிரச் சிரித்து மகிழ்கின்றோம்!

வணக்கம்

வாழ்க!



# பொங்கல் திருநாள்

12.1.1970 அன்று சென்னை வானொலியில்
பொங்கல் திருநாள் என்ற தலைப்பில்
நடைபெற்ற கவியரங்கில்
**கலைஞர் மு. கருணாநிதி** அவர்களின்
தலைமைக் கவிதையுரை

★

வாவி, குளம் வாய்க்கால்கள் நீரெல்லாம்
ஆவியாகி வறட்சிப் புயல் வந்துற்றுப் பயிரெல்லாம்
சாவியாகப் போன நிலை கண்டுவிட்டுத் தமிழ் அரசு
தாவியோடித் திடுதிடென வெப்பத்துயர் தணித்ததாலும்
ஓவிய முகில் அனைத்தும் கருக்கொண்டு புவி
மேவிட மழைக் குழந்தை ஈன்றதாலும்
உணவுக் கட்டுப்பாடென்று முன்பு
ஏவிய அரசாணை திரும்பப் பெற்று இன்பக்
காவியத் திருநாளாம் பொங்கலன்று - அன்றைக்குக்
கூவிய குயில்கள் எல்லாம் மீண்டும் கூவ -மக்கள்
தூவிய மலர்மலைமேல் மாத்தமிழாள் நடந்துவர - நம்
மாநிலத்து மாந்தரெல்லாம்
மா, பலா, வாழையெனும் முக்கனியின் சுவையினோடே
தித்திப்புப் பொங்கல் தின்றிடவே வேண்டுமென்று எம்
சக்திக்கு ஏற்றவாறு உழைக்கின்றோம்; சற்று,

புத்திக்கும் கூர்மை தீட்டக் 'கவியரங்கச்
சாணைக்கல் பக்கம்
வா;' என்றார் வானொலியார்

இருப்பதாலே வந்துற்றேன்
புத்தி இருப்பதாலே வந்துற்றேன் புதிய
கூர் ஏற்றிக் கொள்வதற்கு!
சீர் ஏத்திப் பாடுகின்ற செந்தமிழர்
வேர் ஒற்றிக் கிடக்கின்ற பலாக் கருத்தைச்
சுளை சுளையாய் எடுத்து வைக்கச் சுற்றுமுள்ளார்
தளை தொடையாம் யாப்பெல்லாம் கற்றிலன் நான்
வளை அணியாப் பெண் கரம் போல் வடித்தளிப்பேன்
சில பாடல்

பொறுத்தருள்வீர் புலவர் ஏறே
அழகு தமிழ்ப் பொங்கல் நாளில்
அன்புப் போர் முரசமெனும் தலைப்பினிலே
அறுவர் இதோ பாடவந்தீர் அய்யன்மீர்!
குகனொடும் ஐவரானோம் என்றதுபோல் இந்தத் தமிழ்
மகனொடும் எழுவரென எண்ணிக் கொள்க.
எழுவர் நாம் இவ்வரங்கில்
**'எழுவாய் தமிழா' என்றே**
உழுவர் நாள் கொடி ஏற்றிடுவோம்!
மழுவர் நிலம் காப்பதற்கு
மார் தட்டிச் சூள் உரைத்திடுவோம்!
பொங்குக பால் என்று முழங்குகின்றோம் இந்நாளில்; அது
பசும்பாலா? அல்ல; அல்ல!
பைந்தமிழ்த் தேர்ப்பாகன் தந்த பால்
அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால்
அதற்கும் அப்பால்
வேறென்ன பால் பொங்க வேண்டும்?
''கன்னல் கொண்டு வா'' என்றேன் சுவைப்பதற்கு—
அவளோ பிள்ளைக்

கனியமுதைத் தூக்கித் தருகின்றாள்; அதுதான் இன்பம்.
''வாங்கி வருக மஞ்சள்'' என்றாள்! ''எதற்காக? அதனை
வழித்திடலாம் உன் முகத்தில்!'' என்றேன்.
என் வீட்டு மகிழ்ச்சி கண்டு
எதிர் வீட்டார் இஞ்சி தின்னல் ஆகாதென்று அதனை
வேரோடு பிடுங்கிப் பொங்கல்
வேகின்ற பானையிலே கட்டுதலே இந்நாட் சிறப்பாம்!
முட்டுகின்ற மாட்டுக்கும் பொங்கல் உண்டு
மாடு பிடிக்கத் தோள்
தட்டுகின்ற வீரர்க்கும் பொங்கல் உண்டு.
காளைதனை வென்றவனே எனக்கேற்ற காளை எனப்
பாளை நகைப் பாவையவள் பகர்ந்ததெலாம் பழைய
நாளை நினைப்பூட்டும் இலக்கியமாம்.
ஒளி வரவால் இருள் மறையும்
உளி வரைந்த சிற்பங்கள் பளபளக்கும்
களி நடன மயில்களெலாம் கலாபம் காட்டும்
தெளிதேன் தருக என இழுத்திடுவான் குஞ்சி;
துளி தேன் தந்துவிட்டுப் பறந்திடுவாள் வஞ்சி!
பொங்கல் நாளில் புதுப்புது இன்பம்
எங்கணும் தோன்ற எழுந்தான் கதிரோன்!
எதையும் **அன்பால்** அணுகி வென்றிட
உதய சூரியன் உயர்ந்தான் இன்று!
பார்த்தீரோ பசுமை வெள்ளம்
பச்சைப் பாய் விரித்தது போல் காட்சி என்னே!
சிந்துபாடும் சிறுநதியின் சிரிப்பொலி கேள்!
சீறிவரும் வனவேங்கைக் காட்டாற்றுத் தண்ணீர்
மீறி வரவொண்ணுமோ அணைகள் தாண்டி!
கடன் பெற்று வேளாண்மை புரிகின்ற முயற்சிக்கெல்லாம்
உடன்பட்டு உறுதுணையாய் நிற்கின்ற அரசு காண்க!
உரம் மலிவாய் வழங்குதற்கும் ஈகைக்

கரம் வேண்டுமன்றோ! அதனைத்
தரமறிந்து அண்ணன் தந்துவிட்டே போயுள்ளார்
சிரம் ஆட்டி எமை ஏற்காமல் சிலர்
ஓட்டைகளைக் காட்டுகின்றார். நாத
சுரம் காட்டும் ஓட்டையெலாம் நல்லிசைக்கே என்றிடுவேன்
அசையும் விரலாக நீர் இருந்தால்
இசையும், தென்றலாய் மாறிவிடும் இற்றை நாளில்!
வான் முட்ட எழுந்து நிற்கும் ஆலையிலே
தான் மட்டும் வாழுதற்குச் சிலர் இருந்தால்
பேன் பிடித்த தலையாகும் நமது நாடு
நான் படித்த மருந்ததற்குச் சமதர்மந்தான்
அந்நிலைதான் வருதல் மட்டும்
இந்நிலையில் உழைப்போர் வாழ வகைகாணல் மிகவும் நன்று!
அதற்கு
வாய் திறந்து சூளுரைப்போம் இன்று.
பூட்டுப் போடவில்லை பொதுவுடைமைக் கொள்கைதனைப்
புறக்கணித்தும் பேசவில்லை.
ஏட்டுக்குள் இருக்கின்ற அக்குறிக்கோள்
நாட்டுக்குள் மெல்ல மெல்ல வந்தேதான் தீர வேண்டும்.
சமதர்மப்
பாட்டுக்குள் பொதிந்துள்ள கருத்தெல்லாம்
பரவுமுன்னே பாங்காகத் தொழில் அமைய நம் நாட்டில்
கூட்டான அமைப்புகள் பெருகிடவே
பொங்கல் நாளில் புதிய பாதை ஏற்றிடுவோம்!
இனிய பாதையிதை இடைக்கால பாதையென்போம்; பின்னர்
கனிய வைப்போம் கற்களையே
உழுவரது வியர்வையினால் சூல் கொண்ட
**கழனித்தாயின் வயிற்றில் மகளாய் வந்து**
அனைவரது சீராட்டும் பெற்றுக் கொண்ட கதிராம் மங்கை
மனவறையிற் பெண்போலத் தலைகுனிந்து
நிற்கின்றாள் பொங்கல் நாளில்.

தமிழர் என்போர் மகிழ்கின்றார்;
தைதை என்றே குதிக்கின்றார்!
தண்ணொளி சேர்ப்பது தையன்றோ?
தையல் என்றால் பெண்ணன்றோ?
தைப்பதும் ஒருவகைத் தொழிலன்றோ?
முள்ளாய்த் தைப்பார் சிலபேர்கள், நமக்குக்
குல்லாய் தைப்பார் சிலபேர்கள்!
தமிழர் என்போர் மகிழ்கின்றார்;
தைதை என்றே குதிக்கின்றார்! என்னைக்
கவி, தையென்றே அழைக்கின்றார்
தைத்தல் எனது தொழில் அல்ல
புதைத்தல் எனது தொழில் என்பேன்.
தீமையைப் புதைத்தல் தீதறு செயலாம் - இய
லாமையைப் புதைத்தல் இனிப்புறு தொழிலாம் - அறி
யாமையைப் புதைத்தல் அறிவார் தொழிலாம்
ஊமைகள் வாழ உயிரைக் கொடுத்த
உத்தமன் காலில் முகத்தைப் புதைத்தல் என்றன் தொழிலாம்.
பட்டா இரு லட்சம் பெற்றவர்கள் வாழ்த்துகிறார்
தட்டாமல் தண்ணீர் தருவதற்கும் திட்டமிட்டு
எட்டாத பழமென்று இருந்தோர்க்கும் வளவங்கி
முட்டாது கடன் தரவே தனி முயற்சி!
கிட்டாதோ அதிகாரி பார்வையென அலைந்த துயர்
வெட்டாமல் வெட்டியின்று மாதமோர் நாள்
கட்டாயம் சிற்றூர் சென்று மனுநீதி வழங்குகின்றோம்!
பொன்சாரம் இட்டழைக்கும் பூமான்கள் வீட்டுக்கே
மின்சாரம் போகுமென்ற நிலைமாற்றி
எழுபத்திரண்டுக்குள் எங்கணுமே மின் இணைப்பு
என் தமிழ்த் திருநாட்டில் ஏற்படவே உழைக்கின்றோம்!
இவையெல்லாம் புகழ்ந்துரைத்துப் பொங்கல் நாளில்
தொகை தொகையாய் மாலை வேண்டாம்; பரிசு வேண்டாம்:
அவைப் புலவீர்; அழகுறவே ஓர்பாட்டு நீர்பாடின்

பகைப் புலம் ஒழித்த பாண்டியன்போல் நிமிர்ந்து நிற்பேன்.
குகைப் புலியை முறத்தாலே எதிர்த்த நாட்டில்
திகைப்புற்று நிற்போமோ வன்முறையை வீழ்த்திக் காட்ட!
புகைக் கருத்துப் போக்கிவிட்டுப் புதுக்கருத்துப் போற்றிடுவோம்
பொங்கல் நாளில்! கிழங்களின்
சிகை கருத்தால் சாயப் பூச்சென்று சொல்வோம்; - பொய்யர்
தம்
மிகைக் கருத்தை ஆராயாமல் ஏற்றுக்கொள்ளல் தீதேயன்றோ
இலக்கியங்கள் பயின்ற நல்லோர் இன்தமிழ் செய்
கவிதை வல்லோர்
இருமூன்று தலைப்புகளில் கவிகள் பாடி
தரும் ஊன்று கோலாகத் தந்திடுவார் தமிழர் வாழ!
தன்னலப் பேராசைதான் உட்பகைக்கு ஆணிவேராம்;
வன்முறையும் வளர்ந்துவிடும் கிளைகளாக!
ஒற்றுமையின்மையினால்
உதயமாவது தான் ஏற்றத் தாழ்வாகும்!
இத்தனைக்கும் அறிவின் வறுமைதான் காரணமாம்; எனப்
புத்தரது எண்ணங்கள் தந்திடுவார் சத்தனைய நற்கவிஞர்!
வறுமைதனை விரட்டிடவே இயக்கம் காண
அருமைமிகு நேரமென்பார் சிலபெரியோர்
எருமையன்றோ வேகத்தில் வறுமைப் பேயும்?
எட்டடி கொடுத்தால் எடுத்தடியும் வைத்திடாதே!
விரட்டினால் திரும்பி வரும்
மிரட்டினால் மீண்டும் வரும் - வாய்மைக்
குறட்டினால் பல்பிடுங்கி வீழ்த்திவிட்டால்
புரட்டினாலும் எழுந்திடாத உடலாகும் உயிரற்று;
வறுமையிலே கற்பனைகள் செழிக்குமென்பார்;
முத்து முத்தாய்க் கவி பிறக்கும் என நவில்வார்;
சத்தி முத்தப் புலவரையும்
சாத்தக் கவிராயரையும்
நித்த நித்தம் அலைகின்ற பாணரையும்

கொத்துக் கொத்தாய் உதாரணங்கள் தந்திடுவார்
செழிப்பினிலே கவிபிறந்த கதையுந்தான் மெத்தவுண்டு.
மன்னன் அதிவீரராமன் என்ன;
தென்னவனாம் பாண்டிய வேந்தன் என்ன;
கன்னல் மொழிக் கவிப்புலவச் சிங்கமன்றோ?
வறுமையினால் கவிபெருகும் என்று சொல்வோர்
வளமையினை ஏழைக்கு
அனுமதியாப் பெருஞ்செல்வர்
இதனையெலாம்
புலமையினால் புலப்படுத்தத்
திறமைமிகு கி.வா.ஜ. வந்திடுக!

(கவிஞர் கி.வா.ஜகந்நாதன் 'வறுமை' பற்றிப் பாடி முடிக்கிறார்)

தலைவர் கலைஞர்:

வறுமை அகன்றது வாட்டம் தீர்ந்தது
அருமை அருமை அன்பரின் கவியெனக்
கருமை விழிகள் விரிந்திடப் புகழ்வோம்! அதற்குள்
கொடுமை யொன்று புகுந்திடக் கண்டோம் - நெஞ்சை
அடிமை கொண்டிடும் தன்னல மாயை
பேராசையுடனே வருவதை எதிர்த்துப்
போராசையுடனே கணைகள் தொடுக்கச்
சீரார் புலவர் அப்துல் கபூரும்
கூராய்த் தமிழைக் கொண்டே வருவார்.

(கவிஞர் அப்துல் கபூர் 'தன்னலப் பேராசை' பற்றிப் பாடி முடிக்கிறார்)

தலைவர் கலைஞர்:

சென்று சென்று மீண்டுவரும் தன்னலத்தைச்
செந்தமிழால் சாடியது
நன்று நன்று நன்றேயென்போம்! அடுத்து

உட்பகையை ஒருநாக பார்ப்போம்
கட்புலனில் எட்டாது காய் இலையில் மறைதல்போல்
நட்பிடையே தோன்றுமிது
நாளும் ஒரு வடிவெடுக்கும்;
தேளும் வெட்க விஷம் கலக்கும்!
வாளும் வாளும் உரசுவது வெளிப்பகையாம்
தோளும் தோளும் இணைந்திருக்கத்
துரோகச் செயல் புரிவதுதான் உட்பகையாம்
அப்பகையைத் தேடுதற்கும்
அதைக் கண்டவுடன் சாய்ப்பதற்கும்
தீரனுண்டு கவியரங்கில்
தூரன் என்பார் அவர் பேர்தான்
ஈரமுள்ள நெஞ்சத்தார்-துள்ளும்
வீரமுள்ள கவியுரைப்பார்.

(கவிஞர் பெரியசாமித்தூரன் 'உட்பகை' பற்றிப்
பாடி முடிக்கிறார்)

தலைவர் கலைஞர்:

ஓடிற்று உட்பகையும் - இடம்
தேடிற்று நமக்குள்ளே நுழைந்துகொள்ள;
வாடிற்று முடியாமல்;
ஆடிற்று அடங்குதற்கே!
கோடிட்டுக் காட்டுகிறேன்
பாலிட்ட நஞ்சு போலப்
பக்குவமாய் எட்டிப்பார்க்கும் பின்னர்
ஆலிட்ட விழுதுபோல அங்கிங்கே பரவிவிடும்; அதனாலே
தாழிட்டுத் தடுத்திடுவீர் உட்பகையை....
தனிப்பண்பு காத்திடுவீர்! அடுத்து;
ஒன்றுபட்டால் உண்டு வாழ்வென்ற கொள்கைதனைக்
கொன்று போட்டுக் கொக்கரிப்பார் செயல்மறுக்க

அன்று பார்த்த இளமையுடன் இருக்கின்ற தமிழ் எடுத்துத்
தின்று பார்த்தால் வெல்லமென இனிக்கின்ற
கவி தொடுக்க ஒருவர் உண்டு...
யார் அவர்?
உப்பின்றி அறுசுவை யுண்டோ? - கவி
சுப்பின்றி இந்த அரங்குண்டோ?
கொத்தமங்கலத்தார் - ஒற்றுமையின்மையைக்
கொத்திடவே வருகின்றார்.

(கவிஞர் கொத்தமங்கலம் சுப்பு 'ஒற்றுமையின்மை'
பற்றிப் பாடி முடிக்கிறார்)

**தலைவர் கலைஞர்:**

வேற்றுமையில் ஒற்றுமைதான் வேண்டுமென்று
வெகு காலம் விளக்குகின்றோம்
விளங்காதார் துடிக்கின்றார்
வெடிகுண்டாய் வெடிக்கின்றார்...
விண்முட்டும் கழுகோடு போட்டி போட
மண்விட்டு எழுந்திருக்கும் தென்னையுண்டு
கண்பட்ட இடமெல்லாம் கேரளத்தில் நேற்றுத்
தென்பட்ட காட்சிதனைச் சொல்கின்றேன்; அதுபோலே
ஏற்றமிகு நிலையோடு போட்டி போட்டுத்
தோற்றதில்லை தாழ்வென்னும் நிலைகொண்டார் சோவியத்தில்!
நாற்றமிகு உயர்வு தாழ்வு நலிந்து போக
ஆற்றல்மிகு கவிதருவார் தங்கராசன்:

(கவிஞர் தங்கராசன் 'ஏற்றத்தாழ்வு' பற்றிப் பாடி முடிக்கிறார்.)

**தலைவர் கலைஞர்:**

ஏற்றத் தாழ்வெல்லாம் எதற்கென்று குமுறிக் கேட்டு, அந்த
நாற்றங்கால் தனையே தூர்த்துப் போட
வன்முறைதான் ஆகாதென்போம் - அண்ணல் காந்தி சொன்ன


நன்முறைதான் வேண்டுமென்போம்!
மென்முறையால் வீடு காக்கும் சவுந்தராதான்
தன் முறை வந்ததென்று அறிந்திடுக; கவிபாட;

(கவிஞர் சவுந்தரா கைலாசம் 'வன்முறை' பற்றிப்
பாடி முடிக்கிறார்)

தலைவர் கலைஞரின் முடிவுரை:

முடித்துவிட்டீர் கவியரங்கம்; அதற்குள்ளே - தேன்
குடித்துவிட்ட வண்டுபோல் சுழல்கின்றேன்!
நீவிர் எழுதியவை மீண்டும்
படித்துவிட்டுப் பரிசளிக்க நான் என்ன கம்பனுக்குப் பொன்
அவிழ்த்துவிட்ட சடையப்ப வள்ளல் தானோ? இல்லை,
இல்லை...
இடித்துவைத்த புளிபோல் இருப்பார் சில ரசிகர்;
கடித்துவிட்ட செங்கரும்பை விடவா முடியும்?
கவியரங்கில் தேனமுதை
வடித்து வைத்த புலவர்களே!
எளியோன் வாழ்த்து ஏற்றிடுக
எழிற் பொங்கல் திருநாளில்

வணக்கம்.
வாழ்க!



# வாழ்வெனும் பாதையில்

14.4.70 அன்று சென்னை வானொலியில்
''வாழ்வெனும் பாதையில்'' என்ற தலைப்பில்
நடைபெற்ற கவியரங்கில்
கலைஞர் மு.கருணாநிதி அவர்களின்
தலைமைக் கவிதையுரை

★

வணக்கம்
வந்திருக்கும் அனைவர்க்கும் - கவி
வடித்தளிக்கும் புலவர்க்கும் வணக்கம்
நித்திரையில் ஆழ்ந்திருந்த நீள்வையம்
நீலவிழி ஒளிகாட்டி நடைபோட்டு
முத்திரைகள் பலவற்றைப் பதிப்பதற்கு
முழுமூச்சாய் ஆண்டுபல உருண்டுருண்டு
சித்திரைத் திங்களிலே சிரிக்கின்ற
செழுமை கண்டோம் - பெருமை கொண்டோம்
சௌமியதான் சென்ற ஆண்டு நம்
சௌமியனைத் தமிழர்க்குத் தந்த ஆண்டு
சௌமியாவை அண்ணனுமே புனைப்பெயராய்ப் - பூண்டு
சுவை சொட்டக் கதை குவித்துப் போனார் - மாண்டு!
'சௌமியா' மறைந்து, 'சாதாரண' வந்தது போல்

-அந்தச்

சௌமியன் மறைந்து இந்தச் சாதாரணன் வந்துள்ளேன்
அரங்கின்றி வட்டாடுகின்றார் அரசியலில் பலபேர்.
குரங்கின்றிச் சேட்டைகள் ஏராளம் காண்கின்றோம் சமூகத்தில்
சிரங்கொன்றைச் சொறிந்து விட்டால் பலவாய் ஆகும்.
தரங்குன்று மனிதரையும் கடிந்து கொண்டால் அவ்வாறேதான்!
இந்நிலையில் இச்சாதாரணன்
புவியாள வந்தாலே பொறுப்பதில்லையெனினும் போது
கவியாளவும் வந்து விட்டால் என் கதிதான் என்னே?
அவிசொரிந்து ஆயிரம் வேள்விகள் செய்வோன்
அந்நாள் ஆள்வோன்.
கவிதெரிந்து ஆயிரம் பாடல்கள் புனைவோன்
இந்நாள் ஆள்வோன்.

பொறுக்குமா மனம்?
அடுக்குமா இது?
தடுக்கலாம் இதை!
அடக்கலாம் உடன்!
தகர்க்கலாம்! கை
முறிக்கலாம்! கால்
முடக்கலாம்! எனப்பலர்
முனகலாம்! ஆனால்
''இருள் விலகிப் பொழுது விடியுமா?
ஏழைக்கின்னும் உதவிட முடியுமா?'' என்று இந்தச்
சாதாரணன் சிந்திக்கின்றான்.
பூதாகாரப் பேயிருள் விலகிவிட்டால்
தீதான தனியுடைமைப் பற்றற்றுச்
சீரான பொதுவுடைமைத் தத்துவங்கள்
ஏராளும் மனிதர் வாழ்வில்
தாராளமாயெங்கும் தங்கிடுமே - எனச்
சாதாரணன் சிந்திக்கின்றான்
வாழ்வெனும் பாதையை வளப்படுத்த

வன்முறையால் ஆகாதெனல் எம் கொள்கை
தாழ்வு உயர்வெனும் பேதம் நீங்கத்
தண்ணொளி சேர் அமைதி தேவை.
புரட்சியெலாம் மனப்புரட்சி!
கிளர்ச்சியெலாம் உளக்கிளர்ச்சி!
எழுச்சியெலாம் எழுத்தில் பேச்சில்!
எண்ணமெலாம் சமதர்மம் செயல்படுத்த!
இவையிருந்தால் என்றைக்கோ வந்திருக்கும்
ஏற்றமிகு பொற்காலம் - புதுமைக்காலம்.

வாழ்க்கையென்பது என்னவென
உணர்ந்த மனிதன் இருக்கின்றானா?
பறவையும் விலங்கும் ஊர்வன மற்றும்
''உயிர் வாழ்கின்றன'' என்போம்.
பகுத்தறிவு மனிதன் வாழுவில்லை; அவன்
வாழ்க்கையை நடத்துகின்றான் என்போம்.
நடத்துகின்றோம் நாம்தான் வாழ்க்கையை என்ற
நம்பிக்கையில்லான் மனிதனே அல்ல; ஏதோ
கடத்துகின்றோம் நாளை என்று
நகர்த்துகின்றனர் பல பேர் வாழ்வை
இருவர் தெருவில் சந்திக்கும்போது
''என்னப்பா சுகமா?'' எனக் கேட்பின்
''ஆமாம் சுகந்தான்'' என்ற பதில் வந்திடுமோ பகர்ந்திடுவீர்!
''ஏதோ இருக்கின்றேன்'' என்றிழுத்து
ஏக அலுப்பில் பதில் அளித்து நகர்கின்றார் நண்பரை விடுத்து!
ஏனிந்தச் சோர்வு வாழ்க்கையிலே? இதழ்த்
தேனீந்த மனைவி பொய் என்பார் அவட்குத்
தானீந்த குழந்தை பொய் என்பார்
'ஆ' நீந்த வேண்டுமே சம்சாரக் கடல் என்பார்
எப்போது இதெல்லாம் எனக் கேட்டால்

தப்பாது வயது சொல்வேன்; எழுபதுக்கு மேல்தான்!
பாவம்

இருபதுக்கும் முப்பதுக்குமிடையில் கூட
இன்பமெனில் பேரின்பந்தான் என நவிலும்
இளந்துறவி உண்டே என்பீர்
இதில் ஒன்றிரண்டு தவிர எல்லாமே எனக்கு ஐயம்!
இவரெல்லாம் பஞ்ச புலன் அடக்கவில்லை
இவர்க்குப் புலன்தான் ஒன்றிரண்டு பஞ்சமென்பேன்
இன்னும் சிலரோ;
அனைத்தும் பொய் என்று பகலில் கூறி
அனைத்தும் உண்மையென இரவில் சொல்வார்
வாழப்பிறந்தவன் தான்மட்டுமென்று,
தாழப்பறந்து மீன்கொத்தும் பறவை போல்-
வலியோர் சிலர் எளியோர் தமை
வதையே செய்தல் வாடிக்கையாம்;
திருந்திச் செயல்படுதல் அவர்க்கு நன்று! அல்லால்
திருத்துகின்ற சட்டங்கள் திருத்திவிடும்;
தீயர் கொட்டம் நிறுத்திவிடும்.
குட்டக் குட்டக் குனிகின்ற குப்பனுக்கோ
குலதெய்வம் துணையென்ற நினைப்பினிலே
குனிந்து குனிந்து கூன் மேவும்;
கூனன் நிமிர்வதற்கே மருந்துகள்
கூடிய விரைவில் வரும். அவன்,
குலதெய்வம் விளக்கேற்றும் புதுவீட்டில்!
இனிக்கின்ற சர்க்கரையைக் குழந்தைக் கூட்டம்
அள்ளி அள்ளி வாயில்
நிறைக்கின்ற காட்சிதனைக் கண்டிருப்போம்.
சுவைக்கின்ற இன்பத்தை அளவறிந்து
நுகராமல்... மாடு
மிதிக்கின்ற சேறுபோல் ஆக்குகின்றார்
சிலபேர் தம் வாழ்வை!

வேண்டிய மட்டுமே உணவருந்தி மகிழும் வேங்கை
-பசி
தாண்டிய பின்னும் மான்களை விழுங்கி மயங்கும் பாம்பு!
காடகத்தில் இரு காட்சி கண்ட பின்னும் - வாழ்வு
நாடகத்தில் நடிக்கின்றோர் கற்கவில்லை - என்ன செய்ய?
ஆறிலும் சாவு நூறிலும் சாவு
ஆனது ஆகட்டுமென்று
அறப்போர் புரிவோன் அரிமா வீரன்;
ஆறிலும் சாவு நூறிலும் சாவு
ஆனது ஆகட்டுமென்று
அயராதின்பம் அனைத்தும் துய்ப்போன்.
வீரனே அல்ல; விலங்கினும் கீழோன்!
தன் வீடு-தன் மனைவி-தன் பிள்ளை-தன் சுற்றம்
என்றிருப்போன் நடத்துவதும் வாழ்வல்ல
எம்நாடு-எம்உரிமை-எம்மொழியாம்-அனைத்தும் காக்க
என்னாலே இயன்றதெலாம் செய்திடுவேன்
என்போன்தான் பொதுமனிதன்!

ஆதலால்

மதுவுண்ட வண்டுபோல் தேன் குடத்தில் மிதந்திடாதீர்
எதுவேண்டும் எனக்கென்று துறவி மொழி' புகன்றிடாதீர்
எல்லாமே எனக்கென்று ஏழைகளைப் பிழிந்திடாதீர்!
வாழ்வென்னும் பாதையிலே வழிகாட்டும் பலகைகளாம்
கலையும் கல்வியும் கவிஞர்கள் காட்டுவர்
பதவியும் பக்தியும் பாவலர் விளக்குவர்
புகழும் செல்வமும் புலவர்கள் பொழிவர்
முதலில் கல்வி;

கற்றது கைம்மண் அளவென்பர்
கற்றவர்க்குக் கையில் மண்
கல்லாதார்க்கோ தலையில் என்பேன்!
கைமண்ணால் பானை வனைவர்

தலைமண்ணோ சூளைக்கும் ஆகாதே!
'இளமையிற் கல்' என்றால்
இளமையிலே கல் எடுத்து எறிதல் என்று
ஏன்தான் சிலபேர் பொருள் கொண்டார்?
கல்வியிற் சிறந்தவர் கம்பர் என்பர்
கல்வியிற் சிறந்தவர் வம்பராதல் தீதன்றோ?
முகத்திரண்டு புண்ணுடையார் கல்லாதோர் எனில்-கற்றவரோ
முப்பத்திரண்டு புண்ணுடையராய் விளங்கல் ஏனோ;
சிந்தித்தீரா!
கல்லூரி கண்டவன் நானல்ல எனினும் என் கையில்
கல் ஊறியதில்லை எப்போதும்!
கவியூறும் நெஞ்சில்
கலையூறும் கொஞ்சம்
புவியேறப் புகழேறும்
தமிழ்ஓரை ஆள்வதற்குத் தமிழில்
கற்றது போதுமென்று
உற்றவர் சொன்னதாலே
ஒப்பினேன் உளமின்றி - இன்று
தப்பினேன் உம் தயவால்!
வாழ்வெனும் பாதையிலே
வறட்டுக் கதைபேச நேரமில்லை:
வளமான 'கல்வி' பற்றி
வந்திருக்கும் புவியரசு பாடக் கேட்போம்.

(கவிஞர் புவியரசு 'கல்வி' பற்றிப் பாடி முடிக்கிறார்)

தலைவர் கலைஞர்:

அடுத்து பதவி;
அடவியிலே ஆயுள் வரை இருப்பதுவும் பெரிதல்ல
குளவி நுனிக் கொடுக்கினிலே இதழ் பொருத்தி
வலிபொறுப்பதுவும் பெரிதல்ல - இந்தப்

பதவியிலே இருப்பதுதான் பெருந்தொல்லை கச்சியேகம்பனே!
கோபுரத்தின் உச்சியிலே இருக்கின்றேன் என எண்ணிக்
குடல் கருகும் போர்வழிகள்
கோபுரத்து மாடத்தில் கூடு கட்டி வாழ்கின்ற புறாக்கூட்டம்
கொண்டிருக்கும் மகிழ்வுகூட எனக்கில்லை என அறிந்து
கூறிடுக அனுதாபம்! கொண்டிடுக நட்புணர்வு!
பதவியெனும் கொடுங்கத்தி சிலபேரின் கழுத்தறுக்கும்; பிறர்க்கு
உதவி புரிவதற்கே பதவியெனப் பொறுப்பேற்றால்
உயிர் பறிக்கும் கத்தியாலே பல உயிர்கள்
காத்திடவும் கூடுமன்றோ?
பழமறுக்கும் கத்திதான் பதவியென்போம்
பழிவாங்கும் வாளாக இருத்தல் கேடு!
சிரஞ்சீவியாய்ப் பதவியில் இருப்போமென்று
செருக்குமிகக் கொண்டலைந்த லூயி மன்னன்
சிரம் சீவிப் போட்டுவிட்டுப் புத்தாட்சி கண்ட கதை
மறக்க மாட்டோம்.

அறங்கூறும் வள்ளுவர்க்கு வாய்த்த நல் தொண்டர்களால்
புறங்கூறல் புறக்கணித்துப் புவியாண்டால் - நம்
திறங் கூறப் புலவர் கூட்டம் திரண்டு வரும்
தேசம் வாழ்த்தும்
உடும்பு போல் பதவியிலே ஒட்டிக் கொள்வோன்
உடும்பு வேண்டாம் கை விட்டால் போதுமென்பான்
கரும்பு போல் இனிக்குதென்று கடிக்கத் தொடங்கிக்
கரிக்குதப்பா உப்பாகளனக் கழன்றோர் உண்டு!

பதவி பற்றிப் பாடுதற்குப் பாவலராம் ரகுமான் இருக்கையிலே
பலவரிகள் நானேதான் படிவிட்டேன் - இது
பதவியிலே உள்ள மோகமல்ல;
பாட்டினிலே உள்ள மோகமென்பேன்
நாட்டினிலே நற்கவிகள் பெய்துவரும்

நம் நண்பர் ரகுமானின் நாவெல்லாம்
பதவித்தேன் சொட்டுவதைப் பார்த்திடுவோம்
பதவிதனைப் பதம் பிரித்தால்
''ப'' கரம் நீங்கி - தவி! தவி!! என்று சொல்லும்;
தவிக்கின்றோம் அதனாலே பதவி என்றால்!
பாடட்டும் அவர் பாட்டை;
பிறகு பார்ப்போம்:

(கவிஞர் அப்துர் ரகுமான் 'பதவி' பற்றிப் பாடி முடிக்கிறார்)

தலைவர் கலைஞர்:

அடுத்து செல்வம்;

''செல்வோம் செல்வோம்'' என்று உருண்டு
செல்லுவதால் 'செல்வம்' என்பார், பண்டிதர்கள்
சீமான்கள் இரும்புப் பேழையிலே
'செல்' அரித்துப் போகுமட்டும் இருப்பதாலே
செல்வம் எனச் செப்புதலும் பொருத்தம்தானே!
இலக்குமிதான் செல்வத்தின் தெய்வம் என்பார்
இலக்குமிகள் ஒருகோடி வறுமையிலே உழல்கின்றார்
செல்வத்துட் செல்வம் செவிச்செல்வம் என்றவர்தான்
பொருளிலார்க்கு இவ்வுலகமில்லையெனப் புரிய வைத்தார்
செவிச்செல்வம் போதுமென்று நிறைவு கொண்டால்
செவியார நாலு 'வாழ்க!'' போட்டுச்
சென்று வருக என்றிடுவார் வழிச்செலவு வழங்காமல்
வானொலியார்!
செல்வமுடையார் சீதக்காதி போல் இருத்தல் வேண்டும்
செழுந்தமிழன் குமணன் போல், பாரிபோல்
செகமதிலே சிரிக்க வேண்டும்
செல்வமுடையார்க்கு அவர் இலக்கணம்!
செல்வ 'முடையார்'க்கு

"ஆவிற்கு நீரென்று இரப்பினும் நாவிற்கு
இரவின் இளிவந்தது இல்"

என்ற குறள்தான் இலக்கணம்!

செந்நாப் புலவர்க்கெல்லாம் செல்வ மழை கொட்டுதற்கு
சிறப்புறு தமிழண்ணல் இருக்கும்போது
செல்வமைனைத்தும் நானே தட்டிக்கொள்ளல் முறையே அல்ல!
செல்வம் தருக என அழைக்கின்றேன்; தந்திடுக தமிழண்ணால்:

(கவிஞர் தமிழண்ணல் 'செல்வம்' பற்றிப் பாடி முடிக்கிறார்)

**தலைவர் கலைஞர்:**

அடுத்து கலை;
கலை.... கலை.....
கவியரங்கம் முடிந்த பின்னர் செய்யும் வேலை
கலை - அரங்கை! என்பார் நன்றி கூறி!
கலைத் திலகம் என்றாலோ பட்டமாகும்!
கலை-திலகம்! என்றாலோ மங்கை பட்ட மரமாவாள்!
கலை பிணைக்கும் அரசியலை இக்காலத்து!
கலை பிணைக்கு - அரசியல் ஏது எக்காலத்தும்!
கலை, பிணைக்குத் தன் நிழலை அளித்த செயல்
கலித்தொகையில் காதல் காட்சி
தன் நிழலைத் தானே கண்டஞ்சும் காட்சி
கலையுலகில் நாள்தோறும் காணும் மாட்சி
கலை குறைந்தால் மதி குறையும்
காண்கின்றோம் நாள்தோறும் வானவெளியில்!
கலை நிறைந்தோர் உள்ளத்தில் கருணை உண்டு
கவலைகளை உணர்கின்றற பண்பும் உண்டு
கண்ணீர் விடுகின்ற ஏழைதனைக் காணும்போது
கலைஞன் தான் படைத்த பாத்திரத்தைக் காணுகின்றான்
கற்பனை ஓட்டத்தில் அவன் நிலையை அறிகின்றான்

கவலைதனைத் தீர்ப்பதற்குக் கடமைதனைச் செய்கின்றான்
கலை கலைக்காக எனக் கதைத்தோர் ஓய்ந்து விட்டார்
கவின் ஒளி வீட்டுக்காக; விளக்குக்காக அல்ல என
விளக்கம் பெற்றார்!
கலைகளிலே எத்தனையோ வகையுண்டு - தொகையுண்டு -
கவின்கலை
நுண்கலை
ஆடற்கலை
பாடற்கலை
ஆயகலை அறுபத்து நான்கு கலை
வட கலை, தென் கலை தவிர!
இத்தனை கலைகளையும் முத்தனைய தமிழ் எடுத்து
இவண் வழங்க வந்துள்ளார் என் நண்பர் வாலி என்பார்
வாலுடையவன் வாலி என்று சொல்வது தவறென்று
காட்டுதற்கே
வாலில்லா வாலியவர் வந்துள்ளார்
வாலுடையோன் வாலி என்றால்
காலுடையோரெல்லாம் காலிகளோ! இல்லை இல்லை!
வண்ண மணித் தமிழால்
எண்ணச் சரம் தொடுக்க
வந்திடுக வாலியாரே:

(கவிஞர் வாலி 'கலை' பற்றிப் பாடி முடிக்கிறார்)

தலைவர் கலைஞர்:

அடுத்து புகழ்:

கடற்கரையில் தலைநீட்டும் நண்டுகளைக் கை நீட்டிப்
பிடிக்க ஓட
உடனவைகள் போன இடம் தெரியாமல் பதுங்கி விடும்;
புகழும் அதுதான்!

தேடி அணைத்தால் ஓடி விலகும்
கோடி கொடுத்தால் வாடி வதங்கும்
மாடிகள் கண்டு மயங்காது
மூடி மறைத்தால் தயங்காது
நாணயமுள்ளவனை நத்திக்கிடக்கும்
ஆனவமுள்ளவனை எட்டி உதைக்கும்
தியாகியின் கால்களில் மலர்கள் கொட்டும்
தீரனின் சேவடி தொழுது வணங்கும்
அரியதாம் புகழின் பெருமைகள் பற்றி
மரியதாசெனும் மாண்புறு கவிஞர்
இனிய தாம் மொழியில்
இயற்றுவார் கவிதை:

(கவிஞர் மரியதாசு 'புகழ்' பற்றிப் பாடி முடிக்கிறார்)

தலைவர் கலைஞர்:

அடுத்து பக்தி;
கைத்தல நிறைகனி அப்பமொ டவல்பொரி
வைத்துப் படைத்தல் பக்தி எனிலோ
சற்றும் ஒப்பார் ஆண்டவன் என்போர்
திருத்தலம் கோயில் திருக்குளமெல்லாம்
தீர்த்த யாத்திரை செய்வதும் பக்தி
திருத்தலம் கோயில் திருக்குளமெல்லாம்
திருமுடன் மனத்தில் நிறுத்தலும் பக்தி
காலொற்றிக் கடவுள் மீது கண் எடுத்துக்
கண்ணப்பன் வைத்ததுவும் ஒரு பக்தி
கல் எறிந்து சாக்கியரும் கடவுளையே
கண் மூடிப் பூசித்ததும் மற்றொரு பக்தி
எம்பெருமா! சிவனே! என்று இறையைப் போற்றி
ஏழைகளை ஏறெடுத்தும் பார்க்காவிட்டால் எங்கே பக்தி?

ஏகலைவன் கட்டைவிரல் காணிக்கை தந்ததிலே குருவின் பக்தி
ஏகுருவே! உன் கையைக் காணிக்கை தா! என்பதுதான் புதிய
பக்தி.
பாவையவள் கணவனையே தெய்வமெனல் பழைய பக்தி;
பாவம் அவன்; பாவையிடம் மண்டியிடல் பதியின் பக்தி;
பக்தியிலே பல உண்டு அதையெல்லாம்
சக்தி மிகு வார்த்தைகளால்
சர வரிசை விடுதற்கு
முடியரசு வருகின்றார்
விரைவில் முடி! அரசு!
எனச் சொல்லாமல் அழைக்கின்றேன் - வந்திடுக!

(கவிஞர் முடியரசு 'பக்தி' பற்றிப் பாடி முடிக்கிறார்)

தலைவர் கலைஞரின் முடிவுரை:

வாழ்வெனும் பாதைக்கு வந்தவரே
வழிகள் பல கண்டவரே
கல்வி பெறுக; அதனைக் கசடறப் பெறுக!
பதவி பெறுக; அதனைப் பண்புடன் பெறுக!
செல்வம் பெறுக; அதனைச் சீலமுடன் பெறுக!
கலை மணக்கட்டும் நும் வாழ்வில்
புகழ் குவியட்டும் நீர் தேடிப் போகாமல்
பக்தி வெள்ளம் நாடு, மொழி, மக்கள்மீது பாய்ந்தாலே
இறைவன் அருள் கிட்டி விடும்.
ஏழையின் சிரிப்பில்தான் அவன் இருக்கின்றான்
இதை மறவாதீர்!

வணக்கம்
வாழ்க!

# கணக்கு

2.8.1970 அன்று சேலம் தமிழ்ச் சங்கத்தின்
ஆதரவில் 'கணக்கு' என்ற தலைப்பில்
நடைபெற்ற கவியரங்கில்
**கலைஞர் மு.கருணாநிதி** அவர்களின்
தலைமைக் கவிதையுரை

★

ஏலம் போல் மணக்கின்ற இன்தமிழைச் சுவைப்பதற்குச்
சேலம் நகர்தனிலே மொய்த்திருக்கும் வண்டுகளே!
ஆலம் விழுதுபோல் ஆசுகவி பாரதிக்கும் பாரதிதாசனுக்கும்
சீலமுடன் அமைந்துவிட்ட செங்கரும்புக் கவிஞர்களே!
**கோலம் செய் துங்கத் திருமுகத்துத் தூமணியாம் நண்பர் கணபதியார்**
ஞாலம் பெய் தமிழ் மனைக்குச் சங்கம் கண்டு
ஓலமிடு கடலலைபோல் ஓயாமல் தமிழகத்தில்
காலமெலாம் பணியாற்றச் சூளுரைத்துச் சுற்றுகின்ற
பம்பரமாம் என்றனையும் பிடித்திழுத்து- என் கவியாற்றல்
அம்பலமாய் ஆக்கிவிடத் துணிந்து விட்டார்.....
கம்பனும் கூத்தனும் இருந்த காலத்தில் கண்டவர் எல்லாம்
கவிகள் எனத் திரிவதற்கு இடமேயில்லை - இந்தக்
கருணாநிதி முதலமைச்சாய் இருக்கின்ற காரணத்தால்
ஒரு நாளும் என் கவிதை இடித்துரைக்க யாருமே
துணியவில்லை அதுவரையில் லாபம்தான்

அடியேனும் அதனாலே துணிந்து விட்டேன்
கணக்காக ஒன்பதரை மணிக்கெல்லாம் வந்திடுக
தாமதமாய் வந்துவிட்டுப் பின்
தளுக்காகப் பேசிடுதல் தவிர்த்திடுக
எனச் சொல்லாமற் சொல்லி எனை அழைத்திட்டார்
கணக்குப்பற்றிப் பாட்டரங்கு என்றதனால் எதிலும்
கணக்காக இருக்கின்ற நானும்
எனக்காக மட்டுமின்றி என் கவிக் குடும்பம்
தனக்காகவும் வாங்கிடுவேன் வழிச் செலவு
கணக்காக! கவலற்க; கவிஞர்களே!
கணக்குதான் முன் காலம்
கல்வியிலேயே முதலிடம் பெற்றதனால்
கணக்காயர் என்றே கழறினார் ஆசிரியரை.
கணக்குகள் பலவிதம்
கணக்குப் பார்ப்பவரும் பலவிதம்
பாட்டாளியின் வியர்வையிலே
முதலாளி பார்ப்பதுதான் பணக்கணக்கு
கூட்டாளி தன் அன்புக்குரு
கூலியொன்று கேட்பதுதான் பதவிக் கணக்கு
பாவையவள் பாக்கி விழும் கடனுக்கு
அடுக்களையில் கரிக் கோட்டால் கிழிப்பதுதான்
பால் கணக்கு; தயிர் கணக்கு
பாவம் - பிள்ளை; பள்ளியிலே தப்பிக்க வேண்டுமென்று
பெற்றோர் போட்டுத் தருவதுதான் வீட்டுக் கணக்கு
பாவபுண்ணியம் பாராத அரசியல் மேதையெலாம்
பாமர மக்களிடம் போடுவதோ ஓட்டுக் கணக்கு!
மந்தையிலே மாட்டுக் கணக்கு - ஆட்டுக் கணக்கு-
மொந்தையிலே மட்டும் போடாதே கணக்கு!
'ஆடிக்குத் தை ஒரு வருடம்; ஆக மாசம் பதின்மூன்றுக்கு
நூற்றுக்கு வட்டி நூற்று மூணு

ஆகமொத்தம் ஐநூற்று மூணு!
அட்டியின்றிக் கொடுத்திடுக நம்ப கடனை!
செட்டிமார் சீமையிலே வட்டிக் கணக்கு!
பைந்தமிழ்ச் செல்வமாகும்-
பதினென் கீழ்க் கணக்கு!
கணக்குப் பிள்ளை செய்வதும் கணக்கு - ஒரு பெண்ணை
மணக்கப், பிள்ளை செய்வதும் கணக்கு!
இந்தக் கணக்கில்

இருபதும் பதினெட்டும் கூட்டிச் சொல்லல் மணக்கணக்கு
இருபது பதினெட்டைக் கூட்டிச் செல்லல் காதல் கணக்கு
இரண்டுக்கு மேல் இப்போது வேண்டாம் குடும்பக் கணக்கு
இதில் குசேலனுடன் போட்டியிடல் கொடுமைக் கணக்கு!

தான் போட்ட கணக்குத் தவறியதால்
தற்கொலையை முத்தமிட்டான் இட்லர் என்போன்!
மான் போட்ட கணக்குகளை வேங்கை அழித்துவிடும்
ஏன் போட்டாய் தப்புக் கணக்கென்று
வேங்கையினை வேடன் வீழ்த்திடுவான்
இதுதான் உலகு!
சான் போட்டால் எட்டிருக்கும் இவ்வுடலில் கணக்கின்றி
நான் போட்டுக் கட்டியதால் நகருகின்றோம்
தேன்போட்டுப் பேசுகின்ற நாக்கொன்று கணக்காக
இருந்தாலும்
திறமையினால் இரண்டாக ஆக்கிக் கொண்டு திரிகின்றோம்
இரு கரத்தைக் கணக்காக நமக்கெல்லாம் வழங்கிவிட்டு
இறைவன் மட்டும் பலகரத்தை பாரமாய்ச் சுமப்பதேனோ?
நல்லவேளை
கணக்கின்றிக் கரங்கள்தமை மனிதர்க்குப் படைத்திருந்தால்
கள்ளநோட்டு அடிக்கும் ஓர் கை
கலப்படம் செய்யும் ஓர் கை
கன்னியரை இழுக்கும் ஓர் கை

காட்டிக் கொடுக்கும் ஓர் கை
களவுதனை நடத்தும் ஓர் கை
கத்திதனை ஏந்தும் ஓர் கை
கழுத்தறுக்கத் துணியும் ஓர் கை
இன்றைக்கு தனித்தனியாய்
இவ்வேலை நிகழ்வதாலே
இருக்கின்ற காவல் துறையாரும்
இவரையெல்லாம் அடக்குகின்றார்:
இல்லையேல்-
வகை வகையாய் முளைத்திருக்கும் கைகள் எல்லாம்
கொலை கெலையாய்ச் செய்து விட்டுக்
கூத்தடிக்கும்! நாடு கொந்தளிக்கும்!
கணக்காக வாழவேண்டும் மனிதர் என்றே
ஆற்றிலே போடினும் அளந்து போடென்றார்.
கணக்கின்றி ஏதுமில்லை!
கால் வைத்தார் நிலவில் என்று கம்பீரமாய்க் குரலெழுப்பக்
கணக்காகச் செலவு எத்தனைக் கோடி; விஞ்ஞானக்
கணக்கினிலே சிறு தவறு விளைந்திட்டாலும்
கால்வைத்தா திரும்பிடுவர்? விண்வெளியில்
கால் வேறு தலைவேறாய்ச் சிதறியன்றோ போயிருப்பார்!
கணக்கின்றி என் கணவர் முத்தமீந்தார் என ஒருத்தி
மொழிந்திட்டாலும்
கட்டிலோரம் ஒலிப்பதிவு செய்திருந்தால்
அதற்கும் ஓர் கணக்கு உண்டன்றோ?
அதனாலே; கணக்கின்றி ஏதுமில்லை!
நானும்.... காலக் கணக்கின்றிக்
கவிதை வரி கூறிக்கொண்டே இருந்துவிட்டால்
கணக்குப் பற்றிப் பாடவந்த கவிஞருக்குக் கோபம்

கணக்கின்றி வந்தாலும் வந்துவிடும்!
அதனாலே அழைக்கின்றேன் அவர்களையே;
முதலில் பெருக்கல்;
காற்றின் பெருக்கல் புயலாகும்
நாற்றின் பெருக்கல் பயிராகும் இனிய
சாற்றின் பெருக்கல் சுவையாகும்
ஆற்றின் பெருக்கல் புனலாகும் முருகு
பாட்டின் பெருக்கல் என்னாகும்?
பொன்னாகும் பூவாகும்
புதிய கவியாகும்!
சேலமாநகர் தனக்கு எத்தனையோ சிறப்புக்கள்!
சேலமா? நகர்! என்றார் இரும்புத் தொழிற்சாலை கேட்டபோது!
இன்று
சேலம் மாநகராய் ஆவதற்கு இரும்புக் கனி தந்துவிட்டார்
சேர்வராயன் மலைக் கனியும்
சேலத்துமாங்கனியும்
செந்தமிழர் பெற்று மகிழ்ந்தாலும் என்
செம்மாதுளைக் கவிக்கினையோ எனக்கேட்கும் என் நண்பர்
முருகு சுந்தரனார்
பருகிடவே தமிழ் தருவார்!
உருகும் திருவாசகத்திற்கு நெஞ்சென்பார்
இவர் வாசகமும் அவ்வாறே
அன்பரே முருகு!
ஆடிப் பெருக்கு நாளைக்கு; இப்போது நீர்
பாடிப் பெருக்குமய்யா:

(கவிஞர் முருகுசுந்தரம் 'பெருக்கல்' பற்றிப் பாடி முடிக்கிறார்)

**தலைவர் கலைஞர்:**

அடுத்து கழித்தல்;
விழித்திருக்கும்போதே வீட்டினுள் புகுந்து விட்டுப் பின்
விழித்திடுவான் கள்வன் திருதிருவென்றே! வினையாட்டெனவே
மொழிந்திடுவான் அகப்பட்டுக் கொண்டால்!
இவன் போன்றார் செயலையெல்லாம் முழுமூச்சாய்
ஒழித்திடவும், தீமைகளை அழித்திடவும் தீவிரமாய்ப்
பழித்திடவும், வாழ்நாளைப் பயனுறவே
கழித்திருக்கும் என் நண்பர் தமிழண்ணல்
''கழித்தல்' பற்றி, இன்பங் கொழித்திருக்கும் செந்தமிழில் தேன்
குழைத்துக் கூட்டிச் சுவைபெருக்கி நலம்
வகுத்திடுவார்; காலத்தை வீணே
கழித்திடாமல் அன்னார்க்கு வழித்தடத்தை ஒதுக்குகின்றேன்!
வருக, வழங்கிடுக:

(கவிஞர் தமிழண்ணல் 'கழித்தல்' பற்றிப் பாடி முடிக்கிறார்)

**தலைவர் கலைஞர்:**

அடுத்து வகுத்தல்;
வகுத்தல் எனும் கவியமுதம்
தொகுத்தளிக்க வரும் புலவர் - நபிகள்
வகுத்த நெறிவாழ் கவிஞர் - விஜயன்
வில்லிலே விளையாடுவதில் வீரன் என்பார் - இவரோ
சொல்லிலே விளையாடும் தமிழ் வீரர்
வெற்றிபல கண்டு நான் விருதுபெற வரும்போது
வெகுமானம் என்ன வேண்டும் எனக் கேட்டால், அப்துர்
ரகுமானைத் தருக என்பேன்
அவர் பாடுகின்றார் இப்போது:

(கவிஞர் **அப்துல்** ரகுமான் 'வகுத்தல்' பற்றிப் பாடி முடிக்கிறார்)

தலைவர் கலைஞர்:

அடுத்து கூட்டல்;


கழித்தல் கணக்கில் இருந்த கண்ணதாசன் இன்று
கூட்டல் கணக்கில் இணைந்துவிட்டார் நம்மோடு;
சேலத்தில் சேர்ந்த நண்பர் நாங்கள்! மீண்டும்
சேலத்தில் சேர்வதற்கு யார் தயவு வேண்டும்?
கவியரசென்று என் தோழர்தம்மை அழைக்கின்றார்!
எனக்குக் கோபம்
யான் அமைச்சுதானே; இவர் அரசன்றோ?
அரசராக இருந்தாலும் இவர் என் ஒற்றர் என்பேன்
ஐயிரண்டு பத்தாண்டு ஐயா இவர் மாறுவேடம் பூண்டு
மாற்றார் படை வீட்டைச் சுற்றி வந்தார்
இன்று மறுபிறவி எடுத்து இங்கு வந்தார்
குயில் என்று பறக்கவிட்டேன் பாடி வர
கோட்டான்கள் கூட்டத்தில் குயில்பாட்டு எடுபடுமா?
கூப்பிட்டுக்கொண்டேன் என் தோட்டத்திற்கே!
தோட்டம் வந்த குயிலே! என்
தோளில் தொத்தும் கிளியே!
கூட்டல் கவிதை ஆர்த்துக்
களிப்பில் எம்மை ஆழ்த்து:

(கவிஞர் கண்ணதாசன் 'கூட்டல்' பற்றிப் பாடி முடிக்கிறார்)

தலைவர் கலைஞரின் முடிவுரை:

கூட்டலும் கழித்தலும்
வகுத்தலும் பெருக்கலும்
கூட்டணி அமைத்திடும்
குலவிக் கொஞ்சிடும் எனவே நம்பிக்
கொடுத்தோம் வாக்கை! ஆனால்

இந்தக் கூட்டணி
வம்பில் கூட்டணி எனினும் தமிழில்
தங்கக் கட்டணி, தளரா
சிங்கப் பாட்டணி!
எது பெரிது? கூட்டலா? கழித்தலா? பெருக்கலா? வகுத்தலா?
எனக் கேட்கும் கேள்விக்கு - திருக்
குறளொன்றை மாற்றிப் போட்டுத்
தெரிவிக்கின்றேன் புதுத் தீர்ப்பு:
''மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம்
பழித்தது ஒழித்து விடின்'' இது திருக்குறள்.
'வகுத்தலும் பெருக்கலும் வேண்டாவாம் கூட்டலும்
கழித்தலும் ஒழித்து விடின்'
இது என் தீர்ப்புக் குரல்!
வணக்கம்;
வாழ்க!



# நேரு கண்ட ஜனநாயகம்

14.11.1970 அன்று சென்னையில் 'நேரு கண்ட
ஜனநாயகம்' என்ற தலைப்பில்
நடைபெற்ற கவியரங்கில்
**கலைஞர் மு.கருணாநிதி** அவர்களின்
தலைமைக் கவிதையுரை

★

தங்கக் குணம் படைத்த நாவலரே
தகைமைசால் அமைச்சர்களே
சங்கத் தமிழ் எடுத்துக் கவி பாட வந்திட்ட புலவர்களே
சான்றோரே
வணக்கம் ஏற்றிடுக!
வங்கக் கடலருகே உறங்குகின்ற நம் அண்ணன்
அடிதொழுது தொடங்குகின்றேன் தலைமையுரை;
புன்னை மரம் நிழல் விரிக்கத் - தமிழ்
அன்னை மடி சுகம் அளிக்க
சென்னை நகர் ஒளி தெளிக்க
முன்னை இருள் விலக்குதற்கு
முயல்கின்ற தமிழ் அரசு
முதுபெரியோன் காந்தியாரின்
மூத்த பிள்ளை நேருவுக்கு
முத்தமிழால் கவி தொடுக்கும்;

புவியரங்கில் புகழ்குவித்த பண்டிதர்க்குக்
கவியரங்கில் மாலை சூட்டும்.
பூத்திருக்கும் தோட்டத்தில் புகுந்துவிட்ட என்றனுக்குக்
காத்திருந்த காட்சியொன்றைக் கவியாக்கித் தருகின்றேன்;
சிரிக்கின்ற மல்லிகையின் காதுகளில் செண்பகம்தான்
ஏதோ சேதி தனைச் சொல்ல;
சேர்ந்திருவர் சாமந்தியிடம் ஓடி
அவள் செவியில் வாய் வைத்தார்; பின்னர்
மூவருமே முல்லையிடம் முனகிவிட்டு அவளோடு
நால்வருமே நந்தவனம் முழுவதும்
நடைபோடத் தொடங்கி விட்டார்.
யாரைத்தான் தேடுகின்றார் பூப்பெண்கள்? கட்டுதற்கு
நாரைத்தான் தேடியலைகின்றாரோ - என எண்ணி நான்
வியந்தேன்.
தென்றலிலே மணம் பரப்பித் தேடுகின்றார் தேடுகின்றார்
தெரியவில்லை யாரை என்று!
''முழங்காலை வலிக்குதடி'' என்றாள் முல்லை.
''சிவந்ததடி என் பாதம்'' எனச் செண்பகம் இளித்தாள் பல்லை.
சாமந்தி மல்லிகை இருவர்க்கும் பெருந்தொல்லை
பூங்காவின் மூலையொன்றில் புலம்பல் ஒலி கேட்டவுடன்
பூப்பெண்கள் ''அதோ அதோ!'' எனச் சொல்லி
அந்த இடம் பறந்திட்டார்
''பூமானே! புகழ்க்குன்றே! போனாயோ என் தலைவா?
கோமானே! கொள்கை வேந்தே! உன்னைக்
கொள்ளையிட்ட கூற்றெங்கே?
எனையெடுத்து முத்தமீந்து இதயத்தில் ஏற்றிக் கொண்டாய் -
இன்று
எனைவிடுத்து நீ மட்டும் நெடுந்தெலைவு போய் விட்டாய்
என்ன நியாயம்?
இதழுக்குத் தேன் தருவாய் - பதிலுக்கு

நான் தருவேன் மறந்தா விட்டாய்?
மார்பகத்தில் அணைத்திருப்பாய்
மகிழ்ச்சி வெள்ளம் கரை புரளும்
மங்கையென்னைப் பிரிவதற்கு உன் மனம்தான் கல்லோ?''
எனக் கதறும் ஒலி கேட்டு
இனிய நறும் பூப்பெண்கள் அருகே சென்றார்
மடைதிறந்த வெள்ளம் போல் கண்ணீர் கொட்டி
மயங்கிவிழும் நிலைமையிலே ரோஜா நின்றாள்
மல்லிகை முல்லை அருகே சென்று
''என்னடி ரோஜா இன்னமும் அழுகை?
நல்லவர் இருந்தார் நானிலம் வாழ
வல்லவர் இருந்தார் வாரி அணைக்க
போனது வருமோ? புலம்பலை நிறுத்து!
பூக்களின் ராணி! புன்னகை காட்டு!''
ஆறுதல் கூறினார்; அழகு ரோஜா
தேறுதல் பெறாமல் தேம்பியழுதாள்.
''இரவு உமிழும் எச்சில் என்பேன் பனித்துளியை -என்
இறைவனது முத்தம் அமுதம் என்பேன்
அன்றமுதம் தந்தெனுக்கு ஆசை காட்டி
இன்றென்னை எச்சில் பனித்துளியில்
நனைத்து விட்டார்; என் செய்வேன்?
முடிசூடா மன்னரவர் இனி என்னைச் சூடார்
என நினைக்கும் போதெல்லாம்
முள்ளாகக் குத்துதடி மேனியெல்லாம்!
வாழ்வில் சிரிப்பில்லா எனக்கு இந்தச் சிவப்பெதற்கு?
மனத்தில் மகிழ்வில்லா எனக்கு நறுமணந்தான் எதற்கு?
இந்தியச் சிம்மாசனத்தில் அவர் இருந்தார் - அவர்
இதயச் சிம்மாசனத்தில் நானிருந்தேன்
உறங்குகின்றார் விழித்தெழுவார்; படி
இறங்கி வந்து பாவையெனை அழைப்பதற்குள்
அவர்நெஞ்ச

அரங்குதனில் ஆடுதற்குச் சிவப்பாடை
புனைந்து நின்றேன்
அதற்குள் காலக்
குரங்கின் கை 'மாலை'யாக ஆகிவிட்டார்;
என் வாழ்வை இரவாக ஆக்கிவிட்டு!
போய்விடுங்கள் எனை விடுத்துத் தனியாக
புனிதனவன் பிறந்தநாளில் கண்புனலை அவன்
காலடிக்குக் காணிக்கை யாக்குதலே
என் கடமை''
ரோஜாவின் சொற்கேட்டுச் சோர்ந்து போனேன்; தன்
ராஜாவின் பிரிவாலே வாடுகின்ற அவளையெண்ணிப்
பேசாமல் திரும்பி விட்டேன்; இன்றென்
மனைவி கூந்தல் மணம் வீசாமல் போகட்டுமென்று
மலர் எதுவும் பறிக்காமல் வந்துவிட்டேன் - இன்று
மலர் பறித்தால்; அது மாவீரன் நேருவுக்கு
மாலை தொடுத்திடவே! நம்
மடி பறித்துச் சுதந்திரத்தை அபகரித்த வெள்ளையரின்
கொடி பறித்து விடுதலைக் கொடி பிடித்த கொள்கை வீரன்
அடி கொடுத்தால் வாங்கிக் கொண்டு
அடக்குமுறை தாங்கிக்கொள்ள
அண்ணல் வகுத்த வழி
அயராதுழைத்த சிங்கம்!
இளமையின் எழிலை இருட்டுச் சிறையில்
கழித்த தியாகி!
என்னையிட்ட கடுகாய் வெடிக்கும் கோபம் எனினும்
என்னையிட்டார் விடுதலை வேள்விக் கென்போம்!
பணமலைக்கிடையே பிறந்தார் எனினும் ஏழையை அணைக்கும்
குணமலையாகத் திகழ்ந்தார் என்போம்!
பணியின் விரைவைப் பம்பரம் என்பர்
பண்டிதர் பணியோ பம்பரம் தோற்கும்

இடி இடிக்கும் பேச்சில் - இளமைத்
துடி துடிக்கும் எழுத்தில் - தேன் ஒரு
படி இனிக்கும் பண்பில் - அதிர்
வெடி முழக்கும் செயலில் - விடாப்
பிடியிருக்கும் குணத்தில் - விடுதலைக்
கொடியிருக்கும் கையில் - கொஞ்சம்
முடியிருக்கும் தலையில்-
(இங்கென்ன வாழ்கிறதோ? எனக் கேட்காதீர் எனைப்
பார்த்து)

நீதிக்கு எதிரானவற்றையெல்லாம்
நேர் நின்று எதிர்த்ததாலே நேரு வானார்.... இந்திய
நீள் எல்லைக் கோடு தன்னைப் பெரும்பகைவர் கடந்த போது
என்ன
நேருமோ என்றேங்கி இருந்த மக்கள்
நெஞ்சின் துயர் துடைத்து, எதுவும்
நேராது நான் இருக்குமட்டும் எனச் சொல்லி நேருவானார்.
துணிவிருந்தால் உள்ளத் தூய்மையிருந்தால்
துன்பம் நேருமா? எனக் கேட்டார் குழந்தையிடம்
இன்பமே நேரும் மாமா என்றது பிஞ்சும் பூவும்-
இதனால் நேரு மாமா'வானார்.
மதம் கடவுள் நம்பிக்கை இவைகளிலே
அவர் கொள்கை தனி எனினும் பிறர்
மனம் புண்படாமல் நல்வழியில் ஆட்சி செய்தார் தன்
மரணத்தின் பின்னாலே மதச் சடங்கு வேண்டாமெனத் தக்க
தருணத்தில் உயிலெழுதி உலகிற்கு ஒளி செய்தார்
நடுநிலைத் தன்மை நலமெனக் கொண்டு
நானிலம் போற்ற நமது பூங்குன்றனார் நவின்ற
''யாதும் ஊரே யாவரும் கேளிர்'' என்ற மொழிக்குத்
தோதாய்க் கொள்கை தொகுத்தே சொன்னார்.

காலத்தின் கோலம் காட்டுக்கு ராஜாவாய்க் கர்த்தபம் ஆகும்
ஏலத்தில் சில பேர் கோபுர உச்சியில் குந்திக் கொள்வர் இந்திய
ஞாலத்தின் தலைவராய் ஜவகர் ஆனது இவ்விதமல்ல! அவர்
சேலத்து மாம்பழம் - சென்னைக் கடற்கரை-
கொற்கை முத்து - கொள்ளேகால் பட்டு-
தஞ்சைக் கோயில் - தண்புனல் காவிரி-
தறியில் காஞ்சி - தடந்தோள் பாண்டியன்-
கருத்தில் மாறுதல் இருந்த போதிலும்-
காலமானார் நேரு என்றதும்
கண்ணீர் உகுத்தார்
கலங்கி அழுதார்
காராக்கிரகம் கிடந்த அண்ணா!
கண்ணிய அரசியலைப் போற்றிடும் நாட்டில்
கண் நிகர் நேருவைப் புகழ்வோம் பாட்டில்!
படை துள்ளி வரும் - பகை
அள்ளி வரும் - எரி
கொள்ளி வரும் - கரும்
புள்ளி வரும் - சீனக்
கள்ளி வரும் - எனச் சிலர்
எள்ளி வரும் போது - விடி
வெள்ளி வரும் எனப் - பகை
கிள்ளி எறிந்தான் - இன்று திருப்
பள்ளி அயர்ந்தான் - நேரு-
திருப்பள்ளி அயர்ந்தான்!
"வாய் மடித்துக் கிடந்த தலைமகனை நோக்கி
மணியதரத் தேதேனும் வடுவுண்டாயோ?" எனத்
தாய் அடித்து மோதி அழும் காட்சிகளைப்
பேய் ஆட்டம் போடுகின்ற போர் முகத்தை
நாய் நரிகள் தீனி தின்னும் கொடுமைக் கூத்தைக்
காய், பழம், பூ, பிஞ்சு, சாய்ந்து விழும் சமர்க்களத்தை - நம்

கலிங்கத்துப் பரணி சொல்லும். அந்தக்
கலிங்கத்தில் அமைதி பூண்ட அசோக மன்னன
கண்டெடுத்த அறவழியில் உலகு காக்க நேரு பிரான்
கழுகுகளின் இறக்கை வெட்டி வெண்புறாவைப்
பறக்கவிட்டார் விண்ணின் மேலே!
''தலையாகிய அறமே புரி
சரி நீதி உதவுவாய்
சமமே பொருள் ஜனநாயகம்
எனவே முரசறைவாய்'' இது
அலை மோதிடும் புதுவையின்
கலைமேவிய பாவலன் - நம்
நிலை மாறிடப் பாடிய காவியம்!
ஜனநாயகம் ஜனநாயகமென ஜவகரும் முழங்கிடச் - சிலர்தம்
தனிநாயகம் சிறந்திடத் செயல்பட்டதை மறந்திடோம்!
பணநாயகம் கணநாழியில் தகர்ந்திடக்
குணநாயகர் நேருவும் உடன் முனைந்திடக்
காலந்தான் போதவில்லை
காலமுமே பொறுக்கவில்லை!
என் கவிதை இனிமேலும் நீண்டு விட்டால்
காலம் பொறுக்காது கவிஞர்களும் பொறுக்கமாட்டார்
அதனாலே முடிக்கின்றேன் முதற்கவியை அழைத்துவிட்டு!
பெண்ணுரிமை பற்றிப் பாடுதற்குப்
பெரிதும் விருப்பமுற்ற ஆண் கவிஞர்
மண்ணுரிமை காக்கும போர்ப் படைக்குத்
தெள்ளு தமிழ் எடுத்துத் திறன் கவிதைப்
பள்ளு பல தந்திட்ட மறக் கவிஞர்
படையல் உரிமை மட்டும்
பெற்றுள்ள பெண்ணுக்குப்
படையில் உரிமை வேண்டுமென்க!

உடையில் மட்டும் புது உரிமை
ஒப்போம் என்று கூறிடுக!
சுதந்திரக் கவி வாணரே - என்
சுந்தரக் கவி வாணரே
சுவையான பாட்டப்பம் தந்திடுக
அவையோரும் வீட்டப்பம் போல் உண்டிடுக:

(கவிஞர் எஸ்.டி.சுந்தரம் 'பெண்ணுரிமை' பற்றிப் பாடி முடிக்கிறார்)

தலைவர் கலைஞர்:

அடுத்து:

பேச்சுரிமை கேட்கின்றார்
பாட்டுக்கிடையே அவர் எப்போதும்
பேசுவது பழக்கம் தானே... அதனாலே
கவியரங்கில் தனக்கு மட்டும்
பேச்சுரிமை கேட்கின்றார்!
ஏச்சுரிமை கேட்கின்றார் சில பேர் இன்று
அதனாலே தமிழ்ப் பண்பாட்டின்
மூச்சுரிமை போகுமென்று அஞ்சுகின்றேன். நேரம்
ஆச்சு; உரிமை தருகின்றாயா இல்லையா என
அன்பர் சுப்பு கேட்கும் வரை தராதிருந்தால்
அது என்றன் தப்பு!
கொத்தமல்லிக் கொப்பு குழம்பினிலே மணக்கும்-
கொத்தமங்கலம் சுப்பு குழம்பாமலே மணக்கும்:

(கவிஞர் கொத்தமங்கலம் சுப்பு 'பேச்சுரிமை' பற்றிப் பாடி முடிக்கிறார்)

தலைவர் கலைஞர்:

அடுத்து:

எழுத்துரிமை என்னிடத்தில் கோருகின்றார்
என் நிலையை அவர் அறியார்
பரப்பிரம்மம், தூக்குமேடை, கலை
ஒளி வழங்கும் உதயசூரியனாம் இப்படிப்
பல 'எழுத்தைப் பறி கொடுத்து.... அதன்
தலை எழுத்தால் தடை செய்யப்பட்ட கதை இவர் அறியார்
ஆயினும்; எழுத்துரிமை என்னிடமே கேட்கின்றார்
உரிமை தரும் இடத்திலே நான் இருக்கின்ற காரணத்தால்
முருகு சுந்தரத்தைக் கவி எழுத முடுக்குகின்றேன்
வந்திடுக - தமிழ்த்தேன் சிந்திடுக:

(கவிஞர் முருகுசுந்தரம் 'எழுத்துரிமை' பற்றிப் பாடி முடிக்கிறார்)

தலைவர் கலைஞர்:

அடுத்து:

ஆக்கமுள்ள சொல் நயமும் காவிரி யாற்றுப்
போக்கனைய நடை வளமும் தூய
நோக்கமும் நுண்ணறிவும் கொண்டு
பாக்களைக் கோக்கின்ற பாவலராம் ரகுமான்!
அவர்,
வாக்குரிமை கேட்கின்றார் இப்போது.
பெற்றுக் கொண்டு எனக்கேதான்
அளிக்க வேண்டுமெனச் சொல்லுமாட்டேன்
சொன்னாலோ அதன் பெயர் வாக்குரிமை ஆகாதன்றோ?
வந்திடுக நண்பரே!

வழங்கி விட்டேன் வாக்குரிமை: நீர் பாடும்
பாட்டுக்கு வழிச் செலவு தந்திடுவோம்
ஓட்டுக்கு மட்டும் ஒரு தொகையும் கேட்காதீர்:

(கவிஞர் அப்துர் ரகுமான் 'வாக்குரிமை' பற்றிப்
பாடி முடிக்கிறார்)

தலைவர் கலைஞர்:

அடுத்து:

அரசென்று சொன்னாலும்: ஆர்க்கின்ற
முரசென்று சொன்னாலும் தவறல்ல! கவி
விரச நடைக்காரரிடைச்
சரசமாடி வந்தாலும்
உரசுகின்ற நட்பாலே ஒப்பரிய பாசமுடன்
அரசுப் பொறுப்பேற்ற அடியேன்பால் மீண்டும்
வந்தார் கவியரசு

வந்தவுடன் சொத்துரிமை கேட்கின்றார் - பாவம்
நொந்த மனம்! இவர்
சொத்துரிமை கேட்பதிலும் நியாயம் உண்டு பிள்ளைகள்
பத்துப் பன்னிரண்டு
போகட்டும் அளித்துவிட்டேன் சொத்துரிமை
பெருக, வருக, தருக


(கவிஞர் கண்ணதாசன் 'சொத்துரிமை' பற்றிப்
பாடி முடிக்கிறார்)

தலைவர் கலைஞரின் முடிவுரை:

பாட்டரங்கில் பாவலர்கள்
கேட்ட உரிமை வழங்கிவிட்டோம்

நாட்டுநிலை தொட்டறிந்து
நல்லுரிமை வேணிக் காக்க
உறவுக்குக் கை கொடுப்போம் - நம்
உரிமைக்குக் குரல் கொடுப்போம் - என
முழங்கிக் கலைந்திடுவோம்-
முழுமனிதன் நேருதனை வணங்கிடுவோம்.

வாழ்க!



# நன்றி, நன்றி!

(சேலம் பொருட்காட்சியில் 1.8.71 அன்று நடைபெற்ற
'கண்ணோட்டத்தில் கலைஞர்' - கவியரங்கில்
கலந்து கொண்டு தனக்களிக்கப்பட்ட பாராட்டுக்கு
நன்றியாக மேடையிலேயே
உடனே இதை எழுதிப் பாடினார்
கலைஞர் மு. கருணாநிதி அவர்கள்.)

என்னை இந்தக் கவியரங்கில் தந்தையென்றும்,
தாய் என்றும், குழந்தையென்றும்,
தலைவனென்றும், சேவகன் என்றும்,
காதலி என்றும், காதலன் என்றும்
குறிப்பிட்டுக் கவிஞர்கள் பாடினார்கள்.
அவர்கட்கு இந்த நன்றிக் கவிதை வரிகளைக்
காணிக்கையாக்குகிறேன்.
விழாத் தலைவர் வேழவேந்தன்
விழுமியதோர் பார்வையிலே
கூலைமுதல் இங்கு விரித்து வைத்தார் கவிதைச் சந்தை
கவிஞர் கண்ணப்பன் எடுத்துரைத்தார் பாட்டில் தந்தை.
கத்து கடல் அலைபோல் கவியைத் தந்தாய்
முத்துலிங்க இளம்புலவ என் தாயை மீண்டும் தந்தாய்.
ஆரா அமுதன் வாயால் - நான்

தீரா விளையாட்டுக் குழந்தையானேன்!
என்னையும் ஓர் தலைவன் என்று - கரும்
பொன்னிகர் காமராசத் தலைவர் பெயர் கொண்டார்
மின்னிடும் தமிழால் இங்கோர் காமராசன்
ஏற்றுக் கொண்டார்
சேவக்ப் பையனாக என் வீட்டில் பணிபுரிந்த அவிநாசி மணிக் கவிஞன்
இன்று என்னையே
சேவகன் என மாற்றிப் பாடிவிட்டான்-
என்ன காலம்!
அருகினில் என் துணைவியார் அமர்ந்திருக்கக் கண்ட பின்னும்
முருகு சுந்தரிக்கு என்னதான் துணிவோ
என்னைக் காதலிக்க?
பிரிந்து போய்ப் பல திசையில்
திரிந்துழன்று மனம் திருந்தியே
விரைந்து வந்து வீடடைந்த - என்
காதலன் எனும் கண்ணகாச! நீ
கோவலன் போல் சிலம்புவிற்கப் போகவேண்டாம்
கழகக் கண்ணகி நான் என்று முனைக்காத்திடுவேன்.
கலங்கற்க!

நன்றி! நன்றி! நன்றி!
அனைவர்க்கும் என் நன்றி!

# வெள்ளி விழா

(அகில இந்திய வானொலி சென்னை நிலையத்தின்
சார்பில், இந்தியா விடுதலை பெற்ற 25-வது ஆண்டு
வெள்ளி விழாவையொட்டி 15.8.72 அன்று
ராஜாஜி மண்டபத்தில் நடைபெற்ற கவியரங்கில்
கலைஞர் மு.கருணாநிதி அவர்களின்
தலைமைக் கவிதை உரையில் சில பகுதிகள்)

அவை கூடி வந்திருக்கும் அனைவர்க்கும்
அழகு தமிழ்ப் பாவலர்க்கும், நாவலர்க்கும் அமைச்சர்க்கும்
என்புருவம் எனினும் அன்புருவம் சிலம்புக்கும்
என் தலைதாழ்ந்த வணக்கங்கள்
அன்னைத் திரு நாட்டோரே
என்னை உங்கள் ஊழியனாய் ஏற்றுள்ளீர்,
சொன்ன சொல் தவறாமல் செயல்படுவேன்
எனக்கூறி இற்றை நாளில் வணங்குகின்றேன்...
அள்ளிமுடித்த கூந்தலிலே பூவோடும் - கீழே
துள்ளி விழாக் கெண்டை மீன் விழியோடும்
புள்ளி மேவும் புதுக்கோலச் சித்திரத்தில்-
விடுதலைக்கு
வெள்ளிவிழா என எழுதிக் காட்டுகின்ற
இந்தியத்துப் பெண்ணே - இளம்மாதே! எழுச்சிக்குத் தாயே!

விந்தியத்துக்கப்பாலே வீரத் தமிழகத்தில்
டந்தயத்துக் குதிரைபோல் பாய்ந்தோடித்
தியாகத்தீயில்
முந்திக் கொண்டு குதித்திட்ட மறவர்க்கு வாழ்த்துக்கூறி
நான் வணக்கம் செய்வேன்....!
இருபத்தைந்தாண்டுகளாய் எரிகின்ற விளக்கைக் கண்டோம்.
அவ்விளக்கில்
இரத்தத்தை எண்ணெய் எனப் பெய்து ஏற்றி வைத்த
எம்மனோர் பாட்டன்மாரைத் தொழுது நின்றோம்!
குயில் கூட்டம் பாடுகின்ற கோலச் சோலையிலே
கோட்டான்கள் காட்டுக்கூச்சல் கேட்டிடவோ?
மானாடும் பொழில் - மயிலாடும் பூங்கா-
மந்திகளின் ஓய்யார மண்டபமாய் மாறுவதோ?
தென்றல் நுழைய வீடு கட்டி - அதில்
தீ புகவே விட்டிடவோ?
எங்கள் நாடு - எங்கள் மக்கள் - எங்கள் ஆட்சி
திங்கள் முகமெனச் சிறு குறையிருப்பினும்
எங்கள் நாடு - எங்கள் மக்கள் - எங்கள் ஆட்சி
சிங்கமறவர் - தங்க மங்கையர் - காப்பார் என்று
பொங்கு தமிழில் புவியினுக்குணர்த்துவோம்!
அத்தனை பேரையும் இயம்பிடல் இன்று
இயலாதென்றே எண்ணிச் சிலரைக்
கணக்காய் வகுத்துக் கவிதை புனைந்திட
வானொலி நண்பர் விடுத்த அழைப்பும்
தேனொலியாய் என்செவியில் விழுந்திடப்
பேரொலி முழங்கும் சூழல் விடுத்துப் - புலவர்கள்
சீரொலி கேட்க ஓடி நான் வந்தேன்.

பாரதிபற்றிப் பாடுதற்கோர் பாரதி வந்துள்ளார்.
சுப்பிரமணிய பாரதியின் சுவையான தமிழ்ப்பாட்டைச்

சுத்தானந்த பாரதியின் புதுப்பாடடில் கேட்டிடலாம்....
அதனாலே: இவர் முற்றும் துறந்தவர் என்றாலும்-
பற்றுத் துறக்காதவர் - தமிழ்ப்
பற்றுத் துறக்காதவர் - பலமொழி
கற்றும் மறக்காதவர் - தாய்மொழியை
மறக்காதவர் - இங்கே
சிறக்காதவர் - இங்கே
சிறக்காது அவர் பாரதி பற்றிப்
பாடாவிட்டால் - எனவே அவர் பாடுகிறார் இப்போது:

(பாரதியார் பற்றிக் கவிஞர் யோகி சுத்தானந்த
பாரதியார் பாடி முடிக்கிறார்)

அடுத்து,
தூத்துக்குடியில் சுதேசிக் கப்பலைப்
பார்த்த வெள்ளையர் பதைத்திடும் வண்ணம்
ஓட்டிக் காட்டி ஓட்டாண்டி யாகிக்
கோவைச் சிறையினில் கொள்கை காத்திடச்
செக்கிழுத்த நம் செம்மல் வ.உ.சி.
சிறப்பினை விளக்கிட சென்னையில் ஒரு சிலை
முன்னரே வைத்துப் புகழ்பெற்றோம் எனினும்
அடுத்த திங்கள் ஐந்தாம் நாளினில்
இந்தியப் பிரதமர் இந்திரா அம்மையார்
சிந்தை உவந்து மேலுமோர் சிலையினைத்
தூத்துக்குடியில் திறந்திட இசைந்துள்ளார்
விஞ்சு புகழார்க்கு நம் அஞ்சல் துறையினர்
நினைவுத் தலையும் நிகழ்த்தலை நினைத்தனர்
சிறை சென்ற தியாகி சிதம்பரனார் போல்
சிறை சென்று தியாகம் செய்த நம் நண்பர்
செந்தமிழ்க் கவிபுனை சிந்தை படைத்திட்ட
சுந்தரம் வந்துள்ளார் கவிதை தந்திட:

(வ.உ.சி. பற்றிக் கவிஞர் எஸ்.டி.சுந்தரம்
பாடி முடிக்கிறார்)

அடுத்து,
வ.வே.சு. அய்யரென்னும்
வாய்மைகொள் செயல்மறவர்
ஆவேச நீர்ச்சுழலில் சிக்கி
அன்றொரு நாள் மாய்ந்து விட்டார்
இன்றந்தச் சுதந்திர வீரரை நம்முன்
எழுந்து நடமாடச் செய்ய வந்துள்ள இக்
கொழுந்து யார்?
இக்கால ஔவை போலத் தக்கபடித் தமிழ்பாடும்
மிக்க திறனுடைய சௌந்தரா கைலாசம்
அம்மையார் கவிதையைத் தம்மகள் மூலமாய்
நம்மவர்க்கிங்கே நயமாய் அனுப்பினார்;
பாடுக செல்விநீ கேட்ட தாலாட்டை:

(வ.வே.சு. அய்யர் பற்றிக் கவிஞர் திருமதி
சௌந்தரா கைலாசம் சார்பில் அவர் மகள்
பாடி முடிக்கிறார்)

அடுத்து,
சிம்மக் குரலோன் சிவா எனத் திகைத்து
நம்மை ஆண்டவர் நடுநடுங்கி அஞ்சுமாறு
நோயின் கொடுமையுடன் நாளெல்லாம் கால்நடையாய்த்
தாயின் விலங்கொடிக்கத் தாயகத்தைச் சுற்றிவந்து
திருச்சி சிறைக்கோட்டம் சிறக்கக் கைதாகி
இருட்படலம் நீக்கும் எழுஞாயிறு போன்ற
சுப்பிரமணிய சிவா என்னும் ஒப்பற்ற தியாகியினைப்
பாடுதற்கு வல்லார் யார்?
உப்பில்லா உணவு உருப்படுமா? கொத்தமங்கலம்
சுப்பில்லாக் கவியரங்கம் சுவைதருமா? கொத்தமல்லிக்
**கொப்பு கறியினிலே மணக்கும்! என் நண்பர்**
கொத்தமங்கலம் சுப்பு

கவிதையெலாம் மணக்கும் - கேட்ட தமிழர்
நெஞ்சமெலாம் இனிக்கும்.
சிவசிவா என்று சும்மா இருக்காமல் இவ்வயதில்
சிவாபற்றிக் கவிபாட அவாவுற்று வந்தவரே
அவை ஏறாது போம் - நீர் இந்த
அவையேறாது போம் என்று சொல்லிவிட்டால் இங்கே நல்ல
சுவை ஏறாது போகுமன்றோ?
சப்பென்று போகாமல் அவைக்குச் சுவைதருக
சுப்பு அவர்களே!

(சுப்பிரமணிய சிவா பற்றிக் கவிஞர் கொத்தமங்கலம் சுப்பு
பாடி முடிக்கிறார்)

அடுத்து,
பற்று வைத்தல் தவறன்று; பாவமன்று - ஆனால்
பற்று, கொஞ்சம் முற்றிப் போய் வெறியாக மாறுமாகில்
விபரீதம் பலவாய் விளைவதுண்டு நாட்டினின்று
ஏகாதிபத்தியத்தை இந்திய நாட்டில்,
போகச் செய்யாவிட்டால் வேகாது இந்தவுடல்
அந்நியரை விரட்ட வேறோர் அந்நியரைத்
துணைகோடல் நன்றென்னும் துணிவுகொண்ட ஓரினைஞர்
நேத்தாஜி போசுக்கும் முத்த வழிகாட்டியாய்
செருமானியர் படையுதவி பெறுவதற்கும் முயன்றவராம்
நாஞ்சில் தமிழ்மண்ணில் நல்ல பழங்குடியில்
தோன்றிப் புகழோடு மாய்ந்த சண்பகராமன்
வெளிநாட்டிற் செத்தாலும் வெந்தபின் தன் சாம்பல்
**தமிழ்நாட்டில் தெளிக்கப்பட வேண்டுமென்ற**
மானம் படைத்தவொரு மறத்தமிழன் வீரத்தைக்
கானம்பாடி நமைக் களிப்பிக்க வருபவரோ
வானம்பாடியாம்-
பூவிரியுஞ்சோலைக்

காவிரிக் கரைதோன்றிப்
பாவிரிக்கும்-
பண்பாளர்
பண்டைநாள்
நண்பர்தான் - நற்கவிதை விருந்தொன்றை
உண்பதற்குத் தருவார் உவந்து:

(சண்பகராமன் பிள்ளை பற்றிக் கவிஞர் வானம்பாடி
பாடி முடிக்கிறார்)

அடுத்து,
வன்முறை, தீவிரவாதம் இவையெலாம்
நன்முறையாகா; நாட்டுக்குத், தீமைதான்!
அன்னலும் அண்ணனும் அமைத்த நற்பாதை
அகிம்சைதான்; எனினும் அன்று நம் முன்னோர்
அன்னியர் ஆட்சியை அகற்றிநம் அடிமைத்
தளையினை அறுத்திடத் தகாவழி நாடுதல்
பிழையிலை என்றும் சிற்சிலர் பேசினர்
தவறுதான் இலையென அவருள் **ஒருவனாய்**
வாஞ்சிநாதன் **வளர்ந்தான்** புயலாய்!
ஆங்கில ஆட்சியின் பிரதிநிதியாக அன்று
ஆஷ்துரை என்பான் நெல்லையில் இருந்தான்
மணியாச்சி நிலையம் வண்டிவந் தடையவும்
கணித்து வைத்தவாறு வாஞ்சிநாதன் குழுவினர்
வளைத்தனர் வண்டியை; கைத்துப்பாக்கிக் குதிரையை
**இழுத்தனன்**வாஞ்சி; இறந்தான் வெள்ளையன்
தன்மான உணர்வால் தன்னையும் சுட்டுத்
**தற்கொலையுண்டான்** வாஞ்சி-
தவித்தது **அவனது** குடும்பம்!
காஞ்சித் தினையெனில் காத்தலே யன்றோ?
வாஞ்சியும் சுதந்திரம் காத்த வரலாற்றினை இந்தத்

தருணம் மறவாது தரவருகின்றார்
அருணாசலம் - இனி அவர் கவி கேட்போம்:

(வாஞ்சிநாதன் பற்றிக் கவிஞர் கே.சி.எஸ்.அருணாசலம்
பாடி முடிக்கிறார்)

தன்பெண்டு தன்தாய் தன் குடும்பம் பாராமல்
தாய்நாட்டின் மானம் தனைக்காத்தல் கடமையெனப்
போராட்டக் களத்தில் புனித நெஞ்சத்தால் கலந்து
தேரோட்டம் காணத் திரள்வதுபோல் அணி அணியாய்
வருகின்ற தொண்டர்க்கு வாகான தலைவனாய்த் - தெம்பு
தருகின்ற வீரனாய் வள்ளலாய் உறுமுகின்ற
அதிகாரம் ஆதிக்கம் கண்டும் அஞ்சாது
பிடித்த கொடியினைப் பிடிவாதம் தளராது
அடித்தும் விடாமல் அங்கேயே உயிர்நீத்த
சாகாத குமரன்; அவன் கொடிகாத்த குமரன்
மிதந்திடும் தியாக வானில் மின்னிடும் துருவ வின்மீன்
சிதம்பர ரகுநாதன் இங்கே
இதம்பெறக் காட்டக் கேட்போம்:

(திருப்பூர் குமரன் பற்றிக் கவிஞர்
தொ.மு.சிதம்பர ரகுநாதன் பாடி முடிக்கிறார்)

அடுத்து.
எழுவரின் பெயரை ஈங்கே எழுதி நாம் காட்டிவிட்டோம்
கழிபெரும் சுதந்திரத்தைக் கண்டவர் இவர்கள் தாமா?
கோபுரக் கலசம் போலே குன்றின்மேல் விளக்குப்போலே
மாபெரும் புகழ்பெற்றோர்கள் மற்றையோர் எத்தனைபேர்?
மண்ணுக்குள் மறைந்திருக்கும் ஆணிவேர் போலே
கண்ணுக்குப் புலனாகாத தியாகிகள் எத்தனை பேர்?
நாயுடு நாயக்கர் முதலியார் என்று
செந்தமிழ் நாட்டின் முந்தைய தலைமுறைக்கு

விடுதலை வேட்கை வித்தூன்றியவர்கள் ஆன
வரதராசலு, பெரியார் ஈ.வே.ரா. திரு.வி.க.,
ஜீவா எல்லாம்
பெயர் தெரியாதோர் பட்டியல்தானா?
அயர்விலாதின்னும் முயல்வோமானால்
ஏராளம் பேர் இருப்பரே தியாகிகள்?
தாராளமாக அவர் புகழ் பாடிட-
என் தனி நண்பர்
தமிழ் அன்பர்-
எங்கிருந்தாலும்
பொங்கும் செந்தமிழால்
ஆடிப்பெருக்கு போல் அழகு தமிழ்ப்பாக்கள்
பாடிப் பெருக்கும் பாவரசென்னும்
கண்ணதாசன் எண்ணம் உணர்ந்திடும்
வண்ணம் பொறுமையாய் வந்துள்ளோம் அனைவரும்.
சுதந்திரக் கிளியே! இதந்தருஞ் சொல்லில்
மிதந்திடுங் குயிலே! மெல்லிசை கேட்போம்
வருக வருக தருகநின் கவிதை:

(பெயர் தெரியாத் தியாகிகள் பற்றிக்
கவிஞர் கண்ணதாசன் பாடி முடிக்கிறார்.)

''சித்திரச் சோலைகளே உமைநன்கு
திருத்த இப்டாரினிலே - முன்னம்
எத்தனை தோழர்கள் ரத்தம் சொரிந்தனரோ
உங்கள் வேரினிலே?
தாமரை பூத்த தடாகங்களே - உமைத்
தந்தஅக் காலத்திலே - எங்கள்
தூய்மைச் சகோதரர் தூர்ந்து மறைந்ததைச்
சொல்லவோ ஞாலத்திலே.''

என்ற புரட்சிக் கவிஞரின் வரிகள்

நன்றென எண்ணி நாட்டு விழுதனை
வெள்ளி விழாவினை வெற்றியாய்க் கடந்து
உள்ளம் உவக்க ஒப்பிலாப் பொன்விழா
விரைவில் வருகென விழைகிறேன்
பெறுகனன் வாழ்த்தும் வணக்கமும் நன்றியும்!



# அண்ணன் இருக்கின்றார்

2.9.1972 அன்று சென்னை கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்ற கவியரங்கில் கலைஞர் மு.கருணாநிதி அவர்களின் தலைமைக் கவிதையுரையில் சில பகுதிகள்.

சந்தனமே!
தென் பொதிகை தவழ்ந்து வரும் இளங்காற்றே!
நந்தாச் சுடர் விளக்கே!
நறுமணத்துப் புதுமலரே!
கன்னியத்தைக் கடமையினைக் கட்டுப்பாடெனும்
பண்பைக் கண்போலக் காத்திடற்குக்
கற்பித்த பெருந்தகையே!
சிங்கத் தமிழர்களின் சிந்தையெலாம் பறிகொண்டு
வங்கக் கடலோரம் வாய்மூடிக் கண்மூடி
மோனத் தவமிருக்கும் முத்தமிழே!
குடிசையெலாம் மேலுயர்ந்து
கோபுரமாய் விளங்கிடவும்
மடமையிருள், கொல்வறுமை
மடிந்தே மருகிடவும்
எல்லாரும் நலனெல்லாம்
எய்தி மகிழ்ந்திடவும்

நல்லதோராட்சியினைத்
தோற்றுவித்த நாயகமே!
என்னைக் குறிப்பறிந்தே
ஈடேற்றும் தம்பியரின் அண்ணாவே!
எனையிங்கே ஆளாக்கிக்
காத்திட்ட ஆருயிரே!
நும்கனவு அத்தனையும் நனவாக்கும்
சீரியநற் பணியினையே செய்கின்றோம்
நாள்தோறும்!
செய்பணிகள் அனைத்திலுந்தான்
அண்ணனே! நீ இருக்கின்றாய்!

தாயே!
தாயின் குரலில்
''தம்பி!'' எனவழைத்த தருவே!
தாய் அழைக்கும் போதெல்லாம்
நீயழைக்கக் காண்கின்றேன்!
தாயின் அழைப்பில்
அண்ணனே! நீ இருக்கின்றாய்!
ஏழைமாந்தர்
உன் தம்பி ஆட்சியிலே சிரிக்கின்றார்
அச்சிரிப்பில் ஆண்டவனைக் காண்பார் பலர்
ஆனால்....
நாங்களோ உன்னைக் காணுகின்றோம்!
ஏழையின் சிரிப்பில்
அண்ணனே! நீ இருக்கின்றாய்!
அன்றொரு நாள் ஆரூரில்
கண்பெற்ற மூதாட்டி
உன் தம்பியைக் 'கடவுள்' என்றாள்.
அந்தக் 'கடவுளோ'

உன்னைக் கைதூக்கித்
தொழுதார் அங்கே!
ஆம்: அண்ணா!
கத்திமுனைபட்டு அந்த ஏழையரின்
கண்ணெல்லாம் திறக்கும்போது
அந்தக் கண்ணிலே-
கண்பார்வையிலே-
உன் சிரித்தமுகம் தோன்றுது ஐயா!
காலையிலே மாலையிலே
கடும்பணி ஆற்றுகையில்
எப்பொழுதும் எந்நேரமும்
எப்பொருளிலும் அண்ணனே! நீ இருக்கின்றாய்!
அம்மட்டோ....
எங்கள் பணி முடித்து
என்றோ ஒருநாள்
உன் மடியில் தூங்க
வரும்போதும்...
அண்ணனே! நீ
அங்கேயும் இருக்கின்றாய்!
அலைமேயும் கடலோரம் துயில்கின்ற எம் அண்ணனே-!
அணையா விளக்கே! அன்பின் ஒளியே!
நீ தந்த அணையா விளக்காம்
தி.மு.கழகமென்னும் தீபச் சுடர் ஏந்தி.
இருட்டு மனிதர்களின்
புரட்டுச் செயல் அனைத்தும்
விரட்டி அடித்திடுவோம்
வெற்றிக்கொடி பிடித்திடுவோம்!

# அண்ணன் ஒரு கவியரங்கம்

4.2.1973 அன்று சென்னை ராஜாஜி மண்டபத்தில்
நடைபெற்ற அண்ணா நினைவுநாள்
கவியரங்கத்திற்கு தலைமை வகித்து
கலைஞர் மு.கருணாநிதி அவர்கள்
பாடிய தலைமைக் கவிதையுரை.

★

வங்கக் கடலோரம் உறங்குகின்ற நம் அண்ணன்
அடிதொழுது தொடங்குகின்றேன் தலைமையுரை
எட்டுக் கவிஞர் என் தலைமை யேற்றுப்
பட்டுக் கவிதைகள் நெய்திட வந்துளார்
**வசவாளர் சிலர் உலவும் தமிழகத்தில் - கவி**
நெசவாளர் இவர்களையே வாழ்த்திடுவோம்....
ஆயிற்று ஆண்டொன்றுக்குமேல் அரங்கேறிக் கவிபாடி
அதனாலே அறிவழகன், வீராசாமி அழைத்தவுடன்
ஆகட்டும் பார்ப்போமெனச் சொல்லாமல்
அப்படியா வருகின்றேன் என ஒப்பிவிட்டேன்

எப்படியும் என்பாட்டை நீங்கள் கேட்க வேண்டும்
என்பதற்கு வரவில்லை
செப்பரிய சிறப்புமிகு கவிஞர்களின்
சீர்கவிதை கேட்பதற்கே நான் வந்தேன்
கவி எழுத நேரமில்லை எனினும்
கலைஉள்ளம் எனை விடுவதில்லை
காலை முதல் பார்வையாளர் சந்திப்பு - அதற்கடுத்து
கவின்மிகு கூவத்தில் படகு வெள்ளோட்டத்
தொடக்கவிழா
நாலு மணிக்கெல்லாம் நமது பாரதி பேராலே
துறைமுகத்தில் ஒரு நிகழ்ச்சி!
இதற்கிடையே அடிக்கின்ற
தொலைபேசி மணிக்கெல்லாம் பதிலைச் சொல்லி
ஏதோ கிறுக்கி வந்தேன் கவிதையெனும் ஒருகத்தை!
அண்ணனுக்குக் கவியரங்கம் நடத்துகின்றோம்-
அறிவீரோ நண்பர்களே! அண்ணனே ஒரு கவியரங்கம்!
புவியரங்கின் மீது பூவரங்கம் அமைத்துக் கொண்டு
திருவரங்கத் துயில் கொள்ளும் தெய்வம் அவர்!
அந்தத் தெய்வத்தை வணங்குகின்றேன்!
அந்தத் திசை நோக்கிப் பாடுகின்றேன்!

அண்ணன் பூஜைக்கு என்ன பொருள்
கொண்டுசென்றாய் எனக் கேட்பீர்!
மண்ணில் புழுப்போல நெளிந்தவர்க்குக் குடிசை மாற்றி
மாடியுடன் வீடு கட்டித் தந்த செய்தி
அண்ணன் காலுக்குக் காணிக்கை மலரன்றோ!
இலட்சம் பேருக்கு இந்த ஆண்டு-கண்ணில்
பார்வை தரல் இலட்சியமாய்க் கொண்ட செயல்
அண்ணன் சந்நிதியில் வைக்கின்ற வாழைக்கனியன்றோ!
தொழு நோய்ப் பிச்சைக்காரர்க்குத்

தூய்மைசேர் இல்லங்கள் ஏற்படுத்தல் அன்னைனைத்
தொழுவதற்கேற்ற தூபதீபப் பொருள் அன்றோ!
சிற்றூர்க்கும் பேரூர்க்கும் பட்டி தொட்டிக்கும்
மின் இணைப்பு இல்லா நிலை இனி இல்லையென்று
அண்ணனிடம் கூறுவது கற்பூர ஜோதியன்றோ!
வெற்றிலை பாக்கென்றால் அண்ணனுக்கு வெகு விருப்பம்
விவசாயத் தொழிலாளர் வீட்டுமனைச் சட்டத்தைச்
சொன்னாலே வாய் சிவக்கும் அண்ணனுக்கு
வெற்றிலை படைத்தது போல்!
கூவம் மணப்பதற்குத் திட்டம் கண்டோம் அண்ணா...
உன் வாசல்
கோலமிட்டு யாம் வைத்த குங்குமம் அதுதான் அண்ணா!
என மொழிந்து-
நேற்றுக் காலையிலே நாமெல்லாம் நடந்து சென்று
காற்றுத் தாலாட்டும் அண்ணன் கல்லறையை வணங்கி வந்தோம்
ஆற்றுப் பெருக்கெனவே ஆயிரம் லட்சமென்று
அண்ணனுக்கு... தமிழ்
ஊற்றுப் பெருக்காலே பண்பாடிக் கண் எல்லாம் குளமாகத்
திரும்பி வந்தோம்.
தேற்றும்மொழிக் கரசன், தென்பாங்கின் பெருவேந்தன்
ஏற்றும் விளக்கெல்லாம் ஏழைக்கே ஒளிகாட்ட வேண்டுமென்று
சேற்றில் தாமரைபோல் கருத்தவிழ்த்த நம் அண்ணன்
''என்னைப்
போற்றிப் புகழ்ந்ததெலாம் போதுமடா என் தம்பி!
தூற்றித் திரிகின்றார் சிலபேர் நம்கழகத்தை! என்னினைய்
ஊற்றி விஷத்திரினை எரியவிட்ட குற்றமன்றோ! இன்று
சோற்றுத் துருத்தியெலாம் சுழற்றுகின்றார் அட்டைக் கத்தி
கூற்று வந்து என் உயிரைக்கேட்டுப் பெற்ற காலம்வரை
என் வீட்டுக்
கூடம் வரைதான் அனுமதித்தேன் கூடிக்கெடுப்பவரை! நீயோ

அடுக்களைவரை அழைத்துச்சென்றாய்... அதன் பயனை
அனுபவிக்கின்றாய் இன்று!
ஆனது ஆயிற்று தம்பி! **ஆடிக்காற்றில்** பஞ்சாகப்
பறந்து போகும் பகையெல்லாம்!
அலட்சியச் சிரிப்பாலே எதிர்ப்புகளைத் தூளாக்க... நான் தந்த
அறிவுரையை மறந்திடாமல் பணியாற்று! அவர்கள்
ஓங்காரச் கூச்சலிடும் கோட்டானாய் அலறட்டும்
ஆங்காரம் அவசரமெல்லாம் அவர்களுக்கே தீங்காக முடியட்டும்
பாங்கான தமிழ்ப் பண்புடனே **பொறுமைகாட்டி** -என்னை
நீங்காமல் நினைவில் வைத்த தம்பிகளை ஒருங்குகூட்டி
மாங்குயில் போலக் **கூவுவீர்** நம் கொள்கைகளை-
மறைந்திடுவர் ஆந்தையெல்லாம் தம் குரல் கேட்டுத்
தாமே நாணி!''
எனச்சொல்லி நம் அண்ணன் வாழ்த்துத் தந்தார்.
மனக்கதிராய் ஒளிவீசும் மாமல்லன் ஊரில் பிறந்து
பல்லவன் ஆனார்!
தனக்கெதிராய் எழுந்திட்ட சூழ்ச்சிகளைப்
புறங்காணும் சோழனானார்!
குணக்குன்றாம் கொங்குநாடன் கொடுப்பதிலே குமணனானார்!
வனப்புமிகு தமிழ்வளர்க்கும் பணியினிலே பாண்டிய
வேந்தனானார்!
வானகை சூடிப் பகைப்புலத்தை வெல்வதிலே சேரனும்
அவரேயானார்
'நமஸ்காரம்' என்பதுதான் நல்ல தமிழ் என்று
சமத்காரமாய்ச் சொல்லி வந்த கூற்றினை எதிர்த்து
வணக்கமெனும் தமிழை வழக்கத்தில் கொண்டுவந்தார்!
விவாக சுபமுகூர்த்தமென்று விழி பிதுங்கச் சொல்வதுதான்
விவேகிகளின் அழகென்று விவாதித்த காலம் மாற்றி
வீணைத்தமிழ் குழைத்து 'மணவிழா' என்றொலித்தார்!
வித்திட்டார் பொதுமக்கள் நெஞ்சகத்தில்
புலவர்க்கே உரிய தமிழ்வளர!

அகராசனாதிபதியை அவைத்தலைவர் என்றதுவும்
அண்ணாதானே! இல்லையேல்
சனாதிபதிக்கும் மேல்பதவி அக்ராசனாதிபதிப்பதவி
ஆகுமன்றோ?
ஏறுகின்றார் மேடையெனில் அது மகுடிநாதம்-
எழுதுகின்றார் ஏட்டிலென்றால் அது தமிழர் வேதம்
எதிரிகளின் தலையெல்லாம் நெற்கதிர்போல் தாழ்வதற்கு
எம் அண்ணன் கற்றிருந்தார் சொல்லை ஆள்வதற்கு!
வாதம் செய்வதிலே வழக்கறிஞர் சிங்கமெலாம் தோற்க நேரும்!
பிடி

வாதம் செய்வதிலே தோச்சியில்லை அண்ணலுக்கு!
கம்பன் தமிழுக்குச் சிரக்
கம்பம் செய்கின்றேன்; ஆனால்
கம்ப ராமாயணம் ஏலேன் என்று
தும்பை மலர் உள்ளத்தார்
துணிவு நிறை இதயத்தார்
தூயதற் சோமசுந்தர பாரதியை ஒப்பவைத்தார்.
அண்ணன்
நெடுஞ்செழியனைக் கண்டதில்லை,
அன்பழகனைக் கண்டதில்லை,
நிச்சயமாய்ச் சொல்லுகின்றேன்
அவர்களை அண்ணன் கண்ட, தில்லை.
ஆமாம்
அவர்களை, அண்ணன் கண்ட
தில்லைநகர், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில்
எல்லையில்லாப் புகழ் பெற்ற உரையொன்றை ஆற்றியுள்ளார்,
''தாழ்ந்த தமிழகமே'' என அழைத்து, நாம்
வாழ்ந்த பெருமையெல்லாம் வகைப்படுத்தி
ஆழ்ந்த கருத்துப் பேழையொன்றைத் தந்திட்டார்-
கருத்துப் பேழையது! கறுத்த மனத்தினர்.

கழகத்தைக் கவிழ்ப்பதற்குக் கற்பனையில் தயாரித்த
காதறுந்த பேழையல்ல!
கருத்துப் பேழையது....
காஞ்சி அண்ணல் தந்த கற்பூரப் பேழையது!
பெரியாரின் வலக்கரமாய் - அறிவில்
வறியோரைக் கரையேற்றும் வினைசப்படகாய்
சிறியோரின் பிழைபொறுக்கும் செங்கதிராய்
வெறியோரைப் பணியவைக்கும் வித்தகராய்
நெறியோடு முறையோடு அரசியல் நடத்திச் சென்று
திருவோடு ஒழிவதற்குத் திட்டம் சொன்னார் - இங்கே
திருவோடு இருந்திட்ட சிலபேர் இன்று
தெருவோடு போகின்றார் நம்மைத் திட்டி!
பருவோடு சண்டை போட்டால் நம்முகம்தான் கெடும்
பரவாயில்லை என்று புனுகு போட்டால் பரு உதிரும்...
முக அழகு கெடுக்கவந்த பருவுக்குப்
புனுகு மணம் ஒருகேடா? புலிபோலச் சீறிடுவர் என் நண்பர்!
பொறுமையெனும் புனுகால்தான் பொல்லாப் பருக்கள்
உதிருமெனில்

மணமென்றதனைக் கருதாமல்
மருந்தென்றதனைத் தடவிடுக!
இருந்துழைத்து வளர்ந்திட்ட இயக்கத்திலே
ஈவெரா பெரியாருடன் கருத்துமாறி...
இன்னொரு கழகம் காண்பேன் என்று
கண்ணீர் பெருக்கிப் பிரிந்தபோதும்
இரட்டைக் குழல் துப்பாக்கிபோல் இருப்போமென்று
எதிரிகட்கு இடித்துரைத்தார் எங்கள் அண்ணன்... இன்றோ
உதிரிகளைச் சேர்த்துக் கொண்டு
உடைவாளால் தாய் வயிற்றைக் கிழிப்பதற்கும்
எதிரிகளாம் பேய்மடியில் வீழ்வதற்கும்

இழிகுணத்தோர் ஓடுகின்றார்; விரைவில் முடமாவர்!
அண்ணன்-
ஆளுங்கட்சிக்கெதிராக அறப்போர் செய்தபோதெல்லாம்
ஆழம் பார்க்கத் தொண்டர்களை
அனுப்பும் பழக்கம் என்றுமில்லை,
அவரே முதலில் களம் புகுவார், அவரே முதலில்
சிறைப்படுவார்!
''மாநிலங்கள் மானினமாய் இருக்கவேண்டும்; அவைமீது
பாய்ந்து தாக்க மத்தியிலே புலியாக உறுமவேண்டும்-''
இக்கொள்கை
குடியரசுக்கேலாதென்று உரிமைகேட்டார் நமது அண்ணன்,
வேங்கைக்கழகு மானை வேட்டையாடல் எனத் தமக்கு வரும்
தீங்கை உணராச் சிலபேர்கள் குதிக்கின்றார்.
அண்ணன் கொள்கை அதுவல்ல,
அதிகாரப் பரவல் முறை தேவையென்று முரசறைந்தார்-
அவ்வழிதான் நல்வழியென்று அணிவகுப்போம்.
ஆதிக்கப் பிணி தொலைப்போம்.
பல்கலைக் கழகம்போல் திகழ்கின்ற அவர்பற்றிப்
பல தலைப்பில் பாடுகின்றார் கவியரங்கில்...

பின் கண்ட தலைப்புகளில்
கவிஞர் பலர் பாடி முடித்தனர்

அன்னை அண்ணா - கவிஞர் ஈரோடு தமிழன்பன்

தலைவர் அண்ணா - கவிஞர் கா.வேழவேந்தன்

காவலர் அண்ணா - பாவலர் மா.முத்துசாமி

# தமிழ் வளர
# வழிநடைப் பயணம்

12.4.73 அன்று பறம்புமலையில் நடைபெற்ற பாரி விழாவில் ''தமிழ் வளர வழிநடைப் பயணம்'' என்ற தலைப்பில் நடைபெற்ற கவியரங்கில் கலைஞர் மு.கருணாநிதி அவர்களின் தலைமைக் கவிதையுரை.

மலையெலாம் வளத்தைப் பாடும்! தமிழர்
கலையெலாம் பண்பைப் பாடும்! கடல்
அலையெலாம் நடமே ஆடும்! பகைமைக்
குலையெலாம் நடுங்கி ஓடும்!
கோடுவளர்
காடுதனில்
ஓடிவிளை
ஆடுகின்ற
பீடுமிகு மானினமும்
பாடும் இசை
ஜோடிக்குயில்
தாளமொடு
பாவமிடு

நடிகர் அண்ணா - கவிஞர் முருகுசுந்தரம்

திரையுலக அண்ணா - டாக்டர் ஔவை நடராசன்

முதல்வர் அண்ணா - கவிஞர் கொத்தமங்கலம் சுப்பு

எழுத்தாளர் அண்ணா - கவியரசு பொன்னிவளவன்

பேச்சாளர் அண்ணா - கவிஞர் அப்துர் ரகுமான்

## கலைஞரின் முடிவுரை

அன்னையே! அருமைமிகு தலைவரே! அறக்காவலரே!
உண்மை நடிகரே! ஒப்பற்ற முதல்வரே!
எழுத்தால் பேச்சால் எம்முள்ளம் கவர்ந்தவரே!
பழுத்தாய் நீ அறிவில் என்று
பறித்துக்கொண்டு ஓடியதோ காலக் குழந்தை?
என்செய்வோம் அண்ணா? நீ
எங்களோடு இருப்பதாக எண்ணிக் கொண்டு,
வன்செயல்கள் சதித்திட்டம்
வஞ்சவெறிக் கூத்து அனைத்தையும் வெற்றிகண்டு
ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண
இன்றுபோல் என்றும் உழைப்போம் அண்ணா!
அங்கே உன்னைக் காண்போம் அண்ணா!

கானமயில்
புள் இனமும்
பட்டுக்கொடி
கொற்றக்குடை
சுற்றிச்சுழல்
வெற்றித்திரு
முத்துத்தமிழ்
சுற்றுச்சுடர்
பெற்றுக்குல
கொடைபாரிப்
புகழ்வாரித் தொழுதிடுவோம்.
வழிநடைப் பயணமென வாகான தலைப்பீந்து
விழியொத்த தமிழினம்தான் வளர்வதற்கு
வகைசெய்தீர்! வாழ்க! வாழ்க!
இனம் வாழத் தினம் அயராப் பணிபுரிவோம்
சினம் கொள்ளல் தீதன்று தமிழர்க்குக் கேடு வந்தால்!
சிங்கத்தின் கூட்டமன்றோ: சிறுநரிகள்
ஊளைக்கா தலைவணக்கம்?
பொங்குற்ற புலிகள் முன்னே புல்லியர்க்கா ஆர்ப்பாட்டம்?
எங்குற்றான் என் தமிழன்?
இங்குள்ள இழிவுகளை எதிர்ப்பதற்குத் துணிவின்றிச்
செங்குத்துத் தூணைப்போல் நிற்கின்றானா?
அங்கத்தில் துடிப்பின்றிக் கிடக்கின்றானா?
அய்யோ பாவம் அவனுக்குச்
சங்கத்தில் பாட்டெழுதி அரங்கேற்றுங்கள்!
தங்கத்தில் சிலையொன்று அமைத்திடுங்கள்!
உளி இரண்டை உதட்டின் மேல் வைத்தாற்போல்
ஒளிமிகுந்த பாண்டியர்க்கு மீசையுண்டு
இளி வந்ததில்லை என்று இனமுழக்கம் செய்வதுபோல்
காதின்

வெளிவரையில் படர்ந்திருக்கும் சோழன் மீசை
களிறாட்டுந் துதிக்கை போன்று
கண் நோக்கி வளர்ந்திருக்கும் - சற்று
நெளிகாட்டும் நீளமீசை சேரன் மீசை!
அன்றந்த மீசையெலாம் துடித்ததனால் - பகைக்
குன்றங்கள் பொடியான கதைகள் உண்டு
இன்றந்த வீரம் வேண்டும் - மிகவும் வேண்டும்
இன்செயலில் வீரம் தேக்கி
வன்செயல்கள் அறவே போக்கி
முன்பிருந்த தமிழர்களின் உணர்வைப் பெறுக...
மான உணர்வைப் பெறுக...
தன்மான உணர்வைப் பெறுக...
இங்கு புலவரீர்
எட்டுவழி குறிப்பிட்டுப் பாடுகின்றீர் -தமிழர்க்கு
முட்டுவழி காட்டியவர் யார் என்பீர்?
குட்டுவழிப் பேர்வழிகள், நாம் குனியும் வரை
தட்டுவழி இல்லாமல் தர்பார்தான் நடத்திடுவர்
அதனாலே...
எட்டும் வழி சிலவற்றை இங்குநாம் கண்டிடுவோம்!
கபிலர்வழி கவிஞர்வழி மட்டுமல்ல
கண்போன்ற நட்புக்குச் சிறந்தவழி
கருணைவழி
சிவிகையொடு செங்கோலும் தேரும் படையுமே
செருக்களத்தில் தோற்ற பாரி செத்து வீழ
செம்மாங்கனியிரண்டாம் அவன் மகளிர் மணமுடிக்க
அம்மா (க்) கவி கபிலன் பட்டபாடு...
இறுதியிலே,
காரிமன்னன் செல்வர்க்குப்
பாரிமகளிர் துணையேயானார்
கபிலரது முயற்சியினால்!

நாடாண்ட தன் தோழன் - தமிழ்
நாயகனாம் பாரிக்குத்தான் செய்யும்
தனிக்கடமை முற்றிற்றென்று
ஏடாண்ட பெருங்கவிஞன் கபில மேலோன்
''என்றன் பாரியுடன் இனிச் சேரத் தடையில்லை''
எனக்கருதி வடக்கிருந்து உயிர் நீத்தான்!
சாகின்றான் நண்பன் எனில் அவன் தலையில்
அவசரமாய்க் கல் ஒன்றைப் போடுகின்ற
ஆருயிர்த் தோழருண்டு இந்நாளில்
அவரெல்லாம் வழிமாற்றி நடப்பதற்குக்
கபிலர்வழி... கற்கின்ற வழியன்றோ!
ஔவை வழி-
கோல்ஊன்றி நடக்கின்ற ஔவைப்பாட்டி - செங்
கோல்முறை சாயாமல் இருப்பதற்கு வழிகள் சொன்னாள்
இளம்பெருவழுதி வழி - தமிழ்
இனம்பெறு நல்வழியாம்
வள்ளுவர் வழி நடந்தால் - நெஞ்சில்
உள்ளுவரோ பகைவர் நெருங்க!
இல்லறத்தைத் துறந்தவழி இளங்கோ வழி
தமிழர்க்கு
நல்லறத்தைத் தந்தவழி அவர்தந்த சிலம்புவழி!
அப்பரது வாழ்க்கைவழி அன்புவழி...!
அதுபோன்றதே அடிகள் வள்ளலார்வழி
முத்தனைய கொள்கைகளை வகுத்தவழி
அறிஞர் அண்ணாவழி!... அருமை அண்ணாவழி!
இவ்வழிகள் பற்றிப்பாட வருகின்றார்
புலவரெல்லாம்...
வழிவிடுவோம் - சுவை
மொழிபெறுவோம்:

(கவிஞர் சுப்பிரமணியம் 'கபிலர்வழி'
என்ற தலைப்பில் பாடி முடிக்கிறார்.)

அடுத்து,

அறம் செய விரும்புகின்றார்
அடிகளார் எனக் கேள்வியுற்று
ஏற்பது இகழ்ச்சியெனும் பழமொழி
மறந்துவிட்டு-
அப்துர் ரகுமான்
(ஒளவை) வழிகாண வந்துள்ளார்
ஆத்திச்சூடிதான் நான் சொன்னேன்!
அன்பு ரகுமானே!
ஆறுவது சினம்!
ஊக்கமது கைவிடாமல்
உரைத்திடுக உமதுபாடல்:

(கவிஞர் அப்துர் ரகுமான் 'ஒளவை வழி'
என்ற தலைப்பில் பாடி முடிக்கிறார்.)

அடுத்து,

இளஞ்சேரன் என்பார்
என்போலத் தலை வழுக்கை...
இருக்கட்டுமே!
இளநீரும் வழுக்கை தானே! என்
இனஞ்சேரும் இளஞ்சேர
இனிய வழி கண்டிடுக:

(கவிஞர் கோவை இளஞ்சேரன் 'வழுதி வழி'
என்ற தலைப்பில் பாடி முடிக்கிறார்.)

அடுத்து,

சத்து மிகு தமிழ் எடுத்து - பழக்
கொத்து நிகர் கவி புனையும்
முத்து சம்பந்தம்

முழக்குகின்றார்-
அவர் பாட்டை
வள்ளுவர் பாட்டை:

(கவிஞர் முத்துசம்பந்தம் 'வள்ளுவர் வழி'
என்ற தலைப்பில் பாடி முடிக்கிறார்.)

அடுத்து,

சிலம்பு விற்க வருகின்றார்
பாண்டியன்
இஃதென்ன
சிலப்பதிகாரத்தை மாற்றுகின்றாய்
என்கின்றீரா?
இல்லை, இல்லை!
சண்முக பாண்டியனார்
இளங்கோ வழி காட்டுகின்றார்
இதைத்தான் சொன்னேன்.

(கவிஞர் சண்முகபாண்டியன் 'இளங்கோ வழி'
என்ற தலைப்பில் பாடி முடிக்கிறார்.)

அடுத்து,

அடி வேண்டும் வழி நடக்க
அப்பரடி வேண்டும் வழி நடக்க என்று
வடிவேலன் சிங்காரமாய் வருகின்றார்-
சிங்கார வடிவேலன் வருகின்றார்.

(கவிஞர் சிங்காரவடிவேலன் 'அப்பர் வழி'
என்ற தலைப்பில் பாடி முடிக்கிறார்.)

அடுத்து.

மரியதாசு
உரியதாம் மனிதர்க்கு வள்ளலார் வழியெனவே
மரியதாசர் உரைப்பதும் சரிதானே!

(கவிஞர் மரியதாசு 'வள்ளலார் வழி'
என்ற தலைப்பில் பாடி முடிக்கிறார்.)

அடுத்து.

பண்ணாய்ந்து பாடுகின்ற முடியரசு
அண்ணாவின் வழி ஆய்ந்து பாடுகின்றார்!
கண்ணான கவியரசு
எந்நாளும் நம் அரசு

(கவியரசு முடியரசன் அண்ணா வழி'
என்ற தலைப்பில் பாடி முடிக்கிறார்)

எட்டுவழி கூறிவிட்டார்-கேட்டிருந்தோம்!
இப்போது
எங்கள் வழி எந்த வழி?
சிங்கம்புணரி வழி - திருச்சி வழி-
தஞ்சை வழி-
அண்ணன் எமக்கு வகுத்த வழி
இவ்வழிதான்!
வருகின்றோம் -

வணக்கம்.

# வையம் தழைக

13.4.73 அன்று சென்னை வானொலியில்
'வையம் தழைக்க வாழ்த்துவோம்' என்ற தலைப்பில்
புத்தாண்டு நாளில் நடைபெற்ற கவியரங்கில்
**கலைஞர் மு.கருணாநிதி** அவர்களின்
தலைமைக் கவிதை உரை.

அன்பால் அறநெறியால்
கல்வியால் உழவால்
தொழிலால் கலைப்பெருக்கால்
வையம் தழைக்க வாழ்த்த வந்தீர்
வாழ்த்துகின்றேன் உம்மை நானும்!
அன்பு - 'ஆல்'
அறநெறி - 'ஆல்'
கல்வி - 'ஆல்'
உழவு - 'ஆல்'
தொழில் - 'ஆல்'
கலைப்பெருக்கு - 'ஆல்'
ஆறுதலைப்பும் 'ஆல்' என்று முடிவதனால்
'ஆல்'களின் நடுவே நானோர் அரசானேன்!
ஆலமரங்களின் நடுவே அரச மரமானேன்.
வருடப் பிறப்பின்று...

வருட... பிறப்பு....
வல்லியவள் உடல் வருட உடன் ஓர் பிறப்பெனிலோ
மெல்லியலாள் ஒல்லியாவாள்.....
வருடம் பிறக்கட்டும்... வையகத்தீர்
வருடம் ஒன்று பிறத்தல் வேண்டாம்!
பங்குனியை விரட்டி விட்டுச் சித்திரையாள் பந்தாடுகின்றாள்
இங்கவளின் ஆட்டமெலாம் எண்ணி ஒரு மாதம்தான்
எங்கிருந்தோ ஒருத்தி வருவாள் வை, காசியென்று
ஆ நீயா என்று வியப்பதற்குள் ஆடி முடித்திடுவாள்-!
திங்கள் தொறும் இந்தச் சதிராட்டம் தொடர்ந்து
செங்கமல இதழ்கள் போல் ஆண்டு உதிரும் பின் மலரும்!
புத்தாண்டு இதுவென்போம் புகழ் தொடுப்போம்
பத்தாண்டு காலத்திற்கு முன் நான் சிறைப் பறவை
பல்கவிதை, நூல்கள் எலாம் எழுதுதற்கு அங்கே நிறைய நேரம்;
இன்றோ நான் கொட்டில் மாடுபோல் கிடக்கின்றேன்;
நன்றோ எனை இழுத்துக் கொம்பு சீவி இங்கெல்லாம்
நிறுத்துவது?
வானொலியாரைத்தான் கேட்கின்றேன்? ஏனய்யா
வாய் திறக்க மறுக்கின்றீர்?
கட்டாமல் விட்டாலும் இது கன்னியம் தவறி
முட்டாத மாடென்ற துணிவுதானே உமக்கெல்லாம்?
பரவாயில்லை-
தட்டாமல் வந்திடுவேன் தமிழ்த்தீனி கண்டால் என நம்பித்
தலைமை ஏற்க ஆணையிட்டீர்! நானோர் தும்பி
தேன் வெள்ளம் கரை புரளும்
திருமலியும் தமிழ்ப்பூக்கள் மணம் பரப்பும்
உன் உள்ளம் எல்லாமே உருகும் வண்ணம்
உலகத் தமிழ் மறையின் ஒலி முழங்கும்
''ஏன் பள்ளம்'' வாழ்வினிலே எனக் கேட்டு
ஏழைகளைச் சிரிக்க வைக்க வழி பிறக்கும்

மான் துள்ளும் சீர்மை கண்டு
மனமொடியும் வேங்கை வீழ
பேன் திரியும் தலையோ காடு? வறுமைப்
பேய் விலக எழுந்ததே தமிழர் நாடு!
எனச் சங்கம் ஊதுதற்கு
இங்குற்ற இளங்கவிகள் பாடல் கேட்போம்.

அன்பால்...

அன்பால் வையம் தழைப்பதற்கே வழிகூறி
என்பும் உரியர் பிறர்க்கென்றார் வள்ளுவனார்
உன்பால் கொண்ட காதல் அன்பால் - உன்
அன்பால்....
என்பால் நீ தந்திடுக உன்னை என்று
பூப் பால் அருந்துகின்ற வண்டினம் சூழ் ஓர் புதர்பால்
காமத் தகிப்பால் - ஓர் ஆண்பால் ஓர் பெண்பால்
பேசிடக் காணுகின்றோம்
அன்புதான் அதற்கு அடிப்படை எனினும்
அதனையும் மிஞ்சும் அருமைத் தாயன்பு!
கட்டில் பூ ஒருத்தி தன் கட்டுக்குள் இருந்தவனை
எட்டிக் காயாக்கிப் போட்டதுடன் - எனக்கோர்
காணிக்கை வேண்டுமென்றாள், என்னவென்றான்.
சட்டியின்றி வேகவைத்த பணியாரம் போன்றாள்
அட்டியின்றித் தருவாயோ பரிசு என நழுவினாள்
கட்டிக் கரும்பே கேள் கண்மூடித் திறப்பதற்குள்
தருகின்றேன் எனத் தழுவினான்.
வெட்டி வந்து உன் தாயின் இதயத்தை என் கையில்
வைத்திடுக என்றாள்? அவனும் சென்றான்.
பெட்டிக்குள் மணிபோல் வைத்து மகனைக் காப்பாற்றும்
மாதாவைக்
குட்டிக் குடிலன் போல அம்மகனே கொன்றழிக்கும் காலமிது!

எட்டிய மட்டும் பாயும் வளர்த்த கடா மார்பின் மீது....
கொட்டிடும் தேளினும் தீயோர் தான்
குடியிருந்த கோயிலையே தகர்ப்போர்!
நெட்டிபோல் நுரைபோல் தலைநரைத்த
தாயின் இதயத்தை
ரொட்டி போல் கொத்தியே கொண்டோடி வந்தான்;
எட்டி வைத்த அடி சறுக்கிக் கீழே வீழ்ந்தான்.
"பட்ட அடி பலமோ மகனே? அய்யோ!" என்று
வெட்டுண்ட தாயாரின் இதயம்
வெட்ட வெளியில் கிடந்து அலறியதாய்க் கதை உண்டு.
அம்தன்றோ தாயன்பு?
தாயன்பு தனி அன்பு - தங்கக் கனி அன்பு
நாயன்பு கூடக் காட்டாத நல்லோர் சிலர்
இருக்கின்றார் உலகில்! அவர் வாழட்டும் நன்கு.
புண்ணில் சீழ் ஒழுகும் தொழு நோயர்க்குப்
புண்ணிய திருத்தலம் கட்டுகின்றோம்
கண்ணில் ஒளி மங்கிய ஏழையர்க்குக்
காசின்றிப் பார்வை வழங்குகின்றோம்.
மண்ணில் நிகரிலாக் கோயில்கள் அவைதான்
பொன்னிலோ செம்பிலோ ஆண்டவன் இல்லை
அவன்
புகலிடம் அன்பிலே இதனை அறிந்திடுவீர்.

அறநெறியால்....

அன்புதான் அடிக்கல் நாட்டல்;
அறநெறி மாளிகை அமைப்பதற்கே!
அண்ணல் காந்தியும் அவர் வழி நேருவும்
அண்ணா வாழ்ந்ததும் அறநெறி காக்கவே!
எண்ணத் தொலையா பேதங்கள் அகற்றிச் சமத்துவ
வண்ணக் கலாபம் ஆடிடச் செய்வோம்

உழுபவர்க்கு நிலத்தில் சொந்தம்
உழைப்பவர்க்குத் தொழிலில் சொந்தம் - இந்த
உரிமைக் குரலைச் செயல்படுத்துகின்றோம்
உண்மை அறநெறி வகுத்திடுகின்றோம்.
உதட்டில் அறநெறி - உளத்தால் சிறுநரி
உலவுதல் காண்பீர் - ஒதுங்குதல் நன்றாம்

கல்வியால்....

நாலைந்து ஆண்டின் முன்னே நாற்பத்து மூன்று கோடி
கல்விக்குச் செலவென்றால்
நலமுடனே கல்வி தழைப்பதற்கு இவ்வாண்டு
நூற்றெட்டுக் கோடி தருகின்றோம்.
தொடக்கத்தில் புத்தகத்தில் உலகத்தைப் படித்துவிட்டால்
தொடர்ந்து நாம் உலகத்தைப் புத்தகமாய்ப் படிக்க ஏலும்
தொல்லை பல தாங்கிக் கொண்டு பெற்றோரும் அரசினரும்
தொகை தொகையாய்க் கல்விக்கு வழங்குவதை
எண்ணிப் பார்த்து (மாணவர்)
எல்லைமீறிப் போகாமல் கிளர்ச்சிகளைத் தவிர்த்தல் சேவை
எதிர்கால ஒளிவிளக்காய்த் திகழ்தல் தேவை.

உழவால்...

அழுமாட்டாக் குறையாக அன்றொரு நாள்
அரிசிக்கு வரிசை நின்ற
நிலைமாற்றிப் போட்டவர்கள் உழவரன்றோ?
அன்று நம் கிடங்கு நிலையோ அந்தோ பரிதாபம்!
அதற்கெதிராய் இன்று ஐம்பத்தைந்து லட்சம் டன்
அரிசி மட்டும் உற்பத்தி!
ஆதவர்க்கு முன் எழுந்து உழைக்கின்ற
உழுவர் குலத்தவர்க்கு ஏதும் நேரா வண்ணம்
காக்கின்ற அரசு இது.

தொழிலால்...

எழிலுடைய தமிழகத்தின் பகுதியெங்கும்
தொழிலுடைய மக்களையே காணல் வேண்டும்.
மழையின்றி மின் வெட்டுத் தொல்லை - அது நம்
பிழையன்று! நூல்
இழையன்றி நெசவாளர் துயரம் - விரைவில்
வழிகண்டு இடர் தவிர்க்க முனைவோம்
தொழில் வளர்க்கத் தொய்வின்றி முயல்வோம்
தொழிலாளர் நலம் பேணும் அரசாக மிளிர்வோம்.

கலைப்பெருக்கால்...

''தமிழன் என்றோர் இனம் உண்டு - தனியே
அவற்கோர் குணமுண்டு''
நாமக்கல்லார் நவின்றது மறவோம்.
நம் கலை, சிற்பம், காவியம் துறவோம்
கலை தோய்ந்த நெஞ்சில்தான் - மக்கள்
நிலை தோன்றும் - கருணை தோன்றும்
இலை என்று சொன்னவுடன் - எதுவும்
இலை என்று சொன்னவுடன் - ஏழையின்
கண் காட்டும் ஏமாற்றச் சோகத்தைக்
கலை காட்டும் உள்ளம்தான் புரிந்துகொள்ளும்!
நிலையாட்சி இருப்பதற்கு - நெஞ்சில்
கலையாட்சி இருத்தல் வேண்டும்.
'கலை ஆட்சி' என்று கூவினாலும் - இந்தக்
கலையாட்சி என்றும் கலையாத ஆட்சியாகக்
காலமெல்லாம் நினைவில் நிற்பதற்கே
கடற்கரையில் சிலையாட்சி காணுகின்றீர்!
கல்லறையில் அண்ணா உறங்குவதும்
கண்கலங்கப் பல்லாயிரவர் வணங்குவதும்

கலை உள்ளம் கண்ட படைப்பன்றோ?
காவிரி புகும் பட்டினத்தில்
கண்ணகி கதை கூறும் சிலைகளாலே
கலைக்கூடம் கண்டதும் கலை நெஞ்சே!
கடும் வேலை தலை நெறிக்கும் போதும் இந்தக்
கவியரங்கத் தலைமைக்குத் துரத்தியதும் கலை வெறியே!
காஞ்சி ஆண்ட மன்னவனும்
கலை பயின்ற பல்லவனும்-
தஞ்சை ஆண்ட சோழனும்-
வஞ்சி ஆண்ட சேரனும்-
கூடல் ஆண்ட பாண்டியனும்
கோலமிகு கலைகளால்
சீலமுற வாழ்ந்தனர்
சிந்தையிலே நின்றனர்...

கலை வாழ்க - தமிழ்
மலை வாழ்க!
கவி வாழ்க - இந்தப்
புவி வாழ்க!

எனக் கூறி அழைக்கின்றேன்
அணி வரிசைக் கவிஞர்களை!
முதலில்,
அரசு மணிமேகலை
வெறும் மணிமேகலை என வினித்தால்
துறவி மணிமேகலை எனத் தோன்றுமென்று
அரசு மணிமேகலை என்றார்; இவர் தந்தை அரசு
எனக்கு மிக நெருக்கமாய் இருந்த நண்பர்-
தரிசு நிலமாய் இருக்கின்ற உளம் திருத்த அன்புப்
பரிசு வழங்க வருகின்ற மணியே வருக:

(கவிஞர் அரசு மணிமேகலை 'அன்பால்' என்ற
தலைப்பில் பாடி முடிக்கிறார்)

அடுத்து,
அறம்பாட வருகின்றார் அன்பர் பொன்னடியார் - அவர்
திறம் பாட நேரமில்லை!
அவர் பாட நாம் மகிழ்வோம்:

(கவிஞர் பொன்னடியான் 'அறநெறியால்'
என்ற தலைப்பில் பாடி முடிக்கிறார்)

அடுத்து,
யான் பெற்ற இன்பம் வையம் பெறுக என்று
தான் பெற்ற கல்விதனைக் காட்டுதற்கு
வான் பெற்ற புகழோடு வருகின்றார் உசேன் புலவர்:

(கவிஞர் உசேன் 'கல்வியால்' என்ற தலைப்பில்
பாடி முடிக்கிறார்)

அடுத்து,
கழனியிலே உழைத்தால்தான்
கதிர் விளையும் - எனக் கூறிப்
பழனியப்பக் கவிராயர் பாடுகின்றார்:

(கவிஞர் சாமிபழனியப்பன் 'உழவால்' என்ற
தலைப்பில் பாடி முடிக்கிறார்)

அடுத்து,
எழிலாய்க் கவிதை ஆக்கும் தோழர்
'தொழிலால்' என்று தொடங்கிடுவார்-
கல்லை ஆ துரைப் புலவ!
சொல் அய்யா ஓர் பாடல்:

(கவிஞர் கல்லை ஆ. துரை 'தொழிலால்' என்ற
தலைப்பில் பாடி முடிக்கிறார்)

இன்று பாடிய கவிஞர் துரைக்கு
நன்று திருமணம் நாளைக் காலையில்

சென்று வாழ்த்திட நேரமில்லை. அதனால்
இன்றே வாழ்த்துவோம் அனைவரும் சேர்ந்தே!

அடுத்து;
கலைப் பெருக்கால் கவினுாட்ட
அலைப் பெருக்காய்த் தமிழ்பாட
அழைக்கின்றேன் கபிலவாண:

(கவிஞர் கபிலவாணன் 'கலைப்பெருக்கால்'
என்ற தலைப்பில் பாடி முடிக்கிறார்)

முடிவுரை:

சொல்வதைச் செய்வோம்
செய்வதைச் சொல்வோம்
பொய்ம்மை தடுப்போம்
வாய்மை வளர்ப்போம்
ஏழைகள் சிரிப்பே
இன்பம் என்போம்
எல்லோர்க்கும் எல்லாம்
கிடைத்திட உழைப்போம்
வையம் தழைக்க
வறுமை தொலைப்போம்!

இதனை

வருடம் ஒருமுறை பாடுதல் இன்றி
வளையாப் பணியாய் வாழ்வினில் கொள்வோம்

வணக்கம்.

# தந்தை பெரியார்

சேலம் நேரு கலையரங்கில் தமிழ்ச் சங்கத்தின்
சார்பில் 11.1.74 அன்று நடைபெற்ற
''தந்தை பெரியார்'' கவியரங்கில்
**கலைஞர் மு.கருணாநிதி** அவர்களின்
தலைமைக் கவிதை முன்னுரை.

★

மாண்புமிகு அமைச்சர்களே, மாவட்டத் தோழர்களே
வணக்கம்,
வளமார் தமிழகத்துக் கவிஞர்க்கும்
வாஞ்சைமிகு சேலத்துப் பெரியோர்க்கும்
உளமார்ந்த என் வணக்கம் - ஏற்றிடுவீர்.

ஓய்வில்லை எனக்கென்று தெரிந்திருந்தும்
உரிமையுடன் கவியரங்கு நிகழ்த்த வரவேண்டுமென்று
உத்திரவை வேண்டுகோளாய் விடுத்துவந்தார் - என்
உழுவலன்பர், உழைக்கின்ற மெய் அன்பர்,

நம்மைப்
படகுபோல் கவிழ்த்திடுவோம் என்கின்றார்; இந்தப்
படகேறிப் பதவியிலே தொற்றிக் கொண்டோர்-
தூளாக ஆக்கிடுவோம் என்கின்ற துரோகிகளும்
முதுகில்பாயும்

வானாக மாறிடுவோம் என்கின்ற பாவிகளும்
சூழ்ந்தெதிர்க்கும் சூழ்ச்சியினை முறியடிக்க, நான் சிந்தனையில்
ஆழ்ந்திருக்கும் போதன்றோ ஆணையிட்டார் கவி எழுத
நேற்று, காலை முதல் நள்ளிரவு முடியும்வரை
ஏற்றமிகு நிகழ்ச்சிகள் எட்டுக்குமேல் கோவையிலே! கற்பனை
ஊற்றுக்கண் திறக்குமா அதற்கு மேலே? இருந்தாலும்
காற்றுக்கு அசைகின்ற கொடிபோல - நண்பர்களின்
கட்டளைக்கு அசைகின்றேன்
கவிபாட!

கவி எழுதும் ஆற்றல் எனக்குண்டென்ற காரணத்தால்
கவியரங்கத் தலைமைக்குத் தூண்டுகோலாய்த் துணைநின்ற
கணபதியை நினைக்கின்றேன், கவியரங்கம் தொடர்கின்றேன்.
ஆர்.வி.கணபதியை நினைக்கின்றேன்
அழகு தமிழ்க் கவியரங்கம் தொடர்கின்றேன்.
பூமியிலே நம்மை வாழவைத்து வளரவைத்த
சாமிதனை முதன் முதலில் தொழுதிடுவோம் - ராம
சாமிதனை முதன் முதலில் தொழுதிடுவோம், பெரியார்
ராமசாமிதனை முதன் முதலில் தொழுதிடுவோம்,
கவியரங்கம் பாடவந்த, காணவந்த பெருமக்காள்!
திருவரங்கப் பெருமாள் போல் படுத்திருந்த தமிழ் உணர்வைத்
திசையெட்டும் சிலிர்த்தெழுந்து முழங்கச் செய்து
தீரமிகு பணிகள் பல ஆற்றியவர் பெரியார் அன்றோ?
தெருவரங்கம், கலையரங்கம், இசையரங்கம், திரையரங்கம்,
எல்லாமே 'அம்மாமி அத்திம்பேர்?''

ஜலதரங்கம்! அதுமாற்றித்
தமிழ் அரங்கம், தனி அரங்கம் கண்டவர்க்குக்
கவியரங்கம் பாடுவது பொருத்தமன்றோ? அதனால்தான்
''பயிர் போன்றார் உழவருக்குப் பால்போன்றார்
குழந்தைகட்குப் பசும்பால் கட்டித்
தயிர் போன்றார் பசித்தவர்க்குத் தாய் போன்றார்


ஏழையர்க்குத் தகுந்தவர்க்குச்
செயிர் தீர்ந்த தவம்போன்றார் செந்தமிழ்
நாட்டில் பிறந்த மக்கட்கெல்லாம்
உயிர் போன்றார்'' என்று
பாரதிதாசப் பாவேந்தன் பாடிச்சென்றான் அவரை!
''வீடு கட்டி அதற்குள்ளே வைக்கோலைத் தினிப்பதுவோ?
வீடுகட்டாமலே வைக்கோற்போர் போடலாமே
என்சொன்ன ஈ.வே.ரா. நாத்திகரா?
இல்லை இல்லை!
அவர்,
இயற்கையின் புதல்வர் - இந்த மண்ணை மணந்த மணாளர்-
எதிர்காலத் தமிழகத்துப் பெருமைக்குத் தூதர்'' என்று
அக்ரகாரத்து அதிசய மாமனிதர் வ.ரா. முன்பு
அழகாக வரைந்தார் ஒரு கட்டுரைதான்!
தங்கத்தின் உருக்கில் வந்த தனித்ததோர் ஒளியைப் போல
செங்கதிர் உதயமாகும் செவ்வானம் வெட்கியோடப்
பொங்கியே எழுந்தார் பெரியார், புதுமைக்காளைகள் கோடி.
உறுதியாய்க் கூறி நின்றார் குருதிதான் பணயமென்று!
அங்கத்தில் பழுதென்றால் அறுத்தெறிய ஒப்புகிறோம்,
உயிர்பிழைக்கப்
பங்கமுறு சாதிமத பேதங்களால் அல்லலுறும் - மனித
சங்கத்தின் நோய் களையத் திகைக்கின்றோம்
சரிதானா? எனக்கேட்டார்
அந்தச்
சிங்கத்தின் குரல்கேட்டுச் சிறுநரிகள் ஊளையிட்ட
கதைதானே நடந்ததிங்கே!
வங்கத்துத் தாகூர் போல் தாடியுண்டு
பொங்குற்ற வேங்கை போல் நிமிர்கின்ற பார்வை உண்டு
செங்குன்றத் தோற்றம் உடலில் உண்டு - வெண்
சங்கொத்த கண்களிலே விழியிரண்டும் கருவண்டு - அதில்

சாகும்வரை ஒளி உண்டு!
பம்பரமும் ஓய்வுபெறும் சுற்றியபின் - இவரோ
படுகிழமாய்ப் போன பின்னும் பம்பரமாய்ச் சுற்றி வந்தார்;
எரிமலையாய்ச் சுடுதழலாய்
இயற்கைக் கூத்தாய்
எதிர்ப்புகளை நடுங்கவைக்கும் இடிஒலியாய்
இன உணர்வுத் தீப்பந்தப் பேரொளியாய்
இழிவுகளைத் தீர்த்துக்கட்டும் கொடுவாளாய்
இறைவனுக்கே மறுப்புச் சொன்ன இங்கர்சாலாய்
எப்போதும் பேசுகின்ற ஏதென்சுநகர் சாக்ரடீசாய்
ஏன் என்று கேட்பதிலே வைரநெஞ்ச வால்டேராய்
எம்தந்தை பெரியாரும் வாழ்ந்திட்டார். இன்றைக்கோ
இறப்பின் மடியினிலே வீழ்ந்திட்டார்.
மதுவிலக்கு தேவை என்று மகாத்மா காந்தி சொன்னவுடன்
மதுக்கலயம் கட்டாமல் இருப்பதற்குத் தோட்டத்தில்
மண்டி நின்ற தென்னைகளை வெட்டிச் சாய்த்தார்-
வைக்கத்து வீரர் என்று யாரைச் சொன்னோம்?
''வை கத்தி! தீண்டாமை கழுத்தில்'' என்று
வரிப்புலியாய்க் களம் சென்று வாகைசூடி
வையத்து மக்கள் தந்த பட்டமன்றோ வைக்கம்வீரர்
காங்கிரசுக் கட்சிக்கு மீகாமனாய்க்
கதர் இயக்க வெற்றிக்குத் தளபதியாய்க்
காந்தி வழி நின்றிட்ட கர்மவீரன்
கட்சிக்குள் போராடக் காலம் வந்து
காஞ்சிபுரம் மாநாட்டில் வெளிநடந்தார்
வ.வே.சு. அய்யர் என்பார் வடிகட்டிய தேசபக்தர்
வகுப்புவாத உணர்வாலே வம்புக்கு அழைப்புத் தந்தார்
சேரன்மாதேவி ஊரில் சிறந்ததொரு குருகுலத்தில்
ஒரு குலத்துக்கொரு நீதி கடைப்பிடித்தால்
சகிக்குமா பெரியார் மனம்? சமருக்கு வில்வளைத்தார்

சரித்திரம் படைக்கலுற்றார், அதன் விளைவாய்த்
தன்மான இயக்கத்தின் தந்தையாகத்
தமிழர் இனப்பாதுகாப்புத் தலைவராகப்
பெரியார் ஆனார்- புது
நெறியார் ஆனார்!
பிற்பட்டோர் நலனுக்கென்று நீதிக்கட்சி
பெரும்பணிகள் இயற்றிடவே முனைந்தபோதும் - அது
பித்தாபுரம் பனகல் என்று பிரபுக்கள் காலடியில்
வற்றாத செல்வந்தர் கைத்தடியில் இருந்ததாலே
அனைத மாற்றி
மாளிகையில் இருந்தகட்சி மக்களிடை வருவதற்கு
மாமேதை அண்ணாவின் துணையுடனே வெற்றி கண்டார்
மந்தி கை மாலையென
இந்தி கைத் தமிழர், ஆக
வஞ்சகச் சூழ்ச்சிகள் வலையாக விரிந்தபோது
அஞ்சிடா நெஞ்சுகொண்டு அறுத்தவர் பெரியார்தானே?
அவர்,
பாதம் படாத பட்டி தொட்டி உண்டோ- அவர் பேர் கேட்டுக்
காதம் ஓடுகின்ற ஆத்திகரும் (அவர்) பேசக்கேட்டால், தமிழ்க்
கீதம் கேட்ட கிறுகிறுப்பில் மயங்கிப்போவார்,
அறிவு மழை பொழியும் எழில்
வழியும் - இருள் கழியும்
தெளிவுமிகு உரைகள் பல
ஒளிரும் திறன் மிளிரும் -
கடலின் மடை அலையின் ஒலி - மலையின் முடி-
தழுவும் முகில் வழியும்!
அறிவு மழை பொழியும்!
ஆணவங்கள் அழியும்!
அடிமை முறை ஒழியும்!

அய்யாவின் பேச்சென்றால்
அதிரசம் தின்பதுபோல் கழகத்தவர்க்கு,
அணுகுண்டு வெடித்தது போல்
கயவர்கட்கு!
அவர் தலைமை ஏற்று நானும் அவருடனே
ஆயிரத்துத் தொள்ளாயிரத்து முப்பத்தெட்டில்
ஆரூரில் மாணவனாய் இருந்தபோதே இணைந்துவிட்டேன்
அதன் பிறகு புதுவையில் நான் தாக்குண்டபோது
அய்யாவின் கையாலே மருந்திட்டார், என்காயத்திற்கு!
குடியரசு அலுவலகக் குருகுலத்தில்
கொள்கை வழிப்பாடங்கள் பயின்றகாலை - நான்
தமிழரசுத் தலைவனாக வருவேன் என்றும், எனைவளர்த்த
தந்தைக்கு அரசுமரியாதையுடன்
இறுதி வணக்கம் செய்வேன் என்றும்
எண்ணியும் பார்த்ததில்லை;
''பாராட்டிப் போற்றிவந்த பழமை லோகம்
ஈரோட்டுப் பூகம்பத்தால் இடியுது பார்!
ஈவெரா என்ற வார்த்தை இந்நாட்டு ஆரியத்தின்
அடிபீடம் ஆட்டுகின்ற சூறாவளியாம் - அவர்
வெண்தாடி அசைந்தால் போதும்.
கண்ஜாடை தெரிந்தால் போதும்-
கறுப்புடை தரித்தோர் உண்டு - கொடுமையை
நறுக்கியே திரும்பும் வாட்கள்''
ஈரோட்டு குருகுலத்தில் நான் இயற்றியது இப்பாடல்!
இன்றைக்கும் நினைக்கின்றேன் - பெரியார்
இளவயதில் மறையவில்லை
நிறைவயது வாழ்ந்துவிட்டே ஓய்வு கொண்டார் எனினும்,
தாஜ்மகால் திடுமெனத் தரைக்குள்ளே போய்விட்டால்
அதைக் கட்டி; ஆண்டு பல ஆயிற்றே என்று
ஆறுதல்தான் பெறுவோமா?

தஞ்சைக் கோபுரம் சாய்ந்து விட்டால் அதற்கு
வயது அதிகமென்று சொல்லித்
தாங்குதல்தான் எளிதாமோ? இவரோ,
தஞ்சைக் கோபுரம்போல் உய்யர்ந்தவர்-
தாஜ்மகால்போல் சரிதம் படைத்தவர்-
அவர் வாழ்வார் வாழ்வார் என்று வாழ்த்துகின்றேன்,
வாழ்கின்ற பெரியார் பற்றிப் பாடுதற்கு வண்டமிழ்க்
கவிஞர்களை
வரிசையாக அழைக்கின்றேன்!



# அகத்துறைப் படைப்புகள்

13.7.74 அன்று சென்னை மாநகர மருத்துவக் கல்லூரிகளின் மாணவர்கள் நடத்திய முத்தமிழ் விழாவில் 'அகத்துறைப் படைப்புகள்' என்ற தலைப்பில் நடைபெற்ற கவியரங்கில், கலைஞர் மு.கருணாநிதி அவர்களின் தலைமைக் கவிதையுரை.



வணக்கம்,
வளர்பிறைத் தமிழ் வளர்க்க வந்தவர்க்கும்
தளர்விலாத் தன்மான வேங்கைகட்கும்
கவியரசு கண்ணதாசருக்கும் வணக்கம்.
(நாடு இதனை) நாடிதனை அறிந்து மாத்திரையால் மக்கள்
கேடுகளைந்து காப்பவர்க்கும் வணக்கம்.
அகத்து உறையும் ஆயிரம் பிரச்சினைகள் இடையே
அகத்துறைப் படைப்பு எனும் கவியரங்கத் தலைமை தாங்க-
நகத்துறையும் அழுக்கு கூட உடல் நலத்தைக் கெடுக்குமென்று
பகுத்துரைக்கும் பயிற்சி பெற்ற
மருத்துவத்துறை மாணவர்கள்
வருத்துகின்றார்; ஒப்புக்கொண்டேன்...
மாணவர்கள் தமிழுக்கு விழா எடுத்தல்
மாபெரிய அதிசயமாய்ப் போன நாளில்

மருந்தாளும் வித்தை கற்போர்
விருந்தொன்றைப் படைக்கின்றார் தமிழுக்கென்றால்
சிரந் தாழ்த்தி வணங்க வேண்டும்
கரங் கூப்பித் தொழுதல் வேண்டும்.
வேலைநிறுத்தமென்ற விழலுக்கு நீர் பாய்ச்சிப்
பாலை நிகர்த்த கல்வி பருகாமல் பாழ்படுதல்
சேலை நிகர்த்த விழிப் பெண்கள்.
சேலை இழுத்தல் ஒரு தொழிலாய்ச் சீரழிதல்
ஒருந்தில் சென்று பேருந்து கொளுத்தல்
இவை விடுத்துச்
சீருந்தும் தமிழ் வளர்க்கச்
சேர்ந்தவரே! வாழ்க, வாழ்க!
நானும் ஒரு நாள் மாணவனாய் இருந்ததுண்டு-
என் பெற்றோன்
நானும் ஒரு நிலை வராமல்
நான் என்றும் நடந்ததுண்டு!
படித்திடும் போழ்தோ
துடித்திடும் காதல்...
எனக்குத்
தமிழ்மீது!
கடித்திடும் கரும்பென
இனித்திடும் தமிழ்ப்பணி-
அன்றொரு நாள் ஆரூரில் நான் கண்ட
அரிதான தமிழ்நாடு தமிழ் மாணவர் மன்றம்
அரிமா நடை பாரதிதாசனின்
அருவி நிகர் தமிழ் வாழ்த்தைப் பெற்றது காண்!
அன்றந்த விழா சிறக்க - அன்பாலே
அவர் அளித்த வாழ்த்து இதோ-

"தண்பொழிலில் குயில்பாடும் திருவா ரூரில்
தமிழ்நாடு தமிழ் மாணவர் மன்றங் காண்

வண்மையொடும் உண்மையொடும் வாழ்ந்தி டுங்காண்
மக்களிடை எழுச்சிக்கு மருந்தா குங்காண்
புண் வாய்ந்தோர் அல்லர்காண் திருவா ரூரின்
புலி இளைஞர்கள் தோள்கள் பூரித் தார்காண்

கிளம்பிற்றுக் காண் தமிழச் சிங்கக் கூட்டம்
கிழித்தெறியத் தேடுதுகாண் பகைக் கூட்டத்தை
வளம் பெரிய தமிழ்நாட்டில் தமிழரல்லார்
வால் நீட்டினால் உதைதான் கிடைத்திடும் காண்!''
இந்தப்
புரட்சிக் கவிஞரது போர் முழக்கம்
புறம் அகம் நூல்கள் தரும்கவி முழக்கம்
புதுமைத் தமிழின் பெரு முழக்கம்!
பொங்கிடும் இளமையின் தனி முழக்கம்!
அந்நாளை எண்ணுகின்றேன் - இன்பத்தை
நினைவாலே உண்ணுகின்றேன்
இந்நாளும் அதுபோல வாராதோ?
கண்ணான மாணவர்கள் கண்விழித்துப் பாராரோ?
பொன்னான தமிழ்காக்க ஓரணியில் சேராரோ?
எண எண்ணி வலிக்கின்ற நெஞ்சுக்கு
ஏற்ற மருந்தாக இந்த விழா அமைந்தென்பேன்!
அகத்துறைப் படைப்பென்றும்
புறத்துறைப் படைப்பென்றும்
வகுத்திட்டார் இலக்கியத்தைப் பழந்தமிழர்
இகம்பரம் என்பது தமிழுமல்ல;
தமிழர்க்குரியதுமல்ல!
அகம் புறம் என்பதே தமிழாம்
தமிழர்க்கே உரியதாய்த்
திணை பிரித்து எழுதிய தமிழன் திறனுக்கு
இணை கொடுத்து நிற்க இலக்கியமேது?

''கைக்கிளை முதலாப் பெருந்திணை இறுவாய்
முற்படக் கிளந்த எழுதிணை என்ப''

ஒல்காப்புகழ் வாய்ந்திட்ட
தொல்காப்பியம் சாற்றும் இதனை!
''அகம் பெரிதா? புறம் பெரிதா?'' என
அன்றொரு நாள் அன்பழகருடன் வாதிட்டேன்
அறிஞர் அண்ணா இடைமறித்து விளக்கம் தந்தார்!
''பகிர்ந்து கொள்ளக்கூடியது புறம் தம்பி-
பகிர்ந்து கொள்ள முடியாதது அகம் தம்பி!''
அந்த
அண்ணாவின் விளக்கம் தான்
அகத்துறைக்கே விளக்காகும்-
பண்பாடுடைய அகத்திணையின் பெருமைதனைப்
பாண்டவரும் பாஞ்சாலியும் உணராததால்
பகிர்ந்து கொண்டனர் அகத்துறையை ஐவருக்கும்!
அது அவர்தம் மரபின் குற்றம்;
பண்பாடு அதுவெனப் பாராட்டி மகிழ்தல்-
பகுத்தறிவு அற்றோர் குற்றம்!
அகத்திணை புறத்திணை இரண்டே ஆயினும்
தினைத்துணையும் அகலாது திகழ்தல் காண்பீர்-
வேல்பாய்ந்த புண்ணோடு வீரன் வருவான் - காதலி
வேல் பாய்ச்சும் விழியாலே மருந்து தருவாள்!
குளத்துக்குள் மீன்போலக் கூடிக்கிடந்தாலும் - போர்க்
களத்துக்கு அழைப்பென்றால் கரை ஏறிடுவார்
கண்ணுக்குள் கண்ணைவைத்துக் கலவிக்கலை துய்த்தாலும்
மண்ணுக்குத் தீமையெனில் மறவர் குலம் எழுந்து விடும்
அக்குலத்தின் மாண்பதனைச் சித்தரித்துப்
பொற்புடைய கவிமாரி பொழிவதற்குச்
சொற்குலத்தின் சொந்தக்காரரெலாம் வந்துள்ளார்-
நற்குலத்தைப் பழிப்பவர்க்கும்

நாக்குத் தழும்பேறியோர்க்கும்
நாய்க்குலத்தின் அறைகூவல்
தமிழ்க்குலத்தின் போர்ப்பரணி
கேட்கட்டும்! கேளாச் செவிப்பறையைக்
கிழிக்கட்டும்!
அகத்துறையில்,
தலைவன் என்றும் தலைவி என்றும்
செவிலி என்றும் தோழன் என்றும்
தாய் என்றும் ஊர் என்றும்
நிலவு என்றும் தென்றல் என்றும்
தோழி என்றும் துணை நின்று
தோகை விரித்தாடுந் தமிழில்
பாகை வெல்லும் கவி தந்து
வாகைசூடக் கவிஞர் உள்ளார்-
தலைவன் எனத்தலையற்றோர் சிலர்
சொல்லிக் கொள்ளுநும் இற்றை நாளில்
நிலையான அகத்திணையின் தலைவர் பற்றிப்
பாடக் கேட்போம்-
தலைவி என்பாள் தலைவிதியை
எண்ணிக் கொண்டு கிடப்பவளோ?
இல்லை! இல்லை!
தலைவிதியை மாற்றுதற்குத்
தோழியினை தூதாக்கித்
செவிலியையும் தோதாக்கித்
தென்றல் சுமந்து வரும்
காதலனை
நின்று சுடும் நிலவினிலே வரவேற்கக்
காத்திருப்பாள்-
தோழன் என்றும் துரோகியானதில்லை அகப்பாட்டில்!
புறப்பாட்டில் துரோகி உண்டு - அவனது ஆரம்பப்
புறப்பாட்டிலேயே அது வெளிச்சமாகும்!

ஊரார் பழிப்புக்குக் காதல் ஒளிந்து மறைவதில்லை-
ஆனால் இன்று

ஊரார் எதிரிலேயே, கடற்கரையில்-
காருக்குள் - கலையரங்கில்-
காதல் சேட்டை என்ன நியாயம்?
ஊரார் எல்லாம் ஊனமுற்ற விழி படைத்தோர்
எனும் நினைப்போ?
அன்றிக்
காதலர்கள் கண்மூடிக் கொள்வதாலே
காசினியே கண்மூடிக் கொண்டதாகத்
துணிதல் நன்றோ?

காதலுக்கும் வழி வைத்துக்
கடமைக்கும் இடம் வைத்துக்
கண்ணியத்தை நிலை நிறுத்திக்
கட்டுப்பாட்டுடன் வாழ்வதுதான்
அகத்துறைப் படைப்பாகும் - குடும்பக்
கட்டுப்பாட்டுடன் வாழ்வதுதான் - இன்றைய
அகத்துறைப் படைப்பாகும்!
அகத்துறையில் படைப்பென்று நினைத்து
ஆறு, ஏழு, எட்டென்று படைத்து விட்டால்-
பின் அந்தப்
படைப்பினால் மிகுவது
பதைப்பே யாகும்!
அறிந்து சொன்னேன்... நன்றாய்ப்
புரிந்து சொன்னேன் -அனுபவத்தில்
தெரிந்து சொன்னேன்-
உணர்வீர் நன்கு!

# பொங்கல் விழா

சென்னை மாவட்ட தி.மு.க. சார்பில் 14.1.75
அன்று கலைவாணர் அரங்கில் நடைபெற்ற
பொங்கல்விழாக் கவியரங்கில்
கலைஞர் மு.கருணாநிதி அவர்களின்
தலைமைக் கவிதையுரை.

★

வணக்கம்,
பேரன்பு கொண்டோரே, பெரியோரே,
பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும்
ஒன்றெனக் கருதும் நல் இளம் செல்வங்காள்!
ஒரு வயிற்றில் பிறப்பதற்கு அவ்வயிற்றில் இடமில்லை
அதனாலே
ஒரு கோடித் தாய் வயிற்றில் பிறந்திட்ட உடன் பிறப்புத்
தமிழர்களே!
அனைவர்க்கும் வழங்குகிறேன்
பொங்கற் புதுநாள் வாழ்த்துக்கள் ஏற்றிடுவீர்!
வண்ணத் தமிழ் எடுத்துக் கவிதை
எண்ணச் சித்திரங்கள் தீட்டுதற்கு
வந்துள்ள புலவர்களே வணக்கம்!
பொங்கல் எனும் தலைப்பினிலே கவிபாட நீவிர்
பொங்கித் தான் வந்திருப்பீர் நானறிவேன்,

உணவு பொங்கித்தான் வந்திருப்பீர் என்றேனா?
உணர்வு பொங்கித்தான் வந்திருப்பீர் என்கின்றேன்
உண்மைதானே!

ஞாயிறு போற்றுதும்
ஞாயிறு போற்றுதும்
சிலம்பொலி கேட்குது
சிந்தையில் இனிக்குது
ஆயிரம் நிலவுகள் ஆயிரம் மாதர்கள்
ஆயிரம் கதிரவர் ஆயிரம் ஆடவர்
ஞாயிறு போற்றினர்
ஞாயிறு போற்றினர்
ஆயிரம் கோடியாய் ஆயினர் தமிழர்
பாயிரம் பலப்பல பாடினர் தமிழர்
ஞாயிறு போற்றியே கூடினர் பொங்கலில்
ஞாயிறு போற்றியே ஆடினர் பொங்கலில்
மாவிலை தோரணம் மஞ்சள் வாழை
கோயிலின் முரசம் கோலம் கண்டனர்
பெங்கலோ, பொங்கல்
பொங்கலோ பொங்கல்
குறிஞ்சி, முல்லை, நெய்தல், மருதம், பாலை நிலமெனப்
பிரிந்து வாழினும் தமிழர் பண்பைப்
புரிந்து வாழ்ந்தனர்.
கல்தோன்றி மண் தோன்றாக் காலத்து
முன்தோன்றி மூத்தகுடி எனினும்
காடு கொன்று நாடாக்கக்
குளம் தொட்டு வளம் பெருக்கக் கற்றனர் அன்னார்.
வில் தோன்றும், தோள்களிலே - அது
வீரம் காட்டும்.
நெல் தோன்றும், வயல்களிலே - அது
வேளாண் திறத்தைக் காட்டும்.

சொல்தோன்றும் புதிது புதிதாக - அது
மொழியின் வளத்தைக் காட்டும்.
எழுத்து, சொல், இரண்டேயன்றிப்
பழுத்த நெல் தொல்காப்பியன் - தமிழ்த்தம்
செழிப்பு மிகு வாழ்வுக்கும்
தொகுத்தளித்தான் இலக்கணநூல்.
கொய்யாக்கனித் தமிழால் - குறள்
நெய்தான் உலகுக்கு வள்ளுவனும்.
பெய்யாமழை பெய்ததுபோல் மகிழ்ச்சி கொள்வோம்

அவன்

பொய்யாமொழிக் கவி கேட்டு!
சிலம்பு வளையும் சீர் மேகலையும்
சிந்தாமணியுடை குண்டலகேசியும்
அன்னைத் தமிழின் அணிகளாய் ஆயின
அந்நாள் புலவர் ஆற்றிய பணிகளால்!
எத்துணை நூல்கள் எத்துணைப் புலவர்
கற்றுணர் மக்கள் உற்றுணர் பெட்டகம்
பெற்றுநம் தமிழர் வாழ்ந்தனர் அந்நாள்!
பழந்தமிழர் பெரு நூல்கள் நினைத்தவாறு
படுக்கையிலே சாய்ந்திருந்தேன் ஒரு நாள்....
பக்கமது நெருக்கமாகப் படுத்துக் கொண்டு
வெட்கமது ஒரு சிறிதும் இல்லாமல்
ஒருத்தி தழுவிக் கொண்டாள்.
அவளை,
அள்ளி அணைப்பதற்கு நான் முயலவில்லை என்றாலும்
தள்ளிவிட மனமில்லை, தழுவட்டும் என்றிருந்தேன்
அதன்பின்னர் மற்றொருத்தி வந்தாள் - அவள்
வானவில் சதிராட்டக்காரி
வானம்பாடியென இசை கூட்டும் மாயக்காரி
என்ன இது? இருமங்கை - ஒரு படுக்கை-

எனக் கேட்பீர்! பொறுத்திடுக
முதலில் வந்தவள் பேர் தூக்கம்;
மற்றொருத்தி கனவுமங்கை.
அந்தக் கனவினிலே நான் கண்ட காட்சியெலாம்
தமிழ்க்காட்சி! தமிழர் ஆட்சி!
மன்றமொன்றில் இசைவாணன் கீத மழை பொழிகின்றான்
மக்கள் எல்லாம் மது குடித்த வண்டுபோல மயங்குகின்றார்.
மங்கலமாய் இசை நிகழ்ச்சி முடியும் போழ்து
மக்கள் சிலர் ஆர்வமுடன் மேலும் 'பத்துப்பாட்டு'
பாடு என்றார்.
மலைத்துவிட்ட இசைவாணன், கனைத்துக்கொண்டு
''பாடுகின்றேன்; மேற்கொண்டு
என்ன தொகை தருவீர்'' என்றான்.
வெடுக்கென ஓர் புலவன் எழுந்து நின்று விடையிறுத்தான்
''எட்டுத் தொகை'' தருவதாக!
இசைவாணன் புரிந்து கொண்டு, இஃதென்ன நியாயம்?
எந்தன் பத்துப்பாட்டுக்கு எட்டுத்தொகையா?
அஃதெனக்குக் ''குறுந்தொகை'' என்று சொன்னான்.
ஓகோ! ''ஐங்குறுநூறு'' வேண்டுமோ எனக் கடிந்தார் புலவர்
நூறு வேண்டேன் - அதனைத் தீண்டேன் தீண்டேன்.
நானூறு தருவீரோ புலவரேறே! அதுவும்
அகத்தில் நானூறு - புறத்தில் நானூறு
என்று வளைத்தனன் இசையில் வல்லவன்,
புறத்தில் நானூறு அகத்தில் நானூறு
புரிந்து கொண்டார் புலவர் பெருமகன்.

''புறநானூறு'' கையில் நானூறு
''அகநானூறு'' கறுப்பில் நானூறு
பொல்லாச் செயல் அது! பொல்லார் செயல் அது!
வருமான வரிதனை ஏய்ப்போர் செயல் அது!

காய்த்திருக்கும் கனிமரம் வெட்டும் கோடரிக்
காம்பின் செயல் அது

அதனாலே
பாட்டுக்குத் தொகை கேட்கும் பேச்சுதனை விட்டொழிப்பீர்
பசும்பால் தருவோம் தொண்டைக்கு, தேவையெனில்
முப்பாலே தருவோம் பாடிடுக என்று சொன்னார்.
முப்பால் தருவதாக மொழிந்திட்ட புலவரய்யா!
பொருட்பால் ஒன்றுக்கே இனி என் தொண்டை பேசும்
என்று இசைவாணன் எழுந்துவிட்டான்
நீண்ட துயில் கலைந்தெழுந்தேன்;
''நெடுநல்வாடை'' பட்டதாலே!
கனவின் நினைப்பெல்லாம் நெஞ்சில்
கரும்பாக இனித்ததம்மா!
தமிழ் நினைத்து, இதயத்தைத்
தமிழால் நனைத்து
இமிழ் கடலில் ஆதிக்கம் செலுத்தியவர் நம் தமிழர்
உமிழ் நீரை வாயில் தேக்கி
ஊத்தைப் பல் துலக்கிவிட்டு மீண்டும்
உடலுக்குள் கொப்பளித்து விழுங்குதல் போல்
அமிழ்தான இனப்பண்பு, கலை மாண்பு, இலக்கியங்கள்
மாய்ப்பதற்குத்
தமிழர்களே ஒப்பிவிட்டார் - கெட்ட
உமிழ் நீரை உடலுக்குள் துப்பிவிட்டார்.
அழுக்குச் சேர்ந்த குடலை வெளுத்திட வேண்டும்.
அதற்கு மருந்தெனும் நல்ல சலவைத் தொழிலாளி வேண்டும்
முழுக்குப் போடுவதால் உடல் புறந்தூய்மை ஆகும்.
உள் தூய்மை ஒளடதத்தால்-
உளத் தூய்மை வாய்மையாலே ஆகும்.
இந்த வாய்மைக்கு வழி வைத்து
வைதீகக் கோட்டைக்கு வெடி வைத்து

அறுபது ஆண்டுகள் அஞ்சாது போரிட்டார் நம்
அண்ணாவின் தலைவர் பெரியார்!
அவர் போட்ட அடுப்பிலே தான்
இன்று
பொங்கல் பொங்குது
போலிகள் மங்குது
பொய்மைகள் எரியுது

பத்து தலையுடையாள் இருபது கையுடையாள்
கத்து கடல் வாயுடையாள் கண்கள் பல நூறுடையாள்
மாட்டு முகமுடையாள் மனித உடலுடையாள்
மகர சங்கராந்தியெனும் பேருடையாள்
மலைபோல் மூக்குடையாள்
என எழுதி ஏமாற்றப் புனைந்த கதை
இடிமுன்னே பாம்பு போல் மறைந்தொழிந்து
ஈரோட்டு முழக்கத்தால் மாய்ந்ததன்றோ!
அதைத் தொடர்ந்து நம் அண்ணா
இன உணர்வுத் திருநாளாய்ப் பொங்கல் கண்டார்
ஏர் உழவர் பெருநாளாய்ப் பொங்கல் கண்டார்!

# சிலப்பதிகார விருந்து

பூம்புகார் கொற்றப்பந்தரில் 25.4.1975 அன்று
மாலை நடைபெற்ற ''சிலப்பதிகார விருந்து''
என்னும் தலைப்புள்ள கவியரங்கில்
**கலைஞர் மு.கருணாநிதி** அவர்களின்
தலைமைக் கவிதையுரை

★

வணக்கம்

வண்ணத் தமிழ் வடிவம் எங்கள் நாவலர்க்கும்
எண்ணைக் கருவூலம் இனிய பேராசிரியர்க்கும்
**கண்ணெனாத்த மன்னை, சாதிக் அமைச்சருக்கும்**
அண்ணன் வழிவந்த அனைவர்க்கும் வணக்கம்.
சிலம்பொலிக்கும் சிவஞானச் செல்வர்க்கும்
செந்தமிழ்ப் பழஞானக் கணேச நல்லார்க்கும்
சிரம் தாழ்ந்த வணக்கம்.

சீரழிந்த பூம்புகாரைச்
செம்மையுறச் செய்யும் பணி
ஆர்வமுடன் நடப்பதற்கு
அழைப்பேற்று வந்துள்ள
அன்புள்ளம் அத்தனைக்கும் அடியேனின் வணக்கம்.
சிலப்பதிகார விருந்தொன்றைத் தருவதற்குச்
சீலமிகு தமிழெடுத்து வந்துள்ள

கவிநெஞ்சங்கட்கு - என்
கனிவான வணக்கம்.

அருந்தமிழே! அமுதே!
நறுமலர் மணமே! தேனே
அன்னையாய் வந்தென்னை ஆட்கொண்டவளே!
அண்ணனாய் வந்தென்னை ஆளாக்கியவளே!
காஞ்சி அண்ணன் கால்மலர் தொழுது
கவியரங்கம் தொடங்குகின்றேன்
வாழ்த்திடம்மா
தமிழர்கள் வாழ
தமிழ் நிலம் வாழ!
குடகுமலை உச்சியிலே கோலங்காட்டி
அழகுமகள் காவிரியும் ஆடவந்தாள்
ஆடவந்த ஆரணங்கை அடைவதற்கு
ஓடிவந்த கர்நாடகத்தான் ''அணை'' என்றான் - அவன்
கையணைனையைத் தாண்டிக் கல்லணைக்குள் நுழைந்து-தன்
கற்புநெறி காப்பதற்குத் தஞ்சைக்குத் தாவி வந்தாள்
பூம்பாவை காவிரியின் புகார் கேட்டுச் சோழ மன்னன்
பூம்புகாரின் கடல் அலையைக் கணவனாய் ஆக்கிக் காத்தான்
பிறந்த வீட்டை மறந்திடாமல் - என்றும்
புகுந்த வீட்டு வளம் பெருக வாழ்வதுதான்
பெண்மணிக்குப் பெருமையென்றால் - நம்
கண்மணியாம் காவிரிக்கும் அது பொருத்தம்தானே?
இவ்வாறு,
காவிரி புகுந்த பட்டினம் தான்
காவிரி புகும் பட்டினமாய்த் திரிந்து நின்று
காவிரிப் பூம்பட்டினமாய் மாறிற்றென்பேன்.

கரிகாலன் பெருவளத்தான் திருமாவள்வன்

கனிவுமிகு நடபுக்கு அவன் உறையும் வாளும்
கயமைமிகு பகைமைக்கோ உறை விட்டெழுந்த வாளாம்
உறையூரைத் தலைநகராய்க் கொண்டு - பின்னும்
ஒரு ஊரை மணந்து கொண்டான் தலைநகராய் - அந்த
இரு தார மணத்தானுக்கு வாய்த்த இளையவளே
இனியவளாய் இங்குநமை வரவேற்கும் பூம்புகாராம்.
''நீரின் வந்த நிமிர் பரிப் புரவியும்
காலின் வந்த கருங்கறி மூடையும்'' என
பட்டினப்பாலை முழங்குகின்ற துறைமுகப்
பட்டினமாய் விளங்கிற்றந்நாள்!
மருவூர்ப்பாக்கமுண்டு ஆங்கு மறங்கெழுவீரருண்டு
மருவு பெண்ணாசையால் மயங்குகிற
மாநகர நம்பியர்கள் நடமாடும் பகுதியுண்டு
நாளங்காடி உண்டு - அங்கு பிற
நாட்டார்கள் நாள்தோறும் வருதல் உண்டு
அரச வீதி ஆடும் கொடித் தேர் வீதி
வணிகர் வீதி வாய்மை நிறை வேளாளர் வாழும் வீதி
மருத்துவர், சோதிடர், மாகதர், கூத்தர்
மண்டிக்கிடக்கும் யானை குதிரை சூழும் வீதி
சித்திரப் பாக்கமெனச் செப்பும் சீர்மவி
பட்டினப் பாக்கமாய்த் திகழ்ந்ததந்நாள்
வடநாட்டுப் படையெடுப்பில் சோழன் பெற்ற
புகழ்நாட்டும் பட்டிமன்றம், முத்துப்பந்தர்,
தோரணவாயில், தொல்புவியில் தமிழன் வெற்றி
நிலைநாட்டும் நெடுங்கல் மன்றம், இலஞ்சி மன்றம்,
கலைநாட்டம் கொண்டோரைக் கவர்ந்திழுக்கும் பாவை மன்றம்,
முருகன் கோட்டம், அதனருகே திருமால் கோட்டம்,
அருகன் கோட்டம், அதனருகே புத்தர் கோட்டம்,
முத்தமிழ் ஒலிக்கும் கோட்டம் நாள்தோறும்
சித்திரைத் திருநாள் கூட்டம்

இதையெல்லாம் சித்தரிக்கும்
இளங்கோவின் குணவாயிற் கோட்டம்
எல்லாமே அழிந்ததம்மா கடலாலும் காலத்தாலும்
என்றாலும்
சேரன் தந்த சிலம்புச் செல்வம்
அழியாத கருவூலம் அணையாத திருவிளக்கு

அந்த,
விளக்கொளியில் விழிப்புற்று
மறக்கவொண்ணா மொழிப்பற்றால்
விளைந்தது தான் புதிய புகார் - வெறும்
வீணர்கள் தினம் எழுப்புகின்ற புகாரல்ல!
வெங்குருதி தனிற் கமழ்ந்து வீரஞ்செய்கின்ற தமிழ் மூச்சால்
பொங்கிப் படைத்த புதிய புகார் - பூம்புகார்.
மனை விளக்குக் கண்ணகிக்கும் மாதரசு மாதவிக்கும்
பனைவைர மார்பன் கரிகாற் சோழனுக்கும்
பாவரசு இளங்கோவின் பண்பார்த்த சிலம்புக்கும்
எழிலார்ந்த புத்துருவம் கொடுக்கச் செய்ய
எனைப் பெற்ற தமிழுக்கும் என் தாய் தந்தை
இருவர்க்கும் எவ்வாறு நன்றி சொல்வேன்?

நமக்குச்
சிறப்பதிகாரம் பலவற்றை உரிமையாக்கத் - தன்னாட்சி கோரி
இறப்புவரினும் அதனை உவந்தேற்போம் என்றும் - பதவி
துறப்புவரினும் பொருட்படுத்தோம் என்றும் - இந்தச்
சிலப்பதிகாரமன்றோ உணர்வூட்டல் கண்டோம்!
வஞ்சகர் வந்தவர் தமிழால் செழித்தார்
வாழ்வினில் உயர்ந்தார் நம் வரலாற்றை அழித்தார்
இன்று
கொஞ்சுகின்ற சிலம்பன்றோ நம் சரித்திரத்தைக்
கொஞ்சமேனும் காட்டுகின்ற கோபுரத்துத் தீபம்.

சிலப்பதிகாரம் என்னும் பெயரால்
நாட்டுதும் யாம் ஓர் பாட்டுடைச் செய்யுளென
முடிகெழுவேந்தர் மூவர்க்கும் உரியதை
அடிகள் நீரே அருளுக என்றிட
எழுந்த காப்பியம் எழுச்சிக் காப்பியம் -அந்த
இலக்கியத்தில் விருந்தொன்றை அளிப்பதற்கு
இணையற்ற கவிஞர் எண்மர் இங்குள்ளார்.
''நகையே அழுகை இளிவரல் மருட்கை
அச்சம் பெருமிதம் வெகுளி உவகையென்று
அப்பால் எட்டே மெய்ப்பாடென்ப''
இலக்கணக் கிழவர் இயம்பிய வழியில்
எட்டுச் சுவையை இங்கே படைப்பர்.
நகை அழுகை இழிவு வியப்பு
அச்சம் வீரம் வெகுளி உவகை எனப்
பகை நோக்கமின்றிப் பாடுகின்ற போட்டி.
அழுகையினால் நகை கேட்டு அடையக் கூடும்
அச்சத்தால் அடங்குகிற அத்தானை மனந்துவிட்டால்...!
இழிவு வந்தும் வெகுளாதார் நிலை கண்டு
வீரர்க்கு நெஞ்சில் வியப்புத் தோன்றும்!
உவகையும் அழுகையும் ஒரு தாய் மக்கள்
ஒருவரை ஒருவர் நிழல்போல் தொடர்வர்!
இந்த
எட்டுச்சுவை
பிட்டுத் தமிழ்
கட்டித் தயிர்
வட்டில் நிறை
கொட்டித் தர
பட்டுக் கொடி
கொற்றக் குடை
முத்துச் சர
சோழனூர் வருவீரே!

சுவை விளக்கம் தருவீரே!
என அழைத்தோம்; எண்மர் இதோ வந்துள்ளார்!
எட்டெழுத்துச் ''சிலப்பதிகாரம்'' இயற்றியவர் - சுவை
எட்டெடுத்துச் சேர்க்காமல் விடுவாரோ?
''என்னும் எழுத்தும் இயல் ஐந்தும் பண் நான்கும்
பன்னின்ற கூத்துப் பதினொன்றும் - மன்னின் மேற்
போக்கிய பூம்புகார்ப் பொற்றொடி மாதவி தன்னோடு
அனைவுறு வைகலின் அயர்ந்து மயங்கி
விடுதலரிய விருப்பின னாகிய கோவலன்''
கெடுதலறியாக் கண்ணகியுடன் பகிர்ந்த இன்பம் கணக்கிலதே!
தும்பை மலர்க் கண்ணகியும் கோவலனும்
''தூமப் பணிகளொன்றித் தோய்ந்தாலென வொருவார்
காமர் மனைவியெனக் கை கலந்து - நாமந்
தொலையாத இன்பமெலாம் துன்னினார்.... மண்மேல்
நிலையாமை கண்டவர் போல் நின்று''
உவகையில் மட்டுமல்ல;
அழுகையிலும், ஆளன் தாள் பற்றித்
தொழுகையிலும் மாதவி, கண்ணகி பாத்திரங்கள்
போட்டி போடும்

'காவா நாவிற் கனகனும் விசயனும்
விருந்தின் மன்னர் தம்முடன் கூடி
அருந்தமிழாற்றல் அறிந்திலராகிச்
செப்பிய மொழிகளைச் சேரன் கேட்டுக்
கொட்டுக முரசெனக் கூறிய சொல்லும்
கொடியவர் முடித்தலை ஏறிய கல்லும்
வீரச்சுவை விளக்குகிற காட்சி - தமிழ்ன்
வெற்றிக் கொடி பறக்கவிட்ட மாட்சி!

தித்திக்கும் தேன்பாகைத் தெவிட்டாத தெள்ளமுதக்
கோவலனை

எத்திக்கும் புகழ் பாண்டியனோ திருடன்னனக் கொன்றுவிட,
தீச்சுழலாய்ப் பெருகிவந்த கண்ணகியோ
தீர்ப்பளித்த மன்னவனைத் தலைகுனிய வைப்பதற்குச்
சிலம்பெடுத்து உடைத்தபோது - தன்
எலும்பெடுத்து உடைத்ததுபோல்
வியப்புற்றான் மதுரை வேந்தன்
உடன் வீழ்ந்திறந்தான்
'நீதி வழுவா நெறிமுறைப் பாண்டியன் நான் - அந்த
நெடுஞ்செழிய மன்னவனா நீதி தவறிவிட்டேன்?
என்ற கேள்வியில்தான் எத்துணை வியப்பு?
எத்துணைப் பதைப்பு?

வியப்புறுதல், நகைத்தல், அழுதல், வெகுளல்,
வீரம், இழிவு, அச்சம், உவகை என்னும்
எட்டுவகைச் சுவையினிலே எதிலும்
ஒட்டுறவு இல்லாத பிறவிகளும் உலகிலுண்டு!
இடி முழுக்கம் கேட்பது போல் அரங்கில்
வெடிச் சிரிப்பு நகைச் சுவையைக் கலைவாணர்
படித்தவர்க்கும் பாமரர்க்கும் வழங்கும்போது
இடித்து வைத்த புளிபோல் சிலர்போர்
இளித்திடவும் விரும்பாமல் இருப்பதுண்டு!
அடுக்கடுக்காய்ச் சிறைவாசம்
அடக்குமுறை வனவாசம் எனறே
அருமைமிகு கொள்கைக்குத் தியாகம் ஏற்ற
பெருமைமிகு தலைவர்களும் மறைந்து விட்டால்
அழுகை நிறை அகத்தினராய்
ஆயிரம் பதினாயிரம் நூறாயிரமென மக்கள் கூட்டம்
இடுகாட்டுப் பொட்டலிலே ஏங்கி நிற்கும்
இறந்தவர்க்கு இறுதி வணக்கம் செய்வதற்கு; அப்போது
கோமாளிக் கூத்தாடும் ஓர் மனிதன் அங்குவந்தால்

ஏமாளிக் கூட்டமொன்று கூச்சல் போடும்!
கைதட்டு - ஆரவாரம் - களிப்புக்கூத்து - நம்
காதுகளும் கண்களும் தாமாக மூடிக்கொள்ளும்!
அழுகைக்கும் உவகைக்கும் இடம் பொருள் தெரியாதோர்;
கழுதைக்கும் கீழானோர் எனச் சொல்வேன்!
நூற்றிரண்டு மெய்ப்பாடாம் சுவை பிரித்துப் - பழ
நூற்புலவர் தொல்காப்பியர் கருத்து நெய்தார்.
அவற்றில் தலையான எண்சுவையும் கிளையான பல்சுவையும்
கவிநயத்தில் காட்டுதற்கு இங்கே கவிஞருண்டு
அவிநயத்தில் காட்டுதற்கும் அணங்கு உண்டு.
ஆனாலும் சில பெண்கள் ஆட்டம் கண்டால் - நம்
வாணாளில் பெரும்பாவம் செய்தோர் ஆவோம்!
தீப்போலத் தகிக்கின்ற காமத்துக்கும்
தேள்போலக் கொட்டுகின்ற கோபத்துக்கும்
சினங்கொண்ட நாகமெனச் சீறுகின்ற ''பாவ''த்துக்கும்
செம்மாதுளைக் கன்னங்கள் குவிக்கின்ற நாணத்துக்கும்
சிறிதளவு வேறுபாடும் ஏற்றத்தாழ்வும் இருப்பதில்லை.
அரிதாரப் பூச்சு முகத் தசையிலோர் அசைவுமில்லை.
அங்கங்களின் சேட்டையன்றித் தங்க மகள் சிலை முகத்தில்
அணுவளவு மாற்றமேனும் அவிநயத்தால் கண்டதுண்டோ?
'திமி திமி' என ஆடுகின்றார் - அவை அதிர
'மிதி மிதி' எனச் சேறு மிதிக்கின்றார்
அவரெல்லாம் தொடர்ந்து ஆடிவந்தால் - குட்டிச்
சுவராகும் நடனமேடை! கொலையாகும்
- கலை என்பேன்

இறுதியிலே 'உவகை' வைத்து எட்டுவகை மெய்ப்பாட்டை
அறுதியிட்டு மாலை செய்தார் காப்பியனார் - இன்றோ
உவகையுடன் தொடங்கிடுவோம் கவியரங்கம்
உறுதிமிகு வீரத்தைக் கடையில் கேட்போம்
கடைச் சரக்கா வீரமெனக்

கண்மணியே கேட்காதே - சில
கட்சித் தலைவர்க்கு விலை கேட்கும்.
பொருளாய்த் தான் போயிற்று வீரம்!
போர் என்றால் நான் முந்தி நீ முந்தி
எனும் கூட்டம் நம் கூட்டம் - அக்கப்
போர் பேர்வழிகள் கூட்டமல்ல! வைக்கம்
போர் வீரர் வழி வந்தவர் நாம்! வைக்கோல்
போர் இந்தத் தீயுடனே விளையாடலாமா?
எதற்காக நல்லரங்கில் பிறர் நினைவு!
உவகையிலே தொடங்கி நம் கவியரங்கு
உலகு புகழ் வீரமுடன் முடியட்டும்.
கடையில் வீரம் கேட்கலாம் என நானிங்கு
கழறியதின் விளக்கம் புரிகிறதா நன்கு?
இடையழகு மணிமேகலையில் காட்டிக், சிலம்பில்
நடையழகு காட்டுகின்ற தமிழணங்கே! இதோ, கவிஞர்
படை வரிசை கிளம்பிற்றம்மா உனக்குப்
பா வரிசை வைப்பதற்கு! நடக்கட்டும்
கை வரிசை! நானழைக்கின்றேன் கவிஞர்களை!

**கவிஞர்களை அறிமுகம் செய்து தலைவர்:**

முதலில்,
வைரமுத்துக் கவிஞர் சிலம்புப்
பரலில் உவகை பற்றிப் பாடிடுவார்

(கவிஞர் வைரமுத்து 'உவகை' பற்றிப்
பாடி முடிக்கிறார்)

அடுத்து,
உவகையைத் தொடர்ந்து அழுகை வரல் காண்பீர்!
உருவிலே பெருந்தேவன் வயதிலே இளந்தேவன்

சிலம்பிலே 'அழுகை' எனும் அழுதை
செந்தமிழில் அள்ளி அள்ளித் தருவார்.

(கவிஞர் இளந்தேவன் 'அழுகை' பற்றிப்
பாடி முடிக்கிறார்)

அடுத்து.
அழுகை கண்டு நகைப்பவரும் உண்டு
அந்தக் கல்நெஞ்சுக் கவி கண்ணப்பன்
நகையோடு வருகின்றார்... கோவலன்போல் வரவில்லை
சிலம்பென்னும் நகையோடும் மதுரைக்கு வரவில்லை.
சிலம்பினிலே செழிக்கின்ற
நகை காட்டப் பூம்புகார்க் கவியரங்கிற்கு வருகின்றார்:

(கவிஞர் கண்ணப்பன் 'நகை' பற்றிப்
பாடி முடிக்கிறார்)

அடுத்து
வீணாக நகைப்பவர் மேல் வெகுளியால்
பாய்ந்திடுவோர் உண்டு
சீராகக் கால்தூக்கி ஆடுகின்ற நடராசன் தில்லையிலே
இங்கு.
நேராகக் கவிதூக்கி வருகின்றார் தி.கு.நடராசன்
தமிழ்க் கொல்லையிலே...
வெகுளி பற்றி வெகுளாமல் பாடுமய்யா!

(கவிஞர் தி.கு. நடராசன் 'வெகுளி' பற்றிப்
பாடி முடிக்கிறார்)

அடுத்து.
வெகுண்டவரைக் கண்டாலே அச்சம் வரும்
தகுந்தவரைக் கொண்டதனைப் போக்கிடவே
தமிழன்பக் கவிஞரை நாம் அழைத்துள்ளோம்.

அவை அச்சமின்றிச் சொல்லாடும் அருந்தமிழா;
சுவை சொட்டும் மொழியாலே கவிதை பொழி!

(கவிஞர் தமிழன்பன் 'அச்சம்' பற்றிப்
பாடி முடிக்கிறார்)

அடுத்து,
அஞ்சுவ தஞ்சல் அறிவார் தொழில் எனினும்
வெஞ்சமர் முடுக்கிக் கொள்கையில் வென்றிட
அஞ்சுதல் தீதே! ஆண்மையும் இலதே;
அச்சம் வரின் 'இழிவு' வருமென்று ஆண்ட தமிழ்
இனத்துக்கு

அறிவுறுத்த வருகின்றார் அப்துர் ரகுமான்
அவர் பாடுகின்ற சுவை 'இழிவு'
ஆனால் அது தமிழ்ப் பொழிவு!

(கவிஞர் அப்துர் ரகுமான் 'இழிவு' பற்றிப்
பாடி முடிக்கிறார்)

அடுத்து,
இழிவு வரின் இறப்பதுதான் தமிழர் மாண்பு
இது வந்தும் பலபேர் உயிரோடு இருப்பது பற்றி
வியக்கின்றார் குருவிக்கரம்பையார்
குத்தூசி குருசாமியைப் பெற்றெடுத்த சிற்றூர்
முத்தான சண்முகத்தை நமக்களித்துத்
தமிழகத்தை வியப்பினிலே ஆழ்த்துதம்மா!

(கவிஞர் குருவிக்கரம்பை சண்முகம் 'வியப்பு' பற்றிப்
பாடி முடிக்கிறார்)

அடுத்து
வீரம் பற்றிப் பாடுதற்குச் செயலில்
வீரம் காட்டும் கவிஞருண்டு - நெஞ்சில்
ஈரம் என்றும் எனக்குண்டு இந்தப்
பொன்னிப் பயிரை வளர்ப்பதற்கே!
வளவன் வாழ்ந்த மாநகரில் - பொன்னி
வளவன் பாடும் கவி கேட்போம்.

(கவியரசு பொன்னிவளவன் 'வீரம்' பற்றிப்
பாடி முடிக்கிறார்)


தலைவர் கலைஞரின் முடிவுரை:

காலை முதல் இந்தக் கவியரங்குவரை
கன்னல் நிகர் தமிழோசை கேட்டு
மகரந்தம் உண்டு மகிழ் வண்டாகக் கிடக்கின்றேன்
மனமகிழ்ந்து ஓர்பொழுது நிம்மதியாய் கழிக்கின்றேன்
முடிமன்னர் முதுபுலவர் வளர்த்த தமிழ்த் தேனைப்
படிப்படியாய்க் குடித்த பின்னர்
முடிவுரையும் கூறுதற்கு முடியுமோ என்னால்?
பூம்புகார் வந்தோரே!
புத்துணர்ச்சி பெற்றோரே!
சென்று வருக என வாழ்த்துதற்கு முன்...
சித்திரை முழுநிலா இன்று கண்டிடுக
முத்திரைப் பொன்னாம் குழந்தைகட்கு
முத்தம் ஈந்திடுக கடற்கரையில்
குழந்தைகட்கு மட்டுந்தானா எனக் கேட்காதீர்.... அது
மடந்தைக்கும் காளைக்கும் இடையிலுள்ள விவகாரம்!

பூம்புகார் நிலா பார்த்திடுவீர் - தமிழ்ப்
புவியாண்ட சோழ மன்னன் கொற்றக்குடை அதுபோல

இருப்பதையும் எண்ணிடுவீர்! நம்
இலட்சியத்தை எய்திடவே சிலம்பு
இலக்கியத்தைச் சிந்தையிலே பதித்திடுவீர்!
அலையாயும் கடலோரம் நிற்கும்போது
அண்ணாவழி நடக்கின்ற அரசுக்கும் வாழ்த்துச் சொல்வீர்

வணக்கம்!



# அண்ணா வழியில்

சென்னை கலைவாணர் அரங்கத்தில் 15.9.1975
அன்று மாலை நடைபெற்ற அண்ணா கவியரங்கில்
**கலைஞர் மு.கருணாநிதி அவர்களின்**
தலைமைக் கவிதையுரை

★

தமிழே! தேனே! தங்கக் கனியே!
அமிழ்தே! அன்பே! அழகுக் கலையே!
எழிலே! அறிவே! எண்ணச் சுடரே!
பொழிலே! புகழே! பொன்னின் மணியே!
திருவே! உருவே! திங்கட் குளிரே!
தருவே! நிழலே! நிழல்தரு சுகமே!
தாயே உன்றன் தாளினைப் பற்றி
தலைமைக் கவிதை பாடிட வந்தேன்.
அண்ணா வழியில் அயரா துழைக்கப்
பண்ணால் முழங்கிப் பயணம் தொடரக்
கண்போல கழகம் காக்கும் சூளுரை
விண்போய் முட்டிட உரக்கக் கூவுக!
இன்றைக்கு நடந்தது போல் இருக்குதய்யோ கழகக்
கன்றை விட்டுப் பசு பிரிந்த அந்தக் காட்சி!
குன்றைத் துளைக்குமொரு வேலெடுத்துக்
குறிபார்த்து நெஞ்சைக் கிழித்ததுபோல்

என்றைக்கும் நமைவிட்டுப் பிரியாத அண்ணன்
அன்றைக்கு மறைந்துவிட்டான்; அய்யகோ!
ஆயிற்று ஏழெட்டாண்டு!
'கொன்றைவேந்தன்' என அவ்வையின் பாட்டுண்டு... நம்
கொள்கை வேந்தனுக்கோ அழியாத பாட்டுண்டு!
பொங்கு கடல் நடையும் பூவையரின் மென் நடையும் - தன்
புதுத்தமிழ் நடையில் காட்டியவன்
பொல்லாங்கு உரைப்போரை வாதத்தில் மாட்டியவன்
பொடியெடுத்துப் போடும் நேரம்
புன்னகையால் எதிரிகளைப்
பொடியாக்கி வாட்டியவன்
புழுதிக் குணம் படைத்தோரை ஓட்டியவன்
பொன்மகுடம் தமிழ்த்தாய்க்குச் சூட்டியவன்
எழுதுகோல் வைத்திருந்தான் அண்ணன் - அது
ஏமாந்த தமிழர்களின் தலையெழுத்தை மாற்றத்
தாளில் உழுதகோல் - நம்
நாளில் அழுதவரைச் சிரிக்கவைக்க
அவன் தந்த ஆட்சிக்கோல்.
குதிகால்கள் பரதம் ஆடப் பேச்சரங்கில்
கொய்யாத் தமிழ் எடுத்துக் கொடுத்திட்டார்;
சதிகாரர், சாய்க்கின்றார் தமிழ்மொழியை என்றபோது
அவர்,
மொழிப் போரின் மூலபலம்! களம் கண்டு
விழிப்போரைக் கண்டுகொண்டு - தன்னைப்
பழித்தோரைப் பாராட்டும் பண்பாளர்,
அழித்தாராம் ஆதிக்க மொழி வெறியை!
பலகாரம் பட்சணம் - பாணிக் கிரகணம் -
வதூவர கிரகப் பிரவேசம் பந்துமித்திரர்-
நமஸ்காரம் - உபய குசலோபரி
நாமாவளி துவஜாரோகணம் என

நாக்குக்கு நுழையாத வடமொழிப் படையெடுப்பால்
வாக்குக்குச் சுவை சேர்க்கும் வண்ணத் தமிழ் வாடுவதோ?
பாக்குக்கும் வெற்றிலை சுண்ணாம்புக்கும் அவர் வாய்
சிவக்கும்

தாக்குதற்குத் தமிழைப் பிறமொழி பெற்றுகி வந்தால்
அவர் கண் சிவக்கும்

அக்ராசனாதிபதியை அவைத் தலைவராய் உலவவிட்டார்
அந்த நாள் பிரசங்கம், சொற்பொழிவாய் மாறிற்றின்று!
நமஸ்காரம் கிமஸ்காரம், எல்லாம்
நலமான தமிழிலே நல் வணக்கமாய் மலர்ந்தது காண்!
தூய்மையாய்த் தமிழில் கொடியேற்று விழா
வந்த பின்னர்

துவஜாரோகணத்துக்கு அங்கென்ன வேலை?
வாய்மையே வெல்லுமென்றால்
'சத்யமேவ ஜெயதே' கோபித்தா கொள்ளும்?
அண்ணனை ஒரு சீமான் என்பேன்
அவர் நண்பர்களையே செல்வமாய்ப் பெற்றிருந்தார்!
அண்ணனை ஒரு துறவி என்பேன்;
அவர் வாயெல்லாம் காவி தரித்திருந்தார்!
அண்ணனை ஒரு தெய்வம் என்பேன்;
அவருக்கு துரோகிகளும் தூபதீபம் காட்டுகின்றார்!
அண்ணனை ஒரு கண்ணன் என்பேன்;
அவரைப் பூதகியும் தூக்கிப் பால் கொடுக்கின்றாள்!
அரியாசனமாய் அவர் நம் இதயத்தை ஆக்கிக் கொண்டார்
அரியா சனங்கள் அவரை ஆரம்பத்தில்
புரியாமல் எதிர்த்ததுண்டு
சரியாசனச் சமதர்மம் போதிக்க வந்த
தென்னாட்டு மார்க்ஸ் என்று
பின்னால்தான் தெளிவடைந்தார்

நரியும் பரியாய்ப் போன கதை
நாரதர் பெண்ணாய் ஆன கதை
உரியைக் கண்ணன் உடைத்த கதை
ஊரார் போற்றிய பழைய கதை
எரியில் துரும்பாய் ஆக்கியவர்
பெரியார் தந்த பேரறிஞர்
இரக்க மெனும் ஒரு பொருளிலா அரக்கனென
இராவணனைக் கம்பன் இகழ்ந்தது செல்லாதென
உருக்கமிகு ஓவியத்தை எழுத்தால் தீட்டிச்
சுருக்கென்று தைக்கின்ற கேள்விகளால்
தேவலோகப் பிறவிகளைத் தெருவுக்கு இழுத்து வந்தார்
மேனிப் பசிமுழுதும் தீர்ந்தபின்னர்
மேனகையைக் கைவிட்ட மாமுனியும்
தந்திரத்தால் அகலிகையைச் சுவை பார்த்த
இந்திரனாம் இணையற்ற பெருவேந்தும்.
கருணையின் வடிவங்கள் தாமோ?
கம்பரே! இராவணன்தான் கடு நெஞ்சக் காவலனோ?
அண்ணன் எழுப்பிய வினாக்கணைக்கு - இந்த
மண்ணில் எவர்தான் விடையளிப்பார்?
அண்ணன் எழுதிய நூல் கொண்டு
சின்னக் கதை யொன்று நெய்கின்றேன்

''ஓர் இரவு சந்திரோதயத்தில்
நல்லதம்பி வீட்டு வேலைக்காரி
ஓடுகிறாள் சந்திர மோகனிடம்
காதல் ஜோதியிலே
சொர்க்க வாசல் கண்டு
கம்பரசம் பருகுகிறார் மொண்டு!
கண்டிருந்த பெற்றோரும் கடுங்கோபம் கொண்டு
நியாயத்தை நிலை நாட்ட. நீதிமன்றம் சென்றார்.

வேலி போட்டுக் காதலைத்தான்
தடுத்திடவா வேண்டும்? இந்தத்
தாலிபோட்ட அத்தானை நான்
மறந்திடவா வேண்டும்?

தாய் மகளுக்குக் கட்டுவதா தாலி?
எனக்கேட்டு வாதிட்டாள் குமரிக் கோட்டம்-
என்னாகும் அவள் முன்னே பணத்தின் தோட்டம்?
நீதிதேவன் மயக்கத்தைப் போக்கி நின்று
நீவிர் வாழ்க நன்று என வாழ்த்திச் சென்றான்!
உண்டென்பார் சிலர் இல்லை யென்பார் சிலர்
எனக்கில்லை கடவுள் கவலை!
ஒன்றே குலம் ஒருவனே தேவன் - இதை
ஒப்புவதே உண்மை ஆத்திகமாம்!
ஒருவனை ஒருவன் ஏமாற்றாதிருப்பதே நாத்திகமாம்!
நன்றே சொல்வேன் நமக்குக் கடவுள்
நலிந்தோர் சிரிப்பில்தான்! இதனைக்
கொள்கையாய் நாட்டுக என்றார் - அறிவுக்
கொடியை ஏற்றுக என்றார்.
கழகம்தான் மெய்யான கம்யூனிஸ்ட்டென்று
பழகு தமிழ் உவமையெல்லாம் காட்டியது அண்ணனன்றோ?
வறுமையை ஒழித்திட அவர் காட்டியதே நல்வழியன்றோ?
உரிமைகள் பெருகிட உண்மைகள் நிலைத்திட
அவர் உரைத்ததுதான
புது நெறியன்றோ?
நாடு தழைத்திட நற்றமிழ் வளர்ந்திட
அவர் நாவசைவே முரசன்றோ?
நாளும் அவர் நமையாளும் அரசன்றோ?
வாரத்து நாட்களிலே புதனைத்தான்
தேந்தெடுப்பர் வைதீகர் அண்ணா,

வாழ்ந்திட்ட நாட்களிலே எதனை நான்
தேர்ந்தெடுத்து நினைத்துப் பார்க்க?
தம்பிவா, தலைமை ஏற்க வா என்று
அழைத்தாரே நாவலரைத் திருச்சியிலே; அதனையா?
தீராத பிரச்சினையைத் தீர்ப்பதற்குச் சிந்திக்கப்
பேராசிரியர் வீட்டுக்குச் செல்வாரே; அதனையா?
பிரிய மனமின்றிப் பிரிருந்திருந்த
பதினெட்டு ஆண்டின் பின்னே
பெரியாரின் முகம் காணச் சென்றோமே அவரோடு
அதனையா?
கணைகள் பல தாக்கினாலும் உன்னை இந்தக்
கணையாழி காக்குமென்று கடற்கரையில்
அணிவித்தாரே: அதனையா?
எதனை நினைத்தாலும் எங்களண்ணா
உனதுருவம் ஏற்றமிகு திருவுருவம்
அதனை நினைத்தே யாம் ஆறுதலைக் கொள்கின்றோம்.
தம்பி யுடையான் படைக்கஞ்சான்
என முழங்கிவிட்டுத்
தனிமரம் தோப்பாகாது என சொல்வாய் இங்கோர்
தனிமரம் தானேதான் தோப்பென்று
போன கதை நீ அறிவாய்
சனிப்பெயர்ச்சி சிலருக்கு நல்லதென்பர் புராணீகர்!
இது மெய்யோ? பொய்யோ?
நம் கழகத்தில் சனிப்பெயர்ச்சி
நற்பலனைத் தந்ததண்ணா!
உன் வழியில் உழைக்கின்றோம் அதனாலே
ஒதிய மிலார் - முருங்கைக் கொம்பு
ஒடிபட்டுச் சிதறுதல் போல் - பகை
முறிபட்டுப் பஞ்சாய்ப் போகும்!
நீ தந்த விளக்கெடுத்து நடக்கின்றோம்

நெய்யிட்டுத் திரியிட்டு உதவுகின்றார் தமிழ் மக்கள்
கடுமழையில் அணையாமல் காற்றுக்கு நடுங்காமல்
கரம் பொத்திக் கைவினக்கைக் காக்கின்றோம்
வரம் ஒன்று தந்திடண்ணா! நான்
தவம் இருந்து கேட்கின்றேன்
அடித்தளத்து மக்களுக்கு
அடுக்கடுக்காய்ச் சாதனைகள்
அண்ணா! உன் வழியில் அயராமல் நடப்பதெல்லாம்
கண்ணால் ஒரு முறை நீ பார்த்து விட்டால்
எம் கவலையெல்லாம் பறந்துபோகும்!
தண்ணார் முழு நிலவே
தட்டாமல் நீ வந்துவிடு
இந்த வரம் நீ தந்தால்
இறவா வரம் பெற்றதுபோல்
இன்பத் தமிழகமே கூத்தாடும் - எங்கள்
துன்பமெலாம் தொலைந்துவிடும்

**கலைஞரின் முடிவுரை:**

முடிவுரை எதற்காக இன்று?
'அண்ணா வாழ்க' என்பதே நமக்கு
முதலுரையும்
முடிவுரையும்!
அதனாலே அனைவரும் சொல்வோம்,
அண்ணா வாழ்க!
அண்ணா வாழ்க!
அண்ணா வாழ்க!
வணக்கம்!

# நடந்திடுவேன் நமது அய்யா, அண்ணா வழியில்!

உடன் பிறப்பே உனக்கோர்
உண்மை தெரியுமா?
என்னைச் சுமந்து பெற்ற
அன்னையின் மடியிலும்
காணாத சுகத்தை; என்னைத்
தூக்கி வளர்த்த தந்தையின்
தோளிலும் காணாத சுகத்தை;
சோதரிகள் இருவர்
சுவாசக் கருவிகளாய் இருந்து
இயக்கிடும் போதும்
காணாத சுகத்தை;
கைபிடித்து என்பாள்
பாசம் பொழியும் துணைவியர்
அன்பிலும் காணாத சுகத்தை;
குழலையும் யாழையும் வெல்லும்
என்ற குறளையும் வெல்லும்
என் குழந்தைகள் மொழியில்
காணாத சுகத்தை; வாழ்க என
வாய் மலர்ந்து நீ முழங்கும் போதும்,
வருக என்று நான்
அழைக்கும் போதெல்லாம்
அதனை ஆணையெனச் செயல்படுத்தி
என் முன் நிற்கும்போதும்,
களம்புக்க என உதடசைக்கு முன்
கடமை முடித்து நீ நிமிரும் போதும்,
காணுகிறேன்! மகிழ்ச்சி

பூணுகிறேன், அகமுழுதும்!
நாணுகிறேன், உன் அன்புக்கு
ஈடு கொடுக்க என்னால்
முடியவில்லையே என்று;
முகம் நாணுகிறேன்!
எழுபத்தி ஒன்று இன்று —
எத்தனை இன்பதுன்பக்
கலவைச் சம்பவங்கள்
இந்த எளியோன் வாழ்வில்!
அறிவார், என் வழி;
பெரியார் அண்ணா வழி எனினும்
எத்தனை கோடியப்பா
ஏச்சும் பேச்சும்
எதிர்ப்பும் போரும், என்
நெஞ்சம் சுமந்து, சுமந்து,
நிமிர்ந்து நிற்கிறது
நிலைத்து நிற்கிறது!
உளி வீச்சு படுகின்ற
கல் எல்லாம்
உயிராடும் சிற்பமாவதில்லை;
சிற்பமாய் என்னைச்
செதுக்கியோர்க்கு நன்றி!
உலைக்களத்துக் கடும் நெருப்பில்
சம்மட்டி அடிபடுகின்ற
சகலமான இரும்புகளும்
வாட்களாய் ஈட்டிகளாய்
வடித்தெடுக்கப்படுவதில்லை!
வாளாக ஈட்டியாக என்னை
வார்த்தோர்க்குக் கை நிறைய
வாரி இறைக்கின்றேன் நன்றி மலர்!
காலணியாம் என்னை நீ
வாழ்த்துகின்றபோது,

களிக்கின்றேன்; ஆனால்
காலனியாய் மீண்டும் நாடாகக்
"காட்டு" ஒப்பந்தம் கண்டு
முகம் சுளிக்கின்றேன்.
இந்தி வெறியர்களின்
பூச்சாண்டி மிரட்டல்களால்
எரிமலை பூகம்பம்
எழுகிறதே நெஞ்சில்!
சமூக நீதியென்று
கண்துடைப்பு வித்தை மட்டும்
காட்டுகின்றார், மனம்
புண்பட்டுத் துடிக்கின்றேன்.
அங்கே அராபத் கண்ட
அரசியல் தீர்வொன்றால்
பாலஸ்தீனியர்க்குப்
பாதி சுதந்திரம்!
தென் ஆப்பிரிக்காவில்
வெள்ளை இருட்டில்
கறுப்பு விடியல்!
இங்கே ஈழம் மட்டும்
அணையாமல் இன்னும்
எரிந்து கொண்டிருக்கிறது!
இந்தியா இரண்டாகப் போய்
பின்னர் மூன்றாக ஆனது.
இருக்கும் மீதியில்
எத்தனை சாதிகள்
எத்தனை சண்டைகள்!
மதச்சார்பற்ற கொள்கை
மடிந்து போனால்
குலைந்து போகும் தேசம்.
மனித நேயத் தேடலில்
மனிதனையே தொலைத்துவிட்டு

மயங்கிடும் கட்சிகள்
மாறிடும் காட்சிகள்.
இத்தனைக்கு மிடையே
இந்தப் பிறந்த நாளில்
ஏற்றிடும் சூளுரை;
''நானிருக்க பயமேன்''
என நவில்கின்ற
உயிரினும் மேலான — என்
உடன்பிறப்புடன் இணைந்து,
நாடு காக்க, மொழிகாக்க,
நமதினமக்கள் உரிமைகாக்க
அயர்ந்திடும் நிலையே
அணுப் பொழுதுமின்றி,
தொடர்ந்திடுவேன் தொண்டு!
நடந்திடுவேன்; நமது
அய்யா, அண்ணா வழியில்!



# மும்பெரும் விழாக் கவியரங்கம்
## தலைமைக் கவிதை

★

எங்களுக்கு உயிராக வாய்த்த தமிழே!
திங்களுக்கும் மாசுண்டு—
தீந்தமிழே நீ களங்கமிலாக் கதிர் ஒளிதான்!
பொங்கலுக்குச் சுவை கூட்ட வெல்லம் வேண்டும்—
பொதிகைமலைத் தமிழே உனைவளர்க்க
நல்ல உள்ளம் வேண்டும்-
சங்கொலிக்கும் போர்க்களத்தில்
வீரமாய்த் தழைக்கும் தமிழே!
வெற்றியாய் விளையும் தமிழே!
அங்கொலிக்கும் தோல்விப்பேச்சு இனி எதிரிக்கேயன்றி
நமக்கல்ல என நாடதிர நகைப்பாய் தமிழே!
பங்கு வைத்து தமிழர் வாழ்வைக் கூறுபோட
எங்குதித்த ஆட்கள் எலாம் வந்துவிட்டார்
கங்குகரை இல்லாமல் தமிழர்படை திரள வேண்டும்
கண்மூடி வழமைகளை விழிக்க வைத்துப் பேசவைத்து
களம் நோக்கி நடை போடச் செய்யவேண்டும்...
அந்தக்
கனல் கிளம்ப எங்கள் சொல்லில் செயலில்
கலந்திருந்து உறவாடும் புறப்பாட்டே!
கலிங்கத்துப் போர்ப்பாட்டே! கடற்கோளுக்கும்
அழியாமல்
கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே

முன் தோன்றி மூத்த குடியின் பழம்பாட்டே! இன்று
நான் பாடும் புதுப்பாட்டுக்குச் சுவை வழங்கும்
மா, பலா, வாழைத் தமிழே! நீ வாழ்க நன்று!

முப்பெருங் கடலும் கண்டோம்
முத்தமிழ் மொழியும் கண்டோம்
முப்பெரும் மன்னர் கண்டோம்
முக்கொடி பறக்கக் கண்டோம்
முச்சங்கப் பெருமை கண்டோம்
முக்கனிச் சுவையும் கண்டோம் — இன்று
முப்பெரு விழாவைக் காண்போம்.

அண்ணா, பெரியார், கழகத்தை — நாம்
எண்ணாதிருக்கும் நாள் உண்டா?
கண்ணாம் கொள்கை காப்பதற்கு
இந்நாள் சூளுரை மேற்கொள்வோம்.
பொன்னோ பொருளோ எதற்காக?
போலிகள் அலைவார் அதற்காக!
ஈரோடு பேன் நிறைந்த தலையாக
இருந்த நிலை மாற்றி எழிலாக்க
ஈரோட்டு சீப்பொன்று இல்லாவிட்டால்
இதற்குள்ளே தமிழ்நாடு மொட்டையாகப் போயிருக்கும்!
அவர் பிறந்த நாள்தான் தெரியும்
நட்சத்திரம் தெரியாது!
நட்சத்திரங்களைப் பற்றி அவர் கவலைப்பட்டதும்
கிடையாது!
ஆனால் லக்கினம் என்னவோ சிம்மம்தான்!
அந்தச் சிம்மத்தின் முன்னே
சிறுநரிகள் வாலாட்டம் செல்லுபடியானதில்லை.
பொங்கும் எரிமலை அவர் — அதன்
நெருப்புக்குழம்பு வைதீகபுரியை
நோக்கிப்பாய்ந்து பெருகிற்று!
அவர்ஒரு காட்டுத்தீ! அதில் சனாதன

மலைப்பாம்புகள் கருகிப் போயின!
கரைகளை உடைத்துப் படையெடுக்கும்
காட்டாற்று வெள்ளம் அவர் — அந்த
வெள்ளத்தில் பழம்பஞ்சாங்க மண் வீடுகள்
இருந்த இடம் தெரியவில்லை!

அவர் ஒரு போர்வாள்! அதன்
ஒரு வீச்சிலேயே புரோகிதம்
மூச்சற்றுப் போயிற்று!

சிந்துபாடும் சிற்றாறுகள் சீறிப்பாய்ந்தாலே
சீராழிவைத் தடுக்க முடியவில்லையே — அவரோ
பெரியாறு!... அது சினந்து கிளம்பினால்
இதிகாச புராணங்களின் ஆணிவேரே
அறுந்து போகாதா!
தங்கத்தின் உருக்கில் வந்த தனித்ததோர்
ஒளியைப்போல
செங்கதிர் உதயமாகும் செவ்வானம் வெட்கியோட
பொங்கியே எழுந்தார் பெரியார் —
புதுமைக் காளைகள் கோடி
உறுதியாய்க் கூறுகின்றார்
குருதிதான் பணயமென்று
இந்நாட்டான் இங்குவாழ்வான்
எந்நாட்டையும் புறங்காணும் புகழுடையான்
தமிழ்நாட்டான் தலைகுனிந்தான், இதோ நிமிர்ந்தான்
கொழித்து விட்ட உமிகள் தான்
இனிக் குள்ளநரிக் கூட்டத்தார் —
பழித்துவிட்டான் பகுத்தறிவால்
பக்தி, மதம், புராணமெல்லாம்
பாழ்! பாழ்! பாழ்! என
உதித்துவிட்ட புதுக் கருத்து — புரட்சிக் கருத்து
மிதித்துவிட்டால் புழுக்கூட புலியாகுமென்றால்
புலியென்ன ஆகும்? புரியாதார் இன்னும் கூட
இருக்கின்றாரே!

அழுக்குருவப் பன்றி முதல் - சொறிநாய் —
கழுதைக் கூட்டம் - அனைத்துக்கும்
உரிமையுண்டு உயர்ஜாதிக்காரர்
உலவுகின்ற தெருக்களில் ஓடி விளையாட — ஆனால்
கடவுளரின் கால் மூலம் பிரசவித்த
கடைக் கோடிச் குத்திரனும் பஞ்சமனும்
அந்தத் தெருப்பக்கம் நடந்தாலே தீட்டு என்று
அநியாய நீதி உண்டு - அதன்பேர்தான் மனுநீதி — அதை
மறுப்பதற்கு ஆளில்லை; ஈரோட்டில் பெரியார்
பிறப்பதற்கு முன்னே! அதனால்தான்
பாம்பைக் கண்டால் பிறகு அடி என்று சொன்னார்
வேம்புக் கொள்கையின் மண்டையிளந்தது
அந்த அடியாலே!
வள்ளிக்கும் பார்வதிக்கும் பாமா, ராதா
வகையறாவுக்கும்
வருடந்தோறும் திருமணத் திருவிழா
நடத்துகின்றீர் —
போன ஆண்டு நடந்த திருமணத்திற்கு
ஆனகதி என்ன அய்யா என்று
அய்யாதான் கேட்டார் — அறிவின் கேள்விக்கு
இன்று வரை யார் அளித்தார் விடை?
ஒருநாள் கைலாசத்தில்
குளிக்கச் சென்ற பார்வதி
அழுக்கைத் திரட்டி அதற்கு உயிரூட்டி
ஆண்கள் வராமல் பார்த்துக் கொள் என்று
ஆடையின்றிக் குளிக்கின்ற அறையின் பக்கம்
அவ்வுருவைக் காவலுக்கு வைத்திருந்தாள்...
அப்போது அவசரமாய் உள் நுழைந்த
ஆலகாலம் உண்ட சிவனை ஆண் என்றுஅவ்வுருவம் தடுத்து நிறுத்தியதால்
சினம் கொண்ட சிவனாரும்
அழுக்குருவின் சிரத்தை அறுத்தெறிந்தார்

அது கண்ட பார்வதி கொதித் தெழுந்து
அவள் பெற்ற அழுக்குப் பிள்ளைக்கு உயிர் கொடுக்க
ஆணையிட்டாள் அவள் கணவன் சிவபெருமானிடம்!
ஆனையொன்று தெருவில் போயிற்று
அதன் தலையை வெட்டி அழுக்குருவில்
பொருத்திவைத்தார்
அதுதானே ஆனைமுகப் பிள்ளையார்
என்று கதையுண்டு
அறிவீர் அன்றோ?...
அத்தனை பெரிய பிள்ளையைச் செய்யுமளவுக்கு
அன்னைபார்வதி உடலில் அழுக்கிருந்தால் அவள்
எத்தனை நாள் குளிக்காமல் இருந்திருக்க வேண்டும்?
இந்தக் கேள்விக்கு வித்திட்டு
புராணத்தைக் கேலிப்பொருளாக்கியவர்
ஈரோட்டுக் கிழவர் அன்றோ?
களையெடுத்த சமுதாயக் கழனியில்தான்
பொதுவுடைமைப் பயிர் வளருமென்று கருத்துச்
சுளையெடுத்துத் தந்தவரும் பெரியார்தானே!
''ஆத்மா'' உண்டென அளக்கின்றவனே! பின்னர்
அடுத்த ஜென்மக் கதை எங்கே வந்தது?
ஆர்த்தது கேள்வி முரசொலியாய்
அடங்கினர் ஆமையாய் சனாதனிகள்!
இருட்டில் அசையும் செடி கொடி கண்டு
இருளன், காட்டேரி, பிசாசுகள் என்று
குருட்டுமதியினர் கூவிச் செத்தனர்
பேயுமில்லை பிசாசுமில்லை; பித்தர்களே!
சுருட்டும் ஆட்கள் சொல்வதை நம்பாதீர் என்று
சுயமரியாதைச்சுடர் கொளுத்தியது யார்?
அவர்தான் பெரியார்!

பச்சைத் தமிழன் என்று காமராசரை அவர்
இச்சையுடன் அழைத்தது எதற்காக?
பிற்பட்டோர் வாழ வேண்டும் அதற்காக!

காலமெல்லாம் நீடிக்க வேண்டும்
கழக ஆட்சியென அவர்
விரும்பியதும் எதற்காக? அவர்
கண்ட கனவெல்லாம் படிப்படியாய்
நிறைவேறும் என்பதற்காக!
திருவரங்கப்பெருமாள்போல் படுத்திருந்த
தமிழ் உணர்வைத்
திசையெட்டும் சிலிர்த்தெழுந்து முழங்கச் செய்து
தீரமிகு பணிகள் பல ஆற்றியவர் பெரியார் அன்றோ?
தெருவரங்கம், கலையரங்கம், இசையரங்கம்,
திரையரங்கம்

எல்லாமே ''அம்மாமி அத்திம்பேர்'' என்ற
''ஜலதரங்கம்''! அது மாற்றித்
தமிழரங்கம் தனியரங்கம் கண்டவர்க்குக்
கவியரங்கம் பாடுவது பொருத்தமன்றோ?
வங்கத்துத் தாகூர் போல் தாடியுண்டு
பொங்குற்ற வேங்கை போல் நிமிர்கின்ற பார்வைஉண்டு
செங்குன்றத் தோற்றம் உடலில் உண்டு — வெண்
சங்கொத்த கண்களிலே விழியிரண்டும்
கருவண்டு — அதில்
சாகும் வரை ஒளியுண்டு!
பம்பரமும் ஓய்வு பெறும் சுற்றிய பின்! — இவரோ
படுகிழமாய்ப் போன பின்னும்
பம்பரமாய்ச் சுற்றி வந்தார்.
எரிமலையாய்ச் சுடுதழலாய்
இயற்கைக் கூத்தாய்
எதிர்ப்புகளை நடுங்கவைக்கும் இடிஒலியாய்
இன உணர்வுத் தீப்பந்தப் பேரொளியாய்
இழிவுகளைத் தீர்த்துக் கட்டும் கொடுவாளாய்
இறைவனுக்கே மறுப்புச் சொன்ன இங்கர்சாலாய்
எப்போதும் பேசுகின்ற ஏதென்ஸ் நகர் சாக்ரடீசாய்
ஏன் என்று கேட்பதிலே வைர நெஞ்ச வால்டேராய்

எம் தந்தை பெரியாரும் வாழ்ந்திட்டார்
நம் சிந்தை அணு ஒவ்வொன்றும் நிறைந்திட்டார்!

அறிவுமழை பொழியும் — எழில்
வழியும்! இருள் கழியும்!
தெளிவு மிகு உரைகள் பல
ஒளிரும்! திறன் மிளிரும்!
கடலின் மடை — அலையின் ஒலி —
மலையின் முடி — தழுவும் முகில் வழியும்
அறிவுமழை பொழியும்
ஆணவங்கள் அழியும்
அடிமை முறை ஒழியும்

அய்யாவின் பேச்சென்றால்
அதிரசம் தின்பது போல் கழகத்தவர்க்கு
அணுகுண்டு வெடித்தது போல் கயவர்கட்கு!
அவர்
இளம் வயதில் மறையவில்லை —
நிறை வயது வாழ்ந்து விட்டே
ஓய்வு கொண்டார் எனினும்
தாஜ்மகால் திடுமென தரைக்குள்ளே
போய்விட்டால்
அதைக்கட்டி ஆண்டுபல ஆயிற்றே
என்று ஆறுதல்தான்
பெறுவோமா?
தஞ்சைக் கோபுரம் சாய்ந்துவிட்டால்; அதற்கு
வயது அதிகமென்று சொல்லித்
தாங்குதல் எளிதாமோ? இவரோ
தஞ்சைக் கோபுரம் போல் உயர்ந்தவர்
தாஜ்மகால் போல் சரிதம் படைத்தவர்
எழுச்சி ஞாயிறுக்கு நூறாண்டு!'
எங்கள் அண்ணனுக்கு!.....
அவர் கண்ட நம் கழகத்திற்கோ

இன்று முப்பதாம் ஆண்டு!
புயற்காற்று ஒரு பூந்தென்றலைப் பிள்ளை
யாய்ப் பெறுவதுண்டோ?
அப்படிப் பிறந்த பிள்ளைதான்
நம் அண்ணன் எனும் மந்தமாருதம்!
சண்டமாருதங்களையும் தன்
புன்னகையால் விரட்டுகின்ற மந்தமாருதம்!

"தாழ்ந்த தமிழகமே!" என அழைத்து, நாம்
வாழ்ந்த பெருமையெலாம் வகைப்படுத்தி
ஆழ்ந்த கருத்துப் பேழையொன்றைத் தந்திட்டார்
கருத்துப்பேழையது! கறுப்புப் பணக்காரன்;
கழகத்தைக் கவிழ்ப்பதற்குக் கற்பனையில் தயாரித்த
காதறுந்த பேழையல்ல —
காஞ்சி அண்ணன்தந்த கற்பூரப் பேழையது!
பெரியாரின் வலக் கரமாய்-அறிவில்
வறியோரைக் கரையேற்றும் விசைப்படகாய்
சிறியோரின் பிழை பொறுக்கும் செங்கதிராய்
வெறியோரைப் பணியவைக்கும் வித்தகராய்
நெறியோடு முறையோடு அரசியல் நடத்திச் சென்று
'திருவோர்டு' ஒழிவதற்குத் திட்டம் சொன்னார்-இங்கே
'திரு'வோடு இருந்திட்ட சிலபேர் இன்று
தெருவோடு போகின்றார் நம்மைத் திட்டி
பருவோடு சண்டை போட்டால் நம் முகம்தான் கெடும்
பரவாயில்லை என்று புனுகு போட்டால் பரு உதிரும்.
ஈ.வெ.ரா. பெரியாருடன் கருத்துமாறி
இன்னொரு கழகம் காண்பேன் என்று
கண்ணீர் பெருக்கிப் பிரிந்த போதும்
இரட்டைக் குழல் துப்பாக்கி போல் இருப்போமென்று
எதிரிகட்கு இடித்துரைத்தார் எங்களண்ணன்! இன்றோ
உதிரிகளைச் சேர்த்துக் கொண்டு
உடைவாளால் தாய்வயிற்றைக் கிழிப்பதற்கு
இழிகுணத்தார் ஓடுகின்றார்; விரைவில் முடமாவார்!

இன்றைக்கு நடந்தது போல் இருக்குதய்யோ கழகக்
கன்றை விட்டுப் பசுபிரிந்த அந்தக் காட்சி
குன்றைத் துளைக்குமொரு வேல் எடுத்துக்
குறிபார்த்து நெஞ்சைக் கிழித்தது போல்
என்றைக்கும் நமைவிட்டுப் பிரியாத அண்ணன்
அன்றைக்கு மறைந்துவிட்டான்; அய்யகோ
ஆயிற்று எட்டொன்பதாண்டு!
'கொன்றை வேந்தன்' என அவ்வையின் பாட்டுண்டு — நம்
கொள்கை வேந்தனுக்கோ அழியாத பாட்டுண்டு!
பொங்கு கடல்நடையும் பூவையரின் மென்நடையும் தன்
புதுத் தமிழ் நடையில் காட்டியவன்
பொல்லாங்கு உரைப்போரை வாதத்தில் மாட்டியவன்
பொடியெடுத்துப் போடும் நேரம்
புன்னகையால் எதிரிகளைப்
பொடியாக்கி வாட்டியவன்.
புழுதிக் குணம் படைத்தோரை ஓட்டியவன்.
பொன் மகுடம் தமிழ்த்தாய்க்குச் சூட்டியவன்.
எழுதுகோல் வைத்திருந்தான் அண்ணன் — அது
ஏமாந்த தமிழர்களின் தலையெழுத்தை மாற்றத்
தாளில் உழுத கோல்!
பாக்குக்கும் வெற்றிலை சுண்ணாம்புக்கும் அவர் வாய் சிவக்கும்
தாக்குதற்கு தமிழர்களை இந்திமொழி வந்தால்
அவர் கண் சிவக்கும்.
'அக்ராசனாதிபதி'யை அவைத்தலைவராய் உலவ விட்டார்
அந்தநாள் ''பிரசங்கம்'' சொற்பொழிவாய் மாறிற்றின்று!
'நமஸ்காரம் கிமஸ்காரம்' எல்லாம்
நலமான தமிழிலே நல்வணக்கமாய் மலர்ந்தது காண்!
தூய்மையாய்த் தமிழில்
கொடியேற்றுவிழா வந்த பின்னர்
துவஜா ரோகணத்துக்கு அங்கென்ன வேலை?
'வாய்மையே வெல்லும்' என்றதும்
'சத்யமேவஜயதே' கோபித்தா கொண்டது?

சங்கம் வளர்த்த தமிழில் அர்ச்சனை கூடாதென்று
சங்கராச்சாரியாரும் கூறுகின்றார்! இன்று
காஞ்சி பீடத்து போர் முறையைச் சந்திக்க
காஞ்சித் தலைவன் நமக்குக் கற்றுக்
கொடுக்காமல் போகவில்லை...
ஆண்டவர்க்கு ஆலயத்தில் அன்னைமொழியில்
அர்ச்சனை வேண்டாமெனில் அந்த
ஆண்டவரும் நமக்கு வேண்டாமென முரசறைவோம்!
அண்ணன் என்ற இளந்தென்றலுக்கு நாம் தம்பிகள்!
அதே நேரத்தில் பெரியார் என்ற
பெரும் புயலுக்கு நாம் பேரப்பிள்ளைகள்!
வடமொழித் திணிப்பாளர் நம்
வரலாற்றை மறக்க வேண்டாம்!
அடலேறுத் தமிழ் இனத்தின் கால் மிதித்தால்
நம் கால்கள் மொழிப் பகையின்
தலை மிதிக்கும் எச்சரிக்கை!

நாற்பதாண்டு கால மொழிப்போரின் சிப்பாய்கள் நாம்
நமக்கென்ன வந்த தென்று விதிவிலக்குப் பெற்ற வீரரல்ல!
நமது குலக்கொழுந்துகள் எல்லாம் துப்பாக்கி வேட்டுக்குப்
பலியாகி
நடுத்தெருவில் பிணங்களாகப் பூத்தபோதும்
தீக்குளித்து அணையா விளக்குகளாய் ஆனபோதும்
நாடு தழுவிய மொழிப் புரட்சிப் பூகம்பத்தில்
நல்லவேளை சிக்கிடாமல்
ஓடி ஒளிந்த மனிதர் சிலர் இன்று ஒழிக்கின்றேன் இந்தியை என்று
ஒப்புக்குப் பேசி வீரத்தை விலைக்கு வாங்குகின்றார்
அவசர காலச் சட்டத்தின்போது இந்திக்கே ஆதரவு என்று
அபசுரத்தில் பாடிய கட்சிக்காரர்கூட
ஆகாது இந்தியெனக் கூறுகின்றார்கள்...
பூனைகளே சிறுத்தையைப் போல் உறுமும்போது
சிறுத்தைகள் நாம் சினந்தெழுந்தால்
புவி நடுங்கப் போர் நடக்காதா?

சிறைச்சாலை, சித்ரவதை இவையெல்லாம்
கழகத்துக் காரனுக்குப் பழைய கதை!
ஆட்சிக்கு இந்தி மொழியாம்—
ஆண்டவன் பூஜைக்கு வடமொழியாம் —
ஒரு தமிழன் மிச்சமாக உயிரோடிருக்கும் வரை
ஒப்பமாட்டான்! ஒதிய மிலார் — முருங்கைக்கொம்புகள்
தப்பமாட்டா இரும்புத் தூண்களை மோத வந்தால்!

பெரியாரும் அண்ணாவும்
இல்லாததாலே — நம்
பிரியம் போல் நாட்டை
நடத்தலாம் என்றெண்ணிவிடாதீர்!
அவர்கள் இருந்திருந்தால் எங்கள் உணர்வெனும்
நெருப்பாற்றுக்கு அணைகளாய் அமைந்திருப்பார்! மெழுகு
மரங்களே! நீங்கள் உருகி வழியாமல் தப்பியிருப்பீர்!
மூக்கணாங் கயிறில்லா காளையின் முன்னே
முண்டா தட்டுவதும் முட்டாள்கள் வேலை!
பொறுமைக்கும் எல்லையுண்டு
அகழ்வாரைத் தாங்கும் நிலம் போல
அமைதியாய் இருக்கச் சொன்ன அண்ணன்கூட
மறையாமல் இருந்திருந்தால்
''பொங்கி எழுக தம்பீ'' என்றே முழங்கிடுவார் வேறென்ன?
நாட்டாட்சியா நடக்கின்றது இப்போது —
காட்டாட்சி யன்றோ தொடர்கின்றது
எதிர்க்கட்சியை
எப்படி நடக்கலாம்
என்பதே சிந்தனை.
எந்த இடமானாலும்
நமைப் பற்றியே நிந்தனை,
கொடும் வழக்கு, கொலை வழக்கு என்று
கடும் வழக்குப் போடுவதால் கழகம் மிரளுமாம்!
கோழி குத்திக் கோபுரம் சாயுமாம்—

கங்கை யமுனை பெருக்கெடுத்து
வட புலத்தில் நுனைழந்தது போல்
கள்ளமது பெருக்கெடுத்துத்
தமிழ் நிலத்தில் பாயுதய்யா!
மது அரக்கனை விரட்டுவேன் என மார்தட்டுகின்றார்
அவன் என்ன அரக்கன் வடிவிலா இருக்கின்றான்
விரட்டுவதற்கு!
ஆளுங்கட்சி அமைப்பாளனாகவன்றே சிரிக்கின்றான்.

கற்பழிப்பு, கொலை, களவு,
கண்ணீர்ப்புகை, துப்பாக்கிப்
பிரயோகம் - லஞ்ச ஊழல்
நிர்வாகக் குறுக்கீடு — நீதியிலும்
தலையீடு — அடுக்கடுக்காய்
ஆயிரம் சான்றுண்டு — அதற்கெனத்
தனியாக ஒரு கவியரங்கம் நடத்தவேண்டும்.
அத்தனையும் மறைத்து விட்டுப்
புத்தனைப் போல் ஏசுவைப் போல்
நடிக்கின்றார் நம்பச் சொல்லி!
மாடுகளை ஏலம் போடுவேன் என்று
மந்திரிகள் இதுவரையில் பேசக் கேட்டதுண்டா?
இதோ மாட்டுக்கார வேலன் பேசுகின்றார்
கட்டை வண்டி ஊர்வலங்கள் நடைபெற்றால்
கண்டிப்பாய் வண்டி நொறுங்குமாம்!
காளை மாடுகளும் ஏலம் போகுமாம்!
கண்ணீர் விடும் விவசாயி கனற்பிழம்பாய் மாறி விட்டால்
மாடுகளை ஏலமிடும் போக்கெதிர்த்து
மந்திரிகளை ஏலமிடத் துணிவானே—
நெல்லிக்காய் மூட்டையென்று தமிழர்களை
நினைத்து விட்ட காரணத்தால்
நெஞ்சழுத்தம் வளர்கிறது; நறுக்க வேண்டும்!
எல்லாத் தமிழர்களும் எப்போது கூடுவது?
பொல்லாதார் ஆதிக்கம் எப்போது புறங்காணச் செய்வது?

எழுந்திடும் கேள்வி, எனக்குத் தெரியும்.
கரிசல் உண்டு மண்ணிலே
களைகள் உண்டு கழனியில்
பதர்கள் உண்டு நெல்லிலே
துரோகி உண்டு தமிழரில்
தொலைவில் இல்லை அருகிலே!
பதவிகள் வேண்டும்; தினம்
பல்லக்குச் சவாரி வேண்டும் — அதற்காகப்
பகைவரின் பாதத்தைக் கழுவிடவேண்டும் - எனில்
பாய்ந்தோடி முந்திக்கொள்ளும் வீடணர்கள் காணும் சுகம்
பரத்தையர்கள் ஆடவரின் பிணத்தைத் தழுவிக்
காசுபெறும் சுகம்போல்தானே!
— அதனால்—

தமிழ்த் துரோகிகளைக் கண்டு
அஞ்சவேண்டாம் - அவர்கள்
துருப்பிடித்த ஆணிகள்!
அண்ணா பெரியார் படங்களைக்கூட
அந்த ஆணிகள் தாங்கமாட்டா!
அவர்கள் கொள்கைகளை எங்ஙனம் தாங்கிடுவார்!
கோழைகள் விலகட்டும்
வீரர்கள் தொடரட்டும்
கொட்டுக முரசென்று
இனமுழக்கம் செய்திடுவோம்;
இழிவுகளை அகற்றிடுவோம்.

அய்யா ஏற்றியது அறிவு விளக்கு —
அதனைக் காற்றில் அணையாமல்
காத்த கரம் அண்ணன் கரம் —
மீண்டும் பெருங்காற்று — இன்று
அண்ணன் கரமில்லை — அதற்குப்பதிலாக
ஆயிரம் லட்சம் கோடியென்று
கரங்கள் நீளட்டும் — அந்தக் கரமனைத்தும்

அண்ணனுக்குச் சொந்தமான கரங்களே தான்! தூய
தம்பிகளின் கரம் —
தொண்டர்களின் கரம்!....
அவையனைத்தும் அண்ணாவின் கரம்!

அகரம் தமிழுக்கு முதல் எழுத்து
அண்ணாவின் பெயரோ தமிழர்க்கு முதல் எழுத்து
அந்த முதல் எழுத்துத் தலைவர் தந்தது
முன்னேற்றக் கழகம்!
முன்னேற்றம் தமிழர்க்கு வாய்ப்பதெனில்
முப்பெரும் விழா மட்டும் போதாது...
இப்பெரும் நாடு காக்க நமது மொழி காக்க
இன்றைக்கே சூளுரை ஏற்க வேண்டும்.
பெரியாரின் துணிவுதனைப் பெறுதல் வேண்டும்
பேரறிஞர் அண்ணாவின் தெளிவுதனை உணரவேண்டும்
பேரெதிர்ப்புக்கு அஞ்சாத உறுதி வேண்டும் —
ஆறிலும் சாவுதான் நூறிலும் சாவுதான்
ஆனது ஆகட்டும் என்று
உயிர்த்திதிப்பை எண்ணாத தியாக உள்ளம் வேண்டும் —
ஊடுருவும் துப்பாக்கி ரவைகளுக்குத் தீரநெஞ்சைத்
திறந்து காட்டல் வேண்டும் -
''மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை
எமை மாட்ட நினைக்கும் சிறைச்சாலை''
என்ற புரட்சிக்கவியின் திண்மை வேண்டும்....
புரட்டுக்களை உருட்ட வேண்டும்!
புதுமைகளை வளர்க்க வேண்டும்!
போலிகளைப் பொசுக்க வேண்டும் —
போர்க்குண மறவராய் உலவ வேண்டும் —

என்றுமே பெரியார் அண்ணா — நம்
இதயத்தில் வாழ வேண்டும்.

# மாறி வரும் ஊரினிலே

''மாறி வரும் ஊரினிலே'' என்ற தலைப்பில்
10.8.80 அன்று புதுவை வானொலி நிலையத்தார்
புதுவை கம்பன் கலையரங்கில் ஏற்பாடு செய்த
விடுதலை நாள் கவியரங்கில்
கலைஞர் தலைமையில்
சமத்துவம், உழைப்பு, சுற்றுப்புறங்கள்,
மனைநலம், கல்வி, ஒருமைப்பாடு ஆகிய
துணைத் தலைப்புகளில் ஆறு கவிஞர்கள் பாடினர்.
கலைஞர் அவர்கள்
தலைமையேற்று மொழிந்த கவிதை வருமாறு:

★

மாண்புமிகு புதுவை முதல்வருக்கும்
மற்றுமுள்ள அமைச்சருக்கும்
சட்டபேரவைத் தலைவர் - துணைத் தலைவர்க்கும்
திட்டமுடன் பணிவகுத்துச் செயலாற்றும்
மதிப்புமிகு மாநிலத்து அமைப்பாளர்க்கும்
மன்றம் நிறைந்து வழிகின்ற கூட்டமாம்
இன்னுயிர் தந்தும் செந்தமிழ் காக்கும்
என்னுயிர் உடன்பிறப்புக்கள் அனைவர்க்கும்
வணக்கம் கூறுகின்றேன்!
வணக்கம்
வானொலிக் கவியரங்கம் கேட்க வந்த

வண்டமிழ்ப் பெரியோர்க்கும்-
வகை வகையாய்க் கவிபாட வந்துள்ள
நகை முகக் கவிகளுக்கும் வணக்கம்

எதுகை மோனை எதையும் பற்றி
எழுதாக் கவிஞனை வருக என்றே
புதுவை வானொலி அழைத்தது புதிரே!
அதற்கோர் நன்றி ஏற்றிடு வீரே!

எட்டயபுரத்து எரிமலைக் கவிஞன்
பட்டயக் கவிதை படைத்த மண்ணில்

பூகம்பப் புரட்சி புரிந்த புலவன்
டாரதி தாசன் பிறந்த மண்ணில்
கெடுதலை அடிமைத் தளையை அறுத்த
விடுதலைக் கவிதை அரங்கு கண்டோம்.

சரித்திரத்துப் பொன்னெழுத்தில்
சுதந்திரத்தை மின்னவிட்டு
தரித்திரத்தைத் தலைமீது தாங்கிநிற்கும்
தாயகத்தை வாழ்த்துகின்றேன்.

நரிக்குணத்தார் அன்னியர்கள்
நாட்டைவிட்டுப் போன பின்னும் - நம்
துரைத்தனத்தால் உறறபயன
நலிந்தோர் எல்லார்க்கும் கிட்டவில்லை.

புதுவையிலே குடித்துவிட்டுக்
காலி செய்த புட்டிகள் போல்
நடுத்தெருவில், வயற்காட்டில், கிணற்றோரம்
விதவிதமாய் வயிறு காய்ந்து கிடக்கின்றார்
ஏழைமக்கள் நடைப்பிணமாய்!

பொன்னாடு இதுதான் என்று
எந்நா தான் புகழ்ந்திடுமோ?
நன் மானம் காப்பதற்கு ஆடையில்லை
அடங்குதற்கு வீடுமில்லை
சன்மானம் ஒரு கேடா;
சகதிக்கும்? சேற்றுக்கும்?
சாக்கடை வாழ்பூச்சி புழுவுக்கும்?
தேவையில்லை!

தன்மானம் போவதற்குத் தானா
போராட்டப் பாற்கடலில்
சுதந்திரத்தைக் கடைந்தெடுத்தோம்?

இல்லாத காரணத்தால் திண்டுக் கல்லில்
அல்லாவின் நாமம் தொழும் அன்பு மக்கள் - வரிசையில்
நில்லாமல் தானம் வாங்கப் பாய்ந்த தாலே
பொல்லாத சா வுரலில் பொடியாய்ப் போனார்
நெரிசல் எனும் உலக்கை பட்டு;
நெடிய தொரு உலகை விட்டு!

வேட்டி சேலை வாங்குதற்கு ஓடிவந்தார்
வாட்டுகின்ற வறுமையாலே தேடி வந்தார்
வீணைகள் போல் நொறுங்கி விட்டார் - இறப்பின்
ஏணைகளில் தூங்கி விட்டார்; தாலாட்டின்றி!
மலர்களாம் தாய்க் குலத்தார்
மழலைகளாம் அரும்புக் கூட்டம்
மயானத் தோட்டத்தில்
மரணச் செடிகளாய்ப் பூத்ததம்மா

களர் நிலப் பயிர் போலக்
காண்பதுதான் சுதந்திரமா?

பலர் வாடச் சிலர் வாழப்
பெற்றது தான் விடுதலையா?
இடர் போக்கி இல்லாதார் பிழைப்பதற்கு
இனியேனும் விதி செய்வோம்
விடை கொடுப்போம் தலை விதிக்கு
படை யெடுப்போம் பூர்வ ஜென்மப் பலனின் மேல்
தடை விதிக்கும் ஆதிக்கக் கோட்டையினை
அறவழியில் தகர்த் தெறிவோம்.
மடை திறந்த வெள்ளம் போல்
மகிழ்ச்சியினைப் பெருக்கிடுவோம்.
'மாறி வரும் ஊரினிலே' என்று - தமிழில்
ஊறி வரும் கவிஞர்களைக் கொண்டு - புதுவை
வானொலியார் அரங்கொன்று கண்டோர்! - சுவைத்
தேனருவிக் கவிக்கனிகள் தெவிட்டாது உண்போம்!

புதுவை எனக்குத் தியாக
முத்திரை குத்திய
யாத்திரை பூமி
நான் செத்துப் பிழைத்த க்ஷேத்திரம் இதுவே!....
பலர், தீர்த்தமாடும் இந்த திவ்ய ஸ்தலத்தில்
பயல் தீர்ந்தான் என்று அடித்துப் போட்டார்!
சாக்கடையில் தூக்கி எறிந்தார் என்னைச்
சாக்காட்டுக் கொசு கடிக்காததாலே
புதுவை என்னை வாழ வைத்து-
புதிய சோதனைகளைத் தாங்க வைத்தது!
அன்றே என்னை விழுங்கி யிருந்தால்
இன்றெனக்குத் தொல்லை துளியும் இல்லை!
ஆறி வரும் பூமியிலே அழகழகாய் ஊர்களுண்டு
மாறிவரும் ஊரினிலே மகத்தான புதுமை உண்டா?

ஆறிவரும் பூமியிலே அழகழகாய் ஊர்களுண்டு
அருவியுண்டு நதிகள் உண்டு ஆழ்கடல் மிகவுமுண்டு.
தாவி வரும் மான்குட்டி - தாயின் மடிப் புலிக்குட்டி
காவினிலே குயிற்பாட்டு - கனிப்பினிலே மயிலாட்டம்!

இயற்கையின் செழிப்பு - எழிலின் சிரிப்பு
இனிய நற் சிந்தனை - எதிலுமோர் மாற்றம்!
செய்திடத் துணிவும் - செயலில் கனிவும்
சேர்ந்திட வேண்டும் - பேதம் சிதைத்திட வேண்டும்!

பிறப்பால் உயர்வு தாழ்வெனும் பேச்சு! - அறிவுச்
சுரப்பால் அழிந்து அறவே போச்சு! எனினும்
மறப்பார் இல்லை பேதம் - என்றும்
துறப்பார் இல்லை சமயங்கள் மோதல்!

சமத்துவத்தைச் சதிராட விட்டு - அரங்கில்
சதி செய்து காலொடிய வைத்து
சாமி செயல் நாமென்ன செய்வ தென
சமாளிக்கும் கூட்டத்தைச் சாட்டை கொண்டு தாக்கு!

உழைக்க வேண்டும் என்ற உபதேசம் யாருக்கு?
உழைத்துழைத்து உருக்குலைந்த பல கோடிப் பேருக்கா?
உலைக்களத்துச் சுடுநெருப்பில் வேகின்றார்
நிலக் களத்துப் பெருஞ்சேற்றில் சாகின்றார்
புகை கக்கும் ஆலைகளில் மாய்கின்றார்
புயலுக்கும் அஞ்சாமல் அலைகளிலே மாய்கின்றார்.
பாலைகளைச் சோலைகளாய் ஆக்குகின்றார்.
சாலைகளைச் செப்பனிடப் பாறைகளைத் தாக்குகின்றார்
கன்னலென உபதேசம் புரிகின்றாரே;
இன்னுமென்ன உழைத்துக் கிழிக்க வேண்டும்?
சக்திக்கேற்ற உழைப்பு - தேவைக்கேற்ற வசதி
சலியாது உழைத்தலுத்த மக்களுக்கு உடனே வேண்டும்!

அஃதின்றி அறிவுரைகள் பிரசங்கங்கள் ஈர விறகுக் கட்டை!
பழுதின்றிச் சமைக்க உதவாது சமதர்மத்தை!
நாடு வாழ நாம் தயாரிக்க வேண்டும்
நடைமுறையில் அந்த நளபாகத்தை!
சுற்றுப்புறம், மனைநலம், கல்வி, ஒருமைப்பாடு - இவை
வெற்றுப்புறம் ஆகாமல் இருப்பதற்கும்-
வெற்றிகளைக் குவிப்பதற்கும்.
உழைப்பின் பெருமை உணர்தல் வேண்டும்.
உயர்வு தாழ்வற்ற சமத்துவ நிலையும் வேண்டும்.

## மாறி வரும் ஊரினிலே

வெங்காயம் கூடப் பாஞ்சாலி சபதம் செய்யும்
உரிக்க உரிக்கத் தோல் சேலை வருவதாலே
வெங்காயம் கூடப் பாஞ்சாலி சபதம் செய்யும்.

## மாறி வரும் ஊரினிலே

மண்ணாங்கட்டி, தன்னைக் கர்ணன் எனப் புகழ்ந்து கொள்ளும்
கரைகின்ற இரக்க உள்ளம் கர்ணனுக்கு - மழையில்
கரைகின்ற மண்ணாங்கட்டியும் கர்ணன் தானே!

## மாறி வரும் ஊரினிலே


அம்மிக் குழவியும் தன்னை ஆண்டவன் என
ஆராதிக்கச் சொல்லும்,
ஆலயத்திலும் நான்தானே சிவலிங்கமென
ஆர்ப்பாட்டம் புரியும்!
அந்தச் சமத்துவம் கேலிக்குரியது
செக்கெல்லாம் சிவலிங்கமாகாது காண்!

## மாறி வரும் ஊரினிலே

நித்தம் ஆறு வேளை தின்பவனும்
உழைப்பாளியாம்; காரணம்
நெற்றி வியர்வை நிலத்தில் விழத் தின்கின்றானாம்!
பித்த மனிதனவன் என்று பேரிகை கொட்டிடுக!

## மாறி வரும் ஊரினிலே

போலிகள் அசலாகும்
பித்தளை பொன்னாகும் - இந்தப்
பொய்மைகளை வீழ்த்திடவே
மாறி வரும் ஊரினிலே - தமிழில்
ஊறி வரும் கவிஞர்களை அழைக்கின்றேன்.
சந்தத் தொடர் கொஞ்சும் கவி
தந்தச் சிலை மிஞ்சும் எழில்
இன்பத் தமிழ்நெஞ்சம் நிறை
அன்புச் சுடர் ஏந்தி - கவி
அரங்கினிலே வாரீர்!



# சமுதாயப் பார்வைகள்...!

'ஆனந்த விகடன்' பொன்விழாவையொட்டி 7.1.80 அன்று நடந்த கவியரங்கிற்கு தலைமை ஏற்றுத் தந்த கவிதை.

★

வணக்கம்,
கற்பனையாம் நூலெடுத்து
தமிழ்த்தறியில் கவிதைகளை
நெய்து வந்த கவிஞர்களே,
வணக்கம்,

என்றும் தமிழ்பால் அன்புடனே - இந்த
மன்றம் வந்த பெரியோரே,
வணக்கம்,

பாட்டுத்தேன் சுவைக்க
பறந்து வந்த வண்டினங்காள்!
வாசனை மலர்கள் நாங்கள்
வரவேற்று வணங்குகின்றோம் - அன்பு
துறக்காத மனிதர் வாசனை - என்றும்
மறக்காத மனிதர் நாங்கள்!

இறக்காத புகழுக்குரியார் - அவரால்
சிறக்காத செயல் தான் உண்டோ?
செருக்கான சொற்கள் பஞ்சம் - யாரும்
வெறுக்காத வாசன் நெஞ்சம்!

தருக்கோடு நிமிர்ந்ததில்லை வாசன் தலை!
தகுதியற்றோர் முன் வளைந்த தில்லை அந்தத் தலை!

★ ★ ★

எத்தனையோ வழிகளிலே வளர்க்கின்றோம்; கரும்புச்
சத்தனைய சுவைமிக்க தமிழ்மொழியை!
முத்தனைய நகைச்சுவையால், கட்டுரையால், கதைகளாலே - பூங்
கொத்தனைய புதுமை தவழ் விகடனையே வளர்த்த தெவர்?
அவர் இன்று நம்மோடில்லை - ஆனாலும் அவர் வைத்த
சுவர் உண்டு சித்திரமுண்டு - இதய விழிகளாலே
பருகிடுவோம் மொண்டு!

★ ★ ★

ஆனந்த விகடனுக்கு அகவை ஐம்பதாமே? இல்லை;
அதிலும் ஓர் திருத்தமுண்டு; ஐம்பத்திரண்டே உண்மை;
வாய்மையுள்ள விகடனாரே; வம்புக்குத் தான் கேட்கின்றேன்;
'வயதை நீர் குறைத்துச் சொல்வதாலே என்ன லாபம்? - இன்னும்
வாய்ப்பு தேடி அலைகின்றீரோ திரையுலகில்? - உமக்கு
வயது முதிர முதிரத் தான் வைரம் பாய்கின்றது
வண்ணமிகு பாத்திரங்களேற்று எண்ணத்தைப் பொழிகின்றீர்-
தண்ணிலவு, தகத்தகாயச் சூரியன், விண்மீன்கள் இவை;
தம் வயது கோடி கோடி ஆண்டென்று கூறுவதைக் கேளீரோ...
அவைபோல் நீவீர் வாழ்க பல்லாண்டு!....
கண்மணியே! கருமணியே! கருத்தோடு சிரிக்க வைக்கும்
பொன்மணியே! புதுமணியே! புகழ்மணியே!
பன்மணித் திரள் போலப் பண்பார்ந்த நடைபழகி
நெல்மணிக் குவியலாக வாசக உழவர்களை மகிழ்விப்பாய்!
பெண்மணி; உன்னைக் கண்டால் பெறுகின்ற உற்சாகம்தான்

கண் எதிர் காஞ்சிபுரம் சேலை கண்டும் பெறுவதில்லை...!
வித்துவான்கள் இசை நிகழ்ச்சி முடிந்த பின்னர்
விகடனைத் தான் புரட்டிப் பார்ப்பார்; விமர்சனத்தை...!

வித்தகர்கள் நூலுக்கு மதிப்புரையும் - அன்று
விகடன் இதழ் தந்தால் தான் பெருமை கொள்வார்!
கேலிச் சித்திரம்கூட - விகடன் ஏட்டில்
மாலியின் கைபட்டு உயிர்பெற்றுப் பேசக் கண்டோம்!....

பல்கிப் பெருகும் சொல்வளச் சுனைகளாய்க்
கல்கியின் கதைகளோ கருத்தைக் கவரும்!

கொள்கையிலே வேறுபாடு இருந்தாலும் - அதைச்
சொல்கையிலே பண்பாடு தேவை யென்று
செய்கையிலே காட்டியவன் விகடன் தானே;
பொய்கையிலும் நீர்ப்பாசி மிதப்பதுண்டு
அதுபோல
சில நேரம் குறையும் உண்டு - ஆனால் குற்றம் இல்லை.
தமிழ்நாடு தமிழருக்கே என்ற போது
எலி வளை எலிகளுக்கே என்றான் விகடன்!....
பகுத்தறிவுப் போட்டிதனை பழங்காலத்தில் நடத்தினாலும்
பஞ்சாங்கத்து சோதிடத்தில் வல்லவன்தான்
விகடன் போலும்!...

அதனால் தான் அவன் சொன்னபடி
எலி வளையாய் இருக்கின்ற தமிழகத்தைக் காண்கின்றோம்!
எலி வளையில் எலிகளைத் தான் காணவில்லை....
எட்டுக்கால் பூச்சி, பாம்பு, தேள், பூரான்
எல்லாமே அடிக்கும் கொட்டம் தாங்கவில்லை!
சாதியெனும் பூச்சிக்கு எட்டுக்கால் - இல்லை, இல்லை....
சரியாகச் சொல்லவில்லை நான்! எண்ண முடியாத கால்!
பாதியில் வந்த பல கால் பூச்சியை

தேடி அழித்திட வேண்டாமோ?-
பாம்பாய், தேளாய், நெளியும் வன்முறை
பலி கொள்ளும் உயிர்கள் கொஞ்சேமா, சொல்வீர்....

★ ★ ★

ஆலமரத்துக்கு விழுது போன்றார்....
பாலசுப்ரமணியன் - பரிவுடன் என்பால்
விகடன் பொன்விழா வீறுடன் நடைபெற
வீற்றிடுக தலைவராய் கவியரங்கிற்கென்றார்;
ஒரு பதவியில் இருந்தால் தான் உனை மதிப்பேன் என்றில்லாமல்
தெருப் புழுதியில் கிடந்தாலும் குன்றிமணி நிறம் குன்றாதென்று
கருப்பும் சிவப்பும் கலந்த என்னை கனிவுடன் அழைத்தார் -
விருப்பு வெறுப்பிலா பாலுவின் பண்பை
விளக்கொளி என்பேன்; வியந்து போற்றுவேன்!

★ ★ ★

அதிர்ச்சி அடையாதீர்!
ஆனந்த விகடனை நான் ''காந்தாரி'' என்பேன்....
அம்மிக் குழவி இல்லாமலே இவள் நூறு பிள்ளைகளைப்
பெற்றவள்!

வயிற்றெரிச்சலில் பிறக்காத காரணத்தால்
அத்தனை பிள்ளைகளும்
தனித்தனி ஏடுகள் நடத்தும்
தகுதியைப் பெற்றன!

★ ★

கனம் சாஸ்திரிகள் - கனம் பிள்ளைவாள்-
கனம் மந்திரியார் என்பது போல்-
'கனம்' என்ற பெருமை விகடனுக்கு இல்லவே இல்லை-

காரணம் யாரும் விகடனை எடைபோட்டு நிறுக்க
பழைய பேப்பர் கடைக்கு அனுப்புவதே இல்லை-
'பயிண்டு' செய்து பத்திரமாய்ப் பாதுகாக்கும்போது
'பவுண்டு' கிலோ கணக்கென்ற 'கனம்' தான் ஏது?

பெண்களின் கைகளில் இருக்கும்போது - அவர்கள்
கன்னகுழைக்கு 'விகடன்' ஓர் காதலன்!
விட்டுப் பிரிய மனமின்றி அவர்தம்
பட்டுப் புடவையோடு அணைத்திடுவார்!
ஆண்களுக்கோ 'விகடன்' ஓர் ஆரணங்கு;
அட்டையெனும் 'ஜாக்கெட்' அழகிலேயே அவர்கள்
மயங்கிடுவர்!

'விகடன்' இன்று மாப்பிள்ளை! அதனால்:
வெடிக்கை நலுங்கெல்லாம் வாடிக்கை:
வீணாகக் கோபிக்கக் கூடாது!

'விகடன் ஒரு டாக்டர் - இவன்
அருகே யிருந்தால் - எல்லா
நோயாளிக்கும் ஒரு ஆறுதல்!

'விகடன் ஒரு ஊர்சுற்றி-
எல்லா ரயில்களிலும் பஸ்களிலும்
இவனைக் காணலாம்!

'விகடன்' ஒரு பைத்தியம்! - காரணம்?
இவன் இருக்குமிடத்தை
பத்து பேர் சுற்றிக் கொண்டே இருப்பார்கள்!

இதோ! இங்கேயும் பத்துப்பேர்-
இனிய தமிழ் எடுத்துப் பாட வந்துள்ளார்...
என்னைச் சுற்றிப் பத்துப் பேர்

எனக் கொள்ளினும் 'கொள்க!...
நானும் ஓர் பைத்தியம் தானே தமிழ் என்றால்!...
நாயாகப் பிறந்தாலும் தமிழ்த் தொண்டர் முன்தானே
வால் குழைப்பேன்...
வெறி நாயாக அலைந்தாலும் 'தமிழ்', 'தமிழ்' என்றுதானே
நான் குரைப்பேன்! - என்
தாயாக இருக்கின்ற தமிழே! - தொட்டில்
தாலாட்டாய் எனை வளர்த்த தமிழே!
ஊன். கலந்து உயிர் கலந்து
தேன் கலந்த பலாச்சுளை போல்
தித்திக்கும் தமிழே!
வான் கலந்தே என் மூச்சு கரையுமட்டும்
நான் பிறந்த மண்ணுக்குக் கடமை செய்வேன்!
அமுத மொழி தமிழுக்குப் பணி செய்யுங்கால்
சமுதாய முற்போக்குப் பார்வையிலும் கூர்மை வேண்டும்!
அதனால்தான் 'விகடன்' நம்மை ஆர்வமுடன்
அழைக்கின்றான் ''சமுதாயப் பார்வை''க்காக!

★ ★ ★

'சமுதாயம்' என்பது - பாபம்; ஒரு பரிதாபமான சொல்;
அதன்மீது பழியைப் போட்டு
ஆயிர மாயிரம் அநீதிகளை
கன்னி கழியாக் கயவர்கள் பிரசவிக்கிறார்கள்!
அந்த அனாதைப் பிள்ளைகளோ;
அராஜகக் கல்விக் கூடங்களில் சட்டம் படிக்கின்றனர்!

படிக்கும் சட்டங்கள் பயனற்றுப் போகாமல்
வெடிக்கும் குண்டுகளாய் வேகமாய் மாறுகின்றன!
வன்முறையன்றோ இஃதென்று கேட்டால் - வேறு
நன்முறை என்ன கற்றுத் தந்தது சமுதாயம்?

இந்தக் கேள்வி, நறுக்கென எழுகிறது!
பாபம் சமுதாயம் - பரிதாபத்திற்குரிய சமுதாயம்!
கன்னக் கோல் பிடிக்கின்ற திருடனும் - திருவிழாக் கூட்டத்தில்
கத்தரிக்கோல் வைக்கின்ற சிறுவனும்
கையும் களவுமாய்ப் பிடிபடும்போது
கடவுளே, நான் என்ன செய்வேன்?
கண்ணிலா சமுதாயம் என்னைக் கள்வனாக்கிற்று
என்றுதான் கதறுகிறான்!

பாபம் சமுதாயம், பரிதாபத்திற்குரிய சமுதாயம்!

மாடனைக் காடனைத் தெய்வமென்று
மனிதப் பிஞ்சுகள் தலையைக் கிள்ளியெடுத்து
மாயாவி கொடுக்கும் நரபலி கண்டு -அட
மாபாவி என அலறித் துடித்தால்-
அவனும் சொல்கிறான்;
நானென்ன செய்வேன்; இந்த நாசகார
'சமுதாயம்' இப்படி என்னை ஆக்கிற்றென்று

பாபம் சமுதாயம், பரிதாபத்திற்குரிய சமுதாயம்!

பழங்காலச் சிலைகளின்
கைகால் ஒடித்தும் முறித்தும்
பலநாட்டு வாணிபம் நடத்தும்
கொள்ளையன் கூட
வெள்ளையாய்க் கூறுகிறான்
'சமுதாய'க் கொடுமையால்... இந்தச்
சண்டாளத் தொழிலுக்கு வந்தேன் என்று!

பாபம் சமுதாயம், பரிதாபத்திற்குரிய சமுதாயம்!

பச்சை விளக்கு காட்டப்படாத காரணத்தால்
இச்சைக்கேற்ற இந்த விளக்கை

ஏற்றிக் கொண்டேன் என்கிறாள்;
சிவப்பு விளக்குச் சீமாட்டி!...
சீ! தூ! இஃதோர் பிழைப்பா என்றால்;
தூ! தூ! இந்த 'சமுதாயம்' என்கிறாள்;
பாபம் சமுதாயம், பரிதாபத்திற்குரிய சமுதாயம்!

★ ★ ★

இதில்... மொத்தத்தில்
என்னவோ ஓர் உண்மை - முழு
வெளிச்சம் காட்டத்தான் செய்கிறது.

சமுதாய முற்போக்கு அடித்தளம் கட்டாமல்
சமதர்மப் பொருளாதார மாளிகை எழுப்பி
சர்வதேச அரசியல் கலசங்கள் அமைத்தாலும் - அது
சடசட எனவே நொறுங்கி விழுந்திடும்
இந்தச்
சங்கடம் புரிந்தே விகடன் நம்மை
''சமுதாயப் பார்வை'' காணச் செய்கின்றான்!
மனித மலர்க் கூட்டம் - தன் தோட்டத்திற்குப்
புனித வேலி யொன்றைப் போட்டுக் கொண்டது
அதன் பேர்தான் சமுதாயம்!

பூமியில் முதன் முதலாய்த் தான்றியது மனிதனல்ல
புழு, பூச்சி, மீன், குரங்கு, மிருகங்கள், பறவை இனமே!
பூர்வ ஜென்ம வாசனைக்குப் பொருள் விளக்கம்
புரிகிறதா - இப்போது?...
அடுத்த ஜென்மம், அதற்கு அடுத்த ஜென்மம் - என்பதெல்லாம்
ஆயிரங்கோடி ஆண்டுக்குப்பின்
மாறப்போகும் மனிதன் எடுக்கப் போகும் - ஜென்மம்தானே?...

நிலத்தில் உதித்தது மனித ஜாதி!
நிச்சயமாய்ச் சொல்வேன் அப்போது ஒன்றே ஜாதி;
நெருப்பைக் கண்டு, நீரைத் தடுத்து, குடும்பப்
பொறுப்பையும் ஏற்ற பின்னர், சமூகம் பிறந்தது!....
பிறந்த சமூகம் பரந்து விரிந்து
பிரிவினை வரப்புடன் பெரிய சமுதாயம் ஆனது!
பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்
சிறப்பொவ்வா செய்தொழில் வேற்றுமையான் - இந்த
குறள் மொழிக் கொப்ப குழுக்கள் அமைந்தன.
குறுமதியாளர் குறுக்கே புகுந்து
அறநெறிக் கொவ்வா ஜாதிகள் கண்டனர்....
அன்புளம் வீழ்ந்தது- வம்புகள் பெருகின!...
அதன் விளைவு!
அஞ்ஞான இருளில் மனிதனை மனிதன்
தின்று வாழ்ந்தான்; இன்றோ
விஞ்ஞான ஒளியில் மனிதனை மனிதன்
கொன்று வாழ்கிறான்....!
அணி மலர்த் தோட்டம்தான் சமுதாயம் - எனினும்
தனி மலர் ஒவ்வொன்றும் நறுமணம் தந்திடல் வேண்டும்...
சிறு துளி தான் பெரு வெள்ளம்.... ஒவ்
வொரு துளியும் விஷத் துளியாய் இருத்தல் நன்றோ?
விஷத் துளியைத் தேன் துளியாய்
விடியுமட்டும் குடிக்கின்றான் மதுவென்று! அதை
விலக்குதற்கும் சட்டங்கள் உண்டு - நாட்டில்
'கலக்கலு'க்கும் ஆங்காங்கு திட்டங்கள் உண்டு!
கலப்படத்தைத் தொழிலாகக் கொள்கின்றார்
களிமண் உருண்டைகளைத் தானியத்திற்கு
கலப்பு மணம் செய்கின்றார்;-
இந்தக்-
கலை கற்று நிலை கெட்டு நிற்போர் தான் - நல்ல

விலை பெற்று நம்நாட்டு நாணயத்தை விற்கின்றார்!
வியாபார நாணயத்தை விற்கின்றார்!
நலம் கெடுக்கும் நாடு கெடுக்கும்
நச்சுச் செயல் புரியலாமா எனக் கேட்டால்...
நாவசைத்து நமக்குச் சொல்வார்
நான் என்ன செய்யட்டும், 'சமுதாயக்' கோளாறு என்று!

பாபம் சமுதாயம், பரிதாபத்திற்குரிய சமுதாயம்!

ஆடு, மாடு, பன்றி முதல் கழுதை வரை
ஆடையிலே உரசிச் செல்லும்-
ஆலயத்தைச் சுற்றி வரும்;
ஆண்டவன் பெற்ற பிள்ளை
அரிஜன வகுப்பார் மட்டும்
தீண்டினால் திருநீல கண்டம் என்பார்...
சரிதானா இக்கொடுமை எனக் கேட்டால்
சமுதாயத்தில் அன்று முதல் இருந்து வரும் நீதி என்பார்.

பாபம் சமுதாயம், பரிதாபத்திற்குரிய சமுதாயம்!
நம் பார்வை பட வேண்டிய சமுதாயம்...!

நான் நம்பவில்லை சிவனார் நெற்றிக்கண் திறந்த கதை!
இருந்தாலும் இங்கிருக்கும்
இழிவான சமுதாயத் தீமைகளை
எரித்துப் போட்டுச் சாம்பலாக்க
நடக்க வேண்டும் அந்தக் கதை யென விரும்புகிறேன்....
நாம் திறப்போம் நெற்றிக் கண்ணை!
நாடு வாழ, நலிவு தீர
நமது பார்வை சமுதாயத்தின் மீது
நன்றாகப் பாயட்டும்!.... கற்பனைக்

குன்றாக உயர்ந்து நிற்கும் கவிஞர்களே
ஒன்றாகக் குரல் உயர்த்தி...
உரிமைகளைக் காத்திடுவோம்!
உறவுகளைப் போற்றிடுவோம்!
உண்மைகளைப் பேச வைப்போம்! - தீய
உள்ளங்களைத் தெளிய வைப்போம்!



# கலைவாணர் அரங்கக் கவியரங்கம்

★

பல்வேறு தலைப்புகளில் அண்ணா பற்றி
பலாச்சுளைச் சொல் எடுத்துப் பாவலர்கள்;
கல்மீது எழுத்தாகக் காலத்தால் அழியாத
கவிதை தீட்ட வந்துள்ளார்!

கலைவாணர் அரங்கத்தில்;

கவிவாணர் அரங்கம் இன்று!

காதில் விழுகிறது சிலபேரின் கேலிச்சிரிப்பு!
''கவியரங்கம் ஒரு கேடா கழகத்துக்கு?
விழா நடத்தச் சிறிதேனும் வெட்கமிலையோ இவர்கட்கு?
வெற்றி பெற்ற நாமிங்கே வீரவாள் சுழற்றிநிற்க;
வீணர்கட்கென்ன மூப்பெரும்விழா வேண்டிக்
கிடக்கு'' தென;
ஆனவக்குரல் ஒன்று கேட்குதங்கே!

விளக்கமொன்று அவர்கட்கும் உங்களுக்கும்
சொல்வேன் நான்!
விளக்கை அணைத்துவிட்டு வீட்டுக்குள் புகுந்த
— திருடன்;
அகப்பட்டதைச் சுருட்டிக்கொண்டு அகப்படாமல்
— ஓடியதைப் போல்
அருப்புக்கோட்டை, நெல்லைத் தொகுதிகளை
வென்று விட்டார்!

இதற்குத்தான் நான் முன்பே சொன்னேன்;

இந்த 'இடிஅமீன்' ஆட்சியிலே நமக்கு;
இடைத்தேர்தல் எண்ணம் — எள்முனையும்
வேண்டாமென்று!
இருந்தாலும் போர்க்களத்தில் விழுப்புண்
பெறுவதே பெருமை என்று;
இனிய உடன்பிறப்புக்கள் எல்லோரும்
இரு கருத்துக்கிடமின்றி எடுத்துரைத்த
காரணத்தால்
பணநாயகப்படை எதிர்த்து --- நமது
ஜனநாயகப்படை மோதிற்று!

மறைந்திருந்து மானமிகு வாலியை வீழ்த்திய
மாண்புமிகு இராமச்சந்திரனை; மாவீரன்
என்று போற்ற,
மகாகவி கம்பனே தயங்கினான் என்றால்
மாண்டாலும் வெற்றி வாலிக்குத் தானே!

ஆண்டாலும் அவன் தம்பி சுக்ரீவன் துரோகி தானே!

எனவே;

வீழ்ந்தாலும் விழுப்புண் பெற்றோர்தான்
வீரர்களின் பட்டியலில் இடம் பெறுவர்!

தாழ்ந்தாலும் தமிழன்; தன்மான மிழந்து; தன்
தலையை என்றும் தாழ்த்த மாட்டான்!

தாய் தந்தையரை நன்றியுடன் போற்றும்
தனிப் பண்பாட்டை மறக்க மாட்டான்!

தாயாகத் தமிழர்க்கு அண்ணாவும்
தந்தையாகப் பெரியாரும வாய்த்ததாலே
— அவர்க்குச்

சேயாக விளங்குகின்ற தி.மு.கழகம்;
செய்நன்றி சிறிதளவும் மறவாமல் இன்று

செருமுனையில் பட்டபுண்ணை சிரிப்பாலே ஆற்றி
வருங்கால வெற்றிக்கு வழி வகுக்கக் காண்பீர்!

தமிழ்நினைத்து, இதயத்தைத்
தமிழால் நனைத்து

இமிழ்கடலில் ஆதிக்கம் செலுத்தியவர் நம்தமிழர்
உமிழ்நீரை வாயில் தேக்கி
ஊத்தைப்பல் துலக்கிவிட்டு மீண்டும்
உடலுக்குள் கொப்பளித்து விழுங்குதல் போல்
அமிழ்தான இனப்பண்பு, கலைமாண்பு,
இலக்கியங்கள் மாய்ப்பதற்குத்
தமிழர்களே ஒப்பிவிட்டார் — கெட்ட
உமிழ்நீரை உடலுக்குள் துப்பிவிட்டார்.

அழுக்குச் சேர்ந்த குடலை வெளுத்திட வேண்டும்
அதற்கு மருந்தெனும் நல்ல சலவைத் தொழிலாளி
வேண்டும்

உடல் தூய்மை ஒளடதத்தால் அமையும்;
உளத்தூய்மை வாய்மையாலே ஆகும்!

அந்த வாய்மைக்கு வழிவைத்து
வஞ்சகக் கோட்டைக்கு வெடிவைத்து

அறுபது ஆண்டுகள் அஞ்சாது போரிட்டார் — நம்
அண்ணாவின் தலைவர் பெரியார்!

அய்யா பெரியாரின் தலைமையினை ஏற்றுக்கொண்டு
அடிமைத்தளை நொறுக்க அண்ணாவும் புறப்
பட்டார்

பட்டிமன்ற நடுவர் பதவிக்கென்றே பிறந்திட்ட
பகுத்தறிவுப்பண்பாளர் மா.நன்னன் தலைமையிலே

நேற்றிங்கே நடைபெற்ற பட்டிமன்றத்தில்
தோற்றுப்போனது தம்பி துரைமுருகன் அணி

அது ஒரு வகையில் நியாயம் தான்!
அரசியல்தான் அண்ணாவின் நிலைத்த புகழுக்குப்
பெரிதும் காரணமென வாதிட்டார் ஓரணியில்!
பிறிதோர் அணியினரோ சமுதாயப் பணியே.
எனச் சாதித்தார்!

இளவல் செல்வேந்திரன் அணி எடுத்துரைத்த
இக்கருத்தை இங்கமைந்த மன்றம் ஏற்றதாலே

இங்கிதம் தெரிந்த நடுவர் திரு.நன்னனுமே
இதுதான் தீர்ப்பென்று சமுதாயப்பக்கம்
சாய்ந்தார்!

அறுவடைக்குப்பின் வீட்டுக்கு வந்த நெல்லை
அரிசியாக்கி உலையிலிட்டுச் சோறு படைத்தல்
அரசியல் என்றால்;

அந்நெல் விளையும், கழனிக்கு நீர் பாய்ச்சிப்
பண்படுத்தி, உரமிட்டு
அருகில் வளர் களைகளையும் அகற்றுவதே
சமுதாயப்பணி என்பேன்!

அதையுணர்ந்தே அண்ணா சமுதாயப்பணியாற்றி
அரசியலைச் சமுதாய முன்னேற்றப் படைக்கலனாய்க்
கையில் எடுத்தார்!

卐

# "சித்திரைத் திருநாள்"
# தலைமைக் கவிதை!

தமிழ்ப்புத்தாண்டு (14.4.90) தினத்தன்று முதல்வர் கலைஞர் அவர்கள் சென்னை தொலைக்காட்சியில் 'சித்திரைத் திருநாள்' என்ற தலைப்பில் யாத்த தலைமைக் கவிதை வருமாறு:

★

உள்ளன்பு கொண்ட தமிழ் மக்களுக்கும்
உயர் கவிதை படைக்க வந்த பெருமக்களுக்கும் — என்
உயிரினு மேலான உடன் பிறப்புகட்கும்
வணக்கமும் வாழ்த்தும் குவிக்கின்றேன்!

புத்தாண்டு வாழ்த்துரைக்க வருக என்று
தொலைக்காட்சி நிலையத்தார் தூது விடுத்தார்.
"தூ! தூ!! இவன் எதற்கு?" என்ற காலம் மாறி
தூது விடுக்கும் காலம் தோன்றியது விந்தையன்றோ?

இங்கிருக்கும் கவிஞர்களின் அரங்கிற்கு
நான் தலைவனாம்! வேடிக்கை; நல்ல வேடிக்கை!
இலக்கணமெனும் தாய்ப்பால் அருந்தாமல் — பசி
எடுத்த போதெல்லாம் புதுக் கவிதைப் புட்டிப்பால்
குடித்திடும் குழந்தை நான்!

எனை அழைத்து கவியரங்கத் தலைமை ஏற்கச்
செய்துள்ளார்!

ஏன் என்று யோசித்துப் பா... தபோது — நான்
''வைகாசி'' என் கவிதைக்கென கேட்க மாட்டேன்.
வைகாசி!
''வை — காசி'' என் கவிதைக்கென கேட்க மாட்டேன்.

அதனாலே —
சித்திரைக்கு வாழ்த்துச் சொல்ல அழைத்துள்ளார்கள்!
கவியரங்கில் பங்கு நீ பெற்றந்த சித்திரைப் பெண்ணுக்கு;
ஆசி கூறென்பார்!
பங்குனி பெற்ற அந்த சித்திரைப் பெண்ணுக்கு
ஆசி கூறென்பார்!
புரட்டாசி கூறமாட்டேன் என்பதாலே
''புரட்டு ஆசி'' கூற மாட்டேன் என்பதாலே
துணிந்தழைத்தார் போலும்!

மார்கழியாத் தாவணியுடன்
மார் கழி!
மார் கழியாத் தாவணியுடன்
(காற்றாலோ, கையாலோ விலகாத தாவணியுடன்)
மார் கழியாத் தாவணியுடன் ஆவணிப் பெண்ணாள்
மரபு வழிக் குடும்ப மங்கை; எனைப் பார்த்து
ஆ நீயா? என்று... (ஆனி)
ஆடித் தீர்த்தாள் தை தை என்று
அனல் கொட்டும் விழிகாட்டி!

எதற்காக?
தை முதல் நாள் தான் தமிழ்ப் புத்தாண்டாம்;
— அதற்காக!
உண்மை தான் எனினும் அவள் உருகாமல்
இருப்பதற்கு நான் சொன்னேன்
தமிழர்க்கு ஓராண்டில் இரு புத்தாண்டு வருவதால்
இரட்டிப்பு மகிழ்ச்சி தானே என்று!
தனிர்ப் பெண்ணின் குளிர் முகத்தில் நிலவு கண்டேன்!

தழுவிக் கொண்டாள்! திகைக்காதீர்! மேலும்,
மற்றொருத்தியா என்று!
மாதம் தான்!
மாதல்ல!!

புத்தாண்டு இவ்வாண்டு என்பதை விடப்
புரட்சிக் கவிஞரின் நூற்றாண்டு என்பதிலே பெருமகிழ்ச்சி!
புது மனிதன் அம்பேத்கர் அவதரித்து
புதை குழியில் கிடந்தோரை எல்லாம்
கை தூக்கி நடக்க விட்டு அவர் முகத்தில்
கதிரொளியைப் பரவ விட்ட
வரலாற்றை; இந்த வண்ணமிகு திருநாளில்

வாழ்த்த வேண்டும்!

வளர்க்க வேண்டும்; புதிய சிந்தனையை!

இந்தியத் திருநாட்டு அரசியல் சாசனத்தைச்
சிந்தனைக் கருவூலமாய்த் தந்தவர்க்கும் —
விந்தியம் போல் எழுந்து நின்று, மொழி வெறி
வீணர்களின் ஆதிக்கம் தடுத்து நின்றவர்க்கும்;
ஆம்! அடலேறு மனிதர் அம்பேத்கருக்கும்
அரிமா நெஞ்சப் பாரதி தாசருக்கும்
நூற்றாண்டு கொண்டாடும் இந்த ஆண்டில்
தோற்றோடிப் போகட்டும் தொல்லை தரும் தீய சக்தி!

''சாதியிலே மதங்களிலே சாத்திரச் சகதியிலே
சாயாதீர் மனிதர்காள்'' என்ற சான்றோன்
வடலூர் வள்ளலார் வார்த்தைகளை மதித்தோ மில்லை!
அவருக்கு
வான் மறைக்கத் தோரணம் கட்டி
விழா மட்டும் எடுக்கின்றோம்; வெட்கமில்லை!
பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கு மென்ற
பெருமகனாம் வள்ளுவர்க்குச்

சிறப்பு மட்டும் செய்கின்றோம்; ஆனால் அவர்
செப்பியதைச் செயல்படுத்த மறுத்து விட்டுப்
பெற்றெடுத்த பெண்ணுக்கும் பிள்ளைகட்கும்
உற்றார் உறவுக்குள் சம்பந்தம் தேடுகின்றோம்;
— இந்த
ஊருக்கு உபதேசிகளால் கொண்ட கொள்கைக்கு
என்ன இலாபம்?
உள்ளதைச் சொன்னால் உடலெரிந்து வருவதேன் கோபம்?
சிந்தனையில் விளைந்த செல்வம் சீர்திருத்தக்
கொள்கையெனில்;
செயல்படாது அதனை விடுத்தல் பெருந்துரோகம்!
துரோகத்தைப் போற்றித் துதிபாடித் தொழுவதற்கு
எட்டப்பன் காலத்திற்கு முன்பிருந்தே பழகி விட்ட
தமிழர்களும் இருக்கின்றார் தமிழ்நாட்டில்! காரி
உமிழ்கின்றான் கட்டபொம்மன் என்றாலும்;
கவலையில்லை அந்தக் காரியவாதிகளாம் - பகைவர்
கால் பிடித்து வாழ்கின்ற மேதைகட்கு!
கொள்கை என்றும் கோட்பாடென்றும்
குரல்வளையை நெறித்தாலும் விடேன் என்றும்
குன்றேறி முழக்கிவிட்டு — அதில்
ஒன்றேனும் நிறைவேறச் செயல்படாமல்;
மன்றேறி மாவீரன் போல் நிமிர்ந்து நின்று
மக்கள் முன்னே நடிப்பதனால் என்ன பயன்?
வாக்கும் செயலும் ஒன்றாக இருந்தால் தான் — நாட்டில்
பூக்கும் அரசு காய்த்துக் குலுங்கும்!

சொன்னதைச் செய்வதற்கும்
செய்வதைச் சொல்வதற்கும்
ஓர் அரசு உமதரசு நடப்பதாலே
சீர் பெருக உழைத்திடுவோம் என்றும்;
தேர்க்காலின் அச்சாணி போன்ற
ஏர்ப்பின்னால் தேசம் இருத்தலே பொருத்தமென்றும்;

எழில்மிகு நகர்கள், ஊர்கள், ஏக்கமிலாச் சமுதாயம் —
தொழில் வளம் பெருகினால் தோன்றிடுமென்றும்;
தீய நோய் பல களைந்து தெளிந்த நல்வாழ்வு காண
தூய நோக்குடன் திட்டங்கள் தேவை என்றும்;
பாயும் புலியாய் அரசினர் இருந்தால்
பதுக்கல் எலிகள் அழுந்துவர் என்றும்;

இடுப்பொடிந்து கல்வியிலும் வேலை வாய்ப்பினிலும்
துடுப்பில்லாப் படகுகளாய்த் தத்தளித்தோர் வாழ்வு;

இட ஒதுக்கீட்டுப் புரட்சிகர மாற்றங்களால்
இனி வரும் காலத்தில் வளம் பெற்றுத் திகழுமென்றும்;

எட்டாவது வரை படித்த ஏழை வீட்டு இளஞ்சிட்டு
எட்டாப் பழமடியோ இல்வாழ்க்கை என ஏங்கியதை
— மாற்றி விட்டு
தட்டாமல் அவள் கழுத்தில் தாலியேற்ற வைப்பதற்கு
தந்திடும் ஐயாயிரம் தவமின்றிப் பெற்ற வரமென்றும்;

குடும்பத் தலைவனை இழந்து குமுறிக் கதறி
இடும்பைகூர் வறுமையினால் வாடுவோர்க்கு — அரசு
தரும் தொகை தான் அவர்தம் கண்ணீர் துடைக்கும்
அரும் தொகையாய் அமையும் என்றும்;

முட்டையுடன் குழந்தைகட்குச் சத்துணவு — வெறும்
பெட்டைகளாய்ப் பெண்களை எண்ணாதீர் என்று
முப்பது விழுக்காடு முதல் கட்டச் சலுகை என்றும்
முடிவாக ஆணுக்கும் பெண்ணுக்கும்
('அர்த்த நாரீஸ்வர' உரிமை கிட்டுமென்றும்;
(அதாவது பாதி பாதி - 50 சதவிகிதம்)
பெண்ணுரிமை வழங்கினால் தான் பேசுந்திருநாட்டு
மண்ணுரிமை நிலைக்கு மென்றுரைத்து
பெற்றோர் உடைமையில் பாதி பெண்மகவுக்குமெனப்
பெருமை மிகு சம உரிமைச் சட்டமென்றும்;

கருவுற்ற ஏழைப் பெண்கள், கலப்பு மணத் தம்பதியர்
கைம்பெண்ணை மணம் புனிந்தோர், ஊனமுற்றோர்
தொழுநோய் இரவலர்,
பொருளற்றுத் திருவற்றுத் தினைத்திடாமல் — நாம்
புரவலராய் நின்றவரைப் போற்றுவோமென்றும்.
ஆண்டுக்கு மூன்று பண்டிகைகளில்
அய்ந்து கிலோ அரிசி இலவசமென்றும்,
ஆதிதிராவிடர் பழங்குடியினர்க்கு மட்டுமின்றி
அடி மட்டத்தில் உழல்கின்ற மிகப் பிற்பட்டோர்

— சீர் மரபினர்

குடியிருக்க வீட்டு மனை இலவசமாய்க்
கொடுத்திடுவோம் கையகப் படுத்தி யென்றும்;
குடி நீர் இல்லா சிற்றூர் இல்லை எனும்
புது நிலை காணப் பணி புரிவோம் என்றும்;
வானமே கூரையாய் பூமியே பாயாய்

வாழ்ந்தது போதும்!

மீனவர் மற்றும் ஆதிதிராவிடர் பழங்குடியினர் வசித்திட
திட மிகு வீடுகள் தினமும் கட்டிடும்
திட்டத்தை மீண்டும் தொடருவோம் என்றும்;
நாடு காத்தும் மொழி காத்தும் நலிவுற்ற தியாகிகட்கு
நல நிதி மற்றும் வசதி வாய்ப்புகள் தருவது என்றும்;
கல்விச் சாலைகள் சென்றிடு மாணவர்க்குப் பேருந்தில்
கட்டணச் சலுகை வாரி வழங்குவ தென்றும்;
அரசு ஊழியர், ஆலைத் தொழிலாளர், ஆசிரியர் நெசவாளி
அனைத்துப் பாட்டாளி மக்கள் உழுவர்கள் என்றே
ஆவி நிகர்த்தவர் நியாயக் கோரிக்கை ஏற்று
தாவித் துயர் களையத் தயாராயிருப்போம் என்றும்;
வெல்லம் போல் இனிக்கின்ற சொல்லால் அல்ல —
சொல்லுக்குச் செயல் வடிவம் கொடுக்கினற

— ஆட்சி இது!

அதனால் தான்;
சிந்தனை வளர்ப்போம் — செயல் படுவோம் —
சீர்பெருக்கிச் சீலம் காத்திடுவோம் — என்றும்;
உள்ளத்தில் உண்மை ஒளி கொண்டு
உருக்கைப் போல் உறுதி மிகக் கொண்டு
உரிமைகளைப் பெற்றிடுவோம் என்றும்;
உலகத்தைக் கற்றிடுவோம் என்றும்;
கவிதைக்குச் சுதந்திரம் அளிக்கும்
கவிஞன் நான் தலைப்புகள் தந்தேன்.
தலைப்புகளில்

பாடவருவோர் —

வெற்றித் தமிழ்
பற்றிப் புகழ்
உச்சிக் கவி
கற்றுப் புவி
சுற்றிச் சுழல்
கவிஞர்கள்!

இவர் தரும்

நற்றமிழ்ப்
பொற்குவை
கற்றறிவாளர்
பெற்றிடும்
வாய்ப்பினால்
அற்றது தீமை
உற்றது வாய்மை என
இலக்கியத் தமிழ்க் கொடி
இப் பூமியில் நடுவோம்!
அறிவியல் தமிழால்
வான விளிம்பினைத்
தொடுவோம்!

முதலில்

அரசு மணிமேகலை
இந்த அரசு, மணிமேகலையாக இருந்தால்
அட்சய பாத்திரம் கொண்டு
அள்ள அள்ளக் குறையாமல்
அனைவர்க்கும்
அனுதினமும்
அமுது படைத்திருப்போம்!

பரவாயில்லை

அட்சய பாத்திர மில்லாமலே
ஐந்து கோடித் தமிழ் மக்களை
அரவணைத்து நல்வாழ்வு நல்கிட
அன்றாடம் சிந்தனை செய்வோம்!
அந்தச் சிந்தனை பற்றி அரச மணிமேகலையின்
அரிய கவிதை இப்போது கேட்போம்!

அடுத்து

கவியரசு பொன்னி வளவன்.
காவிரிக்குப் பொன்னி யென்று பெயருண்டு!
அந்தச் சிக்கல் தீர எப்படிச்
செயல்படுவதென இருந்திடும் போது;
வருகின்றாள் பொன்னி! என்ன கருத்து
தருகின்றாள் எனப் பார்ப்போம்!

அடுத்து

நிர்மலா சுரேஷ்
தலைப்பென்ன தெரியுமா?
சீர் பற்றியது!
பெண்ணுக்குரிய தலைப்பு!
சீர்வரிசை பெருக்குதல் பற்றி

சிந்திக்காமல் —
நாட்டின் சீர்பெருக நல்ல
கருத்துக்கள் வழங்குவார் என
நம்புவோமாக!

அடுத்து,

விலை உயர்ந்த கவியரசு
வைரமும் முத்தும்!
தலைப்போ "சீலம் காத்திடுவோம்."
சீலம் காத்துச் சீர்பெருக்கிச் செப்பனிட்ட
செந்தமிழ் நாட்டை நாம் கயவர்க்கு
ஏலப் பொருளாய் விட்டு விட்டால்
மானம் போம்! மனித சாதி என்ற நாமம் போம்!
காலம் அளித்த பரிசு அண்ணல் காந்தி
காஞ்சி அளித்த பரிசு அறிஞர் அண்ணா — இவருடன்
சீலம் வகுத்த பெரியார் வழி நிற்பதற்கும்
ஓலமிடும் ஓதிய மிலார் மனிதர்களின் விழி திறப்பதற்கும் —
பாடுவார் இவர்! பருகிடுவோம் சுவையையே!

அடுத்து,

கவிஞர் தமிழன்பன்
தொலைக்காட்சியில்
செய்தி வாசிப்பவர்
செந்தமிழை சுவாசிப்பவர்
உரிமைகள் பெற்றிட இவர்
உரைப்பது என்ன?
வாசிக்கட்டும்! உரிமைகள்
சுவாசிக்கட்டும்!

அடுத்து,

கவிக்கோ அப்துல் ரகுமான்
கவியரங்கின் கலகலப்பு மனிதர்...

பளபளப்பு இருக்கும்போது மட்டும்
நம் பக்கத்திலும்,
பரபரப்பான நேரத்தில் பல காத தூரத்திலும் —
இருப்பவரல்ல இந்த எஃகுக் கவிஞர்!
இவர் உலகத்தைக் கற்றிடுவோம் என
உரைத்திட வருகின்றார்!
கற்றிடுவாரோ? அல்லது சுற்றிடுவாரோ?
கவனித்துப் பார்த்திடுவோம்!

முடிவுரை

நிறைவுரையாக நான் ஏதும் கூறாவிட்டால்
குறை யொன்றும் நேராது எனினும்;
ஒன்று கூற விரும்புகின்றேன்!
சிங்கத் தமிழ் இளைஞர் கூட்டம் — நன்கு
சிந்தித்துச் செயல்படுவதற்கு; நான் எழுதிய
சங்கத் தமிழ் நூலில் ஒரு பகுதி
எடுத்துரைப்பேன்; ஏற்றிடுவீர்!

மந்த மாருதத் தாலாட்டில் உறங்குவதற்கு
மாட மாளிகை கட்டி வாழ்கின்ற பெரியீர்!
பணம்பணம் பணமென்று பாட்டாளியின் வியர்வையிலே
தினம் தினம் குளியல் நடத்திக் குவிக்கின்றீர்
செல்வத்தை!
பினம் தின்னும் கழுகு போல நீவிர்,
பெருக்க வைக்கின்றீர்; உமது வயிற்றை!
இருள் சூழ்ந்த வாழ்க்கையிலே ஏழைகளைத்
தள்ளி விட்டு
பொருள் தேடி அலைகின்றீர்; போதுமென்ற மனமின்றி!
வாழ்வில் வளம் பெருக்கல் ஒன்றையே குறிக்கோளாய்க்
கொண்டோரே
வார்த்தையொன்று கேட்கின்றேன் பதில் சொல்வீர்!

மாணிக்கப் பொரியலும் மரகதக் கூட்டுமா
இலையிலிட்டு உண்கின்றீர்?
வைரத்தால் வறுவல் செய்து வைடூரிய அவியலுடன்
முத்துப் பவளமென்னும் மணிகளினால் செய்திட்ட
அரிசியையா
குத்தி உலையிலிட்டுக் குடற்பையை நிரப்புகின்றீர்?
என்றதொரு கருத்தமைந்த கேள்வியினைக்
குன்றமெனச் செல்வம் குவிக்கின்ற மனிதரிடம்
மன்றமேறி அறிஞர் அண்ணா கேட்டார் — அதனை
மறவாமல் என்றும் நாம் கேட்கின்றோம்!
பொதுமை மனம் கமழ வேண்டும் என்று;
புவியில் நாம் முழுங்குகின்றோம் இன்று!
புதுமையல்ல இம் முழக்கம், புலவர் பிரான் நக்கீரர்;
புறப்பாடலொன்றில் பொதுமை முரசம் ஆர்க்கின்றார்,
கேளீர்!
தென் கடல் சூழ் தரணி முழுவதுமே — தன்
வெண்கொற்றக் குடையின் கீழ் வரவேண்டுமெனத்
தனியுரிமை நிலைநாட்டத் துடிக்கின்ற வேந்தனுக்கும்,
கனி சுவைக்கக் கல் எறிந்து வீழ்த்துதல் போல்
காடகத்தில் விலங்குகளை வேட்டையாட
கண்ணுறக்கமின்றிப் பகலிரவு பாராமல் அலைகின்ற
கல்வியறிவற்ற முரட்டு மனிதனுக்கும்,
மானம் காத்திட அவர்தம் உடலுக்குக்
கீழும் மேலும் இரு உடைதான் வேண்டும்! — அவரை
மயக்கத்தில் ஆழ்த்தாமல் பசி நீக்கக்
கூழோ பொங்கலோ உண்டு களிக்க
ஆழிசூழ் இவ்வுலகில் அவரவர்க்கும் ஒரு
நாழித் தானியம் மட்டும் போதுமன்றோ?
இப்படி
உண்பது நாழி, உடுப்பவை இரண்டேயெனும்
உண்மைதனை உணர்ந்த பின்னும்,
வறுமையில் பலர் வாட; வளமிகு செல்வப்

பெருமையில் சிலர் ஆடல் நீதி தானோ?
உலகிற் பிறந்தோர் அனைவருக்கும்,
உடல், உள்ளத் தேவையெல்லாம்
ஒன்றாக இருக்கும் போது - இதனை
நன்றாகச் சிந்திக்காமல்
வெள்ளம் போல் பொருள் எதற்கு ஒருவன்
சேர்த்தல் வேண்டும்?
பள்ளம் போல் வாழ்வினிலே பலர் எதற்குச் சாதல்
வேண்டும்?

தனக்கே எலாம் எனும் தனியுடைமை தகர்த்துத்
தரித்திரத்தை விரட்டுவதற்குத் தக்க வழி காண
பகுத்துண்டு பல்லுயிர் ஓம்பும் பொதுமைக்
கொள்கையினை
வகுத்தளித்து வையத்தில் இன்பம் காண்பது தான்
வாழ்வெடுத்த பயனாகும்!
தொகுத்தளித்தார் இக்கருத்தை நக்கீரர், அதனைத்
தொடர்ந்தளித்து வருகின்றார் தொல்புவியில்
நல்லோரெல்லாம்!

"தென் கடல் வளாகம் பொதுமை இன்றி
வெண்குடை நிழற்றிய ஒருமை யோர்க்கும்
நடுநாள் யாமத்தும் பகலும் துஞ்சான்
கடுமாப் பார்க்கும் கல்லா ஒருவற்கும்
உண்பது நாழி, உடுப்பவை இரண்டே;
பிறவும் எல்லாம் ஓரொக் கும்மே;
செல்வத்துப் பயனே ஈதல்;
துய்ப்பேம் எனினே, தப்புந பலவே."

(புறநானூறு: பாடல் 189

பதவியில் இல்லா காலத்தில் நான்
பாடிய பாட்டாம் இஃது!

பதவி யொரு முள் மாலை! இலக்கியப்
பணி எனக்கு முல்லைச் சரம்!
பதவி யொரு நெடும் பள்ளம்! பொதுப்
பணி எனக்குப் பொதிகைக் குன்றம்!
மானமா? மகுடமா? எனக் கேட்டால்
மானத்தை மட்டுமே மதிக்கின்ற மனிதன் நான்!
கிரீடமா? தலையா? எனக் கேட்கும்போது
கிரீடமே போதுமென இளிக்கின்ற கிறுக்கனல்ல நான்!
அதனால் தான்
உறவுக்குக் கை கொடுப்போம்
உரிமைக்குக் குரல் கொடுப்போம் என்றுரைத்துப் பதவித்
துறவுக்கும் தயாராகப் பத்தாண்டுக்குமேல் கழித்தவன் நான்!
பணி புரியும் வாய்ப்புத்தான் பதவி!
பதவி, பவிசு, படாடோபம் எல்லாமே, ஊதிய
பலூனைப் போல் வெடித்து விடும்
பண்பார்ந்த தொண்டொன்றே
வானைப் போல் நிலைத்து நிற்கும்!
இஃதறியாச் சில பேர்கள்
பதவி யொன்றே பிறவி யெடுத்த பயன் என்று
கரையிலிட்ட மீனைப் போல் துடிக்கின்றார்!
அவர்களுக்கும் சேர்த்துப் புத்தாண்டு வாழ்த்துக் கூறி
அறிஞர்க்கும், கவிஞர்க்கும்
அனைத்துப் பிரிவு தோழர்க்கும்
நன்றி கூறி அமைகின்றேன்!
நல்வணக்கம் ஏற்றிடுக!

# எழுத்துக்கள் மூன்று – எண்ணங்கள் மும்மூன்று

ஐம்பெரும் விழாவையொட்டி சென்னை கலைவாணர் அரங்கில் ''எழுத்துக்கள் மூன்று, எண்ணங்கள் மும்மூன்று'' என்கிற தலைப்பில் நடைபெற்ற கவியரங்கில் முதல்வர் கலைஞர் அவர்கள் பாடிய தலைமைக் கவிதை.

★

பெரு விழா — திரு விழா; நமக்கு
ஒரு விழா முப்பெரும் விழா!
இந்த ஆண்டோ; மேலும்
இரு விழா சேர்ந்து
ஐம்பெரும் விழா ஆயிற்று!

அய்யா
அண்ணா
கழகம் பிறந்தநாள் விழா
அம்பேத்கர்
பாவேந்தர்
இருவர்க்கும் நூற்றாண்டு விழா;
திராவிட இயக்கத்தின்
தோற்றம் குறிக்கும் வைர விழா;
மண்டல் குழு பரிந்துரையை
மைய அரசு ஏற்றமைக்கு
மகத்தான வெற்றி விழா!

மனிதாபிமானி வி.பி.சிங்கிற்கு
மனமார்ந்த நன்றியினைத்
தெரிவிக்கும் திரு விழா!
விழா காண வந்துள்ள
அனைவர்க்கும் என் வணக்கம்.

அறிவியக்க அடலேறு இனமானப் பேராசிரியருக்கும்
ஆருயிர் இளவல் நாஞ்சிலார்க்கும்
அருமை நண்பர் அன்பிலுக்கும்
மன்னைக்கும் மத்திய அமைச்சர் மாறனுக்கும்
அமைச்சர் பெருமக்களுக்கும் — எங்கள்
அவைத் தலைவர் தமிழ்க்குடிமகனார்க்கும்
புதுக்கவிஞன் டி.ஆர்.பாலுவிற்கும்
பழைய கவிஞர்கள் அனைவருக்கும்
வணக்கம்!

எழுத்துக்கள் மூன்று
எண்ணங்கள் மும்மூன்றென
கவியரங்கம் அமைத்திட்டார் — அதில்
கழுத்துக்கு மேலே இருக்கும்
தலையைப் போல் — என்னைத்
தலைமை ஏற்கச் செய்திட்டார்.

தடந்தோள், கைகால், முண்டம்,
கண், காது, மூக்கு, வாய், வயிறு,
இருதயம், சுவாசப்பை எதுவுமின்றித்
தலை மட்டும் தனியாக இயங்கிடுமோ?
இயங்காது என்பதாலே
இந்த அங்கங்கள் எதுவும்
இறுமாப்புக் கொள்வதில்லை.
இவையெல்லாம்
என் சான் உடம்புக்குச் சிரசே பிரதானமென்று
பண்பாகப் பணியாற்றும் பாங்கு காண்போம்.

என் அங்கங்களே!
அன்புத் தங்கங்களே!
என் உயிரினும் மேலான
அன்பு உடன்பிறப்புகளே!
உண்மைதானே;
நான் உரைப்பது!
பிரதான உறுப்பு நான் தான் என்று
அவதாரம் எடுத்த ஆண்டவன் போல்
தலை, ஒரு நாளும் ஆணவம் கொண்டதில்லை
இந்தத் தலை ஆணவம் கொண்டதில்லை.
நிலை தவறி அசைந்தது மில்லை.
அதனாலே;
தலையைத் தாங்கி
கழுத்து முதல் கால் வரையில்
கடமையாற்றிக் கண்ணியமுடன்
கட்டுப்பாடு காத்திடும் காட்சியினைக்
கழகமாய்க் கண்டு, மகிழ்ந்து,
தலைதாழ்ந்து வணக்கம் செலுத்துகிறேன்.

தலையில் பாயும் ரத்தம் தான்
காலுக்கும் பாய்கிறது — ஆனாலும் பிரமனின்
தலையிற் பிறந்தோர் உயர்ந்த குலத்தோர் என்றும்,
தொடையிற் பிறந்தோர் வைசிய வருண மென்றும்,
காலில் தோன்றிய நாம் கடைநிலை சாதி யென்றும்,
வகுத்தனர் வருணாசிரம தருமம் என்றால்;
பிரமனின் ரத்த ஓட்டத்தில் மட்டும்
ஏன் இத்தனை கோளாறு?

பிரமன் என்ன ஆணா? பெண்ணா?
பெண் என்றே வைத்துக் கொண்டாலும்

உடல் முழுவதும் கருப்பையைத் தைத்துக் கொண்டா
பிள்ளை பெற்றாள்?

புளுகித் தொலைப்பதற்கும் ஓர் அளவு வேண்டும்.
பொல்லாத புராணங்கள் அபத்தமென
அறிய வேண்டும்.

இதை யெல்லாம் சொன்னால்
இறைவன் கோபிப்பான்
உனக்கு அற்ப ஆயுள்
எனச் சாபம் இடுவான்!
இதை விட வேகமாக
இந்த விஷயத்தைப் புட்டு வைத்த
அய்யா பெரியாருக்கு
அகவை தொண்ணூற்றி ஐந்து!
கண் மூடி வழக்கமெல்லாம்
மண் மூடிப் போக என
கல்லறைக்குப் போகும் வரை
கர்ச்சித்த பெரியாருக்குப் பிறந்த நாள்!

கட்டித் தங்கமாய் பகுத்தறிவுக் கருத்தைத்
தந்தார் அவர்! அதைப்
பெட்டியில் வைத்துப் பூட்டாமல்
அணிமணி செய்து,
தமிழர்க்குச் சூட்டியவர் அண்ணா!
கசப்பு மருந்து
உயிர் காக்கும் மருந்து என
சுயமரியாதைச்
சூரணம் தயாரித்தவர் பெரியார் — அதைக்
கனியிடை கலந்து, தமிழ்த் தேனில் தோய்த்துப்
பிணி அகலத் தந்தவர் அண்ணா!

நுதல் அகன்ற அறிவரசன் அண்ணா; கழகத்தின்
முதல் மாநில மாநாட்டைச் சென்னையிலே
ஆண்டு ஐம்பத்தி ரெண்டில்
கூட்டிய வேளையிலே — மாநாட்டுக்கு

அவரைத் தலைவராக வழி மொழிந்து
நான் பேசிய போது தான்;
மூன்றெழுத்துக்குள்ள மகிமையே
முகில் கிழித்து வெளிக் கிளம்பும்
முழு நிலவாக ஒளி விட்டதம்மா!

மூன்று கடல் சூழ்ந்த தமிழ் நிலத்தில்
மும்முரசு கொட்டி மூன்று கொடிகட்டி
முக்கனியாம் முத்தமிழை வளர்த்த
மூவேந்தர் பரம்பரையில் வந்தவர்கள் நாம் — நமது
மொழிக்குப் பெயர் ''தமிழ்'' — மூன்றெழுத்து!
தமிழர்க்குரிய தனிப் ''பண்பு'' — மூன்றெழுத்து!
பண்பில் எழுந்திடும் 'அன்பு'' மூன்றெழுத்து!
அன்பில் விளையும் ''காதல்'' மூன்றெழுத்து!
காதலர் விரும்பும் ''வீரம்'' மூன்றெழுத்து!
வீரர்கள் விழுப்புண் ஏந்தும் ''களம்'' மூன்றெழுத்து!
களத்தில் காணும் ''வெற்றி'' மூன்றெழுத்து!
வெற்றிக்கு விதையான ''அறிவு'' மூன்றெழுத்து!
அந்த அறிவுப் பெட்டகமாய் வந்துதித்த
''அண்ணா'' மூன்றெழுத்து!
அந்த அண்ணன் கண்ட
கழகமும் ''தி.மு.க.'' — மூன்றெழுத்து!
அன்று நான் இவ்வாறு
பேசியதைத் தொடர்ந்து தான்;
மூன்றெழுத்திலே ஒரு மூச்சிருக்கும்
பாடலே வந்தது!
இன்று; எழுத்துக்கள்
மூன்று
எண்ணங்கள் மும்மூன்றும்
பாட்டராங்கில் வந்துளதே!

அடிநாள் தொட்டு அடிமைகளாய் தொழும்பர்களாய்
ஆதிக்கக் காரர்களின் சவாரிக் குதிரைகளாய்

தாழ்த்தப்பட்டோர் அல்லலுற்றுத்
தணல் வீழ் மெழுகாய்த்
தவிதவித்துக் கிடந்த நிலை மாற்ற
தகத் தகாயச் சூரியனாய் எழுந்தான்
ஒருவன் — அந்தத்
தகைசான்ற அறிஞனுக்குப் பெயர் தான் அம்பேத்கர்!
சாதியாவதேதடா சமயமாவதேதடா
சாதியும் சமயமும் சாற்றிடும் மனிதர்காள்!
ஆண்டவன் படைப்பில் ஆயிரம் பேதம்
அவன் செயல் எனிலோ;
தோண்டுவம் அந்த
ஆண்டவன் கண்களை வாரீர் என்றே;
மாண்டிடும் புழுக்களாம் மனிதரைக் காத்து,
அவர்
மீண்டிடப் போர்க்கொடி உயர்த்திய மேலோன்!
இனித் தகுதியில்லை உமக்கு;
எமை அடக்கி ஆள!
தனித் தொகுதி ஒன்றுதான்
எம் நிலை மாற்றுமென்று;
புயலாய்ச் சீறி
பூகம்பமாய்க் குலுங்கிப்
புரட்சி செய்த
புதிய புத்தன்!
அம்பேத்கர், பெரியார், அண்ணா, கருத்துக்கள்
அனைத்தும் இணைத்து
அழகின் சிரிப்பாய்
அனலின் தகிப்பாய்
கவிதைகள் தந்த பாரதிதாசன்;
எரிமலைக் குழம்பை வேலில் தோய்த்து,
இலட்சியக் கவிதைகள் வடித்த புலவன்!
புரட்சி என்ற சொல்லுக்கு உண்மைப்
பொருளைப் புரியவைக்கும் அவன் பாடல்!

உவமைகள் தென்றலேறி பவனி வரும்.
உண்மைகள் விரிவானாய் ஒளி வெள்ளம் பாய்ச்சும்.
தமிழுக்கு மகன் அவன்! தமிழாகவே மலர்ந்தவன்!
அமிழ்துக்கு நிகரான பாக்கள்!
அத்தனையும் மகரந்தப் பூக்கள்!

(இதோ அழகின் சிரிப்பில் புரட்சிக் கவிஞன் பாடுகிறான்
புறாக்களைப் பற்றி)

"இட்டதோர் தாமரைப் பூ
இதழ் விரித்திருத்தல் போலே
வட்டமாய்ப் புறாக்கள் கூடி
இரையுண்ணலும்; அவற்றின் வாழ்வில்
வெட்டில்லை; குத்துமில்லை;
வேறு வேறு இருந்த ருந்தும்
கட்டில்லை; கீழ் மேல் என்னும்
கண் மூடி வழக்கமில்லை."

(புறாக்கள் ஒழுக்கம் பற்றிப் பாவேந்தர் கூறுகிறார்.)

"அவள் தனி; ஒப்ப வில்லை;
அவன் அவள் வருந்தும் வண்ணம்
தவறிழைக்கின்றான்" இந்தத்
தகாச் செயல் தன்னை, அன்பு
தவழ்கின்ற புறாக்கள் தம்மில்
ஒரு சில தறுதலைகள்
கவலைசேர் மக்களின் பால்
கற்றுக் கொண்டிருத்தல் கூடும்."

இருளையும் அழகென இயம்பிய புலவன்
இவனன்றி யாருளர்? கண்டு சொல்வீர்!

(இருள் எங்கெங்கே இருக்கிறதாம் — அங்கெல்லாம்
இல்லாவிட்டால் அழகு நிறைவு அடையாதாம்.)

''உயர்ந்துள்ள அழகு மூக்கின்
இருபுறம் உறைவாய்; மங்கை
கயல் விழிக்கடையில் உள்ளாய்;
காதின் நடுப்புறத்தும்,
அயலிலும் சூழ்வாய் பெண்ணின்
முகத்தினில் அடையாளத்தை
இயக்குவாய் இருளே! உன் சீர்
ஓவியர் அறிந்திருப்பார்.''

(இருளை அறியாமைக்கு ஒப்பிட்டு — அறியாமை அறிவைத் தரும் — அறிவினால் அறியாமையைத் தர முடியாது என வாதிடுகிறான் பாவேந்தன்.)

''அறிவென்றால் ஒளியாம், ஆம் ஆம்!
அறியாமை இருளாம், ஆம் ஆம்!
அறியாமை அறிவைச் செய்யும்
அறியாமை அறிவால் உண்டா?''

(அதற்கு ஒரு நிகழ்ச்சி)

''சிறுவனைத் தீண்டிற்றுத் தேள்;
நள்ளிருள் விளக்குத் தேவை;
நிறைவேற்ற நெருப்புக் குச்சி
தேடினார்; கிடைக்கவில்லை.
பெட்டியில் இருப்பதாகப்
பேசினார்; சாவி இல்லை;
எட்டுப் பேர் இதற்குள் தேளால்
கொட்டப்பட்டுத் துடித்தார்;

''கட்டாயம் தூய்மை வேண்டும்''
என்னுமோர் அறிவு தன்னை
இட்டளித்திட்ட நல்ல
இருளே உன் பெருமை என்னே!''

(புறாக்களைப் பற்றி இருளைப் பற்றி உவமை நயத்தோடும் நகைச்சுவை உணர்வோடும் பாடிய பாவேந்தன்; இதோ புரட்சிக் கவிஞனாய் சங்க நாதம் செய்கிறான்; பாருங்கள்)

''வடக்கினில் தமிழர் வாழ்வை
வதக்கிப் பின் தெற்கில் வந்தே
இடக்கினைச் செய நினைத்த
எதிரியை அந்நாள் தொட்டே
''அடக்கடா!'' என்றுரைத்த
அறங்காக்கும் தமிழே! இங்குத்
தடைக்கற்கள் உண்டென்றாலும்
தடந்தோள் உண்டெனச் சிரித்தாய்!''

இந்தப் பாவேந்தன் பாட்டுப்
பழுதாக வில்லை யென
மெய்ப்பிக்கத் தான்
தென் கோடி மூலையிலே
பொய்ப்பித்தர் மாயவாதம்;
மண்டல் கமிஷனுக்கு எதிராக
எடுபடவில்லை யென்று;
தெரிவித்தோம் தேசத்துக்கே
அறிவிப்போம் அகிலத்துக்கும்!

வாழை மரம்; தன்னை
வெட்டிக் கட்டியதை அறியாமல்
வருவோரை வரவேற்கும் மண வீட்டில்!
அது போல வடக்கில் உள்ள பிற்பட்டோர்
அவர் நிலை அறியாது கிடக்கின்றார்.
அதனாலே மண்டலுக்கு
அங்குள்ள மாநிலத்தில் எதிர்ப்பதிகம் — ஆனால்
இங்கு, சுண்டலுக்கு கையேந்தி
சூழ்ந்து நிற்கும் அடிமைக் கூட்டம் மிகக் குறைவு!

அது ஏன்? என்ற கேள்விக்கு
இதோ விளக்கம்!

எழுபத்தி ஐந்து ஆண்டின் முன்னே
எழுந்தது பார் ஓர் இயக்கம் — சர் பிட்டி
தியாகராயப் பெரியோன் கண்ட
திராவிடப் பேரியக்கம்!
உழுது பண்படுத்தி
உரிய முறை நடவு நட்டுக் காவல் செய்தால்
அறுவடையின்போது
அழுது புலம்பத் தேவையில்லை.
அந்நாள் தொட்டு இந்நாள் வரை
பதப்படுத்தப்பட்ட நிலம் இது!
பக்குவமடைந்த பூமி! அது
திராவிட இயக்கம் திரட்டிய செல்வம்.
நெல் விதைத்தால், தவறி இங்குப்
புல் விளையாது!
கல்வி வேலை வாய்ப்புகளில்
சமூக அடிப்படையே தேவையென்னும்
நல்லதோர் இட ஒதுக்கீடே
நம் இயக்க முழக்கமாகும்!
அதனாலே ஆதிக்க புரிக்
கூச்சல் எல்லாம்
அரவமொன்று தடி கண்டால்
அடங்குதல் போல் அடங்கிப் போகும்.
சிறு நரிகள் வால் தூக்கி
பொருதிடுவோம் வருக எனில்
சிங்க ஏறுகள் பாய்ந்தோடி.
குகை இடுக்கில் பதுங்கிடுமோ?
எலிகள் நடனம் ஆடுமிங்கே — அதற்குப்
புலிகள் தாளம் போட்டிடுமோ?

அலிகளின் ஆர்ப்பாட்ட மெல்லாம்
அதுகளைப் போல்
அலிகளிடம் தான் செல்லும் — அந்த
ஆண் மக்களை அது எப்படி வெல்லும்?

சங்கத் தரு
தங்கத் தமிழ்
வங்கக் கடல்
பொங்கும் — இனம்
சிங்கக் குரல்
எங்கும் எழ
ஒன்றே குலம்
என்றே சொல்லி
வாழ்ந்த இனம்;
பண்டு தொட்டுக்
கொண்டு கொடுத்த இனம்;
உண்டு கொழுக்க
வந்த கூட்டம்
சிண்டு முடிந்து
சீர் குலையவே
ஒரு சாதி
தமிழ்ச் சாதி
பல சாதியானதே! அதனால்
பலவீனமானதே!!

சூழ்ச்சி வென்றது
சூது பலித்தது — இனி
வீழ்ச்சியில்லை யென
வீணர்கள் பாடினர்!
வெறி கொண்டு ஆடினர்!
அறிவார் கல்வியில்
அரசுப் பணிகளில்

பதுக்கிய இடமெல்லாம்
தம்மதே என்று
வதக்கியே பிறரது
வாழ்வினைப் பறித்த
ஓர் பிரிவு மக்களிடம்
போர் புரியத் தயங்கியதால்
செதுக்கிய சிலைகளாய்ச்
செயலற்றுக் கிடந்தோம் அன்று!
நடக்கும் இருளை
நகர்த்தும் பகல் போல்
நாளும் வந்தது
கோளும் தொலைந்தது!
ஒதுக்கியே தீர்வது
ஒடுக்கப்பட்டோருக்கு
இட ஒதுக்கீடு என;
எதிர் நீச்சல் போட்டு
எழுந்து நின்றது;
திராவிட இயக்கம்!
தென்னக மயக்கம்
தீர்க்க முனைந்தது!

தேடக்கிடைக்காத தெள்ளமுதாய்
தேமதுரக் கீத இசையாய்
தேன்பாகும் தினைமாவும் இணைந்த தொரு
தெவிட்டாத சுவை விருந்தாய்
திக்கற்ற மக்களுக்கு
திசை காட்டும் நிலவொளியாய்
வாய்த்திட்ட நற்பேறு
வாராது வந்த மாமணி
வகுப்புவாரி விகிதாசாரம் — பிற்பட்டோர்
வாழ்வுக்கு ஒரு வரப் பிரசாதம்!

வந்ததைத் தொலைப்போமோ? வஞ்சக
வலைதனில் வீழ்வோமோ?
வெந்ததைத் தின்று — வாயில்
வந்ததை உளறும் மனிதர்
தகுதி, திறமை என எழுதிப் பேசி;
நயமாக நஞ்சைக் கலக்கின்றார்.
நாட்டு மக்கள் உள்ளத்தைக் குழப்புகின்றார்.
"அழகாக முடிச்சவிழ்த்தால் விடுவாருண்டோ?"
எனப் பாவேந்தன்
கேட்டதைத் தான்;
நானும் கேட்கின்றேன்!

ஆண்டவன் படைப்பில்
அனைவரும் சமம் எனில்
அவன், உயர்ஜாதிக்கு மட்டும்
தங்கத்தால் மூளை செய்து
தலைக்குள்ளே வைத்தானா?
மற்ற சாதிக் கெல்லாம்
மண்டைக்குள் இருப்பதென்ன?
களிமண்ணா? சுண்ணாம்பா?

கங்கையைப் போல்
வடமொழியில் கவிதை தந்த
வால்மீகி, வியாசனெல்லாம்
பிரமதேவன் கால் பெற்ற
பிள்ளைகளே!
வள்ளுவன் யார்? கம்பன் யார்?
இளங்கோவடிகள், ஒட்டக் கூத்தன்
இவரெல்லாம் யார்? யார்?
பிரமன் தலையில்
பிறந்ததில்லை இவர்கள்!
ஆனாலும் தமிழ் மொழியின் இமயங்கள்!

நாற்பத்து மூன்று ஆண்டுகளாய்
நாம் பெற்ற சுதந்திரத்தில்
தகுதிக்கும் திறமைக்கும்
தரப்பட்ட வாய்ப்புகளால்
கிழித்த தென்ன?
தைத்த தென்ன?
கிழித்துத் தைத்தது தான் என்ன? என்ன? என்ன?
எதற்காகத் திறமை;
அது தேவையா என்று — நாம்
என்றுமே கேட்டதில்லை!
ஆனால்
ஏகலைவன் வித்தை கற்க
எந்த சாத்திரமும் அனுமதிக்கவில்லை! அவன்
வில்லில் விஜயனையும் வெல்வான் என்று — கட்டை
விரலைக் காணிக்கையாகப் பெற்ற தென்ன நியாயம்?
தவம் செய்தான் சம்பூகச் சூத்திரன்
தகுதி அவனுக்கேது எனச் சீறி — அவன்
தலை வெட்டிச் சாய்த்த கதை
இராம பிரான் வரலாறன்றோ?
கட்டை விரலோ, தலையோ
காணிக்கையாக — இந்நாளில் எவனும் கேட்டால்
பட்டை உரியும் — சுடுகாட்டில் அவன்
கட்டை வேகும்!

"என்ன இது; என்றைக்கு மில்லாத வெப்பம்
தலைமைக் கவிதையிலே?"
எனக் கேட்கத் தோன்றுகிறதா?
பிறகென்ன?

முதலுக்கே மோசம் வந்த பின்னர்
முயலாக ஆமையாகக் கிடத்தல் நன்றோ?
ஆயிரம் அடி பள்ளத்தில் விழுந்தவனை

கைதூக்கிக் கரையேற்றும் நேரத்தில்
கனமான பாறையொன்றை அவன் தலையில்
உருட்டி விட எத்தனிக்கும்
உலுத்தர்களைக் கண்டால்
உதைக்கத் தான் வேண்டும்!
ஓட ஓட விரட்டத்தான் வேண்டும்!

ஆறிலும் சாவு தான் நூறிலும் சாவு தான்;
ஆனது ஆகட்டுமே — இந்த
ஆட்சி தான் போகட்டுமே!
மகுடமின்றி வாழ முடியா மனிதர்களா நாம்?
சிசுவாகப் பிறக்கும் போதே —
சிம்மாசனத்துடனா பிறந்தோம்;
சீதை வில்லுடன் பிறந்தது போல்?
கொற்றக் குடையா? கொள்கையா?
எது வேண்டும் எனில்; கொள்கையை
விற்றுப் பிழைக்க வேறு நபர் பார் என்போம்!
ஆட்சி; வரும்! போகும்! நிலையல்ல!
அய்யா அண்ணா வகுத்த கொள்கை;
போகாது! வாழும் நிலையாக! எனவே
ஆட்சியில் இருப்பினும்
இல்லாதிருப்பினும்
தன்மானம் உயிரென மதிப்போம்.
தமிழர் இனமானம் என்றுமே காப்போம்.
கொண்ட குறிக்கோளைப் பழித்துக்
கண்டபடி பேசும் பிறவிகளைப் பார்த்தால்
''போடா வெங்காயம்!'' என்பார்
பெரியார், கோபத்தில்!
''வளம் பெரிய தமிழ்நாட்டில்
தமிழரல்லார் வால் நீட்டினால்
உதை தான் கிடைத்திடும்''

என்றுரைப்பார் பாவேந்தர்!
நாராசப் பேச்சாளர், ஆபாச எழுத்தாளர் — காணின்;
நம்து அண்ணா; "நடுங்கா நாக்கழகர் நரகல்
நடையழகர்!" என நையாண்டி புரிந்திடுவார்!
ஆத்திரம் தாங்காமல் தானே அம்பேத்கர்
அரசியல் சட்டத்தையே தேவைப்படின்
கொளுத்த வேண்டுமெனக் கொந்தளித்தார்!
எந்தத் தலைமுறையும்
இந்தத் தலைவர்கள் போல்
இனியொரு முறை காண்பதில்லை!
அந்தத் தலைவர்களின்
எண்ணங்கள் வெற்றி பெற
சூளுரைப்போம்!
சுடர் முகம் தூக்குவோம்!
இடர் பல வரினும்
எதிர்த்து நிற்போம்!
வெற்றி காண்போம்!



# "அறிஞர் அண்ணா வழியில்"

முப்பெரும் விழாவையொட்டி அண்ணா அறிவாலயம் கலைஞர் திருமண மண்டபத்தில் 16.9.1994 மாலை நடை பெற்ற கவியரங்கத்திற்கு தலைமை வகித்து தலைவர் கலைஞர் அவர்கள் பாடிய கவிதை.

வணக்கம்!

ஆகஸ்டு 15
சுதந்திரம் பிறந்த நாள்
செப்டம்பர் 15 - தமிழனுக்குச்
சுவாசம் பிறந்தநாள்
செப்டம்பர் 17 - தமிழனுக்குச்
சூடு பிறந்த நாள்
அதே நாளில்
சொரணையும் பிறந்ததாலே
நாம் பிறந்தோம்;
ஆம், கழகம் பிறந்தது.

இத்தனையும் இணைத்தே இரும்புச்
சத்தனைய கொள்கை விளக்கம் தர,
முத்தனைய விழா
முப்பெரும் விழா எடுக்கின்றோம்.

இவ்விழாவில்,

கவியரங்கம் பாட வந்துள்ள
கவிஞர்க்கும், கான வந்துள்ள
தமிழ்ப்பெருமக்களுக்கும் வணக்கம்.

மலர்கள் எல்லாம்
ஒன்றுகூடி ஒருநாள்
மாநாடு போட்டுத்
தீர்மானம் நிறைவேற்றின
''கவிஞர்களே!
இனியும் உமது கவிதைகளில்
எம் பெயரை
உவமைக்கு அழைக்காதீர்!
மண்ணோக்கிக்
கண்ணால் கெஞ்சி
வெண்ணிலவு
ஒரு வேண்டுகோள் வைத்தது:
''பண்ணில் எனைவைத்துப்
பாடியது போதும் -
விண்ணில் எனைச் சுதந்திரமாய்
இருக்க விடுவீர்!''
முகில்கள் கூடிப்
பேரணி நடத்தி
முறையீடொன்றைச்
சுமந்து வந்தன.
''மோகன சுந்தரிகன்
கூந்தலுக்கு இனியும்
மேகத்தை உவமை காட்டல்
வேண்டாம் கவிஞர்களே!''

மான்களும், மயில்களும்,
மற்றும் பலவும்
மறியலே நடத்திக்
கோரிக்கை விடுத்தன
''கவிஞர்களே! எத்தனை காலம்
எமை இழுத்துக்
கவிதைக் கூண்டில்
அடைத்து மகிழ்வீர்?
வேண்டும் விடுதலை'' என்றே
தாண்டிக் குதித்தன!

எம் கவிஞர் கூட்டத்தில்
எல்லோரும் திகைத்துப் போய்
ஏனிப்படிக் கோரிக்கை?
போராட்டம்? பேரணி? எனக்
கவரிமான், கானமயில்,
வான்நிலவு, வண்ணமலர்,
முகம் நோக்கிக் கேட்டபோது
வந்த பதில்:

''எங்களின் புகழ்பாடி
உவமை காட்டிக் காட்டி
எங்களுக்கே சலிப்புத்
தட்டிவிட்டதய்யா'' என்பதுதான்!

மானும், தேனும், மயிலும், குயிலும்
வானும், கடலும், கதிரும், நிலவும்
மாடப்புறா, ஜோடிக்கிளி,
மா, பலா, வாழைக்கனி
ஆடும் கொடி, பாடும் அருவி,
அகில், முகில், மலை, சிலை
அனைத்துமே இனி எமது

ஒத்துழைப்பு இல்லையெனப்
புறக்கணித்ததால்; சரி...
சொல்லுங்கள் நீங்களே
சலிப்புத் தட்டாத
பெயர்தான் என்னவென்று
கேட்டு நின்றோம்!

சலிப்புத் தட்டாத பெயர் ஒன்றுண்டு!
நினைத்திடில்;
புளிப்பு, கசப்பு, அணுகிடாத பெயர்!
இலக்கியமாய் என்றும்
வாழுகின்ற பெயர்!
இணையிலாச் சரித்திரமாய்
ஆகிவிட்ட பெயர்!

மலர் என்பீர்;
வாடி விடுவோம்! அப்பெயரோ
வாடாமல் மணம் வீசும்,
என்றென்றும்!
நிலவென்பீர்
நிலையின்றிப் பிறையாவோம்!
அப்பெயரோ;
குறையின்றிக்
குளிரொளி வழங்கும் என அறிக!

முகில் என்பீர்
காற்றடித்தால்தான்
கரைந்து மழையாவோம், நாங்கள்!
காற்றின்றிக் கருணை மழை பொழியும்
கருப் பொருளாய் உமது கவிதைக்குப்
பெருமை சேர்க்கும்
பெயர் ஒன்று காண்பீர்;

அப்பெயர்தான் அண்ணா எனும்
அருமைமிகு பெயர் என்று;
அருவியும், தென்றலும், அழகிய மலரும்
பழகிய பலவும் - அகமகிழ்ந்து
ஒரு குரலில் எழுந்து முழங்கின!

அறியாதார்க் கன்றோ
அண்ணாவை அறிமுகம் செய்ய வேண்டும்
அவரைத்தான் அறியா தோரும்
மெத்த அறிந்தவர் போல்
நடித்தால்தான் நாட்டில்
நடமாட முடியுமென்று
கருதுகின்ற கதையைத்தான்
நாள்தோறும் காட்சியாகக்
காண்கின்றோமே!

மலர்கள் முதல் மற்ற
உவமைப் பொருள்கள் அனைத்தும்
மனவருத்த முற்று
எமது பெயரை எல்லாவற்றுக்குமிழுத்துச்
சலிப்புத் தட்டச் செய்யாதீர் என்று
எதிர்ப்புணர்வைக் காட்டும் போது;
சலிப்புத் தட்டாமல் இருக்கின்ற பெயர் -
சரித்திரத்தில் பொன்னெழுத்தால்
பொறித்த பெயர் -
களைப்பு போக்கிடும் பெயர்
களிப்பினை வழங்கிடும் பெயர்
அண்ணா - அண்ணா - அண்ணா எனும்
அந்தப் பெயர்தானே!

அழுக்கான பேர்வழிகள் கூட
அண்ணா பெயரை,

மூச்சுக்கு முன்னூறு தடவை உச்சரித்து;
பழுக்காத இரும்பில்
படைக்கலன் தயாரிப்போம்
என்கின்றார்!
ஒரு பேச்சுக்குக் கூட
அண்ணா அதை மறுப்பதில்லை!
இதிலும்,
எதையும் தாங்கும் இதயம் வேண்டுமென
இருக்கின்றார் போலும், நமதண்ணா!

பெரியாரின் கருத்துக்கள்
கசப்பான மருந்து என்று;
பேரறிஞர் அண்ணா அம்மருந்தை
இனிப்புக்குள் வைத்து
இதமாக அளித்திட்டார்!

உடையுங்கள் விநாயகரை என்று
உரைத்திட்டார் உடைத்திட்டார் பெரியார்!

விநாயகரை வீணாக உடைக்கவும் வேண்டாம்;
விநாயகர்க்குத் தேங்காய் உடைக்கவும் வேண்டாம்

கழகத்தின் கொள்கையிதைக்
கைவிளக்காய் ஏந்தி நின்றார் அண்ணா!

விநாயக சதுர்த்திக்கின்று
வாழ்த்துச் செய்தி தருவோரும்
வித்தகராம் அண்ணாவின் பெயரை
விண்ணதிர முழக்குகின்றார்!

மண்சோறு தின்னுகின்றார் மந்திரிமார்
மாரியம்மன் கோயிலுக்குள் உருளுகின்றார்
வேப்பஞ்சேலை கட்டி,
அம்மன் விழாக் கொண்டாடிவிட்டு

விரட்டுகின்றோம் மூடநம்பிக்கையை எனில்
வெட்கம், வெட்கமெனக் கூறி விலகிவிடாமல்
பக்கம் போய்ப் பாதபூஜை செய்கின்ற
பதவிப் பஞ்சோந்திகளும்
பகுத்தறிவு ஜோதிகளாம்!
அண்ணாவின் பேரைச் சொல்லி
இப்படி அழகாக முடிச்சவிழ்க்கின்றார்;
நியாயந்தானா?

பாலப் பருவ முதல் காஞ்சியிலே
பல காலம் வாழ்ந்த அண்ணன்
பக்கத்துத் தெரு மடத்துப் பெரியவரை
பார்த்ததில்லை என்பதுதான் வரலாறு - இன்றோ
சின்னவரை தெரிசிக்கச் சென்று வந்த
செய்தியினை எட்டுக்காலம் போடுகின்றார்!
பகுத்தறிவுப் பரிணாம வளர்ச்சி
படுகின்ற பாட்டையும் நீ பாரண்ணா!

அண்ணாவைப் பார்த்தோர்க்கும்
அவருடன் பழகியோர்க்கும்
இருக்கின்ற வேறுபாட்டை;
அன்றொரு நாள் நாவலர்
விளக்கக் கேட்டோம்;
இன்றவரே - பார்த்தோர் பக்கம் சாய்ந்து
பாயிரம் பாடக் கேட்டோம்!

என் முகத்தருகே தன்முகம்
வரவேண்டும்; படத்தில்
விழவேண்டுமென்று நேற்றுத்
தவங்கிடந்து தவித்தோர் எல்லாம்
இன்று; அண்ணா -
உன்னருகே நான் அமர்ந்திருக்கும்

புகைப்படத்தினிலே
மைதடவி மறைக்கப் பார்க்கின்றார் - இந்த
அற்பரெல்லாம் அரசாளத் துடிக்கின்றார்;
அடடா; உன்சிரிப்புக்கு அர்த்தம் புரிகின்றதண்ணா!

''பரந்த மனம், நன்றிகெட்ட பாவிகளை
மன்னிக்கும் குளிர்ந்த மனம்
வேண்டுமடா தம்பி'' என்கின்றாய் -
ஆம் அண்ணா; அதனால்தானே
உன் இதயத்தை இரவலாகக் கேட்டுப் பெற்றேன்!

பகுத்தறிவு, சமத்துவம், சமதர்மம்,
இன உணர்வு, சமூகநீதி, மொழிப்பற்று
இவற்றுக்கெல்லாம்;
பாராள வந்த காரணத்தால் - புதுப்புது
பாஷ்யங்கள் சொல்லுகின்றார்!
அவர் பால்: பதவி பெற்றோர், பல் வகை
சலுகை பெற்றோர்,
''ஆம்... ஆம்'' எனத் தலையாட்டுகின்றார்!

பாரதத்துப் பகாசூரனுக்குப்
பல்லுக்குப்பல் இருகாதம்
பல்லிடுக்கு முக்காதமெனில்
ஆம் ஆம் எனப் பம்பை அடிக்கும்
படவேட்டம்மன் கோயில்
பூசாரிச் சீடனுக்கும்
இவர்களுக்குமென்ன வித்தியாசம்?

சிலையாக நிற்கின்றாய், சிரித்துக்கொள்கின்றாய்
கொலைவாளால் கொள்கை அழிக்கின்றார்;
பொறுத்துக் கொள்கின்றாய்!
ஏன், என்று எமக்கும் புரிகின்றதண்ணா;
அண்ணா வழியில் அயராதுழைப்பதற்குச்

சூளுரைத்து, சுயமரியாதைச் சுடரொளியாய்த்
தம்பியர்கள் இருக்கின்றார் - அவர்கள்
சோரம் போகமாட்டார் -
போலிகளைக் கண்டு ஏமாறும்

பொதுமக்களுக்கு,
உண்மைகளை உணர்த்திப்
பொய்மைகளைப் புறக்கணிக்கச் செய்திடுவார்
என நம்புகிறாய் அண்ணா - உன்
நம்பிக்கை வீண் போகாமல்
நடந்திடுவோம் அண்ணா!

# கண்ணீர்த் துளிகள்

# பன்னீர்ச்செல்வமே!

1940-ஆம் ஆண்டு லண்டனில் இருந்த இந்திய அமைச்சருக்கு ஆலோசகராகப் பணியாற்ற திராவிடத் தளபதி ஏ.டி.பன்னீர்ச் செல்வம் அவர்கள் விமானத்தில் லண்டன் சென்றபோது, விமானம் ஓமான் கடலில் வீழ்ந்து மூழ்கியது. மறைந்த பன்னீர்ச் செல்வம் அவர்களைப் பற்றி அப்போது திருவாரூரிலிருந்து வெளியான 'முரசொலி'யில் கலைஞர் தமது இளம் வயதில் எழுதிய கண்ணீர்ச் சித்திரம் இது.

★

இருட்டறையில் இரு கண்கள் மூடிக் கொண்டு
உருட்டுகின்றார் உலகத்தார் என்று சொல்வோர்
அழுந்தட்டும் அறியாமை, அதையுணர்த்த
முழங்கிற்று பெரியாரின் முரச ஒலி
அவ்வழி வந்தோன்... அன்பன்... தோழன்
அருமைச் செல்வன்... அறிவியக்க வீரன்
ஞாயிற்றின் நல்லொளியில்
ஆயிற்று காலமென்று அகன்றுவிடக் கருக்கல்
அங்கே...
கிழக்கினில் கிளம்பிய காலைக் கதிரவன்
வெடுக்கென வீழ்ந்தான் கடலில் எனறால்
வையம் கலங்காதோ? வாடி வதங்காதோ?
இருள் நீங்கி ஒளி பெறவே இந்நாடு முந்துங்கால்
மருள் சூழ்ந்த சாவு மேகம் இளங்கதிரை மறைத்ததுவே!
குன்றெடுக்கும் நெடுந்தோளன் குலத்தினனே!
கொன்றொழிக்கும் கொடுவாளால் குள்ளநரிக் கும்பலின்
குலை பிடுங்க குகை விட்டு வெளிவந்த சிங்க ஏறே!

மலைத் தோளா! மாணிக்கக் குன்றே!
பழச்சுளை உன் பேச்சு! பார்வையிலே பனி வீச்சு!
நீ போய்விட்டாய்... நின்னோடு நின் புகழ் போமோ?
பன்னீர்ச்செல்வமே! உன் பால்வடியும்
முகமெங்கே? பாண்டியன் மீசையெங்கே?
பசியேறிய வெறி கடலின் பாழலைகள்
ஓய்ந்தனவா உனைத்தின்று!
''தின்னட்டும்... தின்று மகிழட்டும்... என்றும்
எண்ணட்டும் திருவிடத்தா''ரென்றே எங்கு ஒளிந்தாய்?
பணத்தினில் பிறந்து பணத்தினில் வளர்ந்தும்
பாட்டாளிக் குணத்தினை எங்ஙனம் கற்றாய்?
கோமானே! யாம் அழுதழுது உகுத்த கண்ணீர்
ஓமான் கடல் ஆயிரத்தை வெற்றி கொள்ளும்!
பழுதற்ற திராவிடப் பொன்னாடு! பழமை
மதுவுண்ட மக்கள் எல்லாம் விழித்தெழுதல்
இது காண்டல்... நின் பணிக்குக் காணிக்கையாம்!
சுற்றி எதிர்ப்புகள் சூறாவளியாய்ச் சீறிடினும்
வெற்றி எமக்கென்றே வெளிக் கிளம்பிவிட்டோம்!
பஞ்சைகளல்ல நாங்கள்...
தஞ்சைக் காவலன் சந்ததியார்!
வீழ்ந்திட நேரிடினும் நின் செயல்பாடி
வீழ்ந்திடுவோம்!''

✳

# கலைத்தாயின் தலைச் செல்வன்!

கலைவாணர் என்.எஸ்.கே. மறைந்ததையொட்டி
கலைஞர் அவர்கள் எழுதிய கவிதை

★

பனிப் பார்வை, கனிப்பேச்சு, தனித் திறமை
இனிப்போடு எழில் காட்சி தருகின்ற இசைப்புலவன்!
அழைக்கின்ற போதெல்லாம் மக்கட்
பணிபுரிய வருகின்ற நற்றொண்டன்!

சிரிப்பு,
தழைக்கின்ற செந்தமிழன்! மழைக் கரத்தால்
மாநாடு காக்கின்ற வள்ளல்!
உழைக்கின்ற ஒருபேறே பெரும்பேறு எனக்கொண்ட தமிழேறு
கலையுலகின் தனிவேந்தன் - அலைகடலாம் அவன் உள்ளம்
நிலைகுலைய நமைவிடுத்து நீங்காத துயில்கொண்ட
கொடுமை என்னே!

"சிரிப்பொன்றே மனித வாழ்வுக்கு மருந்து - அதைச்
சிந்தனைத் தேனில் குழைத்து நாள்தோறும் அருந்து-
நான் உள்ளவரை குறையாது அவ்விருந்து!"
என மொழிந்து வாழ்ந்திட்டான் - அந்தோ,
எரி நெருப்பில் வீழ்ந்திட்டான்!

ஏழைகளைச் சிரிக்க வைத்தான்-
சோலைகளை நிமிர வைத்தான்-
எமையெல்லாம் கதறவைத்து இறப்புலகு ஏகிவிட்டான்!
படக்கலையில் அறிவுமணங் கமழச் செய்து - நாட்டின்
வலக்கரமாய் அமைந்திருந்த ''நல்ல தம்பி!''
முடக்கலாம் பெருநிதியை எனக் கிளம்பும் மூளி எண்ணம்
முனை முறிந்து போகும் வண்ணம் 'பணம்' தந்த பாவாணன்!

விதவைதனை ''மணமகளா''ய் ஆக்கி வைத்துக் காதற்
பறவைகளைப் புதுவானம் மேவ விட்ட கர்மவீரன்!
கல்லடிக்கும் கயவர்த்தம் சொல்லடிக்கும் மத்தியிலே
கூறிவந்த கொள்கைகளை
வல்லடி வம்பர்களும் பல் இளிக்கும் விதத்தினிலே
வில்லடிப் பாட்டாலே விளக்கி வந்த வித்தகனாம்!
ஆடுகின்ற கோயிலுக்குப் போகின்றான் பழைய நந்தன் - அறிவு
தேடுகின்ற ஆலயத்தை நாடுகின்றான் புதிய ''கிந்தன்''
ஓடுகின்றார் உனைக் கண்டு ஒதியமிலார்
உள்ளத்தார் என மகிழ்ந்தோம்.

இன்றோ
உனை யிழந்து உளம் நெகிழ்ந்தோம்!
இதழ்க் கடையில் புன்னகையைத் தேக்கிக் கொண்டு
மலர்க் கண்ணால் வரவேற்புக் கூறுகின்ற காட்சி எங்கே?
கிளிச் சிறகின் நிறம்காட்டும் இலை எடுத்துப் புதுக்
கிளிஞ்சல் சுண்ணாம்பும் பாக்கும் சேர்த்துக்
குதப்புகின்ற கோலச் செவ்வாய் காட்டுகின்ற
குறுஞ்சிரிப்பு முகந்தான் எங்கே?
புனலிலே மிதக்கட்டும் தமிழர் என்றே
தணலாகிப் போனாயோ, கலைத் தலைவா!

நீரோடை நிலங்கிழிக்கும் நெடிய பெருந்தமிழ் நாட்டில்
சீரோடு வாழ்ந்திருந்த கலையரசே! நீ
வேரோடு சாய்ந்துவிழப் புயல் வீசும் என உணர்ந்தால்
கோடானுகோடி கரம் அப்புயலைத் தடுத்திருக்கும்!
''எதிர்ப்புகளை இள நகைப்பால் இடறிவிட்டு
என் தலைவன் அண்ணாவின் அருகிருப்பேன்''
என உரைத்து எழுந்திட்டாய்! அதற்குள்
சாவின் மடிதனிலே விழுந்திட்டாய்!
என்னுயிரே! இன்னமுதே! என்ன நினைத்து உயிர் விட்டாய்?

''பொன்மலையைக் குவித்திட்டேன்; இன்று புழுதிமலை
அடிவாரத்தில் கிடக்கின்றேன்'' எனச் சொல்லிப்
புகழ்மலையின் உச்சிக்குப் போனாயோ?
புது மணியே! புகழ் முத்தே!
பொது உடைமை முளைக்கின்ற ''ருசியா''வில்
கலைப் பயணம் நடத்துதற்குச் சென்றாயே;
அதுபோல எண்ணமிட்டோ பெரும்பயணம் மேற்கொண்டாய்;
எம் மீது பெரும்பழியைச் சுமத்திவிட்டு?
கலையே! கற்பனையே!
அழகே! அறிவே!
அன்பே! அறமே!
யாருண்டு இனிமேல் உன்போல் நல்லோன்?
நீயுண்டு: நின்புகழுண்டு என்றென்றும் தமிழர் நெஞ்சில்!

❋

# உன் நிழலாக அணைகின்றோம்!

அண்ணாவின் 75-வது ஆண்டு நினைவுநாளில் எழுதியது

★

அண்ணனே!

எங்கள் உயிரே!
உணர்வே!

இனமானக் கோவே!
எழுச்சியின் வடிவே!

எண்ணங்கள் மலரும்
எழிலார் சோலையே!

எஃகுக் கம்பிகளாம்
இனிய தம்பிகளின் இதயத் துடிப்பே!

எழுபத்துஐந்து பிறக்கிறது உனக்கு - ஆனால்
அறுபத்து வயதில் முடிந்ததேன் கணக்கு?

அண்ணனே!

அழகுதமிழ்ப் பேச்சில்
அருவிகளை வென்றவன் நீ!

ஆங்கிலச் சொல்மழையோ — உன்
ஆற்றலுக்கு ஆலவட்டம்!

எழுத்துக் கற்கண்டுகளை மலையெனக் குவித்தாய்!
எறும்பென மாறி நாங்கள்
அவற்றைச் சுவைத்தோம்!

எழுபத்துஐந்து பிறக்கிறது உனக்கு — ஆனால்
அறுபத்து வயதில் முடிந்ததேன் கணக்கு?

**அண்ணனே!**

காந்தம் உன் விழியில்!
சாந்தம் உன் மொழியில்!

வீரம் உன் செயலில்!
விவேகம் உன் முறையில்!

பாசம் உன் உடன்பிறப்பு!
பரிவு அத்தன் மறுபதிப்பு!

இதயமோ எதையும் தாங்கும்!
புதையலாய்த் தமிழர்க்குக் கிடைத்த திருவே!

எழுபத்து ஐந்து பிறக்கிறது உனக்கு — ஆனால்
அறுபத்து வயதில் முடிந்ததேன் கணக்கு?

**அண்ணனே!**

நீ வருவதற்கு முன்பே
வரலாறு இருந்தது தமிழர்க்கு! ஆனால்
நீ வந்ததற்குப் பின்தான்
வகையாகத் தமிழன் வரலாற்றை உணர்ந்தான்!

இலக்கியம் இருந்தது தமிழருக்கு!
இருப்பினும் நீ வந்த பின்தான்
இயக்கினாய் அதனை
இப்புவி அறிந்திட!

தனிப்பண்பாடு கொண்ட இனம்தான் தமிழினம்!
தமிழினமே அதனை அறியாதிருந்த நேரம்;

தலைவா! நீ உதித்ததால்தான்
தமிழன் தமிழனானான்!

எழுபத்து ஐந்து பிறக்கிறது உனக்கு — ஆனால்
அறுபத்து வயதில் முடிந்ததேன் கணக்கு?

அண்ணனே!

தந்தை பெரியாரின் தளபதி நீ!
விந்தை மனிதர்களால்
விதவிதமாய் விளைந்திட்ட கேடுகளை,
மொந்தை விஷமென்று மொழிந்தவன் நீ!

அறிஞன் நீ!
அறிவாசான் நீ!
வறிஞன் செல்வன் என்று
வரையறுக்கும் வர்க்கபேதம்
வளர்த்தல் தீதென்று சமதர்ம
வழிநின்று உரைத்தவன் நீ!

எழுபத்துஐந்து பிறக்கிறது உனக்கு — ஆனால்
அறுபத்து வயதில் முடிந்ததேன் கணக்கு?
எழும் இக்கேள்விக்கு விடை மட்டும் கிடைக்கவில்லை!
எம்முள்ளத்துயர் இந்நாளிலும் அடங்கிவில்லை —
எனினும் நீ அகலாமல் இருக்கின்றாய்
எனும் நினைவில் உன் நிழலாக அசைகின்றோம்!

# வாழ்க ஜீவா!

நாமணக்கும் நல்ல தமிழ் மணக்கும்
நாஞ்சில் என்ற பேர் மணக்கும்
பாமணக்கும் பூதப்பாண்டி யெனும் ஊர் மணக்கும்
பண்பாளர் ஜீவா புகழ் பாடுகின்ற வாய் தேன்
மணக்கும்!

ஆட்டம் போடும் வாலிபத்தின் - பனி
மூட்டம் கலையா வயதினிலே
நாட்டம் கொண்டார் பொது வாழ்வினிலே
நாட்டை நினைத்தார் முதலிடமாய்!

தோட்டம் நிறையப் பூ இருந்தும்
தொலைவில் பறந்த வண்டினைப் போல்
தொண்டே என்றன் வாழ்வென்று
சுற்றிப் பறந்தார் நாட்டினிலே
வீட்டில் சிலநாள் தங்கிடுவார் - சிறைக்
கூட்டில் பலநாள் வதங்கிடுவார்!

மேடையில் முரசு கொட்டிடுவார் - வாழ்வின்
கோடையில் பயணம் சென்றிடுவார்!
'தாமரை' மலரைத் தந்திடுவார் - அதில்
தமிழாம் அமுதை உண்டிடுவோம்!

கையை ஓங்கிப் பேசிடுவார் - அங்கே
கடும்புயல் வீசக் கண்டிடுவோம்!
வாரீர் என்று அழைத்திடுவார் - அந்த
வாஞ்சை கண்டு சிலிர்த்திடுவோம்!

குன்றாம் அவர்தம் தோளெங்கே?
குன்றா அவர்தம் திறமெங்கே?
நன்றாம் அவர்தம் குணமெங்கே?
நாட்டுக் குழைக்கும் பண்பெங்கே?

வீரம் செறிந்த முகம் எங்கே?
விழிகள் கொட்டும் ஒளி எங்கே?

குருதியெலாம் புரட்சி மணம்
கமழுகின்ற வரிப்புலியை
கொள்கையிலே உறுதிகொண்ட
தமிழ்க் கவியை

கொள்ளையடித்து மகிழ்ந்ததோ
கொடுஞ்சாவு எனக்கேட்டுக்
குமுறுகின்றார் நாட்டுமக்கள்!
வாழ்க ஜீவா! வாழ்க என்றும்!

— 'நம் நாடு' 21.3.1963

# மறைந்த மாவீரன்

தூத்துக்குடி மாவீரன் கே.வி.கே.சாமி கொலையுண்டபோது
இரங்கல் தெரிவித்துப் பாடியது.

★

''சோலையிலே தென்றலிலே இன்பம், பின்னர்-
சொந்த நாட்டைக் காப்பாற்றச் சுழற்றுவேன் வாளை
என்று முழங்குகின்ற காளை!
மொட்டவிழாப் பருவ மலராயிருக்கும் போதே
சுட்டெரிப்பேன் பகையை என்று
சுடர் முகந்துக்கி நின்ற குத்துவிளக்கு! அவன்
கட்டவிழா மேனிதனைக் கரந்தொட்டுத் தழுவியாடக்
காத்திருந்தாள் பூவையெனும் பாவை
தொழிலாளக் குலத்துக்கோர் முத்தென்பார் அவனை! - எழிற்
சத்து மிகும் கனியென்பார்;
பனி நனைந்த மலரென்பார் அவளை!

இருவருமே ஒருவராய் ஆவதெப்போது?
''உருவிய வாளைச் சற்று உறையிலே போடுமே அத்தான்''
என்று முரசு உறுமுகின்ற களம் நோக்கி வாள் தூக்கிப்
பாய்கின்ற காதலனைத் தடுத்து நின்றாள்.
''விடுதலைக்குத் தாவுகின்ற என்னை உன்றன்
காதலுக்குக் காவு கொடுக்க எண்ணாதே பெண்ணே!
கெடுதலைக்கு ஆளாக்கிக் கீழோரால் கீழ் என்று இகழப்பட்ட
என்றன் செந்தமிழர் திரு நாட்டை வாழ்விக்க எழுந்திருக்கும்
அணி வகுப்பில் நிற்பேன்
மணிமாடம்-
கனிப் பேச்சு - வேண்டேன்'' என்றான்.

''முற்றிலுமே வெறுத்தீரோ?'' என்றாள்
''பற்றில்லை உன் மீது என்று உரைக்கமாட்டேன் பாம்புப்
புற்றில்லை தென் தமிழர் தோட்டத்தில்
என்னும் நிலை வரும் வரையில்-
கற்றிட முடியாதடி காதல் படிப்பு'' என்றான்;
அவள் துடித்து நின்றாள்.

''இருவருமே போர்க்களத்தில் இணைந்து நிற்போம்.
அணைந்து விட்டாலும் அப்படியே ஆகட்டும் இருவருக்கும்.
இதற்கென்ன பதில் அத்தான்?''

''இ:தோர் முறை காதலர்கள் கடைப்பிடிப்பதுண்டு!
ஆயின்.... எனக்கது சரிப்பட்டு வராது தங்கம்!
களம் புகுந்து வருகின்ற பகையைச் சாடுகின்ற நேரம் -என்
உளம் புகுந்த நேரிழையாளுக்கு ஏது நேர்ந்ததோ என நெஞ்சம்
ஒருக் கணம் தயங்கும்;
அதற்குள் என் படை மயங்கும்.
வேண்டாமடி பெண்ணே! விடை கொடடி என் கண்ணே!''

''மணத்திற்குத்தான் இசைய மறுக்கின்றீர்; மங்கையென்னை
உண்பதற்குப் போட்டு வைத்த இலை போலப்
பூப் படுக்கை உண்டே அங்கு வாரீர்!''

''பால் சோறு பானையிலே இருக்கட்டும்;
பசியுண்டு இப்போது என்றாலும்
உன்னைப் பாழாக்கிப் போக மாட்டேன்!
அட்டியின்றி விடை தருவாய், அன்னமே!''

''மாம்பழக் கன்னத்தின் அழைப்புக்கும் தடையுண்டா?''

''தடையுண்டு; படை கொண்டு செல்கின்ற நான்
பிணமாகி விட்டாலும், உனக்கு மணமாகித் தீர வேண்டும்.
என் அன்பே!

உன்னை எச்சில்படுத்தி விட்டால் எனக்கென்ன லாபம்?
உனக்குத்தான் பெரு நஷ்டம்!''

''முடியாது! ஒரு முத்தம்...!''

''வேண்டாம்...! திரும்பியபின் மொத்தமாக!''

''அழவிட்டுப் போகாதீர்கள் அத்தான்...''

''காலமெல்லாம் மகிழ்ந்திருப்போம்! கவலை விடு!''

''நீங்கள் கள வெற்றி பெற்றவுடன்,
நான் காதல் வெற்றி பெற்றதாய் மகிழ்வதற்கு இசைவு தாரும்!''

''அசைவொன்றில் ஆயிரம் வண்ணங்கள் காட்டுகின்ற
அழகு மயிலே!
பசையற்ற தென்புலத்தார்
திசை கெட்டு வாடுவதை மாற்றிய பின்,
நாம் மாலை மாற்றிக் கொள்வதில் தடையில்லை, அறிவாய்!''

''வெற்றி பெற்று விரைவில் வாரீர்
கத்துகடல் விளைகின்ற முத்தெடுத்து மாலை தொடுத்து
வைக்கிறேன்!
என்றன் தென் பாண்டித் தேவா!
நீர் திரும்பும் வரை இங்கேயே நிற்கின்றேன்
இலையேல் இக்கடற்கரையே எனக்கமைந்த கல்லறையாம்!''

''சிப்பியிலே விளையாத சிரிப்பு முத்துக் காட்டிடுவாய்;
என் சிந்தையிலே உறவாடும் செந்தமிழின் நலம்பாடித்
திரும்புகிறேன்'' எனப் பிரிந்தான்-
கடற்கரையின் வெண்மணலில் காரிகையைத் தனியே விடுத்து!

அழகு சிப்பிகளால் முத்தளித்து;
ஆடும் அலைகளால் உப்பளித்து

உயர்வளிக்கும் பெருங்கடல் நீர் - வாய்
கொப்பளிப்பதற்கும் பயனில்லை என்பதற்காக வெறுப்பா
ருண்டோ?

அஃதே போல்
நாட்டிற்கு உழைக்கின்ற உத்தமனாம் பெரு வீரன் தன்னை
உடனே தழுவிடவில்லையென்று வெறுக்கவில்லை அந்த
வேல் விழியாள்.
விடைபெற்றுப் போன சிங்கம், தலைவனைக் கண்டு பேசி
நிலைதனை அறிந்து தேர்ந்து,
நீதிக்குத் தொடுக்கும் யுத்த தளபதியாக நின்றிருந்தான்.
பெருஞ்சேனை முகப்பதனில்
நாடளிக்கும் குணக்கேடர்களைக் கூடியெதிர்ப்பதற்குக்
கூவுகிறான், நல்வீரன்! தெருவெல்லாம் பாசறைகள்;
தென்பாண்டி மண்டலத்தில் பாடி வீடு அமையாத பகுதியில்லை
போருக்கு நாள் பார்க்க வேண்டியதுதான் பாக்கி.
தோளுக்கு நிகரானவரில்லை. எம் வாளுக்கு வழி சொல்வீர்;
எனச் சொல்லித் தொகை தொகையாய்க்
குவிந்து விட்டார்.
தொல்புவியில் முதன் முதலாய்த் தோன்றி நின்ற தமிழ்க்
குலத்தார்
தென் புலத்தார் எழுந்துவிட்ட சேதி கேட்டுத்
திக்கெல்லாம் திகைப்பு காட்டும் இன எழுச்சி பெற்றவெள்ளம்
இளைஞரது பட்டாளம், பாட்டாளிப் படை வரிசை
இத்தனையும் அணிவகுப்பில் சேர்ந்து கொண்டு
''நாள் குறிப்பீர்'' என ஓலைவிடுத்தார் தலைமைத் தளபதிக்கு.
தன் வலியும் மாற்றான் வலியும் அறிந்து செயலாற்றுதலே
குறள் வகுக்கும் இலக்கணமெனக் கொண்டிருக்கும்
தலைவனவன்.

''விரைவில் போர் துவங்கும், பொறுத்திருங்கள்'' எனப்
பதில் இறுத்தான்
படைகொண்டு செல்வதற்கு இன்னும் சில நாட்களே
எனக் கண்டு சிந்தை மகிழ்ந்தான்... அதற்குள்
கொடும் விந்தையொன்று உருவாகும் என யார் கண்டார்?....
பாசறைக்குப் பக்கத்தே படை நடத்தும் விதம் பற்றித்
தனிமையிலே நின்று யோசனைக்கு அடிமையானான்
அப்போது-
ஆறேழு நரிக் குணத்தார் அவன் மீது பாய்வதற்கு ஓடி வந்தார்
''ஒதிய மிலார்களே! ஒன்றுக்கும் பயனற்ற பிறவிகளே!
என்ன வேண்டும்?'' எனக் கேட்டான்.
''உன் உயிர் வேண்டும்'' எனச் சொன்னார்-
''உருவத்தால் மனிதராய்த் திரிகின்ற நாய், நரிகள்,
கழுகுக்கும், பருந்துக்கும் இவ்வுடலைக் கொடுப்பதற்கே
களம் செல்ல இருக்கிறேன்.
அதற்குள்ளே உமக்கு 'முடை' என்றால் எடுத்துச் செல்வீர்
ஆயின் ஒன்று; என்னொருவன் உயிர் பறித்தல் மட்டுந்தான்
உம்மாலே ஆவதன்றி
நான் வளர்த்த உணர்ச்சிகளை - உண்மை வீரர்களை-
அழித்துப் போடல் ஆகாதென அறிவீர்'' என்றான்.
தமிழ் கேட்கும் செவியில்லாப் பாம்பு மனிதர்
''படபட'' எனச் சுற்றிக் கொண்டார்.
படைவீரன் அங்கங்களை ஆலமரத்து விழுதுபோல்
அறுத்தெறிந்தார்.
வாள் தடுக்க எழுந்த கரத்தினிலே விரல்களெல்லாம்
'பொல பொல' வென உதிர்ந்தன தரையில்,
மலை பிளக்க வெடி வைத்தது போல் மாவீரன்
மண்டையைப் பிளப்பதற்கும் துணிந்து விட்டார்.
தலை நொறுங்கித் தரையில் சாய்ந்தான்.
அத்தை மகள் முத்தமிடத் துடித்த இதழில்

அரிவாள் வீச்சு! மலர்முகம் புதைத்திருக்க அவள்
தேர்ந்தெடுத்த மணிமார்பில்
உதிர வெள்ளம்
ஓடிவிட்டார் உயிர் எடுக்க வந்த கொடியோர்;
உத்தமனும் கடைசி மூச்சை நாட்டுக்கே அளித்து விட்டு
துயில் நீங்காத் தொட்டிலில் படுத்துக் கொண்டான்.
சித்திரம் சிதைந்தது எனக் கேள்வியுற்றாள்;
முத்து மாலை கட்டிக் கொண்டு
கடல் அலையின் ஓரம் நின்ற கட்டழகி!
மாலைதனை அறுத்து விட்டார் மாபாவிகள்;
சேனைதனை நடத்திச் செல்லும் சிங்கம்-
அங்கம் அறுபட்டுத் துரோகிகளால் துடித்து வீழ்ந்த காட்சி-
அம்மவோ! "கேட்பதற்கு இத்தனை நாள் வாழ்ந்தேனோ?"
"வெண்மணலில் நின்றிருப்பாய் பெண்ணே!
விரைந்து வந்து மணந்திடுவேன் உன்னை"
எனச் சொன்ன வாய் மூடிற்றாமே?
கம்பீர நடைபோடும் கால்கள் சோர்ந்து விட்டனவோ?
கனல் பொழியும் கண்களிலே எனை மணக்கும் போது
குளிர் பொழியும் எனச் சொல்லி வாழ்ந்தேனே,
என் நறுந்தேனே!
உன்னை சாவுச் சகதியில் ஊற்றி விட்டார்களாமே சண்டாளப்
பிறவிகள்
இனி எனக்கேன் வாழ்வு?" என்றாள்
முத்து மாலையைக் கடலில் வீசி எறிந்தாள்
அதைத் தொடர்ந்து, தானும்
அந்தானை நினைத்தவாறு ஆழ்கடலின் அடியிற் சென்றாள்.

# என் இனிய நண்பா!

# ஏன் பிரிந்தாய்?

கவியரசு கண்ணதாசன் மறைந்தபோது கலைஞர் எழுதியது

★

என் இனிய நண்பா!
இளவேனிற் கவிதைகளால்
இதய சுகம் தந்தவனே! உன்
இதயத் துடிப்பை, ஏன் நிறுத்திக் கொண்டாய்?
தென்றலாக வீசியவன் நீ - என் நெஞ்சில்
தீயாகச் சுட்டவனும் நீ! அப்போதும்
அன்றிலாக நம் நட்பு திகழ்ந்ததே யன்றி
அணைந்த தீபமாக ஆனதேயில்லை நண்பா!
கண்ணதாசா! என்
என்னமெல்லாம் இனிக்கும் நேசா!
கவிதை மலர்த்தோட்டம் நீ! - உன்னைக்
காலமெனும் பூகம்பம் தகர்த்துத்
தரைமட்டம் ஆக்கிவிட்டதே!
கைநீட்டிக் கொஞ்சுவோர் பக்கமெல்லாம்
கரம் நீட்டித் தாவுகின்ற குழந்தை நீ
கல்லறைப் பெண்ணின் மடியினிலும்
அப்படித்தான் தாவி விட்டாயோ;
அமைதிப்பால் அருந்தித் தூங்கிவிட!
இயக்க இசைபாடிக் களித்த குயில் உன்னை

மயக்க மருந்திட்டுப் பிரித்தார் முன்னை
தாக்குதல் கணை எத்தனைதான் நீ தொடுத்தாலும்

தாங்கிக் கொண்ட என் நெஞ்சே உன் அன்னை!
திட்டுவதும் தமிழில் நீ திட்டியதால் - சுவைப்
பிட்டு என ஏற்றுக் கொண்ட என்னை;
தித்திக்கும் கவித் தமிழா! பிரிவின்
மத்தியிலே ஏன் விட்டுச் சென்று விட்டாய்?
அடடா! அந்த இளமைக் கழனியில்
அன்பெனும் நாற்று நட்டோம்!
ஆயிரங் காலத்துப் பயிர் நம் தோழமையென
ஆயிரங் கோடிக் கனவுகள் கண்டோம்!
அறுவடைக்கு யாரோ வந்தார்!
உன்னை மட்டும் அறுத்துச் சென்றார்!
நிலையில்லா மனம் உனக்கு! ஆனால்
நிலை பெற்ற புகழ் உனக்கு!
இந்த அதிசயத்தை விளைவிக்க - உன்பால்
இனிய தமிழ் அன்னை துணை நின்றாள்!

என் நண்பா!

இனிய தோழா!

எத்தனையோ தாலாட்டுப் பாடிய உன்னை
இயற்கைத் தாய் தாலாட்டித் தூங்க வைத்தாள்!

எத்தனையோ பாராட்டுப் பெற்ற உனக்கு
இயற்கைத் தாயின் சீராட்டுத்தான் இனிக்கிறதா?
எனை மறந்தாய்! எமை மறைந்தாய்! உனை
மறக்க முடியாமல் உள்ளமெலாம் நிறைந்தாய்!

# மலர்த் தோட்டம்

# ලිපිනය

# இன்றைக்கு உன்றன் பிறந்த நாள்

15.7.76 காமராசர் பிறந்த நாளன்று
கலைஞர் மு.கருணாநிதி அவர்கள்
எழுதியது

★

இன்றைக்கு உன்றன் பிறந்தநாள் - கொள்கைக்
குன்றுக்கு எங்கணும் திருவிழா!

விருதையில் பிறந்து வீரனாய் வளர்ந்தாய்
சரிதையில் நிறைந்த தலைவனாய் நின்றாய்!

சிறையின் கொடுமையும் சித்ர வதையும்
சிரித்த முகத்துடன் ஏற்ற தியாகி.

ஆயிரம் உண்டு கருத்து மோதல் - எனினும்
அழியாத் தொண்டு மறந்திடப் போமோ?

தமிழ் நிலம் மணக்க வந்த திருவே!
அமிழ்தெனும் பொதுப்பணியின் உருவே!

கருத்திருக்கும் உன்றன் உடல் என்றாலும் - நெஞ்சில்
கருத்திருக்கும் காலமெல்லாம் உழைப்பதற்கு!

கதராடை மேனிதனை அலங்கரிக்கும்-
கதறுகின்ற ஏழைகளைக் கரம் அணைக்கும்

கட்சிகளை நோக்கி, நீ கடுமொழிகள் தொடுத்திடுவாய்
...பிற
கட்சித் தலைவர்க்கோர் இன்னலென்றால் துடித்திடுவாய்!
பெரியாரின் கல்லறையில் உன் கண்ணீர்!
பேரறிஞர், மூதறிஞர் மறைந்தபோதும் உன் கண்ணீர்!
பெற்ற தாய்தனை நான் இழந்தபோதும்,
உற்றார் உறவுபோல் நீ வந்து உகுத்தாய் கண்ணீர்!
பெருமகனே! உனக்காக எம் கண்ணீர்
பேராற்றுப் பெருக்கெனவே பாய்ந்த தன்றோ?
தனிமனிதன் வாழ்வல்ல உன் வாழ்வு
தன்மானச் சரித்திரத்தின் அத்தியாயம்,
குமரிமுதல் இமயம்வரை உன்கொடி பறக்கக்
கோலமிகு தமிழகத்தின் புகழ் பொறித்தாய்,
''குணாளா! குலக்கொழுந்தே!'' என்று பண்பின்
மணாளர் எங்கள் அண்ணன் உனை அழைத்தார்.
பச்சைத் தமிழன் எனப் பகுத்தறிவுத் தந்தை
இச்சையுடன் உன் உச்சி முகர்ந்தார்.
கருப்புக் காந்தியென உன்னை - இந்தக்
கடல்சூழ் நாடு கைகூப்பித் தொழுததன்றோ!
வாழ்க்கையின் ஓரத்தில் நீ எம்மிடம் வாஞ்சையும்
காட்டினாய்! - உன்
வாழ்வையே ஒரு பாடமாய் அனைவர்க்கும் நிலை நாட்டினாய்!
இன்றைக்கு உன்றன் பிறந்த நாள் -
என்றைக்கும் அது சிறந்த நாள்!

— 15.7.76 முரசொலியில் வெளிவந்தது.

# அவன் பிறந்தநாள்
# என ஒன்றில்லை!

இந்தத் தென்கோடித் தமிழகத்தின்
இதயவேந்தன்.

இனிக்கின்ற வெல்லத்தையும் - இதழ்
விரிக்கின்ற மலர்களையும்
சொற்சுவையாலும் - எழுத்தின்
சுகந்த மணத்தாலும் வென்றிட்டப்
பொற்காலப்பூபதி எங்கள் அண்ணன்!

சிதையும் கருத்துக்களை
விஷப்பல்லாய்ப் பொருத்தி
சீறிவரும் நாகங்களையும்
எதையும் தாங்கும்
இதய மகுடியாய்
சுருளச் செய்யும் பெருந்தகையாளன்!
நாமம் தொலையா அர்ச்சனைகள்
நாளும் நடக்கும் அண்ணனுக்கு!
ஆமை போன்றான் அடக்கத்திலே
ஊமை போலப் பொறுத்திருப்பான்!
ஆனால்
தீமையொன்று தமிழர்க்கெனில்
தீயைப் போலத் தாவி எழுவான்!
அடைகாக்கும் கோழி போல

அரவணைத்தான் நம்மையெலாம்-
இன்று நாம்
படை நடத்தும் பாங்கெல்லாம்
அவன் தந்த பயிற்சிதானே!
செம்பவளம் இதழ்களிலே -
சிந்துவதோ முத்துவார்த்தை!
சினம் மேவா விழிகளிலே -
ஜொலிப்பது தான் வைர ஒளி!
அவன் பிறந்தநாள் என ஒன்றில்லை
அமுதத் தமிழ் பிறக்கின்ற
அனைத்து நாளும் அவன் பிறந்த நாளே!




# அருமருந்தே! அன்பழகே!
# உடன்பிறப்பே!

உடன் பிறப்பே,
உனக்கு மணிவிழா!
நமது குடும்பத்தின் திருவிழா - உன்
நாக்குத் தமிழ் மணத்தால்
கழக நந்தவனம் சிறக்கும் - உன்
வாக்குத் திறத்தாலே
வஞ்சினப் பகையனைத்தும் பறக்கும் - உன்
ஆக்கப்பணியணி கழகத்தைக்காத்து - நெடுந்
தூக்கத் தமிழரை எழுப்பும்!
நீயோர் ஒளிமணி;
ஓயாமல் ஒலிக்கின்ற தமிழ்மணி!

பள்ளந்தான் தமிழர் வாழ்வில்
விழலாமோ என்று,
உள்ளந்தான் கொதித் தெழுந்தாய் - புது
வெள்ளந்தான் உந்தன் பேச்சு!
வீரம் செய்கின்ற இனத்தின் மூச்சு!
வெற்றி விளைக்கின்ற வாளின் வீச்சு!
அகமென்றும் புறமென்றும் அடுக்கிடும்
அருந்தமிழ் இலக்கியங்கள் தேன் வடித்திடும்!
புலவர் கூட்டமோ,
அதனை உன்பால் பருகத் துடித்திடும்!
யாரோ சிறியர் நரியர்

சூதோ வாதோ செய்திடத் துணிவரேல்
பேராசிரியக் கூர்வேல் பிளக்கும்!
தீராப் பிணியும் தீர்ந்து தமிழ் இனம் பிழைக்கும்!

பெரியாரின் பிள்ளைகள் நாம்
பேரறிஞர் தம்பிகள் நாம் - என்றும்
பிரியாத இருவண்ணக் கொடியே நாம் - இந்தப்
பெருங்குடும்பம் பெருமகிழ்வுக் கடலில் துள்ள
அருமருந்தே! அன்பழக உடன்பிறப்பே!
அறுபது நிறை மணிவிழா போல் - இன்னும்
அடுக்கடுக்காய் பலவிழா காண நீ
பல்லாண்டு வாழியவே!



# பகுத்தறிவுப் பாண்டியனார்!

எமதருமைப் பாண்டியரே!
சவுந்தரம் உமது மேனிமட்டுமா?
உள்ளமும் கூடத்தான் சவுந்தர்யமானது!
உறுமிடும் புலிதான் உமது தோற்றம்-

பன்னீர் செல்வத்தைப் போன்ற கம்பீரம்
பட்டி வீரன்பட்டி பாண்டியர்க்கு என்று;
அண்ணன் அழகிரி அடிக்கடி சொல்வதை
அருகிலிருந்து சுவைத்தோரில் நானும் ஒருவன்.

நானும் அன்பிலும் நாகூர் அனிபாவும்
தேனும் பாலும் கலந்த விருந்தோம்பலை
பட்டி வீரன் பட்டியில் கண்டு மகிழ்ந்தோம்.
பகுத்தறிவுக் கனிகள் உண்டு மகிழ்ந்தோம்.

மறுநாள் காலையில் மலையோரத் தோட்டத்து
நறுமண ஏலம், காய்கள், மலர்கள்
அனைத்தையும் எமக்குக் காட்டி விளக்கிட
அழைத்துச் சென்றீர்; அது இன்னும் நினைவில்!

அய்யப்பனை மீண்டும் படைத்திட்ட பி.டி.ராஜனும்
"பொய்யப்பா கடவுள்" எனும் சவுந்தரபாண்டியனும்
நெய்யைப் போல் வெண்ணைக்குள் ஒளிந்திருக்கும்
நெஞ்சத்தால் நண்பர்களாய் வாழ்ந்திட்ட பண்புதான் என்னே!

ஆரூரில் ஓர் நாள் யாம் இளந்திராவிடர் நடத்திய கூட்டம்;
அதில் கலந்து நீவிர் ஆற்றிய உரைதான் ஆயிரம் பொன்னாம்!

சுயமரியாதை இயக்கத்தின் பெயரால்; பெரியார்
சொல்வது எதுவாயினும் அதனை ஆணையாய் ஏற்பேன்
என்றீர்!

பவள விழா மாநாட்டை மதுரை மூதூரில்
பாண்டியன் நகர் என்று பெயர் வைத்து
தி.மு.க. நடத்திய நிகழ்ச்சியொன்றே - வரலாற்றைத்
திரும்பிப் பார்க்க மறவாத இயக்கமென நிரூபிக்கும் சான்றாகும்!

பேரவைத் தலைவராயிருந்த பாண்டியன் தொகுதியாம்
சேரன்மாதேவியிலே சிறப்புறு பாலமொன்று
என்பது லட்சம் செலவில் எழிலாக அமைந்தபோது
வண்டமிழ்ச் சவுந்தரபாண்டியன் பெயர்தான் வைத்தேன்.


ஆட்சிக்கு வருவோர் பக்கம் கொள்கை வைத்துக்
கட்சிக்கு அடிமைகளாய்த் தொழுது நிற்கும்
பல் இளித்தான் கூட்டத்திற்குச் சவுக்கடி
பல்லாயிரம் தந்திடுவீர்; பாண்டியரே உம் சொல்லால்!

அரிநாம மந்திரத்தை ஜெபிக்கின்ற மகாமகங்கள்
பரிணாம வளர்ச்சி எனப் பசப்பிக் கொண்டு
அரிமாவாய் வாழ்ந்திட்ட அறிவியக்க தளபதியின்
அழகு திருமேனியினைத் திறக்கின்ற ''பொருத்தம்'' தான்
என்னே!

ஆயிரத்துத் தொளாயிரத்து இருபத்தி ஒன்பதாம் ஆண்டில்
அய்யாநின்று நடத்திய செங்கை சுயமரியாதை மாநாட்டில்
பெண்களுக்கும் சொத்தில் சம உரிமை வேண்டுமென்ற
கண்ணனைய தீர்மானம் உமது தலைமையில்

நிறைவேறியதைத்தான் நினைவில் வைத்து,
முறையாகத் தி.மு.க. ஆட்சியிலே சட்டம் செய்தோம்
நாடார்கள் மட்டுமின்றி - உமை
நாட்டோரே புகழ்கின்றார்; போற்றுகின்றார்.

சாதி ஒழிந்தால்தான் சமுதாயம் முன்னேறுமென
ஆதி மகன் வள்ளுவனின் திருக்குறளை
அணுப்போதும் மறவாது வாழ்ந்திருந்த
கணுக்கரும்பே! கலங்காத சிங்க ஏறே! நீவிர் வாழ்க என்றும்!



# நியாயத் தராசு

புண்ணுக்கு மருந்திட்டு
ஆற்ற வழி தேடிடுவாய்!
கண்ணுக்குள் பாவைபோல்
உருண்டிடும் உள்ளம் - கைம்
பெண்ணுக்கு இருப்பதையும்
உணர்ந்திடுவாய்!
''என் மனைவி இறந்திட்டாள்
வேறுமணம் வேண்டு'' மென்பாய்!
பின் நீ சாவு முனை அடைந்திட்டால்
உன் மனையாள் காவு கொடுக்க
வேண்டுமோ காதல்தனை!

— 1945ல் வெளிவந்தது.

# ஏற்பாரோ?

தருமனும் பீமனும் மற்று மூவரும் போதாது
கருணனையும் காதலித்தாள் பாஞ்சாலி

அடடா! இலக்குமியும் பார்வதியும்
இசைச் செல்வி கலைமகளும்
கடலைதனை வறுக்கவில்லை
கற்பிழந்த காரணத்தால்!

இந்திரனுக்குடன்பட்டாள்
அகல்யை எனும் ரிஷி குலத்தாள்;
சந்திரனைக் காமுற்றாள்
தாரையாம் தவப் பெண்ணாள்;

இத்தனை புராணத்தையும்
இந்நாட்டுப் பண்டிதர்கள்
முத்தமிழில் தீட்டித் தந்தார்
முதுகெலும்பு வளைந்ததாலே!

''மலை வந்தெதிர்த்த போதும் கற்புக்
குலையோம்'' என வீரமொழி பேசும் பெண்டீர்
மேற்சொன்ன பெண்களெல்லாம் தெய்வமென்றால்
ஏற்பாரோ மானமுள்ளார் உங்கள் பேச்சை?

— 1945ல் வெளிவந்தது.

# புயல் என அறிக!

எறிபத்தர் எதிரிகளை
மழுவால் வதைத்தார்!
முறிபட்டார் தாய்தந்தை
மனைவிமக்கள், கோட்புலியால்!

நிலைக்களமாம் அன்புக்குச்
சைவம் என்பீர்!
கொலைக்களத்தில் குலச் சிறையால்
சமணர் செத்தார்!

தலைக்கனம் பிடித்துப் பிதற்றுகின்ற
மெய்யன்பீர்!
வலைக்குள் மாட்டிட
வளர்த்துவந்த புராணத்தைச்

சாக்காட்டால் மோதிச் சடுதியில்
சாய்த்திடுவோம்!
பூக்காட்டில் புகுந்துவரும்
தென்றலல்ல நாங்கள்!

புயல் என அறிவீர்!

— 1945ல் வெளிவந்தது

# கேட்டதுண்டோடா?

''முன்னூறு நானூறு வேலியேன்
முதலாளியே?
உன்னாலே ஒரு ஏழை
உயர்ந்ததுண்டா?'' என்று
எந்நேரங் கேட்டிடும்
என்னாட்டுத் தோழா!

உரமான உனது நெஞ்சின் வினாவை
வரவேற்று உபசரித்து மகிழ்கின்றேன்
மரமாவாய் என்கேள்வி எழுந்தவுடன்!

கல்லுக்கு ஆயிரம் வேலி
ஆலயத்தில் உண்டு நன்பா!
புல்லுக்கும் பயனில்லை புலம்பினர் ஏழை மக்கள்!
பல்லிடுக்கால் ஒரு வார்த்தை:
பாரத வீரா! நீ கேட்டதுண்டோடா?

— 1945ல் வெளிவந்தது

# வருணமா? மரணமா?

பரணி பலபாடிப் பாங்குடன்
வாழ்ந்த பைந்தமிழ் நாட்டில்
சொரணை சிறிதுமிலாச் சுயநலத்துச்
சோதாக்கள் சில கூடி
வருணத்தை நிலை நாட்ட
வகையின்றிக் கரணங்கள் போட்டாலும்
மரணத்தின் உச்சியிலே மானங்காக்க
மறத்தமிழா போராடு!

— 1945ல் வெளிவந்தது.

# தோல்வி எப்பொழுது?

சுண்டெலி வந்ததென்று
சூரப்பூனை அடுப்பின்
அண்டையில் பதுங்க,
அரவமொன்றாடியோட
கண்ட கீரிப்பிள்ளை
கலங்கியே வியர்த்து நிற்க,
மண்டலத்திலில்லா இம்
மாபெரும் வெடிக்கைகள்
வண்டமிழ் நாட்டில் வந்தால்
வாகை சூடி வாழ்ந்திருந்து
சண்டைக்குச் சளைக்காத
சிங்கத் தமிழக்காளை யெல்லாம்
நண்டுக்குப் பயந்தொளிந்த
நரியைப் போல்-அந்நிய
வெண்டைக்காய் வீரரிடம்
வெற்றிகளைக் கொடுத்திடுவார்!

— 1945ல் வெளிவந்தது.

# இன்னுமா கூச்சல்?

காவிரியின் கரையினிலே
பெண்ணையின் பாய்ச்சலிலே
சரிதமில்லை! சரிதமில்லை!
ஐயகோ தமிழ்நாடே;

ஆரம்பம் கங்கையிலாம்! பாண்டியர்
ஆண்டதை யார் கண்டார்?
சேரர் செழிப்பைச் செதுக்கிய தெவர்?
சோழர் வளப்பம் சொன்னது முண்டோ?

செருப்பாண்ட கதைதான்
சரிதத் தொடக்கம்!
மறுப்பவரெல்லாம் மானம் விற்றார்.
மாற்றியமைத்திட மாணவர் வந்தார்!

பளிச்செனப் பாய்வர் பாசறை வீரர்!
இளித்த வாயரே இன்னுமா கூச்சல்?


— 1945ல் வெளிவந்தது.

# பச்சைக் கிளி

சுரைக்காய்ப் பிஞ்சின் தலையில் மிளகாய்ப்
பழத்தைச் செருகி இடையில் மல்லிகை
இலைகள் சிறகாய்ப் பின்புறம் தாழை
மடலை வைத்தால் பச்சைக் கிளியே!
உன்போல் படைப்பு! உன்போல் படைப்பு!
வட்டத் தலையே! சிவப்பு மூக்கே!
சின்ன இறகே! நீண்ட வாலே!
கன்னற் கிளியே! சொன்னது பிசகா?
வர்ணனை கேட்டு வாழ்த்த மறுப்பாய்
புகழ்ச்சொல் கேட்டும் போற்றிட மாட்டாய்.
காரணம் அறிவேன் சின்னக் கிளியே!
கூண்டில் உன்னைப் போட்டதி னாலே
தூண்டிற் புழுவாய்த் துடிக்கிறாய் நீயும்
சிறையில் உன்னை அடைத்து மகிழ்ந்தேன்
இன்று தெரிந்தேன்-
சிறைமிகக் கொடிது, சிறைமிகக் கொடிது!

மன்னித் திடுவாய் மன்னித் திடுவாய்!
பொன்மொழிப் பாவாய் மன்னித் திடுவாய்!
என்சிறை முடிந்ததும் உன்சிறை உடைப்பேன்
சிறையின் கஷ்டம் சிறையால் உணர்ந்தேன்.
அடிமைப் புள்ளே! அழகுக் கிள்ளாய்!

அனுபவம் பெற்றேன் - அனுபவம் பெற்றேன்.
வந்ததும் தருவேன் விடுதலை வாழ்வு!
பறப்பாய், பறப்பாய், உயரப் பறப்பாய்!
கட்டிய கால்கள் விடுபடும்; உடனே
எட்டிய மட்டும் ஏறிப் பறப்பாய்!
எழில் நிறப் பெண்ணே எங்கும் பறப்பாய்!
கூண்டில் உன்னை அடைத்தேன் கிளியே!



மன்னித்து விடுக! கூண்டின் கஷ்டம்
புரிந்து கொண்டேன், கூண்டின் கஷ்டம்
புரிந்து கொண்டதால் கூண்டுக்கிளியுனைத்

திறந்து விடுவேன். ஆனால் கிளியே
கூண்டின் கஷ்டம் புரிந்தோர் இங்கு
ஆண்டிட வந்தார்.
மாண்டிட எம்மைக் கூண்டினில் போட்டார்!
ஏனோ கிளியே! ஏனோ கிளியே!
பதிலும் சொல்வாய் பச்சைக் கிளியே!
உன்னை நான் அடைத்ததால் என்னை அடைத்தார்
என்றே சொல்வாய் நன்று கிளியே;
நீ யாரை அடைத்ததால் நானுன்னை அடைத்தேனோ?

# கற்பனை ஊற்று

(1971-ஆம் ஆண்டு அமெரிக்க அரசின்
அழைப்பை ஏற்று சுற்றுப்பயணம் மேற்கொண்ட போது
ஆர்லந்தோ ஏரியில் அழகான நீரூற்று
ஒன்றைக் கண்ட கலைஞர் உடனேயே எழுதிய கவிதை)

ஆர்லந்தோ என்னும் நகரில் அரியதோர் ஏரியிலே
அழகிய மத்தாப்பூ ஊற்றொன்று கண்டேன்
ஒளி விளக்குப் போடுகின்ற தாளத்திற்கு
ஒரு லயமும் பிசகாமல் ஆடுகின்ற
நீரூற்று ஆட்டக்காரி நாட்டியத்தின்
நேர்த்தியென்ன சொல்வேன்!
பசும்புல் தரைமீது பால் நிறத்துப்
பனிக்கட்டி உருள்வதுபோல் ஓர் காட்சி - அதைப்
பார்த்துக் கொண்டிருக்கும் போதே
'படக்' என மாறிவிடும் மற்றோர் காட்சி!

இப்படித்தான் இங்குள்ள 'அப்போலோ' விளம்பிற்றென்று
இருள்கிழித்து வானேறும் நீரின் கரங்கள்
பொற்கொல்லர் பட்டறையில்
பொன் பரப்பும் மஞ்சள் ஒளி
விற்பட்ட அம்பு போல

விர்ரென்று எழுந்து பாயும்.
கற்காலக் கொள்கை மனிதர்
கடவுளர்கள் சந்நிதியில்
காவுக்கு ஓர் உயிரை வெட்டும்போது
பீறிட்டுக் கிளம்புகின்ற இரத்தம் போல
சீறித்தான் தாவுதய்யோ சிவப்பு வண்ணம்.
மார்கழித் திருநாளில் நம்மூரில்
மங்கையர்கள் திருவாயில்
பாவிரித்துத் தத்தம் தெருவாயில் பரங்கிப்
பூவிரித்து வைக்கின்ற கோலம் போல்
கண்கொள்ளாக் காட்சி கண்டேன்.
நல்ல வேளை-
தனியாக ரசிக்கின்ற வாய்ப்பெனக்கு
தப்பினேன் அதனாலே!
பெண்ணொருத்தி அருகிருந்தால் நீரூற்றின்
வண்ணத்தைக் கணக்கெடுத்து - மறுநாளே
வகைக்கு ஒன்றாய் சேலை கேட்பாள்!

# வானமே பொழிக நீ!

வானம் பொய்த்துத் தமிழகத்தில் வறட்சி
மூண்டபோது மழையிரந்து 23.3.1975
அன்று முரசொலியில்
**கலைஞர் மு.கருணாநிதி** அவர்கள்
எழுதியது.

★

வானமே பொழிக நீ!
வறட்சியின் நெருப்புக் காட்டை - நீ
வடித்திடும் கண்ணீரால் அணைத்துவிடு!
மின்னிடும் உன் சிரிப்பெங்கே?
முழங்கிடும் இடிப் பேச்செங்கே?
பன்னெடும் நாளாய் நின்றன்
பன்னீர்க் குளியலின்றி
என்னருந் தமிழகம்தான்
ஏங்குதல் உணர்ந்திடுக!
வானமே பொழிக நீ! எம்மனோர்
வாட்டம் துடைத்திடவே-
மானமே பெரிதென்றெண்ணும்
மறத் தமிழ் குலத்தார் மீது
மாசுகள் கற்பித்தேனும்
மகுடத்தைப் பறிக்கலாமென்று

மதியில் உள்ளோர் சிலர்
-அவதூறுக்
கந்தியை வீசுகின்றார் - அவர்தம்
புத்தியைத் தீட்டிடவே
பொழிந்திடுக வானமே நீதான்!
இந்துக்கள் முஸ்லீம்கள் இங்குள்ள கிறித்தவர்கள் - உன்
பந்துக்கள் வேண்டுகின்றார்
முந்துத் தமிழ்போல் மும்மாரி பொழிக என்று!
நல்லவர்கள் அழைக்கின்றார்
நன்றியற்றவரோ நீ கருணைகாட்டாமல்
இருக்கவேண்டுமென நினைக்கின்றார் - அவர்தம்
அனல் நெஞ்சம் குளிரடைய உன்
புனல் கரத்தை நீட்டிடுக!
வானமே பொழிக நீ - தமிழ்
வையகம் வாழவே!



# கவிதையில் ஒரு மடல்!

உடன்பிறப்பே! ஒன்று சொல்வேன் நினைவில் வைக்க!
கடன்பட்டோம் எந்நாளும் நாடு காக்க-இதில்
மூரண்பட்டோர்க்கில்லை இக் கழகத்தில் வேலை.
இடம் பிடித்து வாழ்ந்தவர்கள் எங்கோ செல்வர்
தடம் புரளாச் சோதரர்கள் ஒன்றாய் நிற்பர்.

★

இந்திய மண்ணுக்கோர் தீமை
எங்கிருந்து வந்தாலும், உடன்
விந்திய இமயம் போல்
வீரத்தோள் உயர்த்தி வெல்வோம்.
தீங்கொன்று நாட்டுக் கெனிலோ
தி.மு.க. துள்ளி எழும் - தன்
தீர்மானம், கோரிக்கை அக்கணமே தள்ளிவைத்து
மண்மானம் காப்பதற்கு மார்தட்ட மறக்க மாட்டோம்.

★

நம் கழக வரலாற்றுச் சான்று இது;
நான் ஏதோ புதிதாக இன்றைக்குச் சொல்லவில்லை.
நம் கடனை என்றென்றும் நாட்டுத் தொண்டு.
நலமாக மக்கள் வாழ அமைதி காப்போம்
நன்னெறிகள் நிலைப்பதற்கு வழிவகுப்போம்.

# அவர் உணர்வாரோ!
# யார் அறிவார்?

**உடன் பிறப்பே,**

திட்டித் தீர்க்கின்றார் - என்னைத்
திட்டித் தீர்க்கின்றார் - நான்
தீயுலையில் காய்ச்சிய சொல் எடுத்து
சுட்டிட மாட்டேனா என எதிர்பார்த்துத்
திட்டித் தீர்க்கின்றார்!
பட்டொளி வீசிடும் பதவியில் அமரப்
பலவழி முயன்று - ஒரு வழி கண்டு
திட்டித் தீர்க்கின்றார் - என்னை!
''எப்படித்தாக்குதல்? இன்னும் பாரீர்!
தப்பிட முடியுமோ - கருணாநிதியால்? உமது
சொற்படி கேட்பேன் பாதமும்
சொறிவேன்!
சுயமரியாதையைக் கனவிலும் நினையேன்!
தயை புரிந்து தந்திடுக பதவி!''
கட்டிப் பிடிக்கின்றார்
தோட்டத்தார் காலை - அதனால்
திட்டித் தீர்க்கின்றார் -
தீ நாக்கு சுழற்றுகின்றார்!

பதர்களுக்குப் பதில் சொல்ல
புதர் வாழ் சிறுத்தைகளா தேவை?
இவர்களுக்குப்பதில் சொன்னால் -
அதைக்கொண்டே பதவி பெற ஓர் திட்டம்!

அதனால்தான்

திட்டித் தீர்க்கின்றார் என்னை;
கட்டிப் பிடிக்கின்றார் அவர் காலை!
பதவியல்ல பண உதவி போதுமென
''பத்துத்தலையோர்'' கைநீட்டுவதும் நானறிவேன்!
போகட்டும் பிழைத்துப்போகட்டு மென்றும்
ஆகட்டும் அவர் காரியம் ஆகட்டும் என்றும்
ஏசட்டும் அதற்காக என்னை யென்றே
எதிர்த்தொரு வார்த்தை சொல்லாது
விடுகின்றேன் நான்!

வேழத்தைத் தாக்குதல் வேங்கையின் வீரம் -
''வெண் மூக்குக் குதிரை''யைத் தாக்குதல்
வெட்கக்கேடன்றோ!
எனவே தான் ஏசட்டும் சிலர் என்றே
எதிர்த்தொரு வார்த்தை சொல்லாது
விடுகின்றேன்!
விரல் கொண்டு நசுக்குகின்ற எறும்பை
வேல் கொண்டு வீழ்த்துவது அறிவாமோ?
கிட்டியதைத் தட்டிப் பறிக்காமல்
காப்பதற்கும்
எட்டி எட்டிப் பாய்ந்து ஓர் பதவி
பெறுவதற்கும்
திட்டித் தீர்க்கின்றார், என்னை -
கட்டிப் பிடிக்கின்றார் அவர் காலை!

''பழுதென்னும் மந்திரியின் பக்கத்துள் தெவ்வோர்
எழுபது கோடி உறும்''

எனும் குறட் பொருளை
அன்றுனை நான் தவறிடினும்
இனும் வேதனை சூழாமல் இருந்திடவே
இன்றவர் உணர்வாரோ - யாரறிவார்?

# போர்வாளாய்ச் சுழலட்டும்!

தேன் மலரில் கூத்தாடி
தெரு மணக்க வருகின்ற
தெற்கத்திச் செல்வமே;
தென்றல் மென் காற்றே!
உன் உயிர் உருகிடவே
வான் பரப்பாய் எனைநேசித்த
உடன்பிறந்தார் ஏழுபேர்
உனைத் தழுவுதல் போல்
உடலிறுகத் தீப்பிழம்பைத் தழுவி விட்டார்!
மொழி காக்க; விழி தெறிக்கச்
சுழன்றோடும் தீயினிலே
அன்றொருநாள் என்மகர் குளித்திட்டார்;
இன்றோ; தமிழர் இனியேனும் எழுவர் என்றே
குன்றாப் புகழ் பூண்டோர் எழுவர் குதித்திட்டார்!
கொள்ளைக்''கோ'' கோயிலடி பிருந்தாவன்
தீர இளைஞன் திருச்சியிலே மனோகர்
அயராத்தொண்டன் ஆரூர் கிட்டு
அனிமா நெஞ்சன் முத்துப்பாண்டியன்
அன்னையர் குலத்துக்கொரு சென்னை மோரி
கடமையில் தளரா கல்லாவி ராஜேந்திரன்
வேல் பாய்ந்து வரினும் விழியிமையா
மேல் மாயில் ஜெகநாதன்
இந்த இளந்தருக்கள் எரிதழலில்
வெந்துசாகும் நிலை எதற்கு?

நெருப்புத் தேமல்களை தேகமெங்கும்
விருப்பமுடன் அணிந்துகொண்டு
நாமக்கல் வீரன் நல்இளைஞன் ராமசாமி,
திக்கலூர்ச்சீயம் ஏழுமலை, இராமய்யா,
திருப்பூர் வேங்கை திருவேங்கடம், முத்துச்சாமி
சிகிச்சை பெறுகின்றார் -
''சிங்கங்கள் அஞ்சிடுமோ
சிறுநரிக் குழுவிற்''கென்று
செம்மாந்து உரைக்கின்றார்!
ஏற்கும் முறையல்ல இதுவெனினும்
எரிநெருப்பைப் பனி மழையாய்
ஏற்கின்றார் எனும் போது
தோற்கின்றோம் தியாகத்தில் அவர்முன்னே -
தொழுகின்றோம் - அழுகின்றோம் -
எழுகின்றோம்; அவர் வீரம் நம் கையில்
போர்வாளாய்ச் சுழலட்டும் - துரோகக்
கூர்வாட்கள் உடையட்டும் தூள்! தூளாய்!



# இன்னும் யார் யார்
# பெயர்கள் வரவில்லை?

**உடன்பிறப்பே,**

உன்னிடம் உரிமையுடன் கேட்டு
நீ தருகிற நிதியைப் பெற்றுத்தான்
கழகப்படகை கடும்புயல்களைத்தாண்டி
ஓட்டி வந்திருக்கின்றோம்!

எப்போது நிதி கேட்டாலும்
இல்லையென்று சொல்லாத வள்ளல்போரியாய்
இல்லாதபோதும்
இருக்கவே இருக்கிறது என் தலையெனக்
கொடுக்க முன்வந்த
கொங்குக்குல குமணனாய்
அன்புக் கண்மணியே! நீ
அன்றும் இன்றும் விளங்குகிறாய்!

முன்னமே தெரிந்துதான்
நிதியெனப் பெயரிட்டார்போலும்
முத்துவேலரும் அஞ்சுகமும்என
மூதறிஞர்முன்னால் பேரறிஞர் உரைத்துப்
பதினொரு லட்சத்தைப் பெற்றுக் கொண்டாரே;
ஓடியாடி நான் உன்னை நாடியபோது - நீ
தேடிவந்து தந்த நிதியை!
நினைவிருக்கிறதா;
நெஞ்சில் பசுமை குலையா அந்த நிகழ்ச்சி!

கழகக் கருவூலம் கருவுற்றிருக்கவில்லை -
என்செய்வது; தேவையில்லாத இடத்தில் குடும்பக்
கட்டுப்பாடு!

சிலரது கருவூலங்கள் - ஊடல் கூடலால் அல்ல;
ஊழலால் திளைத்து மகிழ்ந்து
உப்பிக் கொண்டே போகின்றன! அவை
மழலைகள் அல்ல - மகோதரக் கட்டிகள் என்று
மத்தியப் புலனாய்வு மருத்துவர்கள் உரைக்கின்றனர்.

அளவுடன் பெற்று வளமுடன் வாழ்ந்திடும்
அரிய நோக்குச் செயல்பட
அன்றுமுதல் இன்றுவரை
கறைபடாத கருவூலமாய்க் கழகம் திகழ்கிறது!

உன்கையில் கிடைத்த ஐந்தும்பத்தும்
உடனடியாகக் கழகத் தேர்தல் நிதியெனமாறி
உன்னை என்முன் நிறுத்துகின்றன.
உளமார வாழ்த்துகின்றேன் உன்பெயரைப்
பார்த்தவுடன்!

இன்னும் யார் யார் பெயர்கள்
மின்னிடவில்லை முரசொலியில் என்பதையும்
எண்ணிடத்தவறேன் - என்னை நீ அறிவாய்!

நாளைக்கொருசொல்
வாளைப்போல் வீச்சு கொண்டு சுழன்றால் -
நன்றாயிருக்காதல்லவா உனக்கு!

''இவர் என்ன தந்தார்?'' என்று
இன்மொழியில் கேட்டால் கூட -
இடியொலியாய்த் தாக்குமன்றோ! அதனாலே
இன்றைக்கே உடன்பிறப்பே!
சாக்குப்போக்குச் சொல்லாமல்
சடுதியிலே அனுப்பிவைப்பாய் கழகநிதி!

பெரியகுளம் நீந்தவேண்டும் - நின்
அரிய உழைப்புடனே -
அளித்திடுக கழகநிதி! இந்தக்
கருணாநிதி கேட்டுக் கழகமாமணியே; நீ
கைமூடி இருந்ததுண்டோ? உம்!
கண்மூடித் திறப்பதற்குள்
குவித்திடுக
குன்றம்போல்!



★

# ஒரு சொட்டுத் தேன்!

உடன் பிறப்பே,

''பசி நோக்கார் கண் துஞ்சார்
கருமமே கண்ணாயினார்''
பழைய பாடல் இது —
பதிந்திருக்கும் உன் மனதில்!

★

புதிய திருப்பம் காண்பதற்கும்
'புனிதர்' வேடம் கலைப்பதற்கும்
பொல்லாச் செயல்கள் வீழ்வதற்கும்
போர்க் கோலம் பூண்டுள்ளோம்!

★

அதில் ஒரு கட்டமே இந்தத் தேர்தல்!
அள்ளிப் பொழிகிறார் பணத்தோட்டா
துள்ளியாடுது தோரணமாய்
கண்ணைப் பறிக்குது வண்ண விளக்கு!

★

கருப்புப் பணத்தால் ''குளத்தையே'' மூடுவர்!
கண்மணி நீயோ கவலைப்படாமல்
கழகக் கொடியைக் கையினில் ஏந்து!
உதயசூரியனை உடையினில் பொறித்திடு!

வீதிக்குவீதி சென்றிடுக!
வீட்டுக்குவீடு வாக்குத் திரட்டிடுக!

★

ஒருவருக்கொருவர்
உங்களுக்குள்ளே
ஒரு துளி கசப்பும் வேண்டாம் - அந்தச்
சிறுதுளி பெருவெள்ளம் ஆகிடுமன்றோ!

★

ஏன் காத்து இருக்கின்றாய்?
எவர் வருவார் என எதிர்பார்த்து இருக்கின்றாய்?
வந்தாலும் ஒரு சொட்டுத் தேன்தானே
தருவார் — அது
வரவில்லையென நினைத்து வளைத்திடுக உட்லை
வில்லாய்!

★

வகை வகையாய் குடம் குடமாய்த் தேனும் பாலும்
தொகை தொகையாய்க் கொள்ளை கொண்டோர்
கூடாரத்தில்
கண்ணாலே கெஞ்சுகின்றாய் அன்பே! —
இங்கேது அந்தக் குடம்?
அண்ணாவின் தம்பியென்ற 'மகுடம்'தான் உண்டு!

★

புண்ணான தமிழகத்தின் துயரம் போக்கி
மண்ணாளும் மமதையாளர் கொடுமை நீக்கி
புதியநிலை உருவாக்கப் புயலே! எழுக!
புலிப் போத்தாய்ச் செயல்பட உடனே எழுக!

★

இடையில் இருக்கும் நாட்கள் குறைவு -
படைக்கலம் போலே பாய்ந்திடு கண்ணே!
கடையில் விற்கும் பண்டமோ வெற்றி? தவாரா
நடையுடன் விரைந்திடு தொகுதியைச் சுற்றி!

★

அயர்வை உதிர்த்திடு! ஆற்றலைக் காட்டிடு!
வியர்வை துடைத்திட நேரமும் இன்றி
ஆல்போல் தழைத்த கழுகத்தின் உயிரே! நீ
வேல்போல் பறந்து வெற்றி பறித்திடு!



★

# விதையாய் முளைத்து
# விழுதுகள் விடட்டும்!

உழுவரது வியர்வையினால் சூல் கொண்ட
கழனித்தாய் வயிற்றினிலே மகளாய் வந்து,
அனைவரது சீராட்டும் பெற்றுக் கொண்ட
கதிராம் மங்கை;
மணவறையில் பெண் போல தலைகுனிந்து
நிற்கின்றாள், பொங்கல் நாளில்!

தமிழர் என்போர் மகிழ்கின்றார்;
தைதை என்றே குதிக்கின்றார்!

ஒளிவரவால் இருள் மறையும்
உளிவரைந்த சிற்பங்கள் பளபளக்கும்!

பொங்கல் நாளில் புதுப்புது இன்பம்
எங்கணும் தோன்ற எழுந்தான் கதிரோன்!

எதையும் பண்புடன் அணுகி வென்றிட
உதயசூரியன் உயர்ந்தான் இன்று!

"கதையாய்ப் போனதோ தமிழ் இன வாழ்வு?"
எனும் நிலைமாற்றி —
விதையாய் முளைத்து விழுதுகள் விடட்டும்;
நம் இனமான உணர்வு!

# சூரியனைப் பனிக்கட்டி என்கின்றார்!

உடன்பிறப்பே,

ஆட்சி போய்விடுமோ என்று
அழுகிறேனாம் நான்!

ஆனந்த விகடன் சிரிக்கிறது!
அடடா; என்ன திருப்தி அதற்கு!

செங்கோல் பறிக்கப்படினும்
சிறிதும் கவலையில்லை - என் கை

எழுதுகோலை எவரும்
பறிக்க முடியாதென்று

முத்தமிழ்ப் பேரவையில்
முழங்கினேன் நான்! அது

முகாரியாகத் தெரிகிறதாம்
மூதறிஞர் விகடனார்க்கு!

★ ★ ★

''எழுதுகோல் இவர் கையில்
இருக்கும்வரை;

செங்கோல் போயினும்
கவலையுறார் கருணாநிதி'' என்று

கண்ணதாசக் கவிஞன் பலமுறை
கர்ச்சித்த வாசகத்தைத்தான்

கலைஞர்களுக்கு விருது வழங்கும் விழாவில்
பீடு தமிழில் பெருமிதமாய்க் கூறினேன் நான்

★ ★ ★

தழுதழுத்த குரலில் பேசினேன் என்றும்-
தவுலைப் போல் அடிவாங்கத் தயார் என;

தண்டனிடும் தொனியிலே உவமை சொல்லி
தலைதொங்கிப் போனேன் என்பது போல்-

தரமுள்ள விகடனார் இந்த வாரம்;
தகுதியென எண்ணி ஓர்
விமர்சனம் செய்துள்ளார்!

தலையங்கத்திலும் கூட எனைப் பழித்து
தலையாய வீரத்திற்கு
இலக்கண முரைத்துள்ளார்!

★ ★ ★

சென்னை டெல்லிக்கு ஆணையிட்ட நாள்
சென்று விட்டதென்று;

செப்பினார் பிரதமர் என்பதற்காக நான்
சீறி விழவில்லையாம்!
சீண்டி விடுகிறார் விகடன்!

அப்படி நான் ஆணையிட்டிருந்தால் அல்லவா
எப்படிச் சொல்லலாம் இப்படி எனச்சினந்திட?

★ ★ ★

ஏனோ விகடனார் மறந்து விட்டார்-
எமர்ஜன்சி நேரத்தில்;

என் வீட்டுக்கே டெல்லி தூதனுப்பி;
எமர்ஜன்சி எதிர்ப்பைக் கைவிட்டால்-

அவதிகள் எவையும் அணுக மாட்டா,
அவதூறு வழக்கும் தொடுக்க மாட்டோம்

ஆட்சியின் ஆயுளும் ஓராண்டு நீட்டிக்கும் என
ஆசைகளை மூட்டிப்பார்த்தார்!

அசைந்து கொடுத்திருந்தால்
ஆண்டொன்று மிசாச் சிறையில் - என்

அருமைக் கண்மணிகள் ஐநூறு பேர்
அவதிப்பட்டிருக்க மாட்டார்!

ஆட்சியும் தொடர்ந்திருக்கும்-
ஆனால் ஒன்று; மானம் போயிருக்கும்!

★ ★ ★

எமை நத்துவாயென
எதிரிகள் கோடி இட்டழைத்தாலும்

தொடேன் என்றுரைத்துத்
தோளுயர்த்திக் காட்டிய

பாவேந்தர் பாட்டை மட்டுமல்ல; அவர்
பாட்டையையும் மறக்காதோர் நாம்!

கேலி புரிகிறார் நமைப் பார்த்து விகடனார்!
போலிக்கும் உண்மைக்குமுள்ள

முரண்பாட்டை;

சிரித்து மகிழும் அந்தப் பண்பாளர்
சிந்தித்தால் உணர்ந்திடுவார்!

★ ★ ★

அறுபத்து ஏழாம் ஆண்டு தேர்தலிலே
அண்ணா, ராஜாஜி, காயிதேமில்லத்,
ம.பொ.சி. நம்

அணியில் இருந்த பி.இராமமூர்த்தி
அனைவரையும் கழுதை மீது அமர்த்திக்

கார்ட்டூன் போட்டுச்
சிரித்தவர்தானே விகடனார்
கற்பூர வாசனையை - கழகத்தின் உறுதியினை,
சுவைபத்தில் அவரால் உணரத்தான் முடியாது!
- அதனால்தான்
சூரியனைப் பனிக்கட்டி என்கிறார்!

# நடையை நிறுத்தாதே!

உடன்பிறப்பே,
நாய்கள் குரைத்துக் கொண்டேயிருக்கும்
அதற்காக நீ உன் நடையை நிறுத்தாதே!
நடுங்கி, ஒடுங்கி, ஓரம் ஒதுங்கத் தேவையில்லை
நாம் போவது கொள்ளையடிக்க அல்லவே; கொள்ளைகளை
தடுத்து நிறுத்தத்தானே!

கொள்கை பரப்ப - குறிக்கோளை எட்டிப்பிடிக்க - வெற்றிக்
குன்றின் மீது ஏறிக் கொடி நாட்ட!
தூவப்படும் எதிரிகளின் கலக விதைகள் முள்ளாக விளைந்து
தூயவனே! உன் கால்களில் குத்தும். உன்னைத்
தொடர்ந்து வருவோர் பாதங்களைக் காயப்படுத்தாதிருக்க
அதைத்
தூக்கி, முனை முறித்துத் தொலைவில் போட்டுவிடுக!
பாதையில் குறுக்கிடும் காட்டாறு கண்டு பதறத் தேவையில்லை
- உன்
பாட்டன், பூட்டன், தாய், தந்தையர் கடந்தது எப்படி எனக்
கணக்கிட்டுப்
பாலம் அமைத்தோ, தோள்பலம் காட்டி நீந்தியோ
பாதியில் பயணம் தடைபடாமல் ஏறுக கரையில்!
ஊளையிடும் நரிகளின் கூட்டம் ஒன்று வலப்புறம் போகும்
மற்றொன்று இடப்புறம் போகும் - அவை
வலம் போனால் என்ன? இடம் போனால் என்ன? மேலே
விழுந்து பிடுங்காத அளவுக்குப் பார்த்துக் கொள்க!
புதர்களில் விலங்குகள் மலைப்பாம்புகள் புரளும் - அந்த
இடர் களைய மட்டுமே கையில் ஆயுதம் தேவை!
பதர் என மண்டும் மனிதப் பகையினை மாய்க்க

பண்பெனும் வாளும் அன்பெனும் கவசமும் ஏந்திச் செல்க!
உறைபனி மூடிய முகடுகள் மீது
ஊக்கமுடன் நீ ஏறிடும் போது;
உட்பூசலற்ற காலணி இருந்தால் தோது.
ஒருக்காலும் அது வழுக்கவே வழுக்காது!
ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாய்க் குவிந்த
அழுக்குச் சிந்தனை, ஆதிக்கச் சுமைகள்
அகற்றிடவே உன் பயணம்; அதனை மறந்து
அகதியாய்த் தமிழனை விட்டு விடாதே!
பாயிரம்பாடி உனக்குப் பாராட்டு படித்து,
பதவியைக் காட்டிப் பல்லக்கும் சுமந்திட,
பகைவர்கள் நண்பராய்க் காட்சி தருவர் - அந்தப்
படுகுழியில் விழாமல் உன்னையும் காத்து இனத்தையும்
காத்திடு

அய்யா பெரியார் வாழ்க என முரசறைந்து பாடு!
அறிஞர் அண்ணா வாழ்க என சங்கொலித்து ஆடு!
களைப்பின்றித் தொடரலாம் கடும் பயணம் அனைத்தும்;
உழைப்பின்றி இருப்போரைச் சிற்றெறும்பும் பழிக்கும்!
கடமையினை உணர்ந்து, கண்ணியத்தில் மலர்ந்து வெல்க;
கட்டுப்பாடு குலையாமல் கழகப் பயணம் செல்க!
கணநேரமும் ஓய்வில்லை என்று சபதம் செய்க! உடன்பிறப்பே
வளம் பரப்பத் தமிழகத்தில் மழையாய்ப் பெய்க!
எலிகளுக்கும் கரையானுக்கும்
இடையிடையே உன் வழியில்
தீனி போட்டாலும் போடு; ஆனால், சில
ஏடுகளுக்கு மட்டும் தீனி போடாமல் எச்சரிக்கையாய் இருந்திடு
நூறாயிரம் காலத்துப் பயிரப்பா கழகம் - இதனை
வேரோடு வீழ்த்திட எத்தர்கள் சிலபேர்
தேனோடு விஷம் கலந்து தருகின்றார் கவனி! நம்
ஊனோடும் உயிரோடும் இணைந்த கொள்கைக்கு
நடத்திடுவோம் வெற்றி பவனி!

# பாமரர் நிறைந்த பட்டிக்காடு!

பாமரர் நிறைந்த பட்டிக்காடு-
பஞ்சாயத்து சபையில் அவர்களே பலர்!
இருக்கும் ஒன்றிரண்டு நல்லோர் பதறி;
எதிர்த்துக் கூற எழுந்து நின்றால்,
இழுத்துத் தள்ளுவர் எரியும் நெருப்பில்!
கொழுத்துத் திரிவோர் கூட்டம் அல்லவா?
பாமரர் நிறைந்த பட்டிக்காடு-
பஞ்சாயத்து சபையில் அவர்களே பலர்!

✸

குட்டி நாய்கள் குரைக்குமென்றறிந்து
ரொட்டித் துண்டுகளை வீசி அவற்றின்
வாயை அடைத்து வலையில் மாட்டுவர்!
''மாயை'' ஒன்று மண்டபத்து நடுவில்-
உருகப் பேசும்; உண்மையை ஒளிக்கும்!
கருவிலிருந்தே அது கற்ற வித்தை!
பாமரர் நிறைந்த பட்டிக்காடு-
பஞ்சாயத்து சபையில் அவர்களே பலர்!

✸

ஊர் வாழ உருப்படியாய்த் திட்டமில்லை
சீர் மேவித் தான் மட்டும் வாழ்வதற்கு,
ஊழல் விளைப்பதுதான் மாயைக்கு வேலை!
உதவாது இது என்றாலோ உரித்திடுவார் தோலை!

ஒவ்வொரு நாளும் புதுப்புது சட்டம் - இன்னும்,
உறக்கம் கலையா காரணத்தால் அடிக்கின்றார் கொட்டம்!
பாமரர் நிறைந்த பட்டிக்காடு-
பஞ்சாயத்து சபையில் அவர்களே பலர்!

✯

பத்தினிக் கண்ணகி அன்று கனன்று
மதுரையை எரித்தாளாம்; அதுபோல்
பதிலுக்கு நானும் எரிக்கின்றேன் பார் என்று
பாஞ்சாலிதேவி பத்திரிகையை எரித்திட;
முதுகுக்கு எலும்பை முட்டுக் கொடுத்தும்-
முட்டாள் கூட்டம் கூனிக் கிடக்குதாம்!
பாமரர் நிறைந்த பட்டிக்காடு-
பஞ்சாயத்து சபையில் அவர்களே பலர்!

✯

''இந்தக் கிராமத்தையே இலையில் இட்டு
வெந்ததும் வேகாததுமாய்த் தின்று தீர்ப்பேன்
எந்தன் முடிவு இதுதான்'' என்று
அந்த மாயை சொன்ன போதிலும்
ஆதரவு அளித்துக் காலில் வீழ்ந்திட
ஆமாம் சாமிகள் அப்போதும் தயார்!
பாமரர் நிறைந்த பட்டிக்காடு-
பஞ்சாயத்து சபையில் அவர்களே பலர்!

✯

முரணாகப் பேசுவதே வேதம் என நவின்று
முருங்கைமரம் வீடுகட்டப் பயன்படுமென்பார்!
அரணாக மெழுகுவத்திச் சுவர் ஒன்று வைத்தால்
அக்கினியும் அஞ்சியோடி ஒளிந்து விடும் என்பார்!
ஆயிரம் பாபங்கள் நான் செய்வேன் என்பார்-
ஆண்டவன் என் பக்கம்!... அதுவுமில்லை; அந்த

ஆண்டவனும் நானேதான் என்பார்!
பாமரர் நிறைந்த பட்டிக்காடு-
பஞ்சாயத்து சபையில் அவர்களே பலர்!

✸

எல்லோரும் கைதூக்கும் பதுமைகளாய் இருந்து-
இடது கை, வலதுகை இருகையும் தூக்கும்போது,
பொல்லாத மாயைக்குப் பொங்காதோ பூரிப்பு?
நில்லாத நெடுஞ்சுவராய்ச் சரிவதற்குள்;
கல்லாரும் கற்க வேண்டும்; அறவழியில்,
கயமையினை விரைவினிலே மாய்ப்பதற்கு!
பாமரர் நிறைந்த பட்டிகாடு-
பஞ்சாயத்து சபையில் அவர்களே பலர்!



# கொள்ளை போகுதம்மா தமிழ்நாடு

ஊழல் பெருச்சாளிகளின் தொல்லையாலே
கொள்ளை போகுதம்மா தமிழ்நாடு - ஒரு
பாழும் ஆட்சி செய்யும் கொடுமையாலே; வாழ்வில்
பகலும் இருள் ஆகுதம்மா கவலையாலே!

ஊழல் பெருச்சாளிகளின் தொல்லையாலே
கொள்ளை போகுதம்மா தமிழ்நாடு!

ஜான்சிராணி யென்று கூறியல்லோ ஆட்சியிலே ஏறினார் -
அரசின்
டான்சி நிலத்தை வாங்கியன்றோ சட்டம் மீறினார்!
ஆனைவத்தின் உச்சியிலே ஆட்டம் போடுகிறார் - இதோ
அகந்தையை மாய்ப்பதற்கு மக்கள் கூறுகிறார்!

ஊழல் பெருச்சாளிகளின் தொல்லையாலே
கொள்ளை போகுதம்மா தமிழ்நாடு

ஆம்னி பஸ்களில் ஊழல் ஆறுகோடி என்கிறார்
அரசின் பீர் தொழிற்சாலை விற்று இருகோடி சுருட்டுறார்.
நாமினியும் விழிக்காவிடில் தம்பி;
நமது நாட்டை சுடுகாடாக்கி நீட்டிடுவார் கம்பி!

ஊழல் பெருச்சாளிகளின் தொல்லையாலே
கொள்ளை போகுதம்மா தமிழ்நாடு!

குண்டர் படையை வைத்து ராஜ்யமே நடத்துறார்
குறை சொல்லும் ஏடுகளை வீதியிலே கொளுத்துறார்
டெண்டர் விடாமலே சர்க்கார் சொத்துக்களை விற்கிறார்;
அண்டர் கிரவுண்டிலே பல லஞ்சங்களை வாங்குறார்!

ஊழல் பெருச்சாளிகளின் தொல்லையாலே
கொள்ளை போகுதம்மா தமிழ்நாடு!

பழிவாங்க மட்டும் உச்சமன்ற அப்பீல் என்று
பலகாத தூரம் டெல்லிக்கு ஓடுறார்; ஆனால்
அய்க்கோர்ட்டு தீர்ப்பே போதுமென்று
தனியார்க்கு மருத்துவக் கல்லூரியைத் தாரை வார்த்துத்
தருகிறார்!

ஊழல் பெருச்சாளிகளின் தொல்லையாலே
கொள்ளை போகுதும்மா தமிழ்நாடு!

டாமின் ஸ்பிக் பங்கு ஊழல் என்றும்
அரவைமில்லு, ஆசிரியர் பயிற்சிப் பள்ளி ஊழல் என்றும்
டாம்பீக சுற்றுலா ஊதாரிச் செலவு ஊழல் என்றும்
அத்தனையும் எடுத்துச் சொல்ல முடியுமா இன்றும்!

ஊழல் பெருச்சாளிகளின் தொல்லையாலே
கொள்ளை போகுதம்மா தமிழ்நாடு!

# என்ன தேசமடா இது?

என்ன தேசமடா இது? இங்கு,
எத்தனுக்கு வாழ்வு தரும் மோசமடா!

நீரும் எண்ணெயும் போல் பற்று பாசமடா! அட;
நீலிக் கண்ணீர் வடித்தே கழுத்தறுக்கும் நேசமடா!

கூனமெல்லாம் கூர்வாளாய் நினைத்துக்கொண்டு;
மேனங்கொட்டி மூரசுதட்டி மெலுக்காக ஆடுதடா!

ஆளவந்தார் அடிக்கின்றார் கொள்ளையென்றால்;
தாளம் போடும் தாசர் கூட்டம் பெருத்ததடா!

கைநீட்டிக் காசுபணம் பதவிகளைப் பெறுவதற்குக்
கடைக் கோடிப் பல்வினை காட்டியே நிற்குதடா!

பைநிறைய லஞ்சத்தொகை பலலட்சம் கொட்டித்தந்து
வை தலையைக் காவில் என்றால் தட்டாமல் வைப்பாரடா!

என்ன தேசமடா இது? இங்கு
எத்தனுக்கே வாழ்வு தரும் மோசமடா!

வானுக்கோர் எல்லையில்லையடா வையகத்தில்;
வறுமைக்கோர் எல்லையில்லையடா இந்தியத்தில்!

வருவாத்தில் பத்து ஊழல் வந்து வந்து போகுதடா;
அர்வாத்து மேத்தா ஊழல் அவமானச் சின்னமடா!

கொள்கை உறுதியென்பார்; ஒழுக்மென்பார்;
கொடி, சின்னம் எமக்கேயென்பார்!

கொடுத்திட்ட பணத்துக்கு கூலிக்கு மாரடிப்பார்;
கொடுக்கறுக்கும் நாள் வரையில் குதிக்கின்ற தேள்களடா!

ஆதிக்கவர்க்கத்தார் ஆட்சியிலே வந்துவிட்டார்;
பாதிப்பு பலவரினும் பத்திரிகை பாராட்டுதடா!

என்ன தேசமடா இது? இங்கு
எத்தனுக்கே வாழ்வு தரும் மோசமடா!

பெரியார் அண்ணா வழித் தோன்றல் நானே என்பார்
நரியார் தன்னைச் சிங்கமென நம்பச் சொன்னால்;
நாடாள்வதால் நாமம் வாழ்க என நவில்கின்றார்!
நலம்பெற்றோம் அவராலே நாமார்க்கும்
குடியாவோம் என்கின்றார்.

குன்றிமணி மானம் சிந்திடினும் உயிர் வாழார் முன்பெல்லாம் -
குன்றளவு மானம் போனால்தான் என்னவென இன்று
குன்றனையார் சிறிதும் குன்றாமல் குனிகின்றார்!
குன்றாம் தாழ்ந்து கோடு உயர்ந்த கதை தொடர்கதையா?

நன்றியெனும் முன்றெழுத்தை மலமாக்கித் தின்னும்
பன்றிகளும் புரளுகின்ற சாக்கடையாய்ப் போனதடா!

என்ன தேசமடா இது? இங்கு
எத்தனுக்கே வாழ்வு தரும் மோசமடா!

முந்தித் தவமிருந்து முந்நூறு நாள் சுமந்த தாயின்
தொந்தி சரியக் குத்தீட்டி வீசும் பிள்ளையடா!

அந்திப் பொழுதை விரட்டி அழகாய்ப் பூத்த நிலா தி.மு.க.; அது,
மந்தி கைக்கு எட்டாததால் சந்தி சிரிக்க அலறுதடா!

இந்திதனை எதிர்ப்பதற்கும் இனம் மொழியைக் காப்பதற்கும்
இருக்கின்ற அரண் இதனை அழிப்பதற்குத் திட்டமடா!

பந்திக்கு நான் என்றும் படையென்றால் நீ என்றும்
சிந்தித்துச் செப்பியோடும் சில்லறைகள் ஓசையடா!

குந்திக்குக் குழந்தை எனக்கேட்டு - வயிற்றில்
குத்திக்கொண்ட காந்தாரிகள் ஆசையடா!

என்ன தேசமடா இது? இங்கு
எத்தனுக்கே வாழ்வு தரும் மோசமடா!

தலைவியின் பிறந்த நாள் என்றால் தவறாமல் போடட்டும் மாலை!
தலங்கள் தோறும் மந்திரிகள் காவடி எடுப்பதுவோ
பகுத்தறிவு வேலை?

தலைமொட்டை அடிக்கின்றார், தத்தோமெனக் குதிக்கின்றார்
தழையுடுத்தி உருளுகின்றார் தையலர்கள் தீயும் மிதிக்கின்றார்!

தன்மான இயக்கமென்றும் இனமான முழக்கமென்றும்
தமிழகத்தில் விளைத்து வைத்த அறிவுக்கதிர் அனைத்துமே
தாசர் புத்தி தலைக்கேறி தடுமாறிச் சாய்ந்தடா! இனித்
தமிழ் மண்ணில் புது எழுச்சி எப்போதடா?

தயங்காமல் புறப்படடா; தமிழா! உன்
தடந்தோள் தட்டிக் கிளம்பிடடா!

# முகமூடி கிழித்தெறிவோம் வாரீர்!

சடை வளர்ப்பார் - பக்திக்
கடை விரிப்பார்; வலிய
படைகொண்டு பாராளும் அரசினையும்
பணிய வைப்பார்! மின்னல்
இடைகொண்ட மாதர்களும்; தங்கு
தடையின்றி அவர் மாயை வீழ்ந்திடுவார்!
முடிகட்டிக் குடில்கட்டி
முனிவர் என வாழ்ந்தார் அந்நாள்
அவர்கள்கூட முற்றும் துறக்காத நிலையில்
பற்றுண்டு மங்கையர் மேல் என்று பெற்றிட்டார் பிள்ளைகளை!
போதி மரத்துப் புத்தர் என்றும் மகாவீரர் என்றும்
ஆதிசங்கரர் என்றும் இராமானுஜர் என்றும்;
ஓதினார்கள் உயர்கொள்கை எனினும்; அவர்தம்
வழி வந்தோர் எனச் சொல்லிக்கொண்டு
வன்முறையில் வழுக்கி விழுந்தோரும்
வருணாசிரமச் சகதியில் விஷவிதையை நட்டோரும்
பெருகிவிட்ட காரணத்தால்
கருகிவிட்ட தளிர் மரம்போல்
ஒழிந்துவிட்டதந்தோ அறவொழுக்கம் துறவொழுக்கம்
வழிந்துவிட்டது தரையில் பால்போல சமுதாய முன்னேற்றம்!
கடவுளைக் காட்டுகிறேன் வா என்று
கட்டிலுக்கு அழைப்பவனெல்லாம்

கடைந்தெடுத்த துறவியாம் சாதுவாம் சாமியாம்
காமன்கணை தொடுக்கும் கயவனெல்லாம்
காட்டுகிறேன் சொர்க்கமென்று பெண்களையே
மீட்டுகின்றான் வீணையாக!
ஆன்மீகத்தில் அஃதோர் அத்தியாயம் போலுமென
ஆட்சேபனை ஏதுமின்றி ஆரணங்குக் கூட்டம் - அவன்
ஆசையைப் பூசையென நம்பி;
ஏமாறுவது அத்தியாயமா? அநியாயமா?
எத்தனை மகாத்மாக்கள் சாயிபாபாக்கள்
எத்துணை அற்புதம் புரிந்து காட்டிவிட்டார்
அத்தனையும் ஓர் நொடியில் ஒரு மாஜிக் நிபுணன்
அரங்கொன்றில் காட்டுவதை அறிந்திருந்தும்
அடி முட்டாள்களாய் மக்கள் ஆவதென்ன கொடுமை!
ஆண்டவனுக்கும் மனிதனுக்குமிடையில்
அவன் என்ன தரகன்?
தெய்வத் திருவருள் பெற்றவனுக்கேன்
தட்சணை, காணிக்கை, தினந்தோறும் பூஜை?
அனைத்தும் துறந்தவனின் அங்கமெலாம்
நனைத்துக் குளிப்பாட்ட பன்னீர் ஏன்? பாவை ஏன்?
நிர்வாணநிலை பெற்றோன் என்பதற்கறிகுறிதான்
நிர்வாணமாய்ப் பெண்களைப் படமெடுத்து ரசிப்பதுவோ?
தண்டு கமண்டலத்தில் முறையே
தகதகக்கும் வாளும் மதுவும்
உண்டு கொழுத்து உப்பிக் கிடக்கின்ற உருவும்
பெண்டுகள் பலர் உடலமுக்க உல்லாசம் புரிகின்ற குருவும்
கண்டு கண்டும் இன்னும் அறிவுத் தெளிவில்லா
மண்டுகளாய் மக்கள் கூட்டம் - இருப்பதேனோ?
கள்ள நோட்டு அடிப்பதற்கோர் ஆசிரமம் - தங்கத்தைப்
பள்ளம் தோண்டி புதைத்து வைப்பதற்கோர் ஆசிரமம் - இந்தக்
குள்ளமனத் திருடர்களை நம்பிக் கும்பிட்டுத் தொழுகின்ற
வெள்ளைமனப் பெண்டிரையோ திருத்துவது மகா சிரமம்!
ஊரை ஏமாற்றிக் கொள்ளையடிப்பதிலே ஆண் என்ன; பெண் என்ன?

கூரை வீட்டில் கொள்ளி வைப்பவரைத்
தேரில் வைத்து திருவிழா நடத்துகின்ற கூட்டத்தார்
சாரைப் பாம்புக்குச் சால்வை போர்த்திச்
சாக அடிக்கின்றார் பகுத்தறிவுச் சிந்தனையை!
பதவி உயர்வுக்கென்றும், பணமலை குவிப்புக்கென்றும்
பற்பல அதிகார வர்க்கத்தார் சாமியாரின் பொற்பாதம் கழுவுகின்றார்!
பிள்ளையில்லாக் குறை நீங்க அரசமரம் சுற்றிவிட்டு
கிள்ளைமொழிப் பேதைகளும் இந்த ஆண்டிமடம் செல்கின்றார்;
கையருள் பாலித்து அவள் மெய்யது போர்த்திக்
கணவனாய் மாறிக்கொண்டு தருகின்றான் தையலர் கேட்டவரம்!
கொலை, கொள்ளை, கடத்தல், கற்பழிப்புச் சேட்டை என
அலை அலையாய்ச் செய்திகள் அன்றாடம் வந்தாலும்
ஆசிரமத்துச் சடாமுடியில் ஒரு மயிர்கூட உதிராதபடிக்கு
அரவணைத்துப் பாதுகாக்க அரசுகள்தான் இருக்கின்றனவே!
அமைச்சர்களே சாமிகளின் அடிமைகளாய் மாறி; - ஊரின்
புகைச்சலுக்கு அஞ்சாமல் வீற்றிருப்பின்
நெருப்பின்றிப் புகையாது என்பதை நிரூபிக்கத்
தீ பரவும்! திக்கெட்டும் பரவும்!
தெய்வீகத் திரைமறைவில் வாழ்கின்ற
திருடர் செயல் தீய்ந்து போகும் -
புரட்சிக் கவிஞருக்கு விழா எடுத்து
புதிய புதிய நூல்கள் ஆய்வு செய்து
எழுச்சிமிகு நிகழ்ச்சிதனை நடத்தினால் மட்டும் - போதாதய்யா
''உழைக்காத வஞ்சகர் தம்மை - மிக
உயர்வான சாதுக்கள் என்பது நன்றோ?'' என
உணர்ச்சியோடு கேட்டாரே; அக்கவிஞர்! அந்தக்
கிளர்ச்சிகொள் நெஞ்சுடனே
கிளம்பிற்று காண் தமிழச் சிங்கக் கூட்டமென
முரசறைந்து புறப்படுவோம்; மோசடித் துறவிகளின்
முகமூடி கிழித்தெறிவோம்! வாரீர்!

*

# பதில் என்ன? பகர்ந்திடுக!

பாருக்குள்ளே நல்ல நாடு — எங்கள்
பைந்தமிழ் நாடு! இதன்
வேருக்குள்ளே வெந்நீர் ஊற்றியதால்
வெந்து குலைந்தது பழம் பண்பாடு!

ஊருக்குள்ளே நச்சு மரம் ஒன்று — அது
உணவுக்குத்தான் பழுத்த தென்று
ஓடித் தின்று உயிர் விட்டவர் போலே
ஓட்டளித்துக் கெட்டனரே நாட்டோர்!

உத்தமராய் சிலர் வேடமிடல் எளிது — அதை
உணர்ந்து கொண்டு விழிப்பாய் இருப்பதுதான் அரிது!
பத்தரை மாற்றென்று சொன்னவர் ஆட்சி — இன்று
அத்தனை பொருளையும் சுருட்டுவதே சாட்சி!

தனியார்க்கே எலாம் என்று தாரைவார்த்து நாட்டை
தடையின்றி வரவேற்கப் போகின்றார் கேட்டை!
இனி யார்க்கும் ஏழைகட்கு வாழ்வில்லை இங்கே
வெளியார்க்கு வழிவிடவும் ஊதிவிட்டார் சங்கை!

சிறுத்தைகளாய்ச் சிங்கக் குருளைகளாய்
சிலிர்த்துக் கிளம்பிடும் இளைஞர்களே!
சீறும் எரிமலை புயலென மாறி
ரித்திரம் படைக்கும் தம்பிகளே!

பொறுத்தது போதுமெனப்
பொங்கி எழப் போகின்றோமா? அல்லால்;
கருத்தழிந்த கழுதைகளாய் — மேலும்
பொதி சுமக்கப் போகின்றோமா?

நன்றி: தளபதி வார இதழ் (8.4.92)

# கா, கா, கா!

கா, கா, கா,
பாட்டொன்று பராசக்தியில்
கேட்டனையா தம்பி!

பகுத்தறிவாளருக்கே
பாடம் போதிக்கும் உடுமலையார் பாட்டு!

பலன் பெறவே கூலிக்கு மாரடித்துத்
தடம் மாறும் கூட்டத்துக்கு, அது வேட்டு!

கா, கா, கா;
பழைய பாட்டு தம்பி அது;
புதிய பாட்டு கேட்டிடுவாய்!

கா, கா, கா, என்று
காக்கா பிடிக்கிறாங்க இப்போ; அதைக்
கண்டுபிடிச்சு காட்டினாக்கா ரொம்ப தப்போ?

''கட் அவுட்'' வச்சாலும் காக்கா; மரபுகளைக்
கத்தரிச்சு எறிஞ்சாலும் காக்கா!

காலடியில் தன்னி மக்களை மிதிப்பதுபோல் ஏடுகளில்,
கனஜோரா விளம்பர அறிக்கை கொடுத்தாலும் காக்கா!

சபாநாயகரோட ஆசனத்தை ஆக்கிரமிச்சாலும் காக்கா;
சபை நடுவே; அவர், இவர் காலிலே விழுந்தாலும் காக்கா!

சபையினிலே என் ஜாதி உயர் ஜாதின்னு
சவால்விட்டுக் கத்தினாலும் காக்கா!

மகாமகக் குளியலுக்கும் காக்கா; அங்கே,
மாண்டார்கள் நூறு பேர் என்றாலும் காக்கா!

மண்சோறு மந்திரிகள் தின்றாலும் காக்கா!
வெண்சாமரங்கள் வேப்பஞ்சேலை கட்டினாலும் காக்கா —

அங்கப்பிரதட்சணம் செஞ்சாலும் காக்கா;
அரிசி விலை அநியாயமாய் ஏறினாலும் காக்கா!

பஸ் கட்டண உயர்வுக்கும் காக்கா;
பல விலைகள் உச்சிக்குப் போனாலும் காக்கா!

கொள்ளைக்கும் காக்கா,
கொலைகளுக்கும் காக்கா,

கொடூரமான வழிப்பறிக்கும் காக்கா,
கோடி கோடியாய்க் குவிச்சாலும் காக்கா!

கொடுமையென்ன சொல்வேனடா தம்பி; இப்போ
கொள்கைக்கே கொள்ளி வைக்குதடா காக்கா!

பெரியார் அண்ணா பேரைச் சொல்லிச் சொல்லி,
பித்தலாட்டம் செய்வோரை தூக்கிப் பிடிக்குதடா காக்கா!

இப்ப, ''இட ஒதுக்கீடு'' மீனையும் கொத்துதடா கொக்கா;
இதுக்கும் ஜே போட்டு 'ஜெ'யை வாழ்த்துதடா காக்கா!

*

# பகலவனாய்க் கிழக்கில்
# உதித்திடுவோம்!

நாள்தோறும் வெளியாகும் ஏடுகளைப் புரட்டும் போது
தேள்போலும் செய்திகளால் துடிக்கின்றார் தமிழ்மக்கள்
வாள்போலும் ஏழைகளின் வாழ்வுதனை மாய்க்கின்ற ஆட்சி,
தாள் ஏந்தும் மனிதர்கட்கோ ஒரு துளியும் மானமில்லா காட்சி!!

ஆலயத்தில் கொள்ளையென்று அனுதினமும் வருகின்ற செய்தி
ஆண்டவனின் சிலைகளையே அபகரித்தல் பக்தர்களின்
நெஞ்சுக்கு செந்தீ
''காலன்'' பசிக்குத் தீனியாகக் காலராவும் பரவுதாம்
காவல் நிலையங்களில் கற்பழிப்பு கொலைகளும் தினம் தொடருதாம்!

ஆட்சியில் இருப்போர்க்கு அவசியம் தேவைதான் பாதுகாப்பு;
அதனை வேண்டாமென்று கூறுகின்ற அறியாமை நமக்கில்லை!
அதற்காக ஆயிரம் ஆயிரமாய்ப் போலீசார் அணி வகுத்து
அசையா நெடுமரமாய் சாலைதோறும் தவம் செய்தல்
தேவைதானா?

வெள்ளத்தின் பாதிப்பால் குமுறுகின்றார் குமரி மக்கள்
உள்ளத்தில் கடுகளவும் கவலையின்றி - முதலமைச்சர்
கார்போக மலர்பாதை அமைக்கின்றார்; நன்றாகத்தான்
காக்காய் பிடிக்கின்றார் - நாடென்ன உருப்படுமா?

நடக்காத திட்டங்கட்கு முழுப்பக்க விளம்பரங்கள்
நான் திராவிட தீபத்தை ஏந்துகின்றேன் என முழக்கம்!
நந்திக் கிடக்கின்றார் பணம், பதவி, சலுகைகளை; அவரெல்லாம்
நன்று நன்று, நீயேதான் திராவிடத்தின் தாயே என்கின்றார்,
வெட்கக் கேடு!

பேருந்துக் கட்டணத்தால் விழிபிதுங்கி; ரேஷன்
பெறுகின்ற அரிசி அளவும் மிகக் குறைந்து,
பேருருவாய் விலைவாசிக் கொடுமை மிக உயர்ந்து,
பெருமூச்சால் நெருப்பைக் கக்குகின்றார் தமிழ் மக்கள்!
இல்லை; தணல்மக்கள்!

உரவிலையுடன் உயர்ந்து விட்ட டீசல், பெட்ரோல், சமையலுக்கு
உபயோகிக்கும் எரிவாயு விலைகளாலே; கண்கள்
உஷ்ணமேறி நிற்கின்றார் உழவர்களும், அவர்களுடன்
உழைக்கின்ற கூட்டத்தாரும், வணிகர்களும்!

தொழில் வரி, நிலவரி, பயிர் வரி என்று
தொகை தொகையாய் வரிகளைக் கொண்டு-
தொல்லை தரும் ஆட்சியாளர் செயல்களைக் கண்டு
எல்லையுண்டு பொறுமைக்குமென்று எழுந்து விட்டார் - இன்று!

லஞ்ச லாவண்ய ஊழல்களோ கோடி கோடி
மஞ்சம் விரித்து மகிழ்ந்து பாடி ஆடிடவும்
கொஞ்சமும் ''லஜ்ஜை''யின்றி இவர்கள்
கோட்டையில் அமர்ந்து பிறரைச் சாடிடவும்,

இத்தனையும் பார்த்துப் பொறுத்திருக்க
இஃதென்ன தமிழ்நாடா: அல்லது
இடுகாடா? சுடுகாடா? எனவேதான்
இனிப் பொறுப்பதில்லை என சூளுரைத்து,

நமது உடன் பிறப்புகள் எல்லோரும்
நாடு வாழ்ந்திடவும் நலிவு தீர்ந்திடவும்
தோழமைக் கட்சி அணிகளுடன்
தோள் சேர்த்துக் கிளம்பிடுவோம்!

நம்பி வாக்களித்த மக்களை எல்லாம்
நட்டாற்றில் விட்டு விட்ட
நயவஞ்சகர்க்குப் புத்தி புகட்ட
நவம்பரில் ஆர்பாட்ட அறப்போர் முதலில்!

அடுத்த கட்டம்; அனைத்துக் கட்சி முடிவின்படி
தொடுத்திடும்கணை முழு அடைப்பாம்! இனியும்
படுத்திருத்தல் ஆகாது மக்கள் எழுச்சி எனப்
பகலவனாய்க் கிழக்கில் உதித்திடுவோம்!

# திசை திருப்பல் தியாயம்தானா?

பூமிதனைப் பாயாகச் சுருட்டிக்கொண்டு
பொல்லாத இரண்யாட்சன் கடலுக்குள் ஒளிந்துகொண்டான்!
தேவர்களும் துணைக்குற்றுத் திருமாலை வேண்டி நின்றார்.
திருமாலும் பன்றி உருவெடுத்து திரைகடல் புகுந்து சென்றார்!

உலகப் பந்தை மீட்டு வந்தார் ஒழித்துவிட்டு அசுரனையே!
உவகையால் பூமி தேவி உறுமிடும் பன்றிக்கு நன்றி கூறி,
உன்மீது காதல் கொண்டேன் என்றாள் உருக்கமுடன்.
உடன் பன்றியுருப் பெருமாளும் ஒப்புக் கொண்டார்.
பிறகென்ன....?

''வெள்ளத்தினோடொரு வெள்ளமுமாய் இருவரும்
வீணையும் நாதமும் ஆகிவிட்டார்''
தேவாதி தேவன் திருமாலுக்கும்
திருமகளாம் பூமா தேவிக்கும்
போராடும் குணம் படைத்த அசுரன் பிறந்தான்! அவன்
நாமகரணம்தான் நரகாசுரன் என்கின்றார்.

ஆணும் பெண்ணும் தேவகுலம்-
அவர்கட்குப் பிறந்த மகனோ அசுரகுலம்!
''எப்படி இது?'' என்று கேட்கத் தோன்றும்.
இப்படியெல்லாம் கேட்கத் தொடங்கி விட்டால்,
இப்புவியைப் பாயாகச் சுருட்டிடத்தான்
எவரால் இயலுமெனக் கேட்டிடவும் வேண்டும்தானே!
காசினியைப் பாயாகச் சுருட்டும்போது - ஏழ்

கடல்களுமே இப் பூமிக்குள்தானே இருந்திருக்கும்?
ஏழ்கடலுடன் பூமியைத் தூக்கிய அரக்கன்
எந்தக் கடலில் இந்தப் பூமியை ஒளித்தான்?
எழுத்தறிவித்தவன் இறைவன் என்கின்றோம்-
ஏன்? எப்படி? எனும் வினாக்கள் எழுப்புவதே
இறைவனுக்கு எதிர்ப்பு என்றால்;
ஐயப்பாட்டுக்கு விளக்கமளிக்கத் தெரியாதவர்
ஆசிரியப் பெருமகனாய் இருக்கலாமா?
அசுரர்க்கும் தேவர்க்கும் போராட்டமெனில்; அது
ஆரிய திராவிடப் போராட்டமே என்று
அய்யா பெரியார், அறிஞர் அண்ணா மட்டுமல்ல-
ஆசிய ஜோதி நேருவும் எழுதியதை
பண்டிதர்கள் மறுக்கின்றாரா? அவ்வாறாயின்
பழைய வரலாற்றையே மறுப்பதாகுமன்றோ?
வரலாற்றுப் புகழ் மேதை சீனிவாச அய்யங்கார்
வரைந்திட்ட ஆய்வு நூலும்
ஆரிய திராவிட போராட்டமே அன்றெழுந்த
தேவா சுர யுத்தமென்று
திரும்பத் திரும்பச் சொல்லுவதை
திசை திருப்பல் நியாயம்தானா? எனவே
தீபாவளிப் புராணத்தை ஏற்கலாமா?

✻

# நடந்து முடிந்ததம்மா;

# ஒரு நகைச்சுவை நாடகம்!

அதிர்வேட்டுகள் ஆயிரம் முழங்கிட, முழங்கிட - அட
அணிவகுப்புகள் முரசறைந்து நடந்திட, நடந்திட
வரவேற்பு வளைவுகள் முதுகொடிந்த கூனன்போல்-நகரின்
வழியெங்கும் வணக்கமும் வாழ்த்தும் கூறிட, கூறிட
கொடிகள், தோரணங்கள் முகில்களை மறைத்து- மேலே
குடை பிடிப்பது போல் மெல்ல அசைந்திட, அசைந்திட
ஒன்பது யானைகள் மாலைகள் தூக்கி நின்றிட, நின்றிட.-பாகன்
உத்திரவை ஏற்றுக் கழுத்தில் அணிந்திட, அணிந்திட
புதிய மண்டபம் மேலும் பல பொலிவுகள் கொண்டிட,
கொண்டிட-வின்
மதியொத்த ஒளிவெள்ளம் எங்கணும் பரவிட, பரவிட
வாலிபர்க்கென தயாரித்த உரையை ராணி படித்திட, படித்திட-
அங்கு
வந்திருந்த கூட்டமோ விழுந்து விழுந்து சிரித்திட, சிரித்திட

"இளைஞர்காள்! இளைய தலைமுறையின் ஈட்டிகாள்!
இன்றே நீவிர் குளுரைத்துப் புறப்படுவீர்!
வாழ்க்கை எனும் வசந்தத்தை அனுபவிப்பீர் - உம்
வாலிபத்தை நாட்டுப் பணிக்கும் சிறிது அர்ப்பணிப்பீர்!"

இக்கட்டுரையைக் கேட்டவுடன் மண்டபம் அதிர்ந்திட,
அதிர்ந்திட - பெரும்
கெக்கலியும் செய்து கூட்டம்; எழுந்திட, எழுந்திட

அதிர்ந்து போன ராணியார் என்னவென்று கேட்டிட, கேட்டிட
- ஆங்கொருவர்

''அம்மணீ; தாங்கள் படித்த உரை தவறு'' என நவின்றிட,
நவின்றிட - ராணியோ,

ஏன் என்றும் எப்படி என்றும் சீறி வினவிட, வினவிட - அவரோ
மான் மருண்டாற்போல் அஞ்சி நடுங்கிட, நடுங்கிட

''வருந்துகிறேன் தாயே! தங்கள் உரையோ
வாலிபர்க்கு வாழ்த்துரைக்கத் தயாரித்தது!
வரச்சொல்லி தர்பாருக்கு வந்திருப்போரோ;
வயதேறி நரைவிழுந்த கூட்டத்தார்!
அவரை நோக்கி
இளைஞர் ஏறுகளே! இந்திரஜித்துக்களே!
என்று நீங்கள் அழைத்துரையாற்றியதாலே
ஏளனமும் ஏகடியமும் மிஞ்சியது - இதில்
எவருக்கும் சிரிப்புத்தானே வரும் தாயே!''

எனப் பதிலுரைத்த பிரமுகரும் நழுவிட, நழுவிட - பாவம்
சினங்கொண்ட சீமாட்டி சோகத்தைத் தழுவிட, தழுவிட

நடந்து முடிந்ததம்மா - ஒரு
நகைச்சுவை நாடகம்!

# சில நாடுகள் இருக்கின்றன

சில நாடுகள் இருக்கின்றன!
அங்கே....
ஊராட்சி முதல் பாராட்சி வரையில்
ஜனநாயகக் குழந்தை ''ஜனிப்பதே''யில்லை!
கருவில் ஒரு புழுவாய் நெளிந்திடும் போதே
கலைத்து முடித்துக் களிப்பெய்திடுவர்!
தப்பித்தவறி பிறந்து தவழ்ந்தால்
தலையை நறுக்கிச் ''சூப்பு'' செய்வர்!
மக்களாட்சி மாண்பு மண்ணாய்ப் போக!
மண்ணாய்ப் போக! மடிந்தே போக!
அல்லது மலடாய்ப் போயிடவே...
இறையருள் வேண்டி இறைஞ்சி நிற்பர்!
அங்கெல்லாம் ஆட்சி மாற்றம்
அரை நொடியில் நடந்தேறுகிறது!
ஆள்பவர் நெஞ்சில் துப்பாக்கி ரவைகளின்
அணியாரங்கள்! மணியாரங்கள்!
அடுத்தவர் மார்பில் அழுத்தக் கவசம்!
அவரும் படுத்தால் எழுவது ஐயமே!
துப்பாக்கிகளே,
துரைத்தனக் கூடாரங்களைக்
தூக்கி நிறுத்தும் கம்பங்களாக

வேலை பார்க்கின்றன! ''ஜோலி'' முடிக்கின்றன!
பட்டாபிஷேக நிகழ்ச்சிகளைப்
பட்டாக்கத்திகளே,
முன் நின்று நடத்துகின்றன!
மகுடாபிஷேக வைபவம் என்பது
குருதிக் குடங்களில்
கொண்டு வந்த செந்நீரால்
கொலு மண்டபங்களைக்
குளிப்பாட்டுவதே ஆகும்!

சில நாடுகள் இருக்கின்றன!
அங்கே,
ஜனநாயகக் குழந்தை,
''ஜனிப்பதே'' இல்லை!
குடை நிழலில் குஞ்சரம் ஊர்வார்-
அவர்தம்,
குடலுருவி மாலையாய்ச் செய்து...
அடுத்த பலிக்கடாவுக்கு
அழகாய்ச் சூட்டுவர்!

ஏற்றிப் போற்றுபவர்! அவன்
எலும்பை எடுப்பர்!

எழில்மிகு செங்கோல்
எமக்கு இதுவே என்பர்!
அக்கோல் பிடித்தவன்
வைக்கோல் போர் போல
என்று எரிவான்? எவர்தான் அறிவார்?
முடியாட்சி என்றால்;
முடியடா ஆட்சியை என்று - கொடுந்
தடியினால் முடிப்பதே பொருளே போலும்!

முடிந்து முடிந்து இன்னும் முடியாத
முடியாட்சிகளாகவே,

சில நாடுகள் இருக்கின்றன
அங்கே,
ஜனநாயகக் குழந்தை
"ஜனிப்பதே" இல்லை

சர்வாதிகாரச் சல்லாப உல்லாசங்கள்!
சப்ர கூட மஞ்சத்தில்
எதேச்சாதிகாரத்தின்
ஏகபோகக் கேளிக்கைகள் - அந்த
இன்பக் கூத்தின் இடையே யாரும்
'இம்' என்றால் சிறைவாசம்!
'ஏன்' என்றால் வனவாசம்!

அஃதோர் வாழைமரம்!
அதன் கன்றே அதனைச் சாய்க்கும்!

ஏனோ தெரியவில்லை-
ஜனநாயக ஆலமரம்,
அந்த மண்ணில் விழுது விடுவதேயில்லை!
ஏன் தெரியவில்லை?
அடிமரத்தை வெட்டித்தான்
ஆணிவேரையும் பிடுங்கிவிட்டார்களே!
இந்தியாவின் கங்குகளில்
இரு நாடுகள் முளைத்தன!
அங்கே,
இரத்தக் கழனியில்தான்
ஆட்சிப் பயிர்கள் விளைகின்றன!
முடிந்தது வாழ்வு முஜிபூருக்கென்று
வடிந்தது குருதி நம் விழிகளில் எல்லாம்!
ஆனால்
விடிந்தது ஒரு நாள்! வங்க பூமி

மலர்ந்தது! மலர்ந்தது! மகிழ்ந்தது உலகு!
வங்க பந்து என வாழ்த்தினர் அவரை-
அந்தத்
தங்கபந்துவின் தலையைப் பந்தாய்
தரையில் உருட்டி ஆடிக்களித்தனர்!
இதோ இன்னொரு பந்தாட்டம்;
வங்கதேச விளையாட்டு அரங்கில்!
ஜியாவுர் ரகிமானின் கபாலப்பந்து
''கோல் கீப்ப''ரைத் தாண்டி
சதிவலையில் சிக்கி உருண்டு
இரும்புக் கம்பத்தில் மோதி உடைந்தது!

சர்வாதிகாரம்;
அஃதோர் வாழைமரம்-
அதன் கன்றே அதனைச் சாய்க்கும்!
வங்க தேசத்தில்
ஜனநாயக வாடை கொஞ்சம் வீசியது
அதனையும் தடுத்து
இராணுவ தர்பாருக்கு
இரத்தினக் கம்பளம்
விரித்திடும் வேலை வேகமாய் நடக்கிறது!
சில நாடுகள் இருக்கின்றன!
அங்கே;
ஜனநாயகக் குழந்தை
''ஜனிப்பதே'' இல்லை!
தப்பித்தவறி பிறந்து தவழ்ந்தால்
தலையை நறுக்கிச் ''சூப்பு'' செய்வார்!
இதுவே இன்று,
வங்கம் வழங்கும்
வேதனைச் செய்தி!

# உன் காலணியை வாழ்த்துகிறாய்

ஐம்பத்தி ஏழு பிறந்த நாள் இன்று-உன்
அன்பின் அடிமை பிறந்த நாள் இன்று!
நடந்த பாதையைத் திரும்பிப் பார்ப்பதும்
நடக்கும் பாதையில் வழுவாதிருப்பதும்
அரிமா நோக்கெனப் புகல்வர் அறிஞர்
அடியேன் அரிமா அல்ல எனினும்
கடந்த வழியைக் கருத்தில் கொண்டு
தொடர்ந்து புரிவேன் தமிழினத் தொண்டு!
கோளிலி என்பது எனை விதைத்த ஊர்-திருக்
குவளையூர் என்றும் தீந்தமிழ் பேசும்!
நாற்றுப் பயிராய் அவ்வூர் வளர்ந்து - தென்றல்
காற்றுத் தமிழை திருஆரூர் பயின்றேன்!
ஈரோட்டுப் பள்ளியில் இனமானக் கல்வி - அறிவுத்
தேரோட்டிக் காஞ்சியில் இலட்சியக் கல்வி!
இந்தித் திணிப்பை என்றும் எதிர்க்க
முந்திக் கிளம்பிய தமிழர் படையில்
இளைஞர் அணியை அன்றே கண்டு
இரண்டறக் கலந்தேன் இயக்க நடப்பில்!

அன்று முதல் இன்று வரை
அய்யா பெரியார் அணைப்பு!
ஆரத்தழுவிடும்

அண்ணாவின் ஈர இதய நனைப்பு!
அன்பு உடன்பிறப்பே! எனக்கு
உனையின்றி வேறென்ன நினைப்பு!

தண்டவாளத்தில் படுத்த போதும்-
தனிமைச் சிறையில் வறுத்தபோதும்-
கண்ட அண்ணன் வடித்த கண்ணீர் - என்
களைப்பைத் தீர்க்கத் தெளித்த பன்னீர்!
ஆண்டு இருபதைக் கடந்த வயதில்
பாண்டியில் என்னை வதைத்த காலை
தந்தை பெரியார் தடவிய மருந்தே - என்
சிந்தை குளிர்ந்த அமுத விருந்தாம்!

அஞ்சுகத்தாய் முத்துவேலர்
எனைப்பெற்ற போது-
இசைபாடி மகிழ்விப்பான்
இவனென்று காத்திருந்தார்!
இவனோ;
வசைபாடும் அரசியலின் மத்தியிலே
வசமாகச் சிக்கிக் கொண்டான்!

இலட்சியமென்பது:
எட்டிப்பறித்திடும் மல்லிகையல்ல!
ஏறிப்பறித்திடும் மாங்காயும் தேங்காயுமல்ல!
எதிர்நீச்சல்! எரிமலைமேல் கொடி நாட்டல்!

இடையில் தோன்றிடும் ஆட்சி என்பது
நடையில் தோன்றிடும் களைப்பு நீங்க
இயற்கை வழங்கிடும் நிழற்கொடையென்று
இலட்சியப் பயணம் தொடர்தல் வேண்டும்!

அற்றகுளத்து அறநீர்ப் பறவைகள்
உற்றார் உறவினர் போல நடித்து
பற்றுக் கொண்ட பதவியைத் தேடி
விற்றுக் கொண்டார் தம்மை எனினும்

வில்லில் கணையாய் இருப்போம் என்றும்
வேலின் முனையாய் வாழ்வோம் என்றும்
சொல்லில் உறுதி காக்கும் கூட்டம்
கல்லில் எழுத்தாய் மின்னிடும் போது
கவலை எதற்கு எனக்கு?
கழகம் தான் நமக்குக் கிழக்கு!

குதிரை, கீழேதள்ளிக் குழியும்
பறித்தது என்பர்! இங்கே நம்மைக்
குதிரையாக்கிச் சவாரி செய்தோர்
நமக்கே குழிபறிக்க வந்ததை!
ஏறிய ஏணியை உதைத்த கதை!
நன்றி கொன்ற கதை!

கதையாகப் போன இத்தனை வதைகளையும்
கண்மணியே! உடன்பிறப்பே!
உனை நினைத்தே தாங்கிக் கொண்டேன்!
வாழ்த்துகின்றாய் என்னை!
வணங்குகின்றேன் உன்னை!

நீ வாழ்த்துவது; கிரீடத்தையல்ல!
கிரீடம் இருந்தாலும் இல்லா
விட்டாலும் வாழ்த்தும் பண்பு
கொண்ட உடன் பிறப்பு நீ!

உனக்காக உழைக்கின்ற இந்தக்
காலணியை வாழ்த்துகின்றாய்!

இதற்குத்தான் மெருகு போடுகின்றாய்!
ஏழை எளிய உடன் பிறப்பு நீ!
தேய்ந்தாலும் இந்தக் காலணியை
ஒய்ந்துபோ என விடமாட்டாய்!
உனைவிட்டு அகலாமல்
ஓய்வின்றி உழைப்பதற்கே
உறுதி சொல்வேன்;
உடன் பிறப்பே இந்தப் பிறந்த நாளில்!

(கலைஞர் தனது 58-வது பிறந்தநாள்
செய்தியாக எழுதியது)

# தமிழர்தம்

# கவிதைகள்

